


இருள்வெளி

# இருள் வெளி



சங்கானை சாதி எதிர்ப்புப் போராட்டத்தில்
வேளாள வெறியர்களின்
துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகிய (12.08.67)
சின்னர் கார்த்திகேசுவின் (௬௬ வயது)
போர்க்குணத்திற்கு...





**'Irulveli'**

A repository
of post-modern Tamil writings
published to mark
the 10th anniversary
of 'Literary Meeting'
on the occasion
of 24th Series of 'Literary Meeting'
to be held
on May 30-31, 1998
in Frankfurt, Germany.

**இருள்வெளி**


இலக்கியச் சந்திப்பின்
10வது ஆண்டினையொட்டி (1988-1998)
ஃப்ராங்பெர்ட்டில்
98 மே, 30-31 தினங்களில் நிகழும்
24வது இலக்கியச் சந்திப்பிற்காக
வெளியாகும்
பின்நவீனத்துவ
இலக்கியப் படைப்புகளின் தொகுதி.

தொகுத்ததும் தவிர்த்ததும்:
சுகன்
பாரிஸ், 15. 05. 1998




# விலக்கப்பட்டவை...


| | | |
|---|---|---|
| 01 | வாக்களிக்கப்பட்ட பூமிக்கு...<br>ஜோர்ஜ் இ. குருஷ்ஷேவ் | 7 |
| 02 | அரசியல் தீர்வின் எதிர்காலம்<br>காமினி வியன்கொட<br>தமிழாக்கம்: செ. லோகநாதன் | 12 |
| 03 | திரும்பிச் செல்லுதல் சாத்தியமே இல்லை என்றாகும்போதுதான் புகலிடம் என்றால் என்ன என்று எமக்குத் தெரிகின்றது<br>தமிழில்: க. கலாமோகன் | 15 |
| 04 | தமிழ்த்தாய் நாட்காட்டி - 1998 (2029) -இந்துப் பாசிசத்தின் குறியீடு?<br>இராஜ குலேந்திரன் | 16 |
| 05 | தலித் பெண்ணியம்: ஒரு விவாதத்திற்கான முன்வரைவு<br>அ. மார்க்ஸ் | 19 |
| 05 | பெண்ணியத்தை அணுகுதல் குறித்து<br>எஸ்.வி. ந.்.பேல் | 28 |
| 07 | ரோடிகளின் கதை -Asiff Hussein<br>மொழிபெயர்ப்பு: சேனன் | 33 |
| 08 | சிந்தி-ரோமா: நூற்றாண்டுத் துயரங்கள்<br>ராகவன் | 36 |
| 09 | தூக்கின் நிழலில் | 45 |
| 10 | சிறையில் இருந்து மீள்வதற்காகவே ஜோன் ஜோனே எழுதினார்<br>க. கலாமோகன் | 46 |
| 11 | சூலிக்குக் கதை சொன்ன சூல்களின் கதை<br>றொனா போல் | 51 |
| 12 | வேட்டை<br>அபிமானி | 57 |
| 13 | தவறு -DINO BUZZATI<br>தமிழில்: க. கலாமோகன் | 62 |
| 14 | காதலாகிக் கசிந்து<br>உதயசேனன் | 65 |
| 15 | எல்லோரும் மௌனமாக<br>கௌரிமனோகரன் | 71 |
| 16 | 687430743V D584 L836753<br>ஷோபாசக்தி | 74 |
| 17 | அனுபவம் தனிமை<br>அர்விந் அப்பாதுரை | 84 |
| 18 | எதிரொளிப்பு<br>பாப்லோ அறிவுக்குயில் | 87 |
| 19 | ஒரு குற்றவாளியாகப் பிறந்தவரின் நாட்குறிப்பு -JOHAN BORGEN<br>தமிழில்: தயாநிதி | 90 |




| | | |
|---|---|---|
| 20 | குறுஞ்சித்திரம்<br>கிருஷ்ணராஜா | 96 |
| 21 | ஒரு பூனை சகுனம் பார்க்கிறது அல்லது ஒரு பேனா மையை இழக்கிறது<br>தி. உமாகாந்தன் | 97 |
| 22 | விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்...<br>இரா. நடராசன் | 103 |
| 23 | குறுஞ்சித்திரம்<br>சௌந்தர் | 106 |
| 24 | மறுதலிப்பு<br>Frankfurt ரஞ்சினி | 107 |
| 25 | விடு-தலை<br>சுண்ணாம்புவாயன் | 107 |
| 26 | ஆதிரா கவிதைகள்<br>ஆதிரா | 108 |
| 27 | காதலும் சாதலும்<br>செலின் | 109 |
| 28 | திருவிழா நினைவுகள்<br>அர்விந் அப்பாதுரை | 110 |
| 29 | தெருவின் ஓலம்<br>யூலியா | 110 |
| 30 | மொழி பொய்யென்கிறது<br>ஜாக் பிறவேர்<br>தமிழில்: ஜனா சுகிர்தன் | 111 |
| 31 | கரும்புலி<br>கௌரிமனோகரன் | 111 |
| 32 | கடற்தண்ணீரின் உலா<br>பெடெறிக்கோ கார்ஸியா லோர்கா<br>தமிழில்: ஜனா சுகிர்தன் | 112 |
| 33 | சாதீ, நெருப்பின் சத்தம்<br>கந்தன் | 113 |
| 34 | குறுஞ்சித்திரம்<br>கிருஷ்ணராஜா | 114 |
| 35 | எதுதான் எமக்குச் சாதகமாக?<br>கேதீஸ் | 115 |
| 36 | நோர்வேஜியமொழிக் கவிதையொன்றின் தழுவல்<br>சுகந்தன் | 116 |
| 37 | என்னுடைய அறை<br>H.K. RAJANI<br>தமிழில்: சந்துஷ் | 117 |
| 38 | மரநாய்<br>கற்சுறா | 118 |
| 39 | 6X5<br>BERTOLT BRECHT தமிழில்: சந்துஷ் | 119 |
| 40 | இன்று - MARGRET GOTTLIEB மூலம்: ஜேர்மன்<br>தமிழில்: Frankfurt ரஞ்சினி | 120 |

# இருள் வெளிக்குள்...



புத்தனின் போதனைகள் தழைப்பதற்கென்றே
ஆசீர்வதிக்கப்பட்ட பூமி.
இந்தத் தம்மதுவீபத்தின் தெருக்களிலே ரத்தம் ஒழுகியது.
ரயில்நிலையங்கள் ரத்தச்சேற்றை அப்பிக்கொண்டன.
சிறைச்சாலைகளில் மீண்டும் மீண்டும்
பிணவாடை வீசிற்று.
குமுதினிப்படகில் ரத்தம் உறைந்தது.
உயிரோடு கொழுத்தப்பட்டவர்களின் ஓலம்-
காக்கிஉடை ராட்சதர்களுக்குப் பலியான
கூலி விவசாயிகள்-
மசூதிச் சுவர்களிலே வழிந்த ரத்தம்-
ரயர்களில் கொழுத்தி எரிக்கப்பட்ட சகோதரர்கள்-
தலைமுறைக்கணக்கில் வாழ்ந்த கூட்டம்
நிமிசக்கணக்கில் வெளியேற்றப்பட்ட கொடூரம்-
இரண்டு குழந்தைகளின் தாய்
நடுவீதியில் வீசப்பட்ட அவலம்-
புதிய சிறைச்சாலைகள்-
மண்டையோடுகள்-
பதுங்குகுழிகள்-
மறுப்பு அறிக்கைகள்-
நள்ளிரவுச் சுற்றிவளைப்புகள்-
நாய்கள்- நாய்கள்- நாய்கள்-
கைது செய்ததற்கு ரசீதுகள்-
காணாமல் போனவர்கள்- காணாமலே போனவர்கள்.
தலையாட்டிகள்-
சோதனைச்சாவடிகள்-
யுத்தத்திற்கான சமாதானப்பேச்சு வார்த்தைகள்-
காணாமல்போன மகளை நினைத்து
உயிரைவிட்ட தாயின் சோகம்.
கொலை செய்யப்பட்ட பின்னரே தெரியும் FATWAக்கள்
காரணங்கள்- மனிதப்பிணைகள்-

சகிப்பின்மை-
வன்முறை-
அதிகார ஆணவம்-
மற்றவளின்/மற்றவனின் உயிரின் மீதான பாசக்கயிறுகள்-
மாமனிதரை நிர்ணயித்தவர்கள்-
சாகவேண்டியவர்களைத் தீர்மானித்தவர்கள்-
உயிரோடு இருப்பவர்களைத் தீர்மானித்தவர்கள்.
எழுத்து விமர்சனங்களுக்குத்
தோட்டாவைப் பரிசாகத் தந்து மகிழ்ந்தவர்கள்-
பாரிஸின் வீடுகளுக்குள் புகுந்து கொன்றவர்கள்-
வீதிகளில் கொன்றவர்கள்-
எதிர்ப்புப் பத்திரிகைகளை அறைந்து மூடியவர்கள்.
சாதிவெறி நச்சுப்புகை-
நிறவெறியின் தாண்டவம்.
SORTIE விசா-
கருத்தரங்கின் வாசல்களில் காடையர்கள்-
தொலைபேசிகள்-
தலித்தியமா புகலிடத்திலா என்று புருவத்தை நெரித்தவர்கள்.
சாதிவெறியை மறைக்க
வர்க்கப் பூணூல் போடுவோர்-
ஆணாதிக்கத்தைக் காக்க வர்க்க மட்டப்பலகையுடனும்
மார்க்ஸியத் தூக்குக்குண்டுடனும் இரவும் பகலும் உழைக்கும் மேசன்மார்-
இனப்பெருமைகளை/மதத்தூய்மைகளைக்
கேள்விக்கிடமற்ற வழிபாட்டுக் கருத்தியலாக்கி
மகிழ்ச்சி கொள்ளும் மனநோயாளிகள்.
துப்பாக்கிகளைக் கையில் வைத்திருக்கும் சித்தாந்தங்களுக்கு
விவஸ்தையின்றி மண்டியிடும் எழுத்தாளர்கள்.
பிரச்சினையில்லாமல் யாரோடு ஒத்து ஓடினால்
வசதியாக இருக்குமென்று பார்க்கும் எழுத்து வியாபாரிகள்-
பழைய மாணவர்சங்கக்காரர்கள்.
எதற்கும் ஏலம்போகத் தயாராக இருக்கும் எழுத்து.
அடுத்த கொலைக்காகக் காத்திருக்கும் மக்கள்.
கொலை செய்பவர்களே மாமனிதர்களாக மாறும் கா·ப்கா உலகம்.
இருள்வெளியில் எதிர்காலக் கலங்கரைவிளக்கங்கள்,
ஒளிப்பொட்டுகள், தூரத்து விடிவெள்ளிகள் எதுவுமில்லை.
இருள்-
அப்பாலுக்கும் அப்பால்-
இருள்-
இருள்வெளி.

**தொகுப்பிற்காக:**

**சுகன்**
**பாரிஸ்,**
**15.05.1998**

# வாக்களிக்கப்பட்ட பூமிக்கு...

ஜோர்ஜ். இ. குருஷ்ஷெவ்

மக்களோ எந்தச் சிக்கலும் இல்லாமல் புலிகளுக்கு 'வெளியே இருந்து' ஆதரவு செய்து கொண்டும் இராணுவத்துக்கு 'உள்ளே இருந்து' ஆதரவு செய்துகொண்டும் நல்லூர்த் திருவிழாவையும் சாம(ர்)த்திய சடங்குகளையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அடிப்படையில் 'எங்களை யாரும் அடக்கவும் வேண்டாம். மீட்கவும் வேண்டாம், நிம்மதியாக விட்டால் போதும்' என்பதே இன்றைய நிலை.

பாலும்தேனும் ஓடிய யாழ்ப்பாணத்தை விட்டு சிங்கள அடிமைத்தனத்திலிருந்து, கிளாலிக்கடலைப் பிளந்து, மீட்டுக்கொண்டு சென்ற மோயீசன் 'உமக்கு கர்த்தாவாகிய சர்வே சுவரன் நாமே, என்னைத்தவிர வேறு சர்வேசு வரன் இல்லாமல் போவதாக!' என்று தொடங்கும் பத்துக் கட்டளைகளை முல்லைத்தீவுக் காட் டுக்குள் இருந்து கொண்டு வந்து சேர்க்கும் முன்பாகவே, 'நீர் வாக்களித்த பூமியான இந்த வன்னிக்காட்டில் நாம் மடிந்துபோகவோ, எம்மை இங்கே கொண்டு வந்தீர்? இதைக்காட்டிலும் நாம் நம் நாட்டில் இருந்தால் நன்றாக இருந் திருக்குமே?' என்று காலைவாரிவிட்டு வந்ததில் இருந்து நம் வாக்களிக்கப்பட்ட பூமிக்கான அர சியல் சமன்பாடு சிக்கலாகிவிட்டது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மக்களை 'மீட்க' முயன்ற சிங்கள இராணுவமும் 'அந்நிய ஆக்கிரமிப்பி லிருந்து' மக்களை மீட்க முயன்ற புலிகளும் தங்களுக்குள் மோதிக்கொள்ள, மக்களோ எந் தச் சிக்கலும் இல்லாமல் புலிகளுக்கு 'வெளியே இருந்து' ஆதரவு செய்து கொண்டும் இராணு வத்துக்கு 'உள்ளே இருந்து' ஆதரவு செய்து கொண்டும் நல்லூர்த் திருவிழா வையும் சாம(ர்)த் திய சடங்குகளையும் கொண்டாடிக் கொண்டி ருக்கிறார்கள். அடிப்படையில் 'எங்களை யாரும் அடக்கவும் வேண்டாம். மீட்கவும் வேண்டாம், நிம்மதியாக விட்டால் போதும்' என்பதே இன் றைய நிலை.

**தமிழ் மக்களின் இன்றைய நிலைக்குக் காரணமான ஜே.ஆர், சிறில் மத்தியூவைவிட, ராஜீவும் சந்திரிகாவும் எதிரியாகப் போனது இன்று எங்கும் நோக்கி அபயக்குரல் எழுப்பமுடியாத அளவுக்கு தமிழ் மக்களைப் படுகுழிக்குள் தள்ளியிருக்கிறது.**

இன்றைய போர்விரும்பிகள் சிறு குறுகிய வட்டங்களுக்குள் அடங்குபவர்கள்தான். போர் நிலையை அரசியல்படுத்தி சாதகமாக்க முய லும் அரசியல்வாதிகள், பொருளாதாரரீதியில் லாபம் பெறும் இராணுவம், மற்றும் அதற்கான ஆயுதமுகவர்கள், குறுகிய எண்ணிக்கையிலான விளம்பரம் தேடமுயலும் சிங்கள மேலாதிக்க வாதிகள், தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப்புலிகள். மற்றது இவர்களைவிட மோசமானவர்கள்... வெளிநாடுகளில் பாது காப்பாக இருந்துகொண்டு அழிவில்லாமல் சுதந் திரம் இல்லை என்று அவ்வப்போது நடக்கும் 'வெற்றிகரமான' தாக்குதல்களைக் கண்டு புல்ல ரிப்பவர்கள்!.

இவர்களைத் தவிர வேறுயாருக்கும் யுத்தம் அவசியமில்லாத ஒன்று. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், ஒரு வேளை 'மலை

களாகச்' சூழ்ந்து நின்று அந்நியர்கள் வெளியேற் றப்படவேண்டும், வெற்றி அல்லது வீரமரணம் என்று வீரசபதம் எடுத்திருந்தால் யுத்தம் நியா யப்படுத்தப்படக்கூடியது. 'வீரசுதந்திரத்தை' விட 'எதிரியின் இரக்கத்தில் நம்பிக்கை வைப்பது மேலானது' என்ற நிலை யில் மக்கள் மீண்டும் திரும்பிய நிலையைவிட யுத்தத்திற்கு எதி ரான குறியீடு வேறு என்னதான் வேண்டும்? பலவந்தமாக வெளி யேற்றப்பட்ட மக்கள் எந்தவித வற் புறுத்தலும் இன்றி தாங்களாகவே வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

இந்திய இராணுவகாலத்திலும், நிலைமை வழமைக்கு திரும்புவ தன்மூலம் தங்களின் முக்கியத்து வம் மறைந்து விடுமோ என்ற அச்சம் தான் 'இந்திய ஆக்கிர மிப்புக்கு' எதிராக 'உலகின் நான்காவது பெரிய இராணுவ த்தை எதிர்த்து' புலிகளை போரி டச் செய்தது. 'இந்தியாவே காப் பாற்று' என்று உலகின் தலைநகரங்களில் ஊர் வலம் வைத்த புலிகளின் ஆதரவா'ல'ர்கள் 'இந் தியாவே வெளியேறு' என்று ஆறு மாதத்திற் குள் மீண்டும் ஊர்வலம் போனது இதனால் தான்! தமிழ் மக்களின் இன்றைய நிலைக்குக் காரணமான ஜே.ஆர், சிறில் மத்தியூவைவிட, ராஜீவும் சந்திரிகாவும் எதிரியாகப் போனது இன்று எங்கும் நோக்கி அபயக்குரல் எழுப்பமுடி யாத அளவுக்கு தமிழ் மக்களை படுகுழிக்குள் தள்ளியிருக்கிறது.

இன்றும் யாழ்ப்பாணத்தில் நிலைமை வழ மைக்கு திரும்புவதால் தமிழ் மக்கள் தங்களை அடியோடு மறந்துவிடக்கூடும் என்ற அச்சம்தான் இன்று யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே நிகழும் தாக்குதல்களுக்கு காரணமாகின்றது. வெளிநாடு களில் இருந்து கொண்டு 'ஐயகோ, எங்கள் மண் அந்நிய ஆக்கிரமிப்பில் அடிமைப்படு கின்றதே என்று கண்ணீர் வடிப்பவர்களுக்கு அவ்வப்போது நடைபெறும் 'வீரம் செறிந்த தாக் குதல்கள்' அவசியமானதாகவோ, கைதட்டி ரசிப் பதற்கான பொழுதுபோக்காகவோ இருக்கலாம். 'காணாமல் விசுவாசிக்கின்ற இந்தப் பாக்கிய வான்களுக்கு' யுத்தத்தில் எந்தப் பாதிப்பும் இல்லை. ஆனால் அங்கே வாழுகின்ற மக்க ளுக்கு? எங்களை மீட்டுச் செல்லுங்கள் என்றோ, அந்நிய இராணுவம் வெளியேற வேண்டும் என்றோ மக்கள் அபயக்குரல் எழுப்பவில்லை. மக்கள் காணாமல் போன உறவினர்களை கண்டு பிடிப்பதற்கு, வளர்ப்புப் பிராணிகள் என்று புலிக ளால் அழைக்கப்பட்ட மற்ற ஆயுதக் குழுக்க ளிடம்தான் செல்கிறார்கள். அன்றாட வாழ்வு நிம்மதியாகவும் அமைதியாகவும் இருந்தாலே போதும், அது எவர் கையைப் பிடித்து சாத்தி யமானால் என்ன, ராமன் ஆண்டென்ன? இராணு வன் ஆண்டென்ன? என்ற நிலைக்கு இந்த யுத்த மும் அழிவும் கொண்டுவந்து விட்டுள்ளன.

அன்றாட வாழ்வு நிம்மதியாகவும் அமைதியாகவும் இருந்தாலே போதும், அது எவர் கையைப் பிடித்து சாத்தியமானால் என்ன, ராமன் ஆண்டென்ன? இராணுவன் ஆண்டென்ன? என்ற நிலைக்கு இந்த யுத்தமும் அழிவும் கொண்டுவந்து விட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் வெளியேற் றப்பட்டதிலிருந்து பல மாயைகள் உடைந்தி ருக்கின்றன. புலிகள் அரச இராணுவங்களுக்கு நிகராக ஒரு பலம்மிக்க இராணுவத்தைக் கொண் டிருக்கிறார்கள், ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசாங் கமே அங்கு இயங்கிக்கொண்டிருக்கிறது, மக்க ளின் ஆதரவு அவர்கள் பக்கம்தான் என்ற பல் வேறு மாயைகள் தகர்ந்து போயிருக்கின்றன. புலிகளின் ஆதரவாளர்களுக்குக்கூட தமிழீழம் பெறுவது என்ன, யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவது என்பதே சாத்தியமானதாகத் தெரியவில்லை.

தற்போதைய நிலையைக்கூட 'தற்காலிகப் பின்னடைவு' என்று சொல்லி தங்கள் ஆதரவாளர் களை தேற்றிக்கொள்ளும் நிலையில் உள்ள புலிகள் அவ்வப்போது இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள்மூலம் உண்மைநிலையை மறைப் பது ஒன்றும் புதியதல்ல. சிங்கள அரசுடன் பேச்சு வார்த்தைக்குப் போனபோதுகூட 'ராஜதந் திர நகர்வு' என்றது நினைவிருக்கலாம். தங்க ளது தோல்விகளையும் இயலாமைகளையும் இவ்வாறான politically correct வார்த்தை ஜாலங் களால் மறைத்து அதையே தங்கள் ஊதுகு ழல்களையும் மறு ஒலிபரப்புச் செய்யவைத்து

தமிழ்மக்களை நம்பவைப்பது வழமையானது தான். யாழ்ப்பாண இழப்பைவிட்டு, வன்னியை கைப்பற்றுவதை தடுத்து நிறுத்துகிறோம் என்று மீசையில் மண்படாத கதைதான் இப்போதைக்கு வியாபாரமாகிறது.

ஆனால் தற்போதைய தமிழ்மக்களின் நிலைக்கும் தற்காப்பு யுத்தத்தில் ஈடுபடவேண்டிய தங்கள் நிலைக்குமான முழுப்பொறுப்பும் புலிகளுடையதுதான். புலிகளை இராணுவரீதியாக வெற்றிகொள்வது சாத்தியமில்லை என்ற நிலையில் சமாதான முயற்சிக்கு வந்த சந்திரிகா அரசின் நிலைப்பாட்டை பலவீனமாக கருதிக் கொண்டு, வழமையான யாழ்ப்பாண மனோபாவத்தில், சந்திரிகா அரசையும் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தில் இரகசியமாக இராணுவரீதியில் பலப்படுத்திக்கொண்டு சமாதான முயற்சிகளை முறியடித்து மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்ததன் விளைவு... ஆப்பிழுத்த நிலைதான். இன்றுவரைக்கும் யுத்தத்திற்கு சிங்கள அரசைத் தான் புலிகள் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். புலிகளின் பிரச்சாரத்தைப் பலரும் நம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சிங்கள அரசுமீதான ஆரம்பகால நம்பிக்கையை தங்களுக்கு சாதகமாக்கி ஒரு ராஜதந்திரத் தாக்குதலை (Diplomatic offensive) நடத்தியிருக்க வேண்டிய புலிகள் 'அவன்தான் எனக்கு முதலில் திருப்பியடித்தான்' என்று கூறும் நிலையில்தான் உள்ளார்கள். கடைசியில் புலிகளையே அரசு குற்றம்சாட்டி, அவர்களுக்கு

> அயோக்கியர்களின் இறுதிப் புகலிடமாக யாழ்ப்பாண அரசியலும் வந்து முடிந் திருக்கிறது. கூட்டணியின் 'கதிரை மோகம்' பற்றி குற்றம் சாட்டிய எல்லா இயக்கங்களும் அதே கதிரைகளுக்காக (கூடவே வரும் ஜீப்புகளுக்காகவும்) இன்னொரு தடவை தங்களுக்குள் மோதிக்கொள்ளவும் தயாராக இருக்கின்றன.

சமாதானத்தில் நம்பிக்கையில்லை என்று உலக அளவில் பிரச்சாரம்செய்து ராஜதந்திர ரீதியில் வெற்றிகண்டது. பலம் பொருந்திய நிலையில் ஆயுதங்களை கீழேபோடாமல் பேச்சுவார்த்தை நடத்திய புலிகள் தற்போது, வெற்றிகரமாகப் பின்வாங்கி (அல்லது தற்காலிகப் பின்னடைவு) பேச்சுவார்த்தை மூலமான தீர்வுமீது இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் தகர்த்திருக்கிறார்கள்.

இன்றைய சூழலில் தீர்வுப்பொதி பல்வேறு வடிவங்களின் பின்னால்... யுத்தத்திற்கான முக்கியத்துவங்களுக்கு மத்தியில் அடிபட்டுப் போய் விட்டது. இதைக்கூட புலிகள் 'அப்போதே சொன்னோம் கேட்டீர்களா?' என்று பிரசாரம் செய்து கொள்ளக்கூடும். பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் துணிச்சலுடன் கடந்தகால நிபந்தனைகளைக்கூட விதிக்காமல் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்த அரசின் கரங்களைப் பலப்படுத்தாமல், காலைவாரிவிட்டதால் அரசுக்குக்கூட அந்த தீர்வுப்பொதி முக்கியத்துவம் அற்றதாகப் போய்விட்டது. வடக்கு-கிழக்கு இணைப்பு, மாநில சுயாட்சி முதல் ஆயுத ஒப்படைப்பு நிபந்தனைவரை பல்வேறு விட்டுக்கொடுப்புகளுடன் பேச்சுவார்த்தைக்கு முன்வந்த அரசுக்கு, இராணுவத்தின் முனைப்புக்கு அடிபணியவேண்டிய நிலையைக் கொடுத்த பெருமை புலிகளையே சாரும். இனிமேல் புலிகளை சமபலம் பொருந்தியவர்களாக கருதி பேச்சுவார்த்தை மேசையில் உட்காரவேண்டிய தேவை சிங்களஅரசுக்கு இல்லை. வழமைபோல மற்றவர்களின்மீதே குற்றம்சாட்டும் தன்மையும் அதைக் 'காணாமலே விசுவாசிக்கின்ற பாக்கியவான்களும்' பல உண்மைகளை மறைத்துவிட்டிருக்கின்றன.

மறுபுறத்தில் அயோக்கியர்களின் இறுதிப் புகலிடமாக யாழ்ப்பாண அரசியலும் வந்து முடிந்திருக்கிறது. கூட்டணியின் 'கதிரை மோகம்' பற்றி குற்றம் சாட்டிய எல்லா இயக்கங்களும் அதே கதிரைகளுக்காக (கூடவே வரும் ஜீப்புகளுக்காகவும்) இன்னொரு தடவை தங்களுக்குள் மோதிக்கொள்ளவும் தயாராக இருக்கின்றன. அதைவிட கூட்டணிக்கு தர்மஅடி போட்டு அரசியல் நடத்தும் நிலையில்தான் அவை உள்ளன. ஆக மொத்தத்தில், தற்போதைய நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த சமன்பாடு பூர்த்தி செய்யப்படமுடியாதது.

சர்வதேசஅரங்கில் நடைபெறும் மாற்றங்கள் என்னவோ நம்மவர்கள் கண்ணில் படுவதில்லை. சர்வதேச 'கெடுபிடி' அரசியல் சமன்பாடு மாறியதால் ஏற்பட்ட மாற்றங்கள் எங்களை இன்னும் பாதிக்கவில்லை. நாங்கள் இப்போது 'கல்

அடுத்த தலைமுறையுடன் எங்கள் தொப்புள்கொடி உறவு முற்றாக அறுந்துவிடும். வேர்கள்கூட புலம் பெயர்ந்த மண்ணில் விரும்பியோ விரும்பாமலோ ஊன்றிவிடும். தாய்நாட்டுக்கும் எங்களுக்குமான உறவை, ஆயிரம் ஆண்டு சென்றாலும், தொடர்ந்து பேணக்கூடியது இந்த இலக்கியங்கள்தான்.

தோன்றி மண் தோன்றாக் காலத்துக்குள்' தான். பாலஸ்தீனம் முதல் அயர்லாந்து வரைக்கும் யுத்தவெறியர்களுக்கும் மத்தியில் சமாதானத் தீர்வுக்கான முனைப்பு முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. எழுபதுகளில் கம்போடியாவும் எண்பதுகளில் லெபனானும் தொண்ணூறுகளில் பொஸ்னியாவும் இருந்த நிலையில் அங்கு சமாதானம் நிலவுமென்று யார் நினைத்திருப்பார்? அங்கே கூட சமாதானம் சாத்தியமாகியிருக்கிறது. சர்வதேச பங்களிப்பும் அந்தநாடுகளில் இருந்த சாதாரணமக்களின் சமாதான வேட்கையும் ஆங்காங்கே இருந்த யுத்தவெறியர்களையும் மீறி சமாதானத்தை பெருமளவு நிலைநாட்டியிருக்கின்றன. ஆனால் நாங்கள்...?

எங்களுடைய பெரும்பாலோரின் மனோபாவம் யுத்தம் சார்ந்ததுதான். காணிகளுக்காக வெட்டுப் பட்டு கோடேறி வழக்காடி அப்புக்காத்துகளுக்கு காணியையே தாரைவார்த்த வீரப்பரம்பரை நாம். இதனால்தானோ என்னவோ, எங்களுக்கு அப்புக்காத்துக்கள் தலைவர்களானார்கள் ஆரம்பத்தில். பின்னால் விசயம் தெளிந்ததால், வெட்டுக்கொத்துக்கூட்டமே தலைவர்களாகிவிட்டது. இந்தச் சண்டித்தனங்கள்தான் எங்களை 'விட்டுக் கொடுப்புகளுடன்' கூடிய சமரசத்துக்கு விடுவதில்லை. மற்றத் தரப்பு மட்டுமே சமரசம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையில் எந்தப்பகுதியும் இணக்கம் காட்டுவதில்லை. இந்த யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய யுத்த மனோபாவத்துக்கு காலத்துக்கு காலம் தீனி போட்டவர்கள் இதே யாழ்ப்பாணத்தில் சரித்திர நாயகர்களாக வலம்வந்திருக்கிறார்கள். நேற்றைய இந்த சரித்திரநாயகர்கள், ராமநாதன் முதல் பொன்னம்பலம் வரை, அமிர் முதல் மாத்தயா வரை, இன்று துரோகிகளாக அதே மக்களாலும் அவர்கள் வாரிசுகளாலும் தூக்கியெறியப்பட்டு, வெறும் சரித்திர அடிக்குறிப்புகளாகப் போய்விட்டார்கள். இன்றைய நாயகர்கள் நாளை சரித்திரத்தின் அடிக்குறிப்புகளில் இருந்துகூட அழிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

புகலிடங்களில் தஞ்சம் புகுந்தவர்களும் கைவிட்டு ஓடிய குற்றஉணர்வு காரணமாகவும் பாதிப்பு நமக்கில்லை என்ற உணர்வினாலும் நமக்கென்றோர் நாடு இருந்தால் அவ்வப்போது விடுமுறைக்கு சென்று வரலாம் என்ற நினைப்பிலும் ஊரில் உள்ள உறவினர்களைக் 'கவனிக்கக்' கூடும் என்ற பயத்திலும், பறவைக்காவடி எடுத்து கொலைக் குற்றத்திலிருந்து தப்ப முயற்சிப்பவர்கள் போல, பணத்தைக் கொடுத்து பாவத்தைக் கழுவிக்கொள்ள முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கோ 'நக்கச்சென்ற நாய்கள் நக்கட்டும்' என்று அவர்கள் இவர்களின் பெருமைபற்றிப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களோ இங்கேயிருந்து 'மாங்கிளிக்கும் மரங்கொத்திக்கும் வீடு திரும்பத் தடையில்லை' என்று கண்ணீர்விட்டு அழுகிறார்கள். ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதுகூட இவர்கள் யாழ்ப்பாணம் செல்ல முயற்சித்ததில்லை... கப்பம் கட்டவேண்டும் என்பதற்காக!

இந்த யுத்த மனோபாவம் சமாதான வேட்கையாக மாறாதவரைக்கும் சமாதானம் எங்களுக்கு கைக்கெட்டாத ஒன்றுதான். சொந்த மண்ணிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் இந்த மனோபாவத்தை மாற்ற இலக்கிய முயற்சிகளால்தான் முடியும். சொந்த மண்ணில் பகிரங்கமான எந்த முயற்சியும் தற்கொலை முயற்சியாக இருக்கும். எஞ்சிக்கிடக்கும் மின்கம்பங்களில் தொங்கிக் கிடக்க யாருக்குத்தான் விருப்பம் வரும்? மௌனம் கலகநாசம் என்பதைவிட, தலை காக்கும் என்பதில் எல்லோரும் தெளிவாக இருக்கிறார்கள். ஆடுற மாட்டை ஆடியும் கடிக்கிற புலியை வாலைப்பிடித்தும் தப்பித்துக் கொள்வது கூட ஒரு 'தக்கன பிழைக்கும்' தத்துவத்தின் நியதிதான்.

ஆனால் புலம்பெயர்ந்த மண்ணில் இந்த மாற்றுச்சிந்தனைகள் பொதுமக்கள் சிந்தனையில் ஊடுருவுவதற்கு பல்வேறு காரணிகள் இன்றும் தடையாக உள்ளன. புலம்பெயர்ந்த நாடுகளில் கூட கொலைவரை செல்லுகின்ற அடாவடித்தனங்கள் இன்றும் சுதந்திரமான சிந்தனைப்பரிமாற்றத்துக்கு தடையாக இருக்கின்றன. சொந்த மண்ணில் கிடைக்காத கருத்துச்சுதந்திரத்தை புலம்பெயர்ந்த நாடுகளில்கூட பயன்படுத்திக் கொள்ள எங்கள் மண்ணின் மைந்தர்களே தடையாக இருக்கின்றனர். இலக்கிய, சமூகப் பிரக்ஞையோ, குறைந்தபட்ச 'வாசினை' வாசனையோ இல்லாதவர்கள் எல்லாம் கருத்துச்

சுதந்திரமறுப்பில் ஈடுபடும் வெட்கங்கெட்ட நிலை எங்கள் சமூகத்தில் மட்டும்தான் உள்ளது போலிருக்கிறது. அதிலும் கூட ஏதோ இந்த இலக்கியவாதிகள் கிடைத்த கருத்துச் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்து போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாக பிரச்சாரமும் செய்கிறார்கள்.

மற்ற சமூகங்களில், அரசுகள்தான் வெளிநாடுகளில் நடைபெறும் மாற்றுச்சிந்தனை விவாதங்களுக்கு தடைவிதிக்க, தங்களின் அநீதியின் கரங்களை நாட்டின் எல்லைகளுக்கு அப்பாலும் நீட்டுவதுண்டு. ஆனால் எங்கள் சமூகத்தில் மட்டும் மண்ணின் மைந்தர்களே கொலைவெறி கொண்டலையும் நிலைக்கு வந்து நிற்கிறது. எங்கள் சமூகமே 'தியாகம் - துரோகம்' என்ற கறுப்பு வெள்ளைக் கோட்டுக்குள் பிரிந்து கிடக்கிறது. இன்றைய தியாகங்கள் நாளை துரோகங்களாவதற்கான கோட்டின் எல்லைகள் விஸ்தரிக்கப்படலாம் என்பதைத் தவிர கோட்டில் வேறு வித்தியாசம் கிடையாது.

மறுபுறத்தில் இலக்கிய முயற்சிகள் என்ற பெயரில் நடைபெறும் வியாபாரம் பிரசாரங்களுக்கு நடுநிலை முலாம் பூசி ஓகோ என்று நடக்கிறது. பிழைப்பு என்பதில் விபசாரமும் அடங்குமாயின் இந்த இலக்கியங்களும் நியாயமானவைதான். யாழ்ப்பாணத்தில் இரண்டு பக்கமும் இடிவாங்கும் மத்தள நிலையிலுள்ளவர்களின் 'தக்கன பிழைத்துக்கொள்ளும் நியதி'க்கு புலம் பெயர்ந்த நாடுகளில் என்ன அவசியம்தான் வந்தது? விடுதலைப்போராட்டத்தை விலைகூறி விற்கும் வியாபாரிகள் இங்கு அநேகம். அதையும்விட பகைத்துக்கொள்ளாமல் தலைகாக்கும் இலக்கியமுயற்சிகள் இன்னொருபுறம்.

சமூகப்பொறுப்புடனும் சமாதான வேட்கையுடனும் ஈடுபடுபவர்களுக்குக்கூட, பல்வேறு தடங்கல்கள். இதற்குள் பல்வேறு குழுக்கள், பல்வேறு முகாம்கள். படைப்பாளிகளைவிட அதிகமான விமர்சகர்கள், படைப்புகள்கூட முகாம் சார்ந்ததாயிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும்/படைக்கும் படைப்பாளிகள்/விமர்சகர்கள். புலிகள் தேசியப்போராட்டம் நடத்துபவர்கள் என்பவர்கள் முதல் புலிகள் பாசிசவாதிகளே என்பவர்கள் வரை பல்வேறு சிந்தனைப் போக்குடையவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய நிலை. தனிமனிதக்கோளாறுகள், சிறு பத்திரிகைகள் என்ற எல்லையை உடைத்து பெரும் பத்திரிகைகளின் நிலைக்கு செல்ல, விட்டுக்கொடுப்புகளை கைக்கொள்ளமுடியாதநிலை. எல்லாவற்றுக்கும் மேலாக சிந்தனைப் போக்கில் ஏற்பட வேண்டிய மாற்றம் குறித்த அக்கறை இல்லாத மக்கள் கூட்டம்!.

எது தடையாக இருந்தாலும் எங்கள் குறிக்கோள் ஒன்றுதான். அடிப்படை மனிதஉரிமைகளை மதிக்கும், சமாதானத்துடன் கூடிய, சுயகௌரவத்துடன் வாழும் ஜனநாயக வாழ்க்கை முறை. யுத்தத்திற்கும் அழிவுக்கும் எதிரான சிந்தனைப்போக்கு. அதை நோக்கியதாகத்தான் எங்கள் இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும். வாழ்க்கை முறைகள், அவலங்கள் பதிவுகளாக்கப்பட வேண்டும். புதிய சிந்தனைகள் விவாதங்களுக்கு உள்ளாக்கப்படவேண்டும். வெறும் கோஷங்களும் வெற்றுத்தத்துவங்களும் மனித இனத்தை முன்னேற்றத்துக்கு கொண்டு சென்றதில்லை. சிந்தனைகள் கிணறுகளுக்குள் இல்லாமல் எல்லை கடக்கும்போது, பார்வைகள் விரிவுபட்டு புதிய வழிகள் பிறக்கின்றன. ஆயிரத்தில் ஒன்றாக, வெறும் எண்ணாக வாழ்வு அழிந்து போவதைவிட, சிந்தனை மாற்றங்களுக்கு வழிவகுப்பவர்கள்தான் வரலாறுகளில் போற்றப்படுகிறார்கள்.

மைகொண்ட பேனா படைத்த உன்னத இலக்கியங்கள் சாகாவரம் பெற்று இன்றும் வாழுகின்றன!. இரத்தம்தோய்ந்த வாள்கொண்டு வெற்றி பெற்ற வரலாற்று நாயகர்கள் ஏற்றிய கொடிகளுடன் சாம்பலாகித்தான் போனார்கள்!

உலகநாடுகள் எங்கும் சிதறிப்போனாலும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் தங்கள் மொழியையும் தாய்நாட்டையும் மறக்காமல், 'அடுத்த பாஸ்கா ஜெருசலேமில்' என்று பாடிக்கொண்டே யூதர்கள் வாழ்ந்தார்கள். வெறும் கோஷங்களோடு மட்டும் நில்லாமல், பொருளாதாரரீதியில் பலம்பெற்றதால் இன்று தங்கள் விருப்புவெறுப்புகளிற்கேற்ப உலகஅரசியல் போக்கிலும் அவர்களால் அழுத்தம் கொடுக்க முடிகிறது.(தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மனதில் கொள்ளாமல், பாலஸ்தீனர்களின் உரிமைகளை மறுப்பது இன்னொரு விடயம்!)

ஆனால், நாங்கள்...? அடுத்த தலைமுறையுடன் எங்கள் தொப்புள்கொடி உறவு முற்றாக அறுந்துவிடும். வேர்கள் கூட புலம் பெயர்ந்த மண்ணில் விரும்பியோ விரும்பாமலோ ஊன்றிவிடும். தாய்நாட்டுக்கும் எங்களுக்குமான உறவை, ஆயிரம் ஆண்டு சென்றாலும், தொடர்ந்து பேணக்கூடியது இந்த இலக்கியங்கள்தான். இந்த தலைமுறை தன் பாதையைச் செம்மைப்படுத்தவும் அடுத்த தலைமுறைகள் எங்கள் வேர்களை மறக்காமல் இருக்கவும் இலக்கியங்களால்தான் முடியும்.

வாக்களிக்கப்பட்ட பூமிக்கு நாங்கள் செல்லும்வரை எங்களை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கும் இலக்கியங்களைப் படைப்போம்! □

# දේශපාලන යෝජනාවලියේ අනාගතය
# அரசியல் தீர்வின் எதிர்காலம்



## முன்னறிவிக்கப்பட்ட மரணத்தின் கதை

காமினி வியன்கொட
தமிழாக்கம்: செ. லோகநாதன்

நாட்டில் நிலவிய கோர நிலைமையை இல்லாதொழிப்பது, இனப்பிரச்சனைக்கு அரசியல்தீர்வு காண்பது ஆகிய இரு வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே இவ் அரசாங்கம் பதவிக்கு வந்தது. குறிப்பிடத்தக்க அளவில் கோர நிலைமை இன்று தெற்கில் இல்லை, ஆனால் இனப்பிரச்சனை, இன்றைக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர், அதாவது இவ் அரசாங்கம் பதவிக்கு வரமுன் இருந்ததையும்விட நெருக்கடியான நிலைமையை நோக்கி பயணம் செய்துள்ளதாக தெரிகிறது. மேலெழுந்தவாரியாக நோக்கும் போது, இனப்பிரச்சனை தொடர்பாக இதற்கு முன்னர் பதவிவகித்த எந்தவொரு ஆட்சியாளருக்கும், அரசியல் கட்சிக்கும் இல்லாத அர்ப்பணிப்பும் தெளிவும் இவ்வரசாங்கத்திற்கு உண்டு என்னும் நிலைமையிலேயே இவ்வாறு நெருக்கடி அதிகரித்துள்ளது. இதுவே ஆச்சரியமானதாகும்.

இப்பிரச்சனை தொடர்பாக சிங்கள சமூகம், இன்று ஒரு அம்சத்தில் முன்னேற்றத்தை தெளிவாகக் காண்பிக்கிறது. இது பயங்கரவாதப் பிரச்சனை, அல்லது புலிஅமைப்புத் தொடர்பான பிரச்சனை எனக்கண்ட அரசியல்கட்சிகள், இன்று வடகிழக்கில் இனப்பிரச்சனை உண்டு என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன. இனவெறிகொண்ட சிங்கள துறவற-இல்லற சிறிய தொகையினர் தவிர்த்து, பொதுவான சிங்களமக்களும், தமிழ்மக்களுக்கு இனம் என்ற ரீதியில் பல பிரச்சனைகள் உண்டு என்பதை ஏற்றுவருகின்றனர். இது நாம் பத்துவருடங்களுக்கு முன்னர் காணாத நிலைமையாகும். கருத்தியல்ரீதியாக இவ்விடத்தை அடைய நாம் எவ்வளவு அர்ப்பணிப்புகளையும் அழிவுகளையும் சந்தித்தோம்.

பிரச்சனையை அடையாளங்கண்டால் மட்டும் அது தீர்ந்துவிடமாட்டாது. தீர்வுமுறை மட்டுமல்ல, தீர்வுக்கான அணுகுமுறையும் தவறற்றதாக இருக்கவேண்டும். பிரச்சனையை அடையாளங்கண்டு கொண்டதாக காண்பிக்கும் இன்றைய அரசாங்கம், தீர்வுமுறையையும் முன்வைத்துள்ளது. ஆனால் அதற்கான அணுகுமுறை, பல்வேறுபட்ட காரணங்களால், அதன் தலைவிதி குறுகியது என்பதைக் காட்டுகின்றது.

இதற்கான காரணம் என்ன? ஒருவருட காலத்தின் முன்னர் என்னால் "லக்பிம" வாராந்த செய்திப்பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையின் தலைப்பு "முன்னறிவிக்கப்பட்ட மரணத்தின் கதை" என்பதாகும். நோபல்விருது பெற்ற உலகப்புகழ் நாவலாசிரியரான 'கப்பிரியேல் கார்சியா மார்கேஸ்' என்பவரின் நாவலொன்று இன்றைக்கு ஒரு வருட காலத்தின் முன் என்னால் மொழிபெயர்க்கப்பட்டது. மார்கேஸ் தனது நாவலுக்கு "முன்னறிவிக்கப்பட்ட மரணத்தின் கதை" எனப் பெயரிட்டார். லத்தீன் அமெரிக்காவின் சிறுநகரம் ஒன்றின் மாமிசக் கடைக்காரர் இருவர், தமது தங்கையை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியவன் எனச் சந்தேகிக்கும் ஒரு இளைஞனைக் கொலைசெய்ய முற்படுகின்றனர். இத்திட்டத்தை முழு நகரமுமே அறிந்து கொள்கிறது. அவ்வாறே இக்கொலையை நிறுத்த முழுநகரமுமே பல்வேறு வழிகளில் முயற்சிக்கின்றது. கொலை செய்ய திட்டமிட்ட இருவர் கூட கொலை செய்யாமலிருக்க ஏதாவது வழி உண்டா என பின் இழுக்கின்றனர். ஆனாலும் இறுதியில் திட்டமிட்டவாறு கொலை நடைபெறுகிறது. "முன்னறிவிக்

கப்பட்ட மரணத்தின் கதை" என மார்கேஸ் பெய ரிட்டதும் இதனாலேயாகும். அரசாங்கத்தின் அர சியல் தீர்வுத்திட்டமும் அவ்வாறே "முன்னறி விக்கப்பட்ட மரணம்" போன்று தலைவிதி காலம் குறுகியது என "லக்பிம" செய்திப்பத்திரிகையில் எழுதினேன். நான் அவ்வாறான முடிவுக்கு வருவ தற்கு சில காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, சிங்களசமூகம் பொதுவாக இனவாதம் உடையதாகும். ஆதலால் உண்மை யான அதிகாரப் பரவலாக்கத்திற்காக எவராவது எத்தனித்தால், இச்சமூகத்தில் உள்ள ஒரு சில இனவெறியர்கள் (இல்லற-துறவற இருபகுதியின ரையும் அடக்கும்) சிங்களசமூகத்தில் உள்ள இனவாத உணர்வை தூண்ட முயற்சிப்பர். இது சமகால இலங்கை வரலாற்றில் பல தடவைகள் இடம்பெற்ற நிகழ்வாகும். அண்மைக்கால உதார ணத்தைக் காட்டுவதாயின், இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு எதிராக உருவாகிய சமூகக் கிளர்ச்சியாகும்.

இரண்டாவதாக இலங்கைக் கட்சிஅரசியலின் பிரதான தாரைகளான இரண்டும், தாம் இருந்த அரசியல் ஸ்தானத்தைக் கருத்தில்கொண்டே இப்பிரச்சனை தொடர்பாக நோக்கின. 1957ம் ஆண்டு பண்டாரநாயக-செல்வநாயகம் உடன் படிக்கை, அன்றைய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் எதிர்ப்பு காரணமாக கிழித்தெ றியப்பட்டது. அதன்பின்னர் 1966ல் ஏற்பட்ட டட்லி-செல்வநாயகம் உடன்படிக்கையை அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்த்து அதனை சீர்குலைத்தது. இதன் பின்னர் மீண்டும் 1987ன் இந்திய-இலங்கை உடன்படிக் கைக்கு எதிராக அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி செயல்பட்டது. இவ் ஒவ் வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வப்போது பதவியி லிருந்த கட்சி பதவியில் நீடிப்பதற்காக ஏதோ ஒரு உடன்பாட்டிற்கு வரும்போது, ஆட்சி அதிகா ரத்தில் இல்லாத கட்சி பதவிக்கு வருவதற்காக அவ்வுடன்பாட்டை சீர்குலைக்கவே செயல்பட் டுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் இனப்பிரச் சனை தொடர்பான இலங்கையின் சிங்கள அர சியல் சம்பிரதாயம் இதுவேயாகும்.

மூன்றாவதாக, தேசத்தை அடகுவைத்த இவ் வரசியல் பித்தலாட்டத்தை சிங்கள அரசியல் தலைமையால் ஆடமுடிந்ததற்கு தமிழ் பாராளு மன்றவாத தலைமை காரணம் என்பதையும் வலியுறுத்த வேண்டியுள்ளது. அரசியல் சீர்திரு த்த மூலம் சிங்கள அரசியல் தலைமையுடன் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய இடைநடு இணக் கத்தைப் பற்றியே இவர்கள் இறுதிவரை நம் பிக்கை வைத்தனர். இதில் தவறில்லை. ஆனால், இதற்கான அவர்களது அணுகுமுறையே தவறா னது. இவர்கள் கூட்டுக்குச் சென்ற அரசாங்கம், தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாத நிலையிலும் அவ் அரசாங்கம் பதவியில் நீடிக்க இவர்கள் தோள் கொடுத்தனர். பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் இரண்டும் ஆட்சிக்கு வருவ தற்கும் பதவியை தக்கவைத்துக்கொள்ளவும் இனப்பிரச்சனையை பாவித்தவாறே இப்பாராளு மன்றவாத தமிழ் அரசியல்தலைமையும் தமது அதிகாரத்தை பாதுகாத்துக்கொள்வதற்காக இன நெருக்கடியை கருவியாக பாவித்துள்ளது என்றே தெரிகிறது. இவர்களது இந்நடவடிக்கையால் நேர்ந்தது என்ன? இவர்களிடமிருந்த அதிகாரத் தைப் பறித்துக்கொண்ட இளைஞர் அரசியல் கலாச்சாரம் தமிழ்சமூகத்துள் தோன்றியது மட்டு மன்றி அது மிகவும் வன்முறையானதாகவும் காணப்பட்டது. இன்று பயங்கரவாதம் அல்லது பாசிஸம் எனப் பல்வேறுபட்டோரால் அழைக்கப்ப டுகின்ற இளைஞர் தமிழ்அரசியலுக்கு, சிங்கள தலைமையை போன்று தமிழ் பாராளுமன்றவாத தலைமையும் பொறுப்பேற்கவேண்டியது இதனா லேயாகும்.

நான்காவதாக புலிகளின் அரசியலும் சமா தான அரசியலுக்கு எதிராக உள்ளதாகவே தெரி கிறது. ஒருபுறம் சுதந்திரம் கிடைத்த நாள் தொடக்கம் சிங்கள அரசியல்வாதிகளால் ஏமாற் றப்பட்டதும், விசேடமாக கடந்த தசாப்தத்தில் தமிழ்மக்களுக்கும் தேசத்திற்கும் ஏற்பட்ட அழிவு காரணமாகவும் சமாதான அரசியலுக்கு இட மில்லை என புலிஅமைப்பு விவாதிக்கலாம். ஆதலால் ஈழத்திற்கு குறைந்த எதுவும் இது வரை செய்த அர்ப்பணிப்பு தியாகங்களுக்கு போதுமானதாக அமையாது என அவர்கள் எண்ணவும் கூடும். ஆனாலும் உண்மையான பிரச்சனை இதுவல்ல. புலி அமைப்பின் தோற்றம் இராணுவத்தன்மை கொண்ட ஒன்றாகும். அன்று தொடக்கம் இன்றுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் சாதாரணமாக ஜனநாயக நடவடிக்கைகளில் ஈடு பட்ட இயக்கம் அல்ல. மிகவும் முக்கிய காரணம் என்னவெனில் இன்று புலிகள் அமைப்பின் பலம், அதிகாரம், அங்கீகாரம் அனைத்தும் நேரடியா கவே இராணுவரீதியான வரலாற்றின் பெறுபேறு என்பதாகும். ஆதலால் இராணுவசூழல் அற்ற சாதாரண அரசியல் சூழலில் எவ்வளவு தூரத் திற்கு தமது அதிகார கீர்த்தியை தக்கவைத்துக் கொள்ளமுடியும் என்பது சந்தேகத்திற்குரியதா கும். விடுதலைப்புலிகள் இதனை அறியாதவர்க ளாக இருக்கமுடியாது. சமகால உலக வரலாற் றில் இதற்கு பொருத்தமான இரு நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டலாம். இரண்டாவது உலகயுத்தத்

தின்போது ஆங்கிலேயனின் வீரநாயகனாக இருந்தவர் வின்சன்ட் சேர்ச்சில். யுத்தத்தின் பின்னர் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலின்போது பிரித்தானிய மக்கள் அவரை நிராகரித்தனர். இக்காலகட்டத்தில் பிரான்ஸ் நாட்டின் மகத்தான தேசபக்தனாகத் திகழ்ந்தவர் சார்ல்ஸ் டு/து கோல். இப்புகழ் காரணமாக சேர்ச்சிலையும்விட அதிககாலம் சாதாரண அரசியல் உலகத்துள் துகோலால் பிரகாசிக்க முடிந்தபோதிலும் 1968ல் பிரான்ஸ் நாட்டுமக்கள் இவரைக் குப்பைத் தொட்டிக்குள் தூக்கி எறிந்தனர். ஆதலால் புலி அமைப்பு தொடர்பாகப் பார்க்கும்பொழுது எந்தவொரு அரசியல் தீர்வாக இருந்தாலும் அத்தீர்வு திட்டவட்டமாக ஒரு காலத்திற்கு அசைக்கமுடியாத தலைமையை புலிஅமைப்பிற்கு உத்தரவாதம் செய்யாவிடின் அவ்அரசியல் தீர்வுக்கு புலிகள் நேர்மையாகவே சம்மதிப்பார்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளமுடியாது. இன்றைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள சமாதானப் பொதி எனப்படும் அதிகாரத்தை பரவலாக்கும் அரசியல்தீர்வுத்திட்டத்தின் எதிர்கால தலைவிதியை "முன்னறிவிக்கப்பட்ட மரணத்தின் கதை" என நான் குறிப்பிட்டதற்கு மேலே காட்டப்பட்டவையே காரணங்களாகும்.

இக்கருத்தை உறுதி செய்யக்கூடிய புதிய காரணியொன்று தற்போது தோன்றியுள்ளது. இவ் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கென நீண்டகாலமாக சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றிருந்தது. தற்போதைய அரசாங்கம் புதிய அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தும் ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. இக்காலகட்டம் பூராவும் இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக எவ்விதமான திட்டவட்டமான நிலைப்பாட்டையும் நாட்டுக்கு வெளிக்காட்டாது காலத்தைக் கடத்திவந்த ஐக்கியதேசி யக்கட்சியின் தலைவர்(ரனில் விக்கிரமசிங்க) அண்மையிலே தனது இந்திய சுற்றுப்பயணத்தின் பின்னர் திடீரென தனது கருத்தை வெளியிட தீர்மானித்தார். அதாவது 13வது அரசியல் திருத்தத்தை தாண்டிய எந்தவொரு வேலைத்திட்டத்தையும் தாம் ஏற்கப்போவதில்லை என்பதாகும். இந்த 13வது அரசியல்திருத்தம் இந்திய தலையீடு காரணமாக கொண்டுவரப்பட்ட ஒன்றாகும். இது அதிகாரப்பரவலாக்கத்தை செய்யக்கூடியதாகவிருந்த முதலாவது அரசியல் பயிற்சியாக இருந்தது. ஆனால் அன்று அதிகாரத்தில் இருந்த ஐக்கியதேசியக்கட்சி அதை செயல்படுத்தாமல் இருப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தது. இனநெருக்கடி மென்மேலும் உக்கிரமடைந்து மேலும் கூடிய அழிவை நோக்கித் தள்ளுப்பட இதுவும் ஒரு காரணமாகும். ஆதலால் இன்றைக்கு 13வது அரசியல் திருத்தம் எவ்விதத்திலும் போதுமானதல்ல என்பது மிகத் தெளிவாகும். அதைவிட பரந்த அளவிலான அதிகாரம் தமிழ் மக்களுக்கு இன்று அவசியமாகும். நிலைமை இவ்வாறிருக்கும்போது திரும்பவும் 13வது அரசியல் திருத்தத்தில் இருந்து தொடங்குவது என்பது அரசியல் கபடத்தனமாகும். இன்றைய ஐக்கிய தேசியக்கட்சியின் இக்குத்துக்கரணத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதும் தெளிவாகும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான எந்தவொரு தீர்விலும் இந்தியாவின் பாத்திரம் முக்கியமான ஒன்றென்பதும் உண்மையே. இந்தியாவின் தலையீடு சிற்சில நிலைமைகளின் கீழ் அவசியப்படவும் கூடும். இது தொடர்பாக பார்க்க வேண்டியது தமிழ்மக்களின் அபிலாஷைகளை முதன்மைப்படுத்தியே தவிர கடந்தகாலங்களைப்போன்று இந்திய அரசின் விருப்புவெறுப்புகளுக்கு ஏற்ப அல்ல.

இலங்கையின் அரசியல் தலைவிதியை தீர்க்கமான ரீதியில் நிர்ணயிக்கவிருக்கும் கட்டத்தை நாம் அடைந்துள்ளோம். சிங்கள, தமிழ் மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒன்றாக இந்நாட்டில் வாழ்ந்துள்ளார்கள். இனரீதியாகப் பிளவுபட்டு இதற்கு முன்னர் நாம் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளவில்லை. எல்லாளன்-துட்டகைமுனு யுத்தம், இரு அரசர்களுக்கிடையேயான யுத்தம் தவிர இரு இனங்களுக்கிடையேயான யுத்தமே அல்ல. இலங்கை ஒரு நாடாக (ஒற்றையாட்சி அல்ல) நிலவவேண்டுமானால் சிங்கள இனம் அனுபவிக்கும் அனைத்து மத கலாச்சார அரசியல் சுதந்திரமும் தமிழ் மக்களுக்கும் இருக்கவேண்டும். இது தமிழ் இனத்தைச் சார்ந்த ஒருவர் இருவருக்கு அமைச்சர் பதவி, இன்னும் சிலர் பொலிஸ், நீதித்துறை அல்லது வெளிநாட்டுத்தூதுவர் சேவையில் உயர்பதவி வகிப்பதன்மூலம் காண்பிக்கக்கூடியதல்ல. தமிழ் இனத்தின் இனத்துவ அடையாளங்களை பூரணமாக உறுதிப்படுத்தக்கூடிய, அவர்களுக்கே உரித்தான சுதந்திர அரசியலுக்கு அவர்கள் உரிமைக்காரர்களாக வேண்டும். அப்பொழுது மட்டுமே அவர்கள் சுதந்திரமான இனமாவர். அவ்வாறே தமிழ் போராளி இயக்கமும் "ஷைலொக்கின் ஒரு இறாத்தல் இறைச்சிதான்" வேண்டும் என்னும் கொள்கையில் தொங்கிக் கொண்டிருக்காமல் அதற்கு இங்கால் உள்ள நியாயமான அரசியல் தீர்வில் நம்பிக்கை வைக்கவேண்டும். இதன்மூலம் மட்டுமே ஒரு நாட்டை, ஒரு தேசத்தை கட்டி எழுப்ப முடியும். ❒

-பாரிஸ், 20.11.1997

# திரும்பிச் செல்லுதல் சாத்தியமே இல்லை என்றாகும்போதுதான் புகலிடம் என்றால் என்ன என்று எமக்குத் தெரிகின்றது

**RAFAEL Alberti**
புகழ் பெற்ற ஒரு ஸ்பானிய புகலிடக்கவிஞர்.
1902இலே **Puerto de Santa Maria** விலே பிறந்த இவர் ஓர் ஓவியருமாவார்.
1985இலே **Magazine Littéraire** சஞ்சிகையிலே வெளிவந்த இவரது பேட்டியிலிருந்து சில குறிப்புகள்.

ஸ்பெயினுக்கு அப்பால் நான் 37 வருடங்களை வாழ்ந்தேன். இப்படிப்பட்ட புகலிடத்தை யாராவது ஒருவர் வாழ்ந்திருப்பார் என நான் நினைக்கவில்லை. போரின் பின்னரும், பல லட்சக்கணக்கான மரணங்களின் பின்னரும் ஒரு தேசத்தைவிட்டு நீங்கள் வெளிக்கிடும்போது நீங்கள் திரும்பிவரும் உரிமைக்கு அரசு தடை போடுகின்றது. 10வருடம், 11வருடம், 15வருடம், 20வருடம், 25வருடம் இவைகளை நீங்கள் கடக்கும் போதுமே திரும்பிச்செல்லுதல் முடியாத ஒன்று என்கின்ற உணர்வு உங்களுக்கு வருகின்றது. திரும்பி வராது போனவர்கள் எவ்வளவு பேர்? இந்தக்கட்டத்தில் உண்மையிலேயே புகலிடம் என்றால் என்ன என்பதை நீங்கள் உணருகின்றீர்கள். ஆர்ஜென்ரீனாவில் நான் 24 வருடங்களையும், இத்தாலியில் 15 வருடங்களையும் நான் கழித்தேன். ஸ்பெயினுக்குத் திரும்பிச் செல்லமுடியும் என நான் ஒருபோதுமே நினைத்ததில்லை. 30 வயதாக இருக்கும்போது நான் வெளிக்கிட்டேன். 60 ஆகும்போது திரும்பி வந்தேன். இது மிகவும் கொடுமையானது. 5 அல்லது 6 வருடங்களுக்கென நாங்கள் ஓர் தேசத்தை விட்டுக் கிளம்பும்போதும், நாங்கள் எங்களுக்குள் சிருஷ்டித்த கருத்தைத் தொலைத்தவர்கள் ஆகின்றோம்.


15 வருடங்களின் பின்னர், இந்தத்தேசத்துடன் (இத்தாலி) நான் என்னை நெருக்கமாக்கிக் கொண்டேன், அங்கு நெருக்கமாகவே வாழ்கின்றேன்.

இத்தாலி எனக்குள் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தியது. இங்குதான் இயல்பாகவிருந்தேன். நான் நல்லவிதத்தில் நடத்தவும்பட்டேன். இராணுவ அரசக்கிளர்ச்சிகள் நடக்கத்தொடங்கிய ஆர்ஜென்டீனாவைக் காட்டிலும் இங்கு நான் சுகமாக இருந்தேன். அங்கோ எனது வீடு சோத னைக்குள் ளாக்கப்பட்டது. பொலீசாரால் நான் கண்காணிக்கப்பட்டேன்; அரசியல் வாழ்வோ, பிராங்கோ இல்லாத பிராங்கோயிசத்திற்கு மாற்றப்பட்டது. இத்தாலியிலோ எனது ஓவியக்கலையையும், சிற்பச்செதுக்கலையும் அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருந்தது. சிற்பச்செதுக்கலுக்கான ரோமாபுரிப் பரிசுகூட எனக்குக் கிடைத்தது. நான் ஸ்பெயினுக்கு அருகில் வாழ்ந்தேன், பல ஸ்பானியர்கள் என் னைக் காணவந்தனர். மொழி வித்தியாசங்களைக் காட்டிலும், புகலிடவாதியாக இருத்தல் எனும் உணர்வு எனக்குள் குறைந்தது. எனது புத்தகங்களைப் பிரசுரித்தனர். எனது கண்காட்சிகளை நடத்தினர். இப்படித்தான் நான் எனது 37 வருடங்களைக் கடந்தேன். பிராங்கோ இறந்த பின்னரும் மன்னிப்பு உடனடியாக வழங்கப்படவில்லை. எனவே இன்னும் ஒரு வருடம் ஸ்பெயினைத் தாண்டி நான் வாழவேண்டி ஏற்பட்டது. இப்போது நான் ஒரு வருடத்தில் 7 அல்லது 8 தடவைகள் இத்தாலிக்குச் செல்வதுண்டு. அங்குதான் எனது வீடு உள்ளது. எனது சிற்ப வேலைகளை நான் இத்தாலி யில்தான் செய்வதுண்டு, ஸ்பெயினில் அல்ல.

ஸ்பெயினுக்குத் திரும்பிப்போதல் எனக்கு முக்கியமானதாக இருந்தது, இது மிகவும் காத்திருக்கப்பட்ட ஒன்று, ஆனால் இது மிகவும் நீளமாகிப் போய்விட்டது, நீளமாகிப் போய்விட்டது. நான் திரும்பி வந்தேன், என்னால் இதை விட வேறெதுவும் செய்யமுடியாதிருந்தது. ஸ்பெயினுக்கு எப்படியாவது திரும்பிப்போக வேண்டும் என்பதற்காக வருடம் வருடமாக நான் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தேன். முடிவில் முற்றுமுழுதாக மாற்றப்பட்ட ஓர் ஸ்பெயினுக்கு நான் திரும்பி வந்துவிட்டேன். சகிக்கமுடியாததும், பிராங்கிஸத்துக்கும் உள்ளாக்கப்பட்ட ஓர் மாட்ரிட்டுக்கு. என்னால் தனியாக வெளியே செல்ல முடியாது. சனங்கள் என்னை அவமதித்தனர். இன்னொரு பக்கத்திலே நான் வரவேற்கப்பட்டேன், அற்புதமாக வரவேற்கப்பட்டேன். இது முரண்பாடானது. ❐

# தமிழ்த்தாய் நாட்காட்டி: இந்துப்பாசிசத்தின் குறியீடு?

## 1998(2029)


1998
ஏப்ரல்
APRIL
30
சூரி : 06:38 காலை 08:59 மாலை
ராகு : 03:36 பி.ப 05:23 பி.ப
எம : 06:38 காலை 08:59 மாலை
சுப : 08:26 காலை 10:13 காலை
தெய் : 12:37 பி.ப 01:48 பி.ப

திதி: காலை 06:40 வரை சதுர்த்தி, வைகறை 05:37 வரை பஞ்சமி

நட்சத்திரம்: முற்பகல் 11:35 வரை மிருகசீரிடம்

யோகம்: முழுவதும் மரணயோகம்

சிரார்த்த திதி: பூ-பஞ்சமி

பிறந்த தினம்: திருவாதிரை

வியாழன்
THURSDAY

ஜேர்மனிய ஆட்சியாளர்
கிட்லா
(20.04.1889 - 30.04.1945)

சித்திரை 17
வள்ளுவர் ஆ.2029
வெகுதானிய வருடம்

பலவீனப்படுத்தப்பட்டு – அவமானப் படுத்தப்பட்டிருந்த ஜேர்மனிய தேசத்தை உலகின் பலமான நாடாக மாற்றியவர் கிட்லர். இதன் மூலம் உலகை வெல்வதே இவரது இலட்சியம். அதன் பொருட்டு இரண்டாவது உலகப்போரை தொடக்கி அதன் மையமாகச் செயற்பட்டார். இறுதியில் நேச நாட்டு கூட்டணியிடம் இராணுவத் தோல்வியை சந்தித்தார். 60 இலட்சம் யூத மக்களை கொன்ற இவரது பாதகச் செயல் வரலாற்றில் கறைபடிந்ததாகவே உள்ளது.

நீராவியடி (யாழ்) வெடி விபத்தில் 12 போராளிகள் வீரச்சாவு (1991)

வணக்கத்துக்குரிய ரி. எம். எல். லோங் நினைவு நாள். (22.04.1896 – 30. 04. 1961)

மாதகல் நுணசைக் கந்தசுவாமி கொடி ஸ்ரீ சங்கர ஜெயந்தி, ஸ்ரீ இராமனுஜ ஜெயந்தி

புனித இந்தாம் பத்திநாதர் விழா

நல்வழி நாடாமல், பொருத்தமானதைச் செய்யாமல், பழிக்கு அஞ்சாமல், பண்பும் இல்லாமல் ஒருவன் இருந்தால் அவன் பகைவரால் எளிதில் வெல்லப்படுவான் –குறள்

ஐரோப்பிய நேரத்திற்கு (GMT +1) கணிக்கப்பெற்றது. வெளியீடு : தாய்மண் வெளியீடு

பனை, சங்கிலியன் சிலை, மணிக்கூட்டுக் கோபுரம் இவைகள் மேற்தெரியக் கூடியதாகவும், கொலைத்தொழிலுக்குமட்டுமே பழக்கி எடுக்கப்பட்ட, சுடுவதற்குத் தருணம் பார்த்திருக்கின்ற விடுதலைப்புலி வீரர்கள் அதன் கீழும், தேசியத் தலைவரைக் கலண்டர் மட்டையின் நடுவிலும் கொண்டு யாழ்ப்பாண மேலாதிக்கத்தைக் குறியீட்டு வடிவாக்கி வெளிவந்திருக்கும் தமிழ்த்தாய் நாட்காட்டி இன்னொரு யாழ்ப்பாணமான பாரிஸில் வெளிவந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தைக் கைவிட்டபின் அனைத்துலகத் தமிழரின் 'காலநேரம்' பாரிஸை மையமாக வைத்துக் கணிக்கப்படுவதாக நாட்காட்டி குறிப்பு(3) சொல்கிறது.

யாழ்ப்பாண சைவவேளாளர் கைக்கொள்ளும் இரகுநாதையர் வாக்கியபஞ்சாங்க மரபுக்கமைய பாரிஸின் சூரிய உதய அஸ்தமனங்களுக்கேற்ப விரத நிருபணம் செய்யப்பட்டுள்ளது. திருக்கணித பஞ்சாங்கமுறை தலைவர் எப்போதும் குறிப்பிடும் 'வரலாற்'றிலிருந்து துரோகியாக்கப்பட்டுத் துடைத்தெறியப்பட்டுள்ளது.

குறிப்பு(6) சொல்கிறது:"இலங்கையிலும் ஐரோப்பாவிலும் 23.07.98 அன்று ஆடி அமாவாசை. அன்றுதான் மாவிட்டபுரம் தீர்த்தம். ஆனால் இங்கிலாந்திலும் கனடாவிலும் ஒரு நாள் முன்னராக 22.07.98 அன்று ஆடி அமாவாசை."

-வழக்கொழிந்துபோன சாதிசமயக் குப்பைகளை புகலிடத்தில் புதிதாக மீள்கண்டுபிடிப்புச் செய்து மீளவும் சாதிய இந்துத்துவ சமூகமாக புலம்பெயர்ந்த அகதிகளைக் கட்டமைக்கும் பணியே விடுதலைப்பணியாக பாரிஸில் இருப்பதை நாட்காட்டி சுட்டிநிற்கிறது. பாரிஸ் விடுதலைப்புலித் தலைவர் யாழ்சைவவேளாளராக இருப்பதும் La Chapelle இல் அவர்களால் எழுந்தருளிவிக்கப்பட்ட முத்துமாரிஅம்மன் ஆலயம், வியாபார நிலையங்கள் போன்றவையும் இதனுடன் தொடர்புடையது.

தமிழர் வரலாறு என்பது விடுதலைப்புலிகள் வரலாறுமட்டுமே என்றவிதமாக நாட்காட்டி கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருநாளும் தலைவர் பொன்மொழிகளை உதிர்க்கிறார்.

உ+ம்: 'எதிரிகளைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்' -மே20 -தலைவர்.

தலைவரின் சிந்தனைப்போக்கிற்கு உடன்பட்டு திருவள்ளுவர், விவேகானந்தர், மா-ஓ-சேதுங், நாவுக்கரசர், பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை, காசி ஆனந்தன் இவர்களும் பொன்மொழிகளை உதிர்க்கின்றனர் - கூடவே பகவத் கீதையும்.

"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு" - பாரதிதாசன்.

மா-ஓ-சேதுங் கூறுகிறார்: "துப்பாக்கி ஏந்திய எதிரிகள் ஒழிக்கப்பட்டபின் துப்பாக்கி இல்லாத எதிரிகள் இன்னும் இருப்பர். இந்த எதிரிகளை நாம் சாமானியமானவர்களாகக் கருதக்கூடாது. அவ்விதம் செய்தால் நாங்கள் தவறு இழைத்த

**1998**

**நவம்பர**
**NOVEMBER**

**26**



சூரி : 08:21 காலை 04:54 பி.ப
ராகு : 01:41 பி.ப 02:46 பி.ப
எம : 08:21 காலை 09:25 காலை
சுப : 09:25 காலை 10:29 பி.ப
தெய் : 11:55 காலை 12:37 பி.ப

**திதி:** காலை 09:30 வரை ஸப்தமி, வைகறை 08:11 வரை அட்டமி

**நக்ஷத்திரம்:** பிற்பகல் 02:34 வரை அவிட்டம்

**சுபாசுப யோகம்:** பிற்பகல் 02:34 வரை சித்தம், பின்னர் மரணயோகம்

**சிரார்த்த திதி:** பூ-அட்டமி

**பிறந்த தினம்:** அவிட்டம்

***வியாழன்***
***THURSDAY***

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேன்மை மிகு திரு**
**வே.பிரபாகரன் அவர்கள**

**கார்த்திகை 10**
வள்ளுவர்.ஆ.2029
வெகுதானிய வருடம்

வரலாறு தமிழர்களுக்கு தந்த ஒரு பெருந் தலைவன் பிரபாகரன். அடிபணிந்து -தலைகுனிந்து - அடிமைப்பட்டு வீழ்ந்த தமிழன், ஆர்த்தெழுந்து -படைதிரண்டு -அடிகொடுத்து வென்ற பொற்காலம் ஒன்றின் பிதாமகன். அவர் ஓர் அற்புதமான மனிதா், அபூர்வமான மனிதர், பிரபாகரன் என்றால் தமிழர்களின் ஆன்மா என்று பொருள்; தமிழர்களின் வாழ்வு என்று பொருள்; தமிழர்களின் கீர்த்தி என்று பொருள். இப் பெருந்தலைவனை தமிழீழ தேசம் பெற்றெடுத்த நாள் இன்று.

**தகவற் துளி :** உலகில் மிக நீளமான குகைப் பாதை சுவிற்சிலாந்திலுள்ள சென்.கொட் ஹாட் குகைவீதிப் பாதையாகும். இதன் நீளம் 16 கி.மீற்றர்களாகும்.

**புனித கல்வெஸ்தர் விழா**

நான் எனது மக்களுக்காகப் போராடும் விடுதலைப் போராளி

-தலைவர்

**ஐரோப்பிய நேரத்திற்கு (GMT +1) கணிக்கப்பெற்றது. வெளியீடு : தாய்மண் வெளியீடு**

வர்களாகி விடுவோம்."

காசி ஆனந்தன் கூறுகிறார்: "காட்டிக் கொடுப்பவன் எங்கே அந்தக் கயவனைக் கொண்டு வா. தூணோடு கட்டு. சாட்டை எடுத்து வா தம்பி அவன் சாகும்வரை அடி. தீயிற் கொழுத்து."

"ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன பிழை"

தேசியத்தலைவர் முதன்முதலில் தமிழீழ மக்கள்முன் தோன்றியநாள் (ஓகஸ்ட் 4), இந்தியாவிடம் மக்கள் பாதுகாப்பிற்காக ஆயுதங்களை ஒப்படைத்த நாள், இரண்டாவது ஈழப் போர், மூன்றாவது ஈழப்போர் இப்படியாக நாள்கள் அர்த்தப்படுத்தப்படுகிறது.

"சமாதானத்தை நான் ஆத்மபூர்வமாக விரும்புகிறேன்" என்ற தலைவர் ஐந்தாம்நாளில் "தமிழீழ மண்ணில் ஆயுதப்புரட்சிக்கு அத்திவாரமிட்டவர்கள் நாம்" என்று பொய் சொல்கிறார். வருட இறுதியில் "பிரிவினைவாதம் என்பது தவறான சிந்தாந்தம். இதை எங்கள் போராட்டத்தில் பிரயோகிக்கமுடியாது" - என்றும் கூறுகிறார்.

சிவபெருமான், முருகன், விஷ்ணு, பிள்ளையார், சூரியன், சிவலிங்கம், வேல், தேர், கிருஷ்ணர், காகம் போன்ற எல்லா இந்துக்கடவுளரின் படங்கள் அநேகமாக எல்லா நாட்களிலும் இருக்கிறது. யூன்-13இல் கொழும்பு கொச்சிக் கடை புனித அந்தோனியார் திருவிழாவும், சங்கடஹர சதுர்த்தியும், சிரவணவிரதமும் வருகிறது. திருமால் சங்குசக்கரம் ஏந்தித் தனக்குள் சிரித்திருக்கிறார். ஈ.வெ.ரா. பெரியார் நினைவு தினத்தில் தமிழர்களிடமிருந்து மூடநம்பிக்கைக ளைக் களையப்பாடுபட்டவர் - திராவிடர் கழகம் - ஸ்தாபகர். பிராமணிய மேலாண்மையை எதிர்த்தவர் என்று குறிப்பிட்டு ராகுகாலம், சுபநேரம், திதி, மரணயோகம் இவைகளைச் செக்கன் பிசகாது விலாவாரியாகக் கொடுத்தது அந்நாளில் பெரிய பகிடியாகக் கருதப்படக்கூடியது.

ஏப்ரல் 30இல் கிட்லரை இப்படி நினைவு

கூர்கின்றனர்: "பலவீனப்பட்டு அவமானப்படுத்தப் பட்டிருந்த ஜேர்மனியதேசத்தை உலகின் பல மான நாடாக மாற்றியவர் கிட்லர்"

யூலை 27இல் தமிழினத்துரோகி அல்பிறட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்ட நாளாம். லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் அவரை இப்படி நினைவுகூர்கிறது: "யாழ் சுதந்திரக்கட்சி அமைப் பாளர், மாநகர சபைத் தலைவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், அரசியலில் உயர்ந்த நிலை பெற்றவர்."

தமிழீழ படைத்துறைப்பள்ளியின் உருவாக் கம் -ஓகஸ்ட் 19.

ஆர்த்தெழுந்து -படைதிரண்டு -அடி கொடுத்து வென்ற பொற்காலம் ஒன்றின் பிதாமகன் -தமிழர்க ளின் ஆன்மா -தமிழர்களின் வாழ்வு -தமிழர்க ளின் கீர்த்தி -இப்பெருந் தலைவனை தமிழீழ தேசம் பெற்றெடுத்த நாள் இன்று -நவம்பர் 26.

இப்படியாகவும் நாட்கள் கட்டமைக்கப்படுகின் றன. மாவீரர், கரும்புலிகள், தேசபிதாக்கள்... இப்படியாக ஒவ்வொருநாளும் அவர்களின் புகழ் பாடும் போர்ப்பரணியுடனும் புகைப்படங்களுடனும் நாள்கள் கட்டமைக்கப்படுகிறது.

பேராசிரியர் அ.துரைராஜா போன்ற ஒத்தோடி கள் மாமனிதர்களாகவும், தேசப்பற்றாளர்களாக வும் ஆக்கப்பட்டு பஞ்சாங்க அந்தஸ்துப் பெற்றி ருக்கிறார்கள்.

ஈழத்தமிழரின் பயங்கரமான நாட்கள் பலவ ற்றை நாட்காட்டி சுட்டிக்காட்ட மறுப்பதன் மூலம் தன்னை முழுமையான இந்துப்பாசிச குறியீடா கக் காட்டி நிற்கிறது. 02.10.1974இல் புத்தளம் பள்ளிவாசலில் சிறீலங்கா அரசால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்கள்பற்றி எதுவுமில்லை. அதை எழுதுவதற்கு எந்த யோக்கியதையும் இவர்களுக்கில்லை. ஒருவேளை அதை நினைவு கூர்வது தமிழீழ அரசாங்கத்தால் சம்மாந்துறை பள்ளிவாசலில் படுகொலை செய்யப்பட்ட முஸ் லிம்கள், காத்தான்குடி பள்ளிவாசலில் படுகொ லை செய்யப்பட்ட முஸ்லிம்கள்பற்றி ஞாபக மூட்டலாம் என்ற பயத்தில் அதைத் தவிர்த்திருக் கலாம்.

ஆயினும் பாசிச எதிர்ப்பிற் பங்குகொண்டு வரும் மக்களுக்கு புலிகளின் முஸ்லிம்கள் மீதான படுகொலைகள் மன்னிக்கவும் மறக்க வும் இயலாத ஒன்றாகிறது.

- காத்தான்குடியில் 12 யூலை 1990இல் 68 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது.
- மீளவும் காத்தான்குடியில் 3 ஓகஸ்ட் 1990 இல் 146 முஸ்லிம்கள் படுகொலை செய்யப் பட்டது.
- ஏறாவூரில் 11 ஓகஸ்ட் 1990இல் சுரத்தை யன்குடா, மீக் நகர், மீராக்கேணி, சதாம்குசைன் கிராமம், புன்னக்குடா ஆகிய இடங்களில் 173 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது. அதில் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை வயிற் றைக் கிழித்து பிள்ளையை எடுத்து அப்பிள்ளையையும்குத்திக் கொன் றது.
- 1990இல் ஒக்டோபர் 23 இல் வடமாகாணத்திலிருந்து பலவந்த மாக ஆயுதமுனையில் ஒரு லட்சத் திற்கும் அதிகமான முஸ்லிம் மக் கள் வெளியேற்றப்பட்டது.
- 1992 ஏப்ரல் 26இல் அழிஞ் சிப் பொத்தானையில் 50க்கு மேற் பட்டோர் சுட்டும் வெட்டியும் கொல் லப்பட்டது.
- அம்பாறை, அநுராதபுரம், அறந்தலாவை போன்ற சிங்கள கிராமங்கள்மீது நிகழ்த்தப்பட்ட படு கொலைகள் பௌத்த பிக்குகள் மீதான படுகொலைகள் போன்றவை இந்துத்துவ நாட்காட்டிகளையும் மீறி பாசிசத்தால் பாதிப்புற்றோர் மனதில் நினைவழியா நாள்களாக என்றும் நினைவிருக்கக் கூடியது.

இராஜகுலேந்திரன்

1998
ஒக்டோபர்
OCTOBER
14



சூரி : 08:14 காலை 06:59 மாலை
ராகு : 01:36 பி.ப 02:57 பி.ப
எம : 09:35 காலை 10:55 காலை
சுப : 05:38 பி.ப 06:59 மாலை
தெய் : 12:43 பி.ப 01:36 பி.ப

திதி: பின்இரவு 05:54 வரை தசமி

நட்சத்திரம்: முற்பகல் 10:15 வரை பூசம்

சுபாசுப யோகம்: முழுவதும் சித்தம்

சிரார்த்த திதி: அ-தசமி

பிறந்த தினம்: ஆயிலியம்

புதன்
WEDNESDAY

ஜேர்மனிய தளபதி ஜெனரல் ரோமல்
(1891 - 14.10.1944)

புரட்டாதி 28
வள்ளுவர் ஆ. 2029
வெகுதானிய வருடம்

2ஆம் உலகப்போரில், பல வெற்றிகளை ஜேர்மனியின் பக்கம் குவித்த உலகப் பிரசித்தி பெற்ற இவரது போர்த் தந்திரோபாயங்களும் அது காரணமாகப் பெற்ற வெற்றிகளும் புகழின் உச்சிக்கு இவரை இட்டுச் சென்றதுடன் பாலைவன நரி என்ற பெயரையும் பெற்றுக் கொடுத்தது.

[illegible] : பிரஞ்சு நாடு 1337–1453 வரையிலான நூறு வருடங்களிற்கு மேலாக ஆங்கிலேயருக் கெதிராக் யுத்தத்தில் ஈடுபட்டது.

புனித முதலாம் கலிஸ்துஸ் திருவிழா

கோழையும் வீரனாவான் தன் உரிமைகள் பறி போகும் போது. -முதுமொழி

ஐரோப்பிய நேரத்திற்கு (GMT +1) கணிக்கப்பெற்றது. வெளியீடு : தாய்மண் வெளியீடு

# தலித் பெண்ணியம்: ஒரு விவாதத்திற்கான முன்வரைவு

அ.மார்க்ஸ்


> **பெண்ணியங்களில் பலவகைகள் என்பது தவிர்க்க முடியாதது. இவற்றில் 'உண்மையான' பெண்ணியத்தைத் தேடுவதென்பது கேலிக்குரியது.**
>
> **-சந்தால் மொஃபே**

மதத்திலிருந்து பிரிந்து சுயேச்சையாக அரசியல் செயற்படத் தொடங்கியதென்பது பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்புதான். எனவே இதற்குப் பிந்திய அரசியலை நாம் **நவீன அரசியல்** எனலாம். மார்க்சியம், முதலாளியம், தேசியம், பாசிசம்... முதலான எதிரெதிரான அரசியற்போக்குகளை எல்லாம் நவீன அரசியல் என்கிற ஒரேவகைப்பாட்டிற்குள் அடக்கி விடலாம். அப்படி அடக்குவதற்குக் காரணமாய் இருக்கக்கூடிய நவீனத்துவ அரசியல் கூறுகளாவன:

**(அ):** எதார்த்தத்திலுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் ஒரு குறிப்பான **அடித்தளத்தை** (Foundation) ஆதாரமாகக் கொண்டு பகுப்பாய்வு செய்து அதனடிப்படையில் அவற்றை எதிர்கொள்ளுதல். எடுத்துக்காட்டாக உற்பத்திமுறை/வர்க்கப் பகுப்பாய்வு என்கிற அடிப்படையில் மார்க்சியம் எல்லாப் பிரச்சினைகளையும் அணுகும்.

**(ஆ): சாராம்சமான ஒரு அடையாளத்தின்** (Essential Identity) அடிப்படையில் தனக்குரிய மக்கள்திரளை இவ்வரசியல் கட்டமைக்கும். எடுத்துக்காட்டாக **நாசிசம்** தனக்குரிய மக்கள்திரளை 'ஆரியன்' என்கிற சாராம்ச அடையாளத்துடன் கட்டமைத்தது. 'யூதன்'என்கிற சாராம்ச அடையாளத்துடன் தனது எதிரியையும் அது வரையறுத்தது. 'வர்க்கம்', 'ஆண்மை', 'பெண்மை' என்பன இதர சில சாராம்ச அடையாளங்கள். சாராம்ச அடையாளம் என்பது மாற்றிக்கொள்ளத் தக்கதல்ல. ஒருவரது எல்லாப் பண்புகளிலும் நடவடிக்கைகளிலும் அது வெளிப்படும்.

இன்று இந்த சாராம்ச அடையாளம் என்கிற கருத்தாக்கம் நடைமுறையில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. பின்அமைப்பியல், பின்நவீனத்துவம் முதலிய சிந்தனைகள் 'சாராம்சம்' என்பதைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றன. ஒற்றை ஒருமித்த அடையாளத்துடன் நாம் வாழ்வதில்லை. பல்வேறு அடையாளங்கள் ஒன்றோடொன்று ஊடுபாவும் வலைப்பின்னலாகவே நாம் அமைகிறோம். 'தமிழராக' இருக்கும் ஒருவரே ஒரு குறிப்பிட்ட சாதிக்காரராகவும், ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தவராகவும் (முதலாளி, தொழிலாளி, விவசாயி, அதிகாரி, எடுபிடி...), ஒரு குறிப்பிட்ட பாலியல் அடையாளம் (அலி, பெண், ஆண்) உடையவராகவும் இருக்கிறார். இவை அனைத்தும் ஒருவருக்குள்ளாகவே ஊடுபாவுகின்றன என்பதாலேயே ஒன்றோடொன்று ஒத்திசைந்



பெண் ஓவியர்கள் சமூகத் தடைகளை மீறித் தமது உடல்களை ஓவியங்களில் தீட்ட, சோதனைக்குட்படுத்த, ஆராய...
Self - Portrait by Laura Knight, 1913
லோரா நைற்றின் சுய உருவச் சித்திரம்

ஆதாரம்: The Observer Review 8 March, 1998

துள்ளன எனச் சொல்லமுடியாது. பல சந்தர்ப்பங்களில் இவை ஒன்றையொன்று கவிழ்க்கக் கூடியதாகவும் உள்ளன. தொழிலாளியாக இருக்கும் ஒருவரே உயர்சாதிக்காரராகவும் இருக்கும்போது தொழிலாளியின் சாராம்ச முற்போக்குத்தன்மை ஆட்டம் காண்கிறது. இவ்வாறு வித்தியாசமான பல்வேறு தன்னிலைக் கூறுகளால் கட்டமைக்கப் பட்டவராக சமூக உறுப்பினர் உருவாகிறார்.

இந்தப்புரிதல் இன்று மரபுவழிப்பட்ட அடையாள அரசியலில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. சாராம்ச அடையாளங்களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அரசியல் சமூகங்களின் பிடிக்குள் அகப்படாமல் துருத்திக்கொண்டு வெளியே நிற்கும் எச்சசொச்சங்கள், மிச்சம் மீதிகள் (Remainders) தங்கள் குரலை இன்று மேலெழுப்பத் தொடங்கியுள்ளனர். தங்களுக்கான அரசியலை இன்று உயர்த்திப் பிடிக்க ஆரம்பித்துள்ளனர். பெண்ணிய அரசியலில் இது எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை இனி பார்ப்போம்.

## 2

ஆண்களுக்கான சட்டபூர்வமான உரிமைகள் அனைத்தும் சமமாகப் பெண்களுக்கும் வழங்கப் படவேண்டும் என எழுந்த **முதலாளியப் பெண்ணியமாகட்டும்**, குடும்பம்/உற்பத்தி ஆகியவற்றின் பின்னணியில் பெண்ணடிமைத்தனத்தின் தோற்றத்தைக் கண்டுணர்ந்த **மார்க்சியப் பெண்ணியமாகட்டும்**, தந்தைவழிச் சமூக மதிப்பீடுகளுக்கு எதிராக பெண்மையின் தனித்துவத்தை உயர்த்திப் பிடித்த **தீவிரப்பெண்ணியமாகட்டும்** (Radical Feminism) இவை அனைத்தும்"பெண்" என்பதற்கு ஒரு சாராம்சமான அடையாளத்தை ஏற்றுக்கொண்டன. உடற்கூறை அடித்தளமாகக் (Biological Foundation) கொண்டு பெண்ணுறுப்புக்களைக்கொண்ட அனைத்து மனிதஉயிரிகளையும் ஒன்றெனக் கொண்டன; **பெண்** எனக் கண்டன; ஒட்டுமொத்தமான பெண்களின் விடுதலையை இவை பேசின.

பெண்களனைவரையும் ஒன்றெனக் காணும் உடற்கூறு அடித்தளவாதத்திற்கெதிரான பெண்ணியக் குரல்கள் இன்று இரு திசைகளிலிருந்து மேலெழும்புகின்றன. அவை:

(அ) வெள்ளை இனப்பெண்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக்கொண்டு முற்றிலும் புதியநோக்குடன ஆண்-பெண் உறவுகளை அணுகிய கறுப்பினப் பெண்களின் எழுச்சி.
(ஆ) ஓரினப் பெண்ணுறவாளர்கள் (Lesbians) மற்றும் பால் கடந்த மனிதஉயிரிகளின் (Transexuals) இருப்பிற்கு இடமளிக்கவேண்டும் என எழுந்த குரல்கள்.

**ஏங்கலா டேவிஸ், குளோரியா யோசப், லிண்டா நிக்கல்சன், சந்தால் மொ.ஃபே** முதலியோர் இப்படிக் குரலெழுப்புகிறவர்களில் சிலர்.

'பெண்' என்றால் யார்? 'பெண்' என்கிற சொல்லின் பொருளென்ன? எந்த ஒரு சொல்லுக்கும் பொருள் என்பது ஒரு தனித்துவமான பண்பைப் பிரித்து வரையறுத்துக் காட்டுவதல்ல. **விட்கென்ஸ்ட்டெய்ன்** சொல்வது போல வித்தியாசமான பல்வேறு மொழி விளையாட்டுகளில் பங்குபெறுவதனூடாகவே ஒரு சொல்லின் பொருளை நாம் உணர்ந்து கொள்கிறோம். 'சொல்' என்பது ஒரு தனித்துவமான பொருளுடன் தீர்மானகரமான உறவைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டிலும் சிக்கலான பல பண்புகளின் வலைப்பின்னலாக அது விரிவு பெறுகிறது என்பதே சரியாகும்.

"விளையாட்டு" என்கிற சொல்லை எடுத்துக் கொள்வார் **விட்கென்ஸ்ட்டெய்ன்**. பல விளையாட்டுக்களை நாம் அறிவோம். சீட்டு விளையாட்டுகள், பலகை விளையாட்டுகள் (செஸ், கேரம்...), பந்து விளையாட்டுகள்... இப்படி. இவை எல்லாவற்றுக்கிடையேயான பொதுமைகள் (Common alitities) என்பதைக்காட்டிலும் ஒப்புமைகள் (Similarities), உறவுகள், குறுக்கீடுகள் ஆகியவற்றின் மூலமாகவே 'விளையாட்டு' என்கிற சொல்லின் 'பொருள்' நம்மிடம் உருவாகிறது. "**விட்கென்ஸ்ட்டெய்ன்** 'விளையாட்டு' பற்றிச் சொன்னது பெண்ணுக்கும் பொருந்தும்" என்கிறார் லிண்டா நிக்கல்சன். பெண்ணை ஒரு குறிப்பான பண்புக்குரியவளாகக் காட்டுவதைக் காட்டிலும் சிக்கலான பல பண்புகளின் வலைப் பின்னலாகப் பார்ப்பதே சரியாக இருக்கும். கருப்பை அல்லது பெண்குறி தான் ஒரு பெண்ணின் சாராம்சம் என்றால் இவை இல்லாமலும் பெண்களாய் இருப்பவர்களை, உணர்பவர்களை என்ன சொல்வது என்கிற கேள்வியை எழுப்புகிறார் **லிண்டா**. உடற்கூறு அடித்தளவாதத்தின் அடிப்படையில் பெண்ணுறுப்புகள் உள்ளவர்களையெல்லாம் ஒரே மாதிரியாகப் பெண்கள் எனப் பார்த்து அவர்கள் அனைவரின் அனுபவங்களையும் பொதுமைப்படுத்த முடியாது. ஒரு கருப்புப் பெண்ணின் அனுபவமும் வெள்ளைப் பெண்ணின் அனுபவமும் ஒன்றாய் இருக்கமுடியுமா?

அப்படியானால் பொதுமைக்கூறுகளோடு வித்தியாசங்களும் உண்டு எனப்பார்க்கலாமா?

அப்படிப்பார்ப்பதென்பது பின் ஏதோவொரு வடிவில் உடற்கூறு அடிப்படையிலான பொதுமைகளைப் பிரதானப்படுத்தி வித்தியாசங்களைப் புறக்கணிப்பதில்தான் முடியுமென்கிறார் **லிண்டா**.

பெண்ணின் மீதான ஒடுக்குமுறை + இன அடிப்படையிலான ஒடுக்குமுறை = கருப்புப் பெண்ணின் மீதான ஒடுக்குமுறை என்பது போன்ற ஆய்வுகளை 'கூட்டல் கழித்தல் பகுப்பாய்வு' எனக் கேலி செய்யும் **எலிசபெத் ஸ்பெல்மான்**, "ஒரே மாதிரியான பாலியல் ஒடுக்குமுறையானாலும் அதை எதிர்கொள்ளும் சூழல் என்பது ஒரு வெள்ளைப்பெண்ணுக்கும் கருப்புப் பெண்ணுக்கும் ஒரேமாதிரியாக இல்லாததை இத்தகைய பகுப்பாய்வுகள் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. எனவே கருப்புப்பெண்ணின் அனுபவங்கள் இத்தகைய கூட்டல் கழித்தல் பகுப்பாய்வுகள் மூலம் சரியாக வெளிக்கொணரப்படுவதில்லை" என்கிறார். கருப்புப் பெண்ணின் மீதான மொத்த ஒடுக்குமுறை - பெண் எனும் நிலையான ஒடுக்குமுறை = இன அடிப்படையிலான ஒடுக்குமுறை என்றெல்லாம் கணக்குப் போடுவது அபத்தம். கருப்பு அடையாளமும் பெண் எனும் அடையாளமும் பின்னிப்பிணைந்து கிடக்கிறது; ஏதொன்றையும் தனியாக பார்க்க முடியாது. எனவே வெள்ளைப்பெண்ணுக்கும் கருப்புப்பெண்ணுக்குமான பொதுமைக்கூறுகளைக் காட்டிலும் வித்தியாசங்களே முக்கியம். இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

## 3

கருப்புப்பெண்ணின் பிரச்சினைகள் தனித்துவமானவை என்கிற கருத்தை **சோஜர்னர் ட்ருத்** முதலானவர்கள் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சுட்டிக் காட்டியுள்ளனர். 1851ல் **செனகாவில்** நடந்த 'பெண்ணுரிமை மாநாட்டில்' அவர் இதனை வலியுறுத்தினார். கருப்புப்பெண்கள் பொதுவான பெண்ணிய இயக்கங்களிலிருந்து சற்றே விலகி நிற்கும் போக்கு இந்த நூற்றாண்டில் உறுதியாகி கருப்புப்பெண்ணியம் என்கிற தனித்துவமான சிந்தனைப் போக்கு உருவாவதற்குக் காரணமாகியுள்ளது. கருப்புப்பெண்ணியத்தின் அவசியம் குறித்து **அய்டா வெல்ஸ், ஆங்கெலா டேவிஸ், பாட் ஆர்ம்ஸ்ரோங், குளோரியா யோசப்** முதலானோர் முன்வைக்கும் கருத்துக்களை இப்பகுதியில் தொகுத்துக்கொள்வோம். தோழர்கள் இப்பகுதியைப் படிக்கும்போது இந்தச் சிந்தனைகள் நமது சூழலுக்கு எந்த அளவுக்குப் பொருந்தும், எந்தெந்த அம்சங்களில் பொருந்தாது என்பதைக் கூடவே சிந்தித்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருப்புப்பெண்ணியரின் நியாயங்கள்: மார்க்சியப்பெண்ணியம் பாலியலுக்குரிய முக்கியத்துவத்தை அளிப்பதில்லை (Sex blind) எனத்

தீவிரப் பெண்ணியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இவர்கள் அனைவருமே இனப்பிரச்சனையில் குருட்டுத்தனமாய் (Race blind) இருக்கிறார்கள். ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் ஆற்றல் இழந்தவர்களாய் இருப்பது உண்மை. ஆனால் எல்லாப்பெண்களும் சமஅளவில் ஆற்றல் இழந்தவர்களாக இல்லை. அடிமைமுறை என்பது கருப்பர்கள் மத்தியிலான ஆண்-பெண் உறவுகளில் பல வித்தியாசங்களுக்குக் காரணமாகியுள்ளது. கருப்பர்களுக்குள்ளான ஆண்-பெண் உறவுகளில் அது ஒரு முரணான பாத்திரத்தை வகிக்கிறது. கருப்பர்களுக்குள் ஒப்பீட்டளவில் ஆண்-பெண் சமத்துவத்திற்கு அடிமை முறை காரணமாகியுள்ளது. வயல்களிலும் பண்ணை இல்லங்களிலும் கருப்பு ஆண்-பெண் இருபாலர்மீதும் மேற்கொள்ளப்படும் சமமான மனிதத் தன்மையற்ற கொடுங்கோன்மைகள் (பெண்கள்மீதான பாலியல் வன்முறை, ஆண்களைக் கொல்லுதல், ஆண்மை நீக்கம் செய்தல்... முதலியன) இத்தகைய 'முரண் சமனி' (Ironic equaliser) யாகச் செயல்படுகின்றன. ஒரே மாதிரியான கொடுங்கோன்மை என்பது ஓரளவு கருப்புப் பெண்ணின் விடுதலைக்குக் காரணமாகியுள்ளது.

**டபிள்யூ.ஈ.பி. தூபோய்ஸ்:** "கருப்புப் பெண்ணின் விடுதலை அவர்மீது கொடுங்கோன்மையாய்த் திணிக்கப்படுகிறது."

**ஆங்கெலா டேவிஸ்:** "அடிமையாய்ச் செயற்படுவதற்கு முதலில் அவரது **பெண்** என்னும் அடையாளம் அழிக்கப்படுகிறது."

எனவே வெள்ளை இனத்தவர் மத்தியிலுள்ள ஆண்-பெண் உறவும் கருப்பர்கள் மத்தியிலுள்ள ஆண்-பெண் உறவும் ஒரே மாதிரியாக இல்லை என்பதால் கருப்பர்கள் மத்தியில் ஆண்-பெண் உறவைப் பகுப்பாய்வு செய்வதற்குத் **தனித்துவமான பெண்ணியப் பகுப்பாய்வுகள் தேவையாகின்றன.** கருப்புப்பெண் மீதான கருப்பு ஆணின் கொடுங்கோன்மை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. வீட்டுக்குள் பெண்களே வீட்டு வேலைகளைச் செய்பவர்களாக உள்ளார்கள் என்பது கருப்புச் சமூகத்திற்கும் பொருந்தும் என்றாலும் இந்த அடிப்படையில் வெள்ளை இனக் குடும்பஉறவுகளும் கருப்பினக் குடும்ப உறவுகளும் ஒரேமாதிரியானவை எனச் சொல்ல முடியாது. கருப்புச் சமூகத்திற்குள் குடும்பஉறவுகள் நெகிழ்ச்சியாயுள்ளன. ஒப்பீட்டளவில் கருப்புப்பெண் குடும்பஉறவுகளிலும் விடுதலை பெற்றவளாக உள்ளாள்.

இதுபோலவே பாலியல் நோக்கில் **பொதுப்புலம்** (Public sphere) X **தனிப்புலம்** (Private Sphere) என்கிற பிரிவினையும் கூட வெள்ளைச் சமூகத்திற்குப் பொருந்துகிற அளவுக்கு கருப்புச் சமூகத்திற்குப் பொருந்துவதில்லை. **கருப்புப் பொதுப்புலம் வெள்ளைப்பொதுப்புலத்தின் அளவு ஆண் தன்மையானதாக (masculine) இல்லை.**

எனவே ஒட்டுமொத்தமாக ஆண்களின் ஆதிக்கம், பெண்களின் அடிமைத்தனம் என்றெல்லாம் சொல்லமுடியாது. ஒட்டுமொத்தமான ஆண்களின் ஆதிக்கம் இந்தச் சமூகத்திற்குள் இருப்பதாகச் சொல்லமுடியாது. எந்தக் கருப்பு ஆணும் வெள்ளைப்பெண்ணை ஆதிக்கம் செய்வதில்லை. ஆனால் எல்லா வெள்ளைஆண்களும் வெள்ளைப்பெண்கள் மீது மட்டுமல்லாது கருப்புப் பெண்கள் மீதும் ஆதிக்கம் செலுத்துபவர்களாக உள்ளனர். தவிரவும் இனஅடிப்படையில் வெள்ளைப்பெண்கள் கருப்புஆண்கள் மீதும் ஆதிக்கம் செலுத்துபவர்களாக உள்ளனர்; கருப்புப் பெண்கள் மீதும் அவர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். **எனவே வெள்ளைப் பெண்கள் 'பெண்' என்கிற அடிப்படையில் ஒடுக்கப்படுபவராக உள்ளபோதே 'இனம்' என்கிற அடிப்படையில் ஒடுக்குபவராகவும் உள்ளனர்.**

எனவே இச்சமூகத்தை வெறும் 'ஆணாதிக்கச் சமூகம்' எனச் சொல்வதைக்காட்டிலும் **'வெள்ளை ஆணாதிக்கச் சமூகம்'** (white male patriarchy) எனச்சொல்வதே பொருத்தம்.

ஆணாதிக்கச்சமூகத்தின் அடிப்படையாக உள்ளது ஆண்களுக்கிடையேயான திண்ம ஒற்றுமை (solidarity). ஒரு கலப்பினச் சமூகத்தில் இதையும் கூட நாம் கட்டுடைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமாக ஆண்களுக்குள்ளே திண்ம ஒற்றுமை நிலவுவதாகச் சொல்ல முடியாது. ஒரு வெள்ளைஆணுக்கும் கருப்பு ஆணுக்குமிடையேயான திண்மஒற்றுமையைக் காட்டிலும் ஒரு வெள்ளைஆணுக்கும் வெள்ளைப் பெண்ணுக்குமிடையேயான ஒற்றுமை கூடுதலாக உள்ளது. அது போலவே ஒரு வெள்ளைப் பெண்ணுக்கும் கருப்புப்பெண்ணுக்கு மான திண்ம ஒற்றுமையைக் காட்டிலும் **இன அடிப்படையிலான ஒற்றுமையே இரு பக்கமும் வன்மையாகச் செயல்படுகிறது.**

கருப்புப்பெண்ணைப் பொறுத்தமட்டில் அவள் பெண்ணாக இருப்பதனால் படும் துன்பங்களை விட அவள் கருப்புப் பெண்ணாக இருப்பதனால் படும் துயரங்களும் அனுபவிக்கும் கொடுமைகளுமே அதிகம். எனவே **கருப்புப்பெண்ணைப் பொறுத்தமட்டில் 'பெண்' என்பது அவளது முழு அடையாளமாக இருக்கமுடியாது.**

வெள்ளைப்பெண்ணைப் பொறுத்தமட்டில் அவள் ஒடுக்கும் நிலையிலிருந்து இருபால்

கருப்பரையும் ஒடுக்குபவராகவும் உள்ளதால் அவரது உடனடி ஆர்வம் இனஆதிக்கத்தைத் தக்க வைப்பதாகவே உள்ளது. எனவே எப்படிப் பெண்கள் தங்கள் விடுதலைக்காக ஆண்களை நம்பியிருக்க முடியாதோ அது போலவே **கருப்புப்பெண்கள் தமது விடுதலைக்காக வெள்ளைப்பெண்களை நம்பியிருக்கமுடியாது.**

பாட் ஆம்ஸ்ரோங்: "அமெரிக்காவிலுள்ள வெள்ளைப்பெண்கள் இனவெறியால் பயன்பெறுபவர்களாக உள்ளதால் அவர்களது வெள்ளைத் தன்மை பெண் எனும் நிலையைக் கட்டுப்படுத்துகிறது. வெள்ளைப் பெண்ணியவாதிகள் தங்களின் வெள்ளைத்தன்மையின் இந்தக் கட்டுப்படுத்தும் நிலையை உணர்ந்து கொள்ளவேண்டும்."

**குளோரியா ஜோசப்:** "எனவே வெள்ளைப் பெண்ணியர்கள் மீது கீழ்க் கண்ட கடப்பாடுகள் உள்ளன

(1) இனவெறி அமைப்பின் கருவிகளாகவும் பயன்பெறுபவர்களாகவும் தாங்கள் உள்ளதை அவர்கள் அறிந்தேற்க வேண்டும்.

(2) உழைக்கும் மகளிரில் உள்ள கருப்புப் பெண்களின் தனித்துவமான பிரச்சினைகளுக்காகப் போராடவேண்டும்.

(3) மூலதனத்திற்கும் ஆணாதிக்கச் சமூகத்திற்குமான கூட்டு உறவில் வெள்ளை ஆண்களின் பாத்திரத்திற்கும் கருப்பு ஆண்களின் பாத்திரத்திற்கும் இடையிலான வேறுபாட்டைப் பிரித்தறிதல் வேண்டும்."

கருப்புப்பெண்ணியர்களின் கருத்துக்கள் இங்கே அவர்களின் மொழியிலேயே தொகுக்கப்பட்டுள்ளன. இவை எந்த அளவிற்கு நமது சூழலுக்குப் பொருத்தமுடையனவாக உள்ளன என்பதை இனிப்பார்ப்போம்.

## 4

தலித் பெண்ணியத்தைக் கட்டமைக்கும் முயற்சியிலுள்ள நாம் உலகளவில் இதற்குரிய முன்மாதிரிகளைத் தேடுவதும், பொருத்தமான அம்சங்களை நமது சூழலுக்குரிய முறையில் வளர்த்தெடுப்பதும் தவிர்க்க இயலாதது. ஏதோ ஒரு அடிப்படையில் ஒன்றோடொன்று நெருங்க இயலாத கூறுகளாகப் பிளவுண்ட ஒரு சமூகத்தில் பெண்ணியர்கள் மத்தியில் இப்பிரச்சினை எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது எனத் தேடும்போது அமெரிக்க அடிமைச்சூழல், தென்ஆபிரிக்க இனஒதுக்கல் சூழல் ஆகியன நமது கவனத்தில் படுவது தவிர்க்க இயலாதது. அமெரிக்க அடிமைச் சூழலில் வெள்ளைப் பெண்களுக்கும் கருப்புப்பெண்களுக்குமிடையேயான வித்தியாசம் என்பது இந்திய - தீண்டாமைச் சூழலில் உயர்சாதிப்பெண்களுக்கும் தலித் பெண்களுக்குமிடையிலான வித்தியாசத்தோடு பொருத்திப் பார்க்கத்தக்கதாக உள்ளது. ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்.

இங்கும்கூட ஒட்டுமொத்தமாய் ஆண்கள் அனைவருக்குமிடையே திண்ம ஒற்றுமை இருப்பதாகச் சொல்லமுடியாது. உயர்சாதி ஆண்களுக்கும் தலித் ஆண்களுக்குமிடையேயான ஒற்றுமையைக் காட்டிலும் உயர்சாதி ஆண்களுக்கும் உயர்சாதிப் பெண்களுக்குமிடையேயான ஒற்றுமையே அதிகம். தலித் பெண்களுக்கும் மற்ற பெண்களுக்குமிடையேயான ஒற்றுமையைக்காட்டிலும் தலித்பெண்களுக்கும் தலித் ஆண்களுக்குமிடையேயான ஒற்றுமையே அதிகம். உயர்சாதிப்பெண் தீண்டாமையின் மூலம் தலித் பெண்கள் மீது மட்டுமல்ல தலித் ஆண்கள் மீதும் அதிகாரம் செலுத்தக் கூடியவளாகவும் அதன்மூலம் பயன்பெறுபவளாகவுமே உள்ளாள். கிராமப்புறங்களில் இது வெளிப்படையாகவே தெரியும். எனவே தன் மீதான இழிவை ஒழிப்பதற்கு ஒரு தலித் பெண் மற்ற உயர்சாதிப் பெண்களை நம்பியிருக்கமுடியாது.

ஒரு தலித்பெண்ணுக்கு 'பெண்' என்கிற நிலையைக் காட்டிலும் 'தலித் பெண்' என்கிற நிலையிலேயே அடையாளம் கட்டமைக்கப்படுகிறது. ஒரு தலித் பெண்ணின் பிரச்சனைகள் அவள் பெண்ணாக இருப்பது என்பதைக் காட்டிலும் தலித் பெண்ணாக இருப்பதாலேயே ஏற்படுகின்றன. <u>பாமா</u>வின் கதைப் பெண்கள் படும்பாடுகள் இதைத் தெளிவாக்கும்.

மேற்சாதிச் சமூகங்களுக்குள் நிலவும் ஆண்-பெண் உறவையும் தலித் சமூகங்களுக்குள் நிலவும் ஆண்-பெண் உறவையும் நாம் ஒரே பகுப்பாய்வின் மூலம் விளக்கிவிடமுடியாது. குடும்பத்திற்குள் தலித்பெண் கூடுதலாக வேலை செய்கிறாள் எனினும் தலித் குடும்பஉறவுகளுக்கும் மேற்சாதி குடும்பஉறவுகளுக்கும் வேறுபாடுகள் உண்டு. ஒப்பீட்டளவில் தலித்பெண் கூடுதல் சுதந்திரம் உடையவளாக இருக்கின்றாள். விதவை நிலை (வைதவ்யம்) என்பது தலித் சமூகத்தில் இல்லை. 'கற்பு' என்னும் கருத்தாக்கத்திலும் கூட இங்கே வித்தியாசமுள்ளது. கணவனே கண்கண்ட தெய்வம் என்பது தலித் சமூகத்தில் ஏற்புடையதல்ல. அறுத்துக்கட்டுதல் இங்கே சமூகத் தடைக்குரிய நடைமுறை அல்ல.

தலித் பொதுப்புலம் ஆண்சார்பற்றது எனச் சொல்லமுடியாதெனினும் இதிலும் மேற்சாதிப்

பொதுப்புலத்தினளவு ஆண்சார்புத்தன்மை இல் லை எனலாம்.

சுருக்கமாகச் சொல்வதெனில் தலித் பெண்க ளின் பிரச்சனைகள் பொதுவான பெண்களின் பிரச்சனைகளிலிருந்து வித்தியாசப்படுகின்றன; தனித்துவமுடையனவாய் உள்ளன. நம்முடை யது ஒரு வெறும் ஆணாதிக்கசமூகம் அல்ல. இது ஒரு உயர்சாதிஆண்களின் சமூகம். தலித் பெண்ணியம் சாதீயத்தையும் பார்ப்பனீயத்தை யும் ஆணாதிக்கத்திற்கிணையான இலக்குகளா கக் கொள்வது தவிர்க்க இயலாது.

## 5

இந்தியச்சூழலில் பெண்ணியச் சிந்தனைக ளில் இருபோக்குகளைச் சுட்டிக் காட்ட முடியும். உடன்கட்டை, குழந்தைத்திருமணம் ஆகியவற் றை ஒழித்தல், பெண்கல்விக்குரிய தடைகளை நீக்குதல் என்கிற அளவில் இங்கே பெண்ணியச் சிந்தனைகள் தலையெடுத்தன. இவை அனைத் தும் அன்றைய முக்கிய தேவைகளாகவும் உட னடிச் செயற்பாடுகளாகவுமிருந்தன என்பதில் அய்யமில்லை. எனினும் இவற்றை முன்னி லைப்படுத்திப் போராடிய முதற்கட்ட முன்னோடி கள் யாரும் சாதிஆதிக்கம், பார்ப்பனீயம், இந் (து)திய மரபு ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக் கியவர்களில்லை. ஆங்கிலேயரது வருகையை ஒட்டி இந்தியச் சமூகங்களில் ஏற்பட்ட நவீன மாற்றங்களுக்கிணையாக இந்திய மரபைப் புதுப் பிக்க முயன்றவர்கள் இவர்கள். நகர்மயம், ஆங் கிலக்கல்வி, மத்தியதரவர்க்கம் முதலியவற்றின் வளர்ச்சியை ஒட்டி அதற்கு ஒத்திசையாத அம் சங்களை இந்துமரபிலிருந்து கவ்வி எறிய முயன் றவர்கள் இவர்கள். குழந்தைகளை நவீன உல கத்திற்குரிய முறையில் வளர்க்கத் தெரிந்த, வரும் நண்பர்களை உபசரிக்கக்கூடிய, பழ மையை உதறிய, ஆனால் இந்திய மரபுக்கு கந்த நவீனஇந்தியமனைவியரை உருவாக்கு வதே இவர்களின் நோக்கம். வேதம், இந்து மதம், இந்(து)திய மரபு முதலியவற்றை இவர் கள் மேன்மையானதாகக் கண்டனர். கற்பு, குடும்பம் முதலிய நிறுவனங்கள் ஆணாதிக்கத் திற்குத் துணைபோவது பற்றி இவர்கள் எந்தக் கேள்வியையும் எழுப்பத் தயாராக இல்லை. இவர்களது வழியில் வந்தவர்களிலேயே தீவிர மான சிந்தனைப் பொறிகளை எழுப்பியவராகிய பாரதி கூட கற்பு என்பதை இரு சாராருக்கும் பொதுவில் வைப்பது என்கிற அளவிற்குத்தான் வந்தாரேயொழிய கற்பு என்பதையே கேள்விக் குள்ளாக்கத் துணியவில்லை.

பெண்ணியச் சிந்தனைகளில் இன்னொரு போக்கிற்குக் காரணமாக இருந்தவர்கள் இந் திய மரபையும், இந்து மதத்தையும், வேதங்க ளையும், சாதீயத்தையும், பார்ப்பனீயத்தையும் கேள்விக்குள்ளாக்கியவர்கள். **பெரியார் ஈ.வே. ரா., ஜோதிபா பூலே** முதலானோர் இந்தத் திசையில் முன்னணியில் இருப்பவர்கள். கற்பு, குடும்பம் முதலான கருத்தாக்கங்களை முதன் முதலாகக் கேள்விக்குள்ளாக்கும் வாய்ப்பு முதன் முதலில் இவர்களுக்குத்தான் கிட்டியது. பெண் ணியம் குறித்த மிக நவீனமான சிந்தனைக ளையெல்லாம் **பெரியார்** முன் வைத்தார். பெண் கல்விக்கு முதன்மையளித்த **பூலே** பால் சாராத மொழியில் எழுதுதல் முதலியனவற்றையெல் லாம் அன்றே முயற்சித்தவர். பெண்ணியம் குறி த்து அதிகம் எழுதாதவராயினும் **டாக்டர் அம் பேத்கர்** இந்துமதத்திற்கு மாற்றாக இங்கே உய ர்த்திப் பிடித்த புத்தமதம் இந்துமதத்தைக்காட்டி லும் பெண்களுக்கு சம வாய்ப்புகளை அளித் ததாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்திய மரபுக்குரிய பெண்ணியம் என்கிற கருத்தை இன்று இந்துத்துவத்தை உயர்த்திப் பிடிப்போர் முன் வைக்கின்றனர். பாரதீய ஜனதா கட்சியின் பெண்கள் பிரிவாகிய 'மகிள மோர் ச்சா'வைச் சேர்ந்த **மிருதுளா சின்கா** சொல் வது: "இந்தியப் பாரம்பரியம் முன்வைத்து ஏற் றுக் கொண்ட பாலியல் சமத்துவத்தை மீட்டுத் தருவ தென பாரதீய ஜனதாக் கட்சி சபதமேற்கி றது... மேற்கில் வளர்ந்து வரும் பெண் விடுதலை இயக்கங்களிலிருந்து நாங்கள் கோட்பாட்டளவில் வேறுபடுகின்றோம். சமூகத்திலும் பொருளாதாரத் திலும் ஒருவகையான மறுசீரமைப்பை நாங்கள் கோருகிறோம். மதிப்பீடுகளில் அடிப்படை மாற்ற ங்கள் தேவையில்லை. வீட்டுக்குள்ளும் சமூகத் திலும் இந்தியப் பெண்களுக்கு எப்பொழுதும் ஒரு கவுரவமான இடம் இருந்து வந்திருக்கிறது. இதனை மறு உறுதிசெய்து நிறுவினால் போது மானது." நைரோபியில் நடைபெற்ற 'அய்.நா.' பெண்கள் மாநாடொன்றில் பெண்களின் வீட்டு வேலைக்கு ஊதியம் கணக்கிடப்படவேண்டு மெனவும் 'லெஸ்பியனிசம்' எனப்படும் ஒரு பால் உறவுக்குச் சட்டஏற்பு வழங்கப்பட வேண்டுமென வும் வாதிடப்பட்டது. இது குறித்த 'மகிளமோர் ச்சா'வின் கருத்து: "இந்தியச் சமூக ஒழுங்கிற் கும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கும் இவை எதி ரானவை. வீட்டுப்பணிக்குக் கூலி நிர்ணயிப்ப தென்பது இந்தியத் தாய்மையை இழிவுசெய் வது. 'லெஸ்பியனிசத்திற்கு' சட்டஏற்பு என்பது ஆபாசமான கோரிக்கை. இந்தியச் சூழலுக்கு ஒவ்வாதது."

இந்திய மரபுக்குரிய பெண்ணியம் என்கிற

கருத்தை பாரதீய ஜனதா வெளிப்படையாக முன்வைக்கிறதென்றால் இன்னும் பலர் இதே சிந்தனையை மறைமுகமாக வைக்கின்றனர். சாதிஆதிக்கம், பார்ப்பனீயம், இந்துத்துவம் ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்காமல் பெண் விடுதலை பேச நினைக்கும் எல்லோரையும் இந்த வரிசையில் நிறுத்திவிட முடியும். இவர்களுக்குப் பெண்விடுதலை என்றால் அழகிப் போட்டியை எதிர்ப்பது, ஆபாசச் சுவரொட்டிகளைக் கிழிப்பது, வீட்டுப்பொருட்களின் விலை ஏற்றத்திற்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்வது, சாதி வாரி ஒதுக்கீடு இல்லாமல் பெண்களுக்கு 33 சதம் இட ஒதுக்கீட்டிற்காகப் போராடுவது என்பவைதான். இவர்கள் மேற்கொள்ளும் ஆக முற்போக்கான செயற்பாடு காவல்நிலைய பாலியல் வன்முறைகளைக் கண்டித்து இயக்கம் நடத்துவதுதான். குடும்பம், கற்பு, சாதி, இந்(து)திய மரபு முதலானவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதை இவர்களால் சகிக்க முடியாது. **பெரியாரை** அப்பழுக்கற்றவராகக்காட்ட முயலும் ஒரு சிலரும்கூட அவரது பெண்ணியச்சிந்தனைகளை உயர்த்திப் பிடிப்பதில்லை. அவரது எதிர் கலாச்சாரச் சிந்தனைகளை மனதார ஏற்றுக் கொள்வதில்லை. அலிகள், பால் கடந்த உயிரினர், ஒரு பால் உறவினர் பற்றிப் பேசுவதை இவர்களால் சகித்துக் கொள்ளவே முடியாது.

தலித் பெண்ணியம் இத்தகைய இந்துத்துவப் பெண்ணியத்திலிருந்து விலகி நிற்கும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. **அயோத்திதாசரும் அம்பேத்கரும்** முயற்சித்ததைப் போல தலித் பெண்ணியமும் இந்தியமரபு என்பதை வைதீக வேர்களிலிருந்து அல்லாமல் பவுத்த, சைன அவைதீக மரபில் தேட முயலும். **அம்பேத்கர், பெரியார், பூலே** வழியில் நின்ற சாதீயம், பார்ப்பனீயம், ஆணாதிக்கம் ஆகியவற்றை எதிர்க்கும். தலித் ஆணை அது தன் எதிரியாக நிறுத்தாமல் உயர்சாதி ஆணாதிக்கச் சமூகத்தை அது தனது இலக்காகக் கொள்ளும்.

## 6

இப்போது நம்முன் இரண்டு கேள்விகள் எழுகின்றன.

முதல் கேள்வி: ஒரு தலித்ஆண் தலித் பெண்ணைக் கொடுமைப்படுத்துவதே இல்லையா? ஆதிக்கம் செய்வதில்லையா? நீங்கள் சொல்லும் நிலைப்பாடு தலித்ஆண்களுக்கு, தலித்பெண்களுக்கெதிரான பாதுகாப்பை வழங்குவதாகாதா?

தலித் சமூகம் ஒரு படித்தானது என நாம் சொல்லவில்லை. அதற்குள்ளும் பல்வேறு தனித்துவங்கள் இருக்கவே செய்கின்றன. தலித் பெண்களின் பிரச்சினைகளும் அனுபவங்களும் நிச்சயமாக தலித்ஆண்களின் பிரச்சினைகளிலிருந்தும் அனுபவங்களிலிருந்தும் வித்தியாசப்பட்டு உள்ளதால்தான் 'தலித் பெண்ணியம்' என்கிற கருத்தாக்கத்தை முன் வைக்கிறோம். இல்லையேல் 'தலித்தியம்' என்பதோடு நிறுத்திக் கொண்டிருப்போம். தலித் சமூகத்திற்குள் தலித் பெண்ணின் மீதான தலித்ஆணின் ஒடுக்கு முறையை தலித் பெண்ணியம் நிச்சயமாக எதிர்த்து நிற்கும். 'தலித்' என்னும் உரிமையைப் பயன்படுத்தி ஒரு தலித்ஆண், தலித்பெண்ணின்மீது ஆதிக்கம் செலுத்துவதை அது ஏற்றுக்கொள்ளாது. கருப்புப்பெண்ணிய அனுபவங்களிலிருந்து இங்கே ஒரு எடுத்துக்காட்டைச் சொல்லமுடியும். சில ஆண்டுகளுக்கு முன்பு (1991)**கிளாரென்ஸ் தாமஸ்** என்ற கருப்பர் அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது **அனிதா ஹில்** என்னும் கருப்புப் பெண் அவர்மீது பாலியல் வன்முறை தொடர்பான குற்றச்சாட்டை வைத்த செய்தி உலகின் கவனத்தை ஈர்த்தது. ஒரு கட்டத்தில் தாமஸ் "ஒரு கருப்பர் உச்சநீதிமன்ற நீதிபதியாவதைத் தடுக்க மேற்கொள்ளப்படும் சதி இது" என்றார். சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் வெள்ளையர்கள் கருப்பர்களைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்படும் "Lynching" என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அனிதாவுக்கு ஆதரவாகப் போராடிய கருப்புப் பெண்ணியர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். Lynching எனச் சொல்வதன் மூலம் அனிதா ஒரு கருப்புப்பெண் என்ற உண்மை மறைக்கப்படுகிறது. அவருக்குக் கருப்பு அடையாளம் மறுக்கப்படுகிறது. ஒரு கருப்புப் பெண்ணின் இருப்பு அழிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர்கள் முழங்கினர். 'இன ஒதுக்கல்' என்கிற சொல்லாடலைப் பயன்படுத்தி ஒரு கருப்புஆண் கருப்புப்பெண்ணுக்கு எதிரான சலுகையைக் கோரமுடியாது. 'தீண்டாமை' என்கிற சொல்லாடலைப் பயன்படுத்தி ஒரு தலித் ஆண் தலித்பெண்ணுக்கு எதிரான சலுகையைக் கோரமுடியாது. இனவெறி எதிர்ப்பு அல்லது தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை என்பன கருப்பு அல்லது தலித் பெண்ணுக்கு எதிராகச் செயல்படமுடியாது.

இனி இரண்டாவது கேள்வி: தலித்பெண்களை இப்படி இதர பெண்களிலிருந்து தனிமைப்படுத்தி ஒதுக்கி நிற்கவைத்தல் என்ன நியாயம்? 'பெண்' என்கிற சொல்லுக்கு அர்த்தமே இல்லையா? பொதுவான மாதிரிகள் (Com mon patterns) நடைமுறையில் சாத்தியமே இல்லையா? பொதுவான செயற்பாடுகள் தேவையே

இல்லையா?

இத்தகைய கேள்விகள் வழக்கமாக தலித்தியம், பின்நவீனத்துவம் முதலியவற்றிற்கெதிராக வைக்கப்படக்கூடிய கேள்விகள்தான். இப்படியெல்லாம் முடிவுக்கு வருவதற்கு எந்த நியாயமும் இல்லை. **லிண்டா நிக்கல்சன்** சொல்வார்: "பெண் என்பதற்கு தெளிவான ஒற்றை அர்த்தம் கிடையாது எனச் சொல்வது பெண் என்பதற்கு அர்த்தமேயில்லை எனச் சொல்வதல்ல." பொதுவான மாதிரிகள் சாத்தியமில்லை என்பதும் நம் கருத்தல்ல. பொதுவான மாதிரிகளைத் தேடவேண்டாம் எனவும் சொல்லவில்லை. ஆனால் பொதுவான மாதிரி என்பது ஒரு நிரந்தரமான விசயமல்ல. பொதுவான மாதிரிகள் கரைந்து மறையும் புள்ளிகளும் உண்டு. இந்தப்புள்ளிகள் ஒதுக்கப்பட வேண்டியவையல்ல; முக்கியமானவை. 'பெண்' என்பதன் பொருள் பல்வேறு வித்தியாசங்களும் ஒப்புமைகளும் சந்திக்கும் வரைபடமாக உள்ளது எனச் சொல்லும்போது, பொதுமை என்கிற பெயரில் ஏதொன்றின் தனித்துவமும் அழித்தொழிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது. சனநாயகபூர்வமான கூட்டிணைவு அரசியலுக்கு இப்போதுதான் சாத்தியமும் ஏற்படுகிறது. 'பெண்' குறித்த மரபு வழிப்பட்ட புரிதலுக்கு அப்பாற்பட்ட ஒரு புரிதல், அர்த்தம் பற்றிய திமிரான அணுகல்முறைக்கு மாற்றான ஒரு அணுகல்முறை ஆகியவையே இதன்மூலம் வைக்கப்படும் கோரிக்கைகள். பொதுவான கரிசனங்களின் அடிப்படையில் கூட்டிணைவு என்பதைக் கருப்புப்பெண்ணியமோ தலித்பெண்ணியமோ மறுக்கவில்லை. சனநாயகச் சமத்துவ நோக்கிலான 'நாம்' என்கிற கூட்டு அடையாளத்திற்கு நாம் என்றுமே எதிரிகளல்ல. கருப்புப் பெண்ணியர்கள் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர். தலித்பெண்ணியர்களுக்கும் இதில் மறுப்பதற்கு ஏதுமில்லை. சுருங்கச் சொல்வதெனில் சாராம்ச அடையாளம் சாத்தியமில்லை என்பது மட்டுமே தலித் பெண்ணியம் சொல்லவருவது. அடையாளமே சாத்தியமில்லை என்பது அதன் கருத்தல்ல. **சந்தால் மொ·பே** சொல்வார்: "என்னைப் பொறுத்தமட்டில் பெண்ணியம் என்பது பெண்களின் சமத்துவத்திற்கான போராட்டமே. ஆனால் பொதுவான சாராம்சமும் அடையாளமும் கொண்ட வரையறுக்கத்தக்க ஒரு குழுவின் சமத்துவத்திற்கான போராட்டமாக இதைக் கருதக்கூடாது. மாறாக ஒடுக்கப்படும் வகையினமாகப் 'பெண்'ணைக் கட்டமைக்கும் பல்வேறு சாத்தியங்களுக்கும் எதிரான போராட்டமாக அதைக் கருதவேண்டும். எனவே பெண்ணிய நோக்குகளைப் பல்வேறு வித்தியாசமான வழிகளில் கட்டமைக்கலாம் என்கிற உணர்வு நமக்குத் தேவை. எனவே வித்தியாசமான பல சொல்லாடல்கள் இது தொடர்பாகச் சாத்தியம். பல பெண்ணியங்கள் என்பது இவ்வாறு தவிர்க்க இயலாததாகிறது. இவற்றில் உண்மையான பெண்ணிய வடிவத்தைத் தேடுவது அபத்தமானது."

## 7

தலித் பெண்ணியம் குறித்த சில முன்வரைவுகளை நாம் இப்போது முன்வைக்கமுடியும் எனத் தோன்றுகிறது.

தலித் பெண்களின் அனுபவங்கள் தனித்துவமானவை. உயர்சாதி ஆணாதிக்கச்சமூகத்தின் வன்கொடுமைக்குப் பலியான வரலாறு அவர்களுடையது. இந்திய வரலாற்றில் அடிமைகளாக விற்கப்பட்ட பெண்கள், தேர்க்கால்களில் பலியிடப்பட்ட பெண்கள், விபச்சாரிகளாக்கப்பட்ட பெண்கள் என்றெல்லாம் பார்த்தோமானால் இவர்களில் பெரும்பாலானவர்கள் தலித்பெண்கள் என்பது தெரியவரும். இன்றளவும் காவல்நிலையப் பாலியல்வன்முறைகளைக் கணக்கெடுத்துப் பார்த்தோமானால் அதிலும் தலித்பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் என்பது புலப்படும்.

தீண்டாமை என்பது ஒரு முரண்சமனியாகவும் செயற்பட்டதன் விளைவாக தலித்பெண்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் இந்துத்துவ, ஆணாதிக்க மதிப்பீடுகள் குறைவாகவே வேரூன்றியுள்ளன. குடும்பஉறவுகள் நெகிழ்ச்சியாக உள்ளன. தலித்பெண்களின் சிறப்புமிக்க இந்தத் தனித்துவமான கூறுகளை தலித்பெண்ணியம் உரத்துக்கூவும்; உயர்த்திப்பிடிக்கும்.

தலித்பெண்ணியம் தனக்கு அணுக்கமாக வைதீக இந்(து)திய மரபை எடுத்துக் கொள்ளாது. பவுத்த சைன அவைதீக மதிப்பீடுகள், பூலே, பெரியார், அம்பேத்கர் என்றொரு பாரம்பரியத்தை வரித்துக் கொள்ளும். இந்த மரபில் நின்று இந்(து)தியச் சமூகத்தை வெறும் ஆணாதிக்கச் சமூகமாகக் காணாமல் உயர்சாதி ஆணாதிக்கச் சமூகமாகக் காணும். சாராம்ச அடையாளம், உயிரியல் அடித்தளம், மொத்தத் துவம் ஆகியவற்றை மறுக்கும் வகையில் பின் நவீனத்துவச் சாய்வுடையதாக தலித்பெண்ணியம் அமைவது தவிர்க்க இயலாது.

தலித்பெண்கள் மீதான வன்கொடுமைகளில் அரசின் பங்கு முக்கியமானதாக இருப்பதால் தனது இலக்குகளில் ஒன்றாக உயர்சாதிஆணாதிக்க அரசை தலித் பெண்ணியம் கருதும்.

பொதுவான கரிசனங்களின் அடிப்படையில் இதர பெண்களுடன் கூட்டிணைவிற்கு தலித்

பெண்ணியம் எப்போதும் தயாராக இருக்கும். ஆணாதிக்கம் மட்டுமின்றி சாதி ஆதிக்கத்தையும் எதிர்த்து நிற்கும்போதே இந்தக் கூட்டிணைவிற்கான சாத்தியங்கள் உருவாகும். சாதீயச் சூழலில் பெண்ணடிமைத்தனத்தை உயர்சாதிப் பெண்கள் விளங்கிக்கொள்ள முனையும்போதே இந்தச் சாத்தியங்கள் நடைமுறையாக மாறும்.

## குறிப்புகள்:


1. மேற்கோள்களாகத் தொகுக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் பெண்களின் எழுத்துக்களிலிருந்து மட்டுமே எடுக்கப்பட்டுள்ளன.
2. சில முக்கிய நூற்கள்:
   Linda Nicholson, Stevan Seidman (Ed), 'SOCIAL POSTMODERNISM', Cam bridge 1995.
   Lydia Sargent, ' THE UNHAPPY MARRIAGE OF MARXISM AND FEMINISM ', Pluto 1986.
   Angela Davis, ' WOMEN, RACE AND CLASS ', Women's Press, 1986.
   Judith Buttler, Joan Scott, ' FEMINISTS THEORISE THE POLITICAL', Routledge, 1992.
3. அமெரிக்காவின் அடிமை ஒழிப்பு இயக்கம், கருப்பர்களின் சிவில் உரிமை இயக்கம் ஆகியவற்றிற்கும் நமது தலித் இயக்கங்களுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. அடிமை ஒழிப்பு இயக்கத்தில் தொடக்கத்தில் இருந்து கருப்புப் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இந்தவகையில் அடிமை ஒழிப்பு இயக்கத்தில் கருப்பினப்பெண்களின் பங்கு என்பது அமெரிக்கப் பெண்ணிய இயக்கத்திற்கே முன்னோடியாக அமைந்தது. இங்கே அத்தகைய நிலை இல்லை என்பதும் அதற்குரிய காரணங்களும் சிந்திக்கத்தக்கன.
4. வெள்ளைப்பெண்களின் அரசியலில் இருந்து கருப்புப்பெண்கள் விலகி நின்றதற்கு ஒரு எடுத்துக்காட்டு: வெள்ளைப்பெண்கள் **'வன்புணர்ச்சி எதிர்ப்பு இயக்கம்'** (Anti-Rape movement) நடத்தியபோது கருப்புப்பெண்கள் **'கருப்பினப்படு கொலை எதிர்ப்பு இயக்கத்தை'** முன்னெடுத்தனர். கருப்பர்கள் அனைவரும் வன்புணர்ச்சியாளர்கள் என்கிற புனைவு ஒன்றைக் கட்டமைப்பதற்கு வன்புணர்ச்சி எதிர்ப்பு இயக்கம் துணைபோனது. இதன்மூலம் கருப்பர்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் படுகொலை செய்யப்பட வேண்டியவர்கள் என்கிற கருத்துக்கும் இது வித்திட்டது. ஆனால் நடைமுறை என்பது அப்படியில்லை. காலங்காலமாக கருப்புப்பெண்கள் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டதே உண்மை. எனினும் வன்புணர்ச்சிக்காக அமெரிக்க நீதிமன்றங்களில் தண்டிக்கப்பட்ட ஆண்களில் பெரும்பான்மையோர் கருப்பர்கள். கூட்டுவன்முறை மூலம் கருப்பர்களைக் கொலைசெய்வதற்கு (Lynching) மறைமுகமாகத் துணைபோன வெள்ளைப்பெண்களின் அரசியலோடு கருப்புப்பெண்கள் இணையாமல் கருப்பினப் படுகொலை எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.
5. இக்கட்டுரை முழுவதும் **உயர்சாதி ஆணாதிக்கச் சமூகம்** என்கிற கருத்தாக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கே உயர்சாதி என்பது ஒருபடித்தானதாக இல்லை. உயர்சாதியினரை பார்ப்பன வேளாள மேல்சாதியினர் எனவும் இதர இடைநிலைச் சாதியினர் எனவும் இருகூறுகளாகத் தொகுக்கலாம். குடும்பஉறவுகளில் நெகிழ்வு, அறுத்துக் கட்டுதல் முதலான சில அம்சங்களில் இடைநிலைச் சாதிப் பெண்கள் தலித் பெண்களோடு ஒப்புமை உடையவர்களாக உள்ளனர். எனினும் தீண்டாமை அவர்களை வித்தியாசப்படுத்துகிறது.

# பெண்ணியத்தை அணுகுதல் குறித்து

## எஸ்.வி. ரு.ஃ.பேல்

அதிகாரத்தின் செயற்பாடு ஒருபோதும் வெளிப்படையாகத் தெரிவதில்லை. அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நிகழ்த்தப்படும் அனைத்துச் செயல்களிலும் நடவடிக்கைகளிலும் இவற்றை உள்ளடக்கிய நிகழ்வினங்களிலும் அதற்கேயுரிய வன்முறையை உற்று நோக்கமுடியும்.இந்த வன்முறையானது அனைத்துத் தளங்களிலும் நிகழ்கிறது. குறிப்பாக இது அறிவின்மீது நிகழ்த்தப்படுகிறது. இந்த வன்முறையைப் பற்றிய இன்றைய சமூக வரலாற்று நிகழ்வினங்களினூடான இணைப்பார்வையாகவே இந்தக் கட்டுரை இருக்கமுடியும்.

இப்போதுள்ள நடைமுறை நிகழ்வினங்களில் பெண்ணியக் கருத்தாடல் தனது தேவையை முன்னெப்போதும் இல்லாதவகையில் எமது சமூகத்தின்முன் (உலக அளவில்) நிறுத்தியிருக்கின்றது. பெண்ணியச் சிந்தனைப் போக்குகளின் பாதிப்பிலான பல நடைமுறைகள் வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களைத் தாண்டி வந்து கொண்டிருக்கின்றன. பாலியல் விடுபடல் என்பது (உலகளவில்) நிகழ்ந்தது என்பதன் பின்பாக அதன்மீதான சட்டம் அல்லது வரையறைகள் என்பன செயலற்றுப் போய்விட்டன எனலாம். எனவே பாலியல் நடவடிக்கைகளில் அதீதங்கள் செயலாக்கம் பெறுவதற்கான தடையும் இன்மையில் இருக்கின்றது. இந்த நிலையில் பாலியல் சார் செயல்வகைகளும் கூர்ந்த ஓர்மமிக்க கேள்விகளுக்குள்ளாக்கப்பட்டு விட்டன. உடலுறவின் போதான குறிகளின் செயல்பாடு எந்தவகையிலும் மூக்கை நோண்டுவதற்கும், காதைக்குடைவதற்கும் கூடியதோ குறைந்ததோ அல்ல என்பது - பெண் எப்போதும் வரலாற்றினூடு பெண்ணின் உடலோடு/உடல்தன்மையோடு பொருத்திப் பார்க்கப்பட்டுக் கொண்டிருப்பதனால் - கருத்தில் கொள்ளப்படுகிறது. இலிங்கம், யோனி, குதம், வாய் என்பன மாற்றீடுகளாக ஒன்றிற்கொன்று இருப்பதால் அவற்றின் குறிப்பான செயல்கள் வலுவிழந்து, எனவே அதனால் உடல் வயப்பட்ட பாலினம் அழிந்து கொண்டிருக்கிறது. பழையபாணிகளாகிவிட்ட ஸாடிஸம், மாஸோகிஸம் எனும் பாலியல் நடவடிக்கைகள் அடுத்த கட்டமாக அல்லது அதன் திரிபு வடிவமாக போதைகளினால் (பவுடர், மாத்திரை, ஊசி



கதை சொல்பவர்: Amrita Sher-Gil(1937)

இன்னபிற) நிரப்பப்பட்ட பாலியல் செயல்பாடுகளும் தலையெடுக்கின்றன. பாலியல் செயல்பாடுகளின் மீதான, அவை தொடர்பான மனித நடவடிக்கைகளின் மீதான பார்வையுடன் மட்டுமே பெண்ணியச் சிந்தனைகளை அணுகுவதென்பது காலங்கடந்த ஒன்றாகத் தோற்றம் அளிக்கின்றது. ஏனெனில் 'பெண்' எனும் கருத்தாக்கம் 'பெண்' சார்ந்த உடலாகவும், பெண் சார்ந்த மனம் (Mind) ஆகவும் பார்க்கப்படத் தொடங்கியாயிற்று. 'பெண் உடல்' தனது கோரலை, தனது இருத்தலை எவ்வளவுக்கெவ்வளவு தனித்துவமாக கோரிநிற்குமோ அதேஅளவு அதைவிட உன்னிப்பான கூர்மையான அளவு 'பெண் மனம்' தனது இருத்தலைத் தனித்துவமாகக் கோரி நிற்கும்.

மேற்சொன்னவற்றை முன்னோட்டமாகக் கொண்டால் அடுத்த கட்ட நகர்வு 'பெண் தன்மை'பற்றிய கவனக்குவிப்பாக இருக்கும். இரு விடயங்கள் எடுகோள்களாகத் தேவைப்படுகின்றன.

1. 'பெண்' என்னும் கருத்தாக்கம் உடலின் சார்பாகப் பார்க்கப்படாமல் மனதின் சார்பாகப் பார்க்கப்படுவதே அடிப்படை மாற்றத்திற்கு வழி வகுக்கும். இதையே 'பெண் தன்மை' எனலாம்.

2. மனம் திணிப்பிற்கு (Penetration) உள்ளாக்கப்படலாம்.

எவ்வாறெனில் உடலின் மீதான தாக்குதல் என்பது - பால் செயல்பாட்டில் எப்போதும் பெண் உடலின் மீதான தாக்குதல் என்றே புரிந்து கொள்ளப்படும். தாக்குதல் ஆண் உடல் மீது ஒருபோதும் நிகழ்வதில்லை; அவ்வாறே நடைமுறையும். 'பெண் தன்மை' என்பது மனம் சார்ந்த ஒரு 'உடலாகவும்' இருப்பதால் அம்மனத்தின் மீதான சொற்களின் வழியான தாக்குதல் மனத்தை தாக்குகிறது; ஓர் திணிப்புச் செயல்பாட்டை மேற்கொள்கிறது. இன்று உடல் சார்ந்த விடுபட்ட தன்மை முன்னணிக்கு (பெண்களைப் பொறுத்தவரை) வரும்போது, மறுபக்கத்தில் மனத்தின் மீதான தாக்குதல் மறை முகமாக வேனும் வலுப்படுகிறது. தாக்குதல் என்பது சொற்கள் அல்லது குறிகள் (signs) வழியான மனத்தின்மீதான, ஆளுமையின்மீதான திணிப்புச் செயல்பாடேயன்றி வேறில்லை.

இதற்கு வரலாற்றில் நடைமுறையில் கிடைக்கும் பல உதாரணங்கள் காட்டலாம். சாதாரணமாக ஏதோ ஒரு வசதிக் குறைவான செயலை ஒருவர் செய்துவிட்டால் ஆணின் பார்வையிலிருந்து சொல்லப்படும் உடலுறவைக் குறித்த சொற்களைப் பாவித்துச் சாதாரணமாகத் திட்டுகிறார்கள். ஆங்கிலச்செய்தி, திரைப்பட வர்ணனைகளில் இவை தெளிவாகக் கையாளப்படும் சொற்களாக உள்ளன. ரஜனிகாந்த் சண்டையில் வெற்றியடைந்ததும் முட்டியை மடித்து கையை மேலே உயர்த்திக் காட்டுவதும், தமிழ் நாட்டில் இருந்துவரும் தொடர்நிகழ்ச்சிகளின் அறிவிப்பாளர்கள் கையை, விரலை பார்த்துக் கொண்டிருப்போரை நோக்கி அடிக்கடி நீட்டுவதும். இதன் உச்சக்கட்டமாக எம். டிவி நிகழ்ச்சித்தொகுப்புகள் இருப்பதும் ஒரு உதாரணம். விளையாட்டுக்களில் 'கோல்' போட்டவர்கள் காட்டும் சைகைகளும், டென்னிஸ் விளையாட்டில் வெற்றியடைந்தவர்கள் காட்டும் செயல்களும் இவ்வகையினவே. பெருவீதிகளில் வாகனங்களில் செல்லுகையில் விதிகள் மீறப்படும் போது நடுவிரலை மட்டும் நீட்டிக் காட்டுவது அனைவருக்கும் தெரிந்த உதாரணம்.

சாதாரணமாக அமைதியாயிருப்பவர்கள் சிலர் போதையேறியதும் பிரசங்கம் பண்ணத் தொடங்கிவிடுவார்கள். இவர்களின் அறிவு/அனுபவம் எத்தகையதாய் இருப்பினும் சரி அதைக் கண்டு கொள்வதேயில்லை. இதேபோலவே பல படைப்பாளிகள் கவிதைகள், கதைகள், நாவல்கள் எழுதி பெயர்பெற்று விடுவதனாலேயே பண்பாடு முழுமைக்கும் தத்துவ விளக்கங்களும் நடைமுறை விளக்கங்களும் வழங்குவார்கள். இங்கு அவர்களின் அதற்கான தகுதியோ/கல்வியோ/ அனுபவஅறிவோ எதிர்பார்க்கப்படுவதில்லை. இது சைகைகளிலிருந்து ஓர் பனுவலாகவே திணிப்பைச் செய்யும் நிலை. பள்ளிகளில் ஆசிரியர்கள் 'ஏய்', 'இஞ்ச கேள்', 'பார்' என்பது போன்ற சொற்களை அடிக்கடி பிரயோகிப்பர். இது பனுவலுக்கு அடுத்த கட்டமாக நுணுக்கமான சொல் நிலையில் காணக் கூடிய செயற்பாட்டு உதாரணம். 'அப்பன்', 'ராசா', 'குஞ்சு' என்று மூத்தோரால் பாவிக்கப்படுவதும் இத்தகைய மனநிலையின் வெளிப்பாடே. ஆனால் கட்டுரைக்கு உதாரணங்களின் அச்சொட்டான தன்மைமீது பெரும்கவனம் இல்லை. இதில் பேசப்படும் திணிப்பு பற்றிய கவனக்குவிப்பே முதன்மை வேலை.

ஓர் உலகளவில் வியாபித்திருக்கும் தத்துவத்தின் வளர்த்தெடுப்பாளர் ஒருவரின் எழுத்தில் பின்வருமாறு இருக்கிறது.


"... language, as the organ of intercourse between men." *

மேற்சொன்ன உதாரணங்கள் மனத்தின்மீது மொழியின் மூலமாக, அன்றாட வாழ்வின் நடைமுறைகளின் வழியாக உருவாகும் குறிகளின் உதவியுடன் மனிதர்கள் தாக்குதல் நிகழ்த்துகின்றனர் அல்லது ஓர் திணிப்புச் செயல்பாட்டை

நிகழ்த்துகின்றனர் என்பது புலனாகும். முன் சொன்ன விரல்கள், கைகள் என்பன ஃபிராமின் கருத்தின்படி இலிங்கத்தினுடைய மாற்றுக்கள் அல்லது குறியீடுகளே. எனவே, அச்செயல்க ளும் இலிங்கத்தின் செயல்பாட்டின் மாற்றுக்க ளேயாகும். அதனாலேயே திணிப்பு எனக் கொள் கிறோம். உடலில் உறுப்புக்களின் நுழைவுக்குப் பதில் மனத்தில் சொற்கள் நுழைகின்றன. அதா வது திணிக்கப்படுகின்றன எனலாம். இங்கு சொல் எனப்படுவது அதன் விரிவாக வாக்கியம், பாடம்/பனுவல், நிகழ்வினம், வரலாறு என விரி யும். சமூகத்தில் மொழி 'ஆண்'களைச் சார்ந்தி ருப்பதால் 'பெண்'களின் மனத்திலேயே பெரும் பாலும் திணிப்பு நிகழ்த்தப்படுகிறது. ஆனால் அதேவேளை பல மறைமுக/நேரடி திணிப்புச் செயல்பாடுகள் 'ஆண்'களிடையேயும் ஐயத் துக்கிடமில்லாமல் அன்றாடம் நிகழ்கின்றன. திணிப்புநிகழ்வு இல்லாத மனிதத்தொடர்புகள் இருக்கமுடியாது.

சொல்/குறி தனது படிமத்தைக் காவிக் கொண்டு தொடர்ச்சியாக ஓர் மனத்தில் நுழைகி றது. இந்தத் தொடர்நிகழ்வின் விளைவாக மன த்தில் குவியும் லட்சக்கணக்கான சொற்கள்/ குறிகள் மனத்தின்மீது மீண்டும் மீண்டும் தமது படிமங்களால் தாக்குகின்றன. இதன் விளைவா கவே ஆளுமை ஒன்று உருவாகின்றது; தன்னி லையும் கட்டமைக்கப்படுகிறது. இது ஓர் இயல் கடந்த கதையாடலாக (Para narrative) ஆளு மையின் வடிவத்தில் மனத்தில் பொதிந்து கொண்டிருக்கிறது. இந்த ஆளுமைகள் தொடர் ச்சியான பெறுவோராகவே எப்போதும் இருந்து வருவதில்லை. திணிப்போராகவும் நடைமுறை யில் மாறுவது கண்கூடு.

இந்தத் திணிப்போர்களில் சில தனித்த குணா ம்சங்களுடைய வகைகள் உள்ளன. முனைப்பு டைய திணிப்பாளர் (Active), முனைப் பற்ற திணிப்பாளர் (Passive) என இரு வகை யும் முழுமையாகவே திணிப்பை மறுப்பவர்கள் என்ற ஓர் வகையும் இதில் வரும். மூன்றாவது வகை யின் இன்னொரு பக்கமாக முனைப்பற்ற திணிப்பு மறுப்பாளர் என ஒரு வகை இருக்கும். மனத்தின் மீதான சொற்களின் திணிப்பிற்கு எல்லை, வரையறை இல்லை. இச்செயல் பாட்டை அனைவருமே நடைமுறைப்படுத்துகின் றோம். அனைவருமே திணிப்போராயும் திணிக் கப்படுவோராயும் எப்போதுமே இருந்துகொண்டு தான் இருக்கின்றோம். மேற்சொன்ன வகைப்பாடு அதன் விகிதாசார அளவுகளை வைத்தே சொல் லப்பட முடியும். எனவே இவ்வகைப்பாட்டைக் குறித்து நாம் உதாரணங்களுடன் பேசும்போது



முகமூடி: Pilloo Pochkhanawala (1923-86)

உதாரணம் அப்படியே சரியாக இருப்பது சாத்தி யமில்லா ததே.

தொழில்நுட்பரீதியாகப் படித்தவர்கள், ஆசிரி யத்தொழில் போன்ற அனுபவம் உடையவர்கள் ஒலி வாங்கியுடன் தொடர்புடைய தொழிலில் உள்ளவர்கள் முனைப்புடைய திணிப்பாளர் வகையில் வரலாம். தொழில்ரீதியாகப் படித்தவர் கள் பெற்றுவரும் சமூக அந்தஸ்து அவர்களுக் குக் கொடுக்கும் திராணி இவர்களை அந்த வகையோராக ஆக்குகின்றது. சில நேரங்களில் சிறு குழுக்களின் மத்தியில் நிகழும் உரையா டல்களில் தற்காலிகமான முனைப்புடையோ ராகச் சிலர் மாறுவதுண்டு. தான் சொல்வதை நிலைநிறுத்துவதற்காக, உரையாடலில் வரும் கருத்தியல் விடயங்களை அடுத்தவருக்கு தெரி யாது அல்லது அடுத்தவர் சொல்வது பிழையா னது என்பதை விதண்டாவாதமாக நிறுவுதல்; இதன் மறுதலை, தனக்குத் தெரியும் என்பதா கவே இருக்கும். இந்நிலையில் 'தான்' சார்ந்த தன்முனைப்பின் வேலையே கூடுதலாக முன் நிற்கும். இந்நிலையில், பலவேளைகளில் முறை யான கல்வியின்பாற் பெறப்பட்ட அறிவே கூட மறுக்கப்படலாம். அனுபவம் முதன்மையானது எனத் தூக்கி நிறுத்தப்படலாம் அல்லது வேறு ஏதோ ஒன்று முன்வைக்கப்படலாம்.

நேரடியான திணிப்புச்செயலில் இறங்குவதை விரும்பாதவர்கள் பேசுவதோ எழுதுவதோ பெரு விருப்பமாகக் கொள்ளாதவர்கள் முனைப்பற்ற திணிப்பாளர் வகையில் வருவர். சிலர் தான்

எழுதுவதை வெளிப்படுத்த விரும்பாது பிறருடைய பெயரின்கீழ் எழுதுவர் அல்லது தனது கருத்தியலைப் பேசுவதற்கு, எழுதுவதற்கு பிறரைத் தயார் செய்து வைத்திருப்பர். இந்த முதல் இருவகைகளுமே கூட பொதுவாழ்வில் ஒருமாதிரியும் தனிமனித உறவுகளில் வேறுமாதிரியும் இருக்கக்கூடும். இக்கட்டுரை இலக்கிய கர்த்தாக்கள், இணைப்பண்பாட்டினர், அறிவு வாழிகளின் திசையினையே இலக்காகக் கொண்டிருப்பதால் தனிமனிதஉறவுச்சூழல் உதாரணங்கள் இங்கு கையாளப்படவில்லை.

மூன்றாவது வகையினர் திணிக்கப்படுவதை அறவே மறுப்பவர்கள். கருத்தியல்ரீதியாகவோ, வெறுமனே கேள்விகளாகவோ கூட எதையும் விரும்பாதவர்கள். இது ஒருவிதமான தற்காதலின் (Narcissism) வெளிப்பாடே. கேள்விகளையும் தானே கேட்டு பதிலையும் தானே சொல்வார்கள் சிலர். சிலர் கேள்வி வந்துவிடக்கூடாது என்பதற்காக தொடர்ந்து சுற்றி வளைத்து எதையாவது சொல்வது அல்லது எழுதுவது என்றிருப்பர். இதில் முனைப்பற்ற வகையினர் திணிக்கப்படுதலை நேரடியாகக் காட்டிக்கொள்வதில்லை. பிறருடைய கருத்துக்களை கட்டுரையாகவோ, பேச்சாகவோ பயன்படுத்தும்போது அந்த மூலங்களை மறைத்து விடுவது; பிறர் கருத்தைப் பயன்படுத்தி நூல்களை எழுதினால் கூட இப்படி மறைத்து விடுவதே இன்றைய நிலைமை. மூலம் யாருடையதாகவே இருப்பினும் அதை வெளியிடுவதில்லை. அதாவது வேறு ஒருவரின் திணிப்பிற்கு தான் எழுத்து மூலமாகவேனும் உள்ளாகியிருக்கின்றேன் என்பதை மறைத்தல். அதுமட்டுமல்லாது புதிய நல்ல நூல்களை பிறரின் அறிதலுக்குட்படாது தடுத்தல். நூற்களின் மூலம் பிறர் அறிவுக்குள்ளாவதனையும், அதன்பின் அந்தப் பிறர் திணிப்போராய் மாறுவதையும் விரும்பாமை இதனால் வெளிப்படும்.

இம்மாதிரிகள் அனைத்திலும் எப்போதும் திணிப்பவரும் திணிக்கப்படுபவரும் இருந்து கொண்டேயிருக்கின்றனர். இது பால் சார்ந்த வெளிப்படையான செயல்பாடாக எப்போதும் இருப்பதில்லை. ஆனால் அதிகாரமும் ஆணாதிக்கமும் ஒன்றாக வைத்துப் பார்க்கப்பட முடியுமாதலால், அதிகாரத்தைச் செயல்படுத்துவதும், திணிப்பைச் செயல்படுத்துவதும் ஒன்றேயாகப் பார்க்கப்படலாம். தனிமனிதத் தாக்குதல்களாக வரும் விமர்சனங்கள் உண்மையிலேயே, வெறுமனே திணிப்பையே விருப்பமான நோக்கமாகக் கொண்டன. விமர்சனம் இவர்களின் முதன்மை நோக்கமாகப் பெரும்பாலும் இருப்பதில்லை.

திணிப்பவரும் திணிக்கப்படுபவரும் உண்மையில் தொடர்பியலில் பயன்படுத்தப்படும் சமிக்ஞையை அனுப்புவோர் (encoder) பெறுவோர் (decoder) போன்று, ஒன்றில்லாவிடில் இன்னொன்று இல்லை என்னும் நிலையில் உள்ளனர். அதேவேளை திணிப்போர் குறிப்பான நோக்கமுடைமையுடன் செயற்படுவர். இப்படித்தான், இதைத்தான் என்ற மிக வலிந்த திசைவழிப்படுத்தப்பட்ட குறிப்பான்களின் தொகுதியான சொல்லாடலை வெளியிடுவர்.


சரியான புரிந்துணர்வுடன் திணித்தலைக் கூடியவரை தவிர்த்தல் என்பது படைப்பாளிகளால் சாத்தியப்படுத்தப்பட முடியாத ஒன்றே. ஆனால் அதேவேளை திணித்தலைத் தவிர்த்தல் என்று 'வாழாவிருத்தலும்' முடியாத காரியமே. அதேபோல உடலசைவுகளின் மூலமாக வெளியாகும் திணிப்பிற்கான குறியீடுகளைத் தவிர்ப்பதற்கு புற்றெடுக்கும் வரைக்கும் அசையாமல் தியானம் செய்யவும் முடிவதில்லை. ஆனால் அதேவேளை பெண்ணியம் என்ற தளத்தில் இத்திணிப்புக்கள் ஓர்மமுடன் தவிர்க்கப்படலாம். திணித்தலைத் தவிர்த்தல் என்பதே, இன்று அதிகாரத்துடன்/அதிகாரத்தின் வெளியீட்டு மையங்களாகச் செயற்படுபவர்கள் பெண்ணியத்துக்குச் செய்யக்கூடிய குறைந்தபட்சப் பங்களிப்பாக இருக்கமுடியும்.

'பெண் தன்மை' வெளியிடும் சொல்லாடலைப் பெறுவோராக இருத்தல் இன்று பல 'ஆண்'களுக்குச் சிக்கலான ஒன்றாக இருக்கின்றது. பெண்ணியச் சொல்லாடல் என்பதை ஏற்றுக் கொள்வதே இன்று பலருக்குச் சிக்கலாக இருக்கின்றது. இதுவேயாயின் 'பெண்மொழி' சார்ந்த கதையாடல் உருவாவது எவ்வகையில் இலகுவாகக் கூடும்.

ஆனால் அதிகாரமே திணிப்பைத் தூண்டுகிறது; அதிகாரத்திற்கான விருப்பே திணிப்புச் செயல்பாட்டை வழிநடத்திச் செல்கின்றது என்பதும் உண்மையே. இன்று பெண் ஆளுமைகள்/தன்னிலைகள் கட்டப்பட்டிருப்பதும், ஆண் ஆளுமைகள்/தன்னிலைகள் கட்டப்பட்டிருப்பதும் ஆண்மொழியால்தான். ஆண்மொழியின் குறிகள் தொடர்ந்து மனத்தில் தேங்கி உருவாக்கி வைத்திருக்கும் இயல்கடந்த கதையாடலாகிய ஆளுமையே/தன்னிலையே இன்று நிலைபெற்றுள்ளது. எனவே இன்றைய திணிப்புச் செயற்பாட்டின் பெரும்பான்மை ஆண்மொழியினால் கட்டமைக்கப்பட்ட ஆளுமைகளில் இருந்தே வருகின்றன. இந்தநிலை குறைந்து, திணிப்புச் செயல்பாடு பெண்மொழியினால் நிகழத் தொடங்

கும்போது நிலைமை 'சுமுகமாகும்'. வேறு ஒரு வாறாகச் சொன்னால் இருதிசைகளிலும் நிகழும் திணிப்புச்செயல்பாடு Yinஐயும் Yangஐயும் போலச் சமநிலையைப்பேணி கூட்டிசைவான ஓர் இயக்கப்போக்கு நிகழத் தொடங்கும்.

பண்பாட்டாளர், அறிவுவாழிகள் கண்மூடித் தன மாக இருக்கமுடியாது; இருப்பது அனுமதிக்கப் படுவதில்லை. தவறுதலானது, கவனக்கு றைவா னது என்ற காரணங்களை இன்றைய காலகட் டத்தில் சொல்லாடல் உருவாக்குவோர் சொல்




இன்று ஒரு பக்கச்சார்பான திணிப்புச் செயல் பாடே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மனத்தின் மீதான குறிகளின# தாக்குதல் தவிர்க்க முடியா ததே ஆயினும் அது சமன் செய்யப்படவேண் டியதாயும் இருக்கின்றது.

குறிக்கப்பட்ட வரைபட அமைப்பில் அவதா னிக்கையில் திணிப்புச் செயல்பாட்டின் மேலோ ட்ட மான நிலைப்பாடு விளங்கும். திணிப்பில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது என்பது போலவே, திணிப்போராக மாறுவதும் தவிர்க்க முடியாதது. ஆனால் எவ்வளவு தூரம் மிகச் சரியாகத் தேர்ந்தெடுத்த குறிகளினால் நாம் சொல்லாடலை உருவாக்குகிறோமோ அவ்வளவு தூரம் அச்சொல்லாடலை உருவாக்குபவர் பெண் ணாக இருப்பினும் ஆணாக இருப்பினும் அச் சொல்லாடல் பெண்ணியத்துக்குத் தன் பங் களிப்பைச் செய்ய முடியும். இல்லையெனில் கண் மூடித்தனமாக (மொழியை) குறிகளைப் பயன்படுத்தி பாடங்களை உருவாக்குவதன் மூலம் வலிந்த அதிகாரத்தின் வெளியீட்டு மைய ங்களாகச் செயற்பட்டுக் கொண்டே இருக்கவேண் டியதுதான். ஆனால் படைப்பாளிகள், இணைப் லித் தப்பித்துவிட முடியாது. குறுகிய வரலாற்றுப் பகுதிக்குள்ளேயே அத்தகைய சொல்லாடல்க ளைத் தாங்கும் பனுவல்கள் குப்பைக்கூடைக் குள் போய்விடக்கூடும்.

சமூகத்தின் மீதான ஓர்மையுடனும் அதே வேளை சரியான திசையிலான நேர்மையுடனும் பனுவல்கள் உருவாக்கப்படவேண்டும். இந்த ஓர்மைக்குள் பெண்ணியம் என்பதனை அதன் முழுப்பரிமாணங்களோடும் முழு வீச்சோடும் புரிந்து கொள்ளுதலும் அடங்கும். நடைமுறை வாழ்வில் செயற்படுத்தப்படும் பெண்ணியத்துக் கான செயல்பாட்டு நிலைகளைக் காட்டிலும் பனுவல் உற்பத்தியாளர், மற்றும் படைப்புச் செயல்காரர் தங்கள் பனுவல்களில் எடுக்கும் ஓர்மமிக்க அக்கறையை இன்றைய சமூகம் மிக வும் அதிகமாக வேண்டி நிற்கின்றது.


---

* ISBN 0902030671 பக்.31

# குறிகள் இன்று குறிகளாக அப்படியே இல்லை யென்பதும் திசைவழிப்படுத்தப்பட்ட குறிப்பான்க ளுடைய குறிகள், சமிக்ஞை என்ற நிலைக் காகிவிட்டதும் கருத்தில்கொண்டு வாசிக்கப்பட வேண்டும்.

# ரோடிகளின் கதை

மூலம்: **Asiff Hussein**
**('The Story of the Rodi' in Explore Srilanka, July 1997)**
மொழிபெயர்ப்பு: சேனன்



ஸ்ரீலங்காவில் ஒருகாலத்தில் தீண்டத்தகாத வராயிருந்த ரோடி சாதியினரைப்போல் வேறு எந்த சிங்களச்சாதிகளும் ஆர்வங்களையும் ஆச்சரியங்களையும் தூண்டமுடியாது. பழைய சிங்கள ராஜபரம்பரையின் வாரிசுகள், எனக்கூறிக் கொள்ளும் ரோடிகளைப்பற்றி உண்மையில் சில மர்மங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் சமூகத்தால் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலேயே பல நூற்றாண்டுகளாக இவர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களின் வரலாறு இதுவரை மர்மமானதாகவே இருந்து வந்திருக்கின்றது.

அவர்கள் கதை மிகவும் சோகமானது, உண்மையில் அவர்களின் வாழ்நிலை அதைவிட மோசமானது. நூற்றாண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்ட இம்மக்கள் இப்பொழுதுதான் ஓரளவுக் காவது சமூகத்தின் முன்தளத்திற்கு வந்து தமக்குரிய இடத்தை அடைய முயற்சிக்கின்றார்கள். சுதந்திரத்திற்குப் பின்பு வரிசையாக உண்டான அரசுகளால் உருவாக்கப்பட்ட சமூக முன்னோக்குள்ள சட்டஅமைப்புக்கும் மக்கள் நலத் திட்டங்களுக்குமே இதற்காக நன்றி கூற வேண்டும்.

முதலாம் பராக்கிரமபாகுவின் மகளான ரத்னாவள்ளி (அல்லது நவரத்தினவள்ளி) என்பவளின் குடிவழியினர்தான் தாங்கள் என ரோடிகளின் பழமரபுக்கதை ஒன்று கூறுகின்றது. ஏறத்தாழ நூறுவருடங்களுக்கு முதல் ஹுக் நெவில் என்ற பிரிட்டிஷ் அதிகாரி ரோடிகளின் தோற்றக் காரணத்தோடு சம்பந்தப்பட்ட மரபை பின்வருமாறு பதிந்துள்ளார்: 'பராக்கிரமபாகுவின் சமையலுக்காக மான் இறைச்சியை வழங்கி வந்த வேடஇனத்தவன் ஒருநாள் மான் கிடைக்காமையினால் தான் காட்டில் சந்தித்த பையனின் இறைச்சியை மானிறைச்சியாக அனுப்பி வைத்தான். அரசனின் அழகிய மகள் ரத்னாவள்ளி தாம் ஏமாற்றப்பட்டதை கண்டு பிடித்து விட்டாள். இருப்பினும் அவளுக்கு திடீரென மனித இறைச்சியில் ஏற்பட்ட மோகம் தொடர்ந்தும் அவனை இவ்விறைச்சி கொண்டு வரும்படி உத்தரவிட்டது. வேடன் தொடர்ந்து காட்டில் சிறுவர்களைக் கொல்லத் தொடங்கினான். காணாமற் போகும் இளைஞர்களால் நாடே பயத்தில் மூழ்கியது. தனது ஒரே மகன் காணாமல் போய்விட்டதை மன்னனிடம் முறையிட வந்த ஊர்ச் சவரத்தொழிலாளி அரண்மனையில் காத்திருக்க நேரிட்டது. அப்பொழுது அரண்மனைச் சாப்பாடாகிய சோறும் மான்கறியும் வழங்கினார்கள். தான் உண்ணத் தொடங்கும் வேளையில் ஒரு சிதைந்த சிறுவனின் கை மொளிகளை அவன் தன் உணவில் கண்டான். அவை தன் மகனுடையவை என்று இனம் காண்பதில் அவனுக்குச் சிரமம் இருக்கவில்லை. அவன் அரண்மனையில் இருந்து நழுவி அரசன் இளைஞர்களை கொன்று உண்ணுகிறான் என்ற எச்சரிக்கையை ஊர் முழுவதும் பரப்பினான். உண்மைகள் வெளிவந்தன. தன் மகளின் ஆடை ஆபரணங்கள், அரசுரிமைகள் அனைத்தும் பறித்த அரசன் தோட்டியை அழைத்து அவளை அவனுக்கு மணம் முடித்து ஊரின் ஓர் ஒதுக்குப்புறமாக இருந்து அவனுடைய வேலைகளையே அவளும் செய்து அவனுடைய சாதியிலேயே வாழும்படி பணித்தான்.'

றொபட் நொக்ஸ் தனது "இலங்கையின் வரலாற்று உறவுகள்"என்ற நூலில் சற்று வேறுபட்ட ரோடிகளின் தோற்றம் பற்றிய பழமரபுக் கதையைக் கூறுகின்றார். இவர்கள் தொட்டா வேடர்களின் பரம்பரையினர். 'வேடா' என்பது வேட்டையாடுதலைக் குறிக்கின்றது. பெயருக் கேற்றபடி அரசனின் உணவுக்காக மான் வேட்டையாடிக் கொடுப்பது இவர்களின் வேலையாக இருந்து வந்திருக்கின்றது. ஆனால் அவர்கள் ஒருமுறை யாருக்கும் தெரியாமல் மானிறைச்சிக்குப் பதிலாக மனித இறைச்சியை அரண்மனை உணவுக்காக கொடுத்தார்கள். அரசன் அவ்விறைச்சியை சுவைத்து உண்டானோ யாருக்கும் தெரியாது அதே இறைச்சியை தொடர்ந்து மேலும் கொண்டுவரச் சொன்னான். ஆனால் இது என்ன இறைச்சி என்பதை கண்டுபிடித்து விட்ட அரசனின் சவரத்தொழிலாளி அரசனுக்கு விசயத்தைக் கூறினான். மிகவும் கோபப்பட்ட

அரசன் அவர்களைக் கொல்லுதல அவாகளு க்கு சுகமான தண்டனை எனக்கருதினான். தான் அவர்களால் மிகவும் துன்பப்பட்டதைப் போல் அவர்கள் பலமடங்கு படுவதற்காக அவர்களை சமூகத்தில் இருந்தும் அவர்தம் நிலங்களில் இருந்தும் வெளியேற்றி ஒரு தனி ஜாதியை உருவாக்கினான். அவர்கள் எந்தவித த்திலும் நிலத்தைப்பாவிக்கவோ அல்லது வேறு எக்கேளிக்கைகளில் ஈடுபடுவதையோ தடுத் தான். அவர்கள் சந்ததி சந்ததியாக ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று பிச்சையெடுப்பது அன்றி வேறு எவ்விதத்திலும் உணவு தேடுவதற்கு மன்னன் தடைவிதித்தான். மற்றவர்களால் அடி மட்ட மக்களாக கருதப்படவும் அவர்கள் வேறு எதையும் அனுபவிக்கமுடியாதபடியும் செய்தான்.

கண்டிராச்சியக் காலத்தில்தான் மென்மேலும் கட்டுப்பாடுகள் ரோடிகள் மேல் திணிக்கப் பட்டன.

நொக்ஸ் சொல்வது "இன்றுவரைக்கும் அவர் கள் ஸ்திரமின்றி தாழ்த்தப்பட்டே வாழ்கின்றனர். அவர்கள் பொதுக்கிணறுகளில் நீர் எடுக்க முடி யாது. மலைஊற்றுக்களிலும், ஆறுகளிலும் மட் டுமே அவர்கள் தண்ணீர் எடுத்தார்கள். ஒருவ ரும் அவர்களைத் தீண்டுவதுமில்லை."

மிக அண்மைக்காலம்வரை ஏறத்தாழ நூறு வருடங்களாக கண்டிப்பிரதேசத்தில் ரோடிக ளைப் பற்றிய இத்தகவல்கள் உண்மையாகவே இருந்தன. கண்டிராச்சியக்காலத்தில் ரோடி ஆண் களும் பெண்களும் வெற்றுடம்புடன் குப்பாயம் எனப்பட்ட தனிப்பட்ட குக்கிராமங்களில் கட்டாய மாகத் தங்கவைக்கப்பட்டார்கள்.

அவர்களின் அரசசேவை காட்டுமிருகங்க ளைப் பிடிக்க தோல்களால் திரிக்கப்பட்ட கயிறு செய்து கண்டிஅரசுக்கு வழங்குவதாகும்.

நொக்ஸ் காலத்தில் ரோடிகளின் முக்கிய தொழில் பிச்சையெடுப்பதாக இருந்தது. அண் மைக்காலங்களில்தான் இவர்கள் ஓரளவு தொழில்ரீதியான நிகழ்வுகளைத் தொடங்கி யிருக்கிறார்கள். இவர்களில் ஆண்கள் 'பும்மெ ன்டியா' எனப்படும் ஒருபக்கம் மட்டும் அடிக்கப் படும் மேளத்தை அடிக்க பெண்கள் பித்தளைத் தட்டுக்களைச் சுழற்றியபடி ரத்தினாவள்ளி என்ற மரபுவழி மூதாதைக்குத் துதிபாடுவார்கள்.

ரோடிப்பெண்கள் அவர்களின் அதீத அழகுக் குப் பெயர்போனவர்கள். நொக்ஸின் பின்வரும் அறிக்கை மூலம் இது ஓரளவுக்கு விளங்கும்: "அரசன் தனக்கு எதிரானவர்கள் என்று பல பெரியவர்களையும், புலமையாளரையும் சிரச் சேதம் செய்யும் போதெல்லாம் அவர்களுடைய மனைவி குழந்தைகளை ரோடிகளுக்குக் கொடு ப்பான். இது மரணதண்டனையை விடக் கடுமை யானது என்று இரண்டாம் இராசசிங்கன் கருதி னான்."

(இத்தகைய பெண்கள் சென்றடைந்ததா லேயே ரோடிப்பெண்கள் அழகானவர்கள் என் பது கட்டுரையாளர் கருத்து - மொ-ர்)

கண்டிராச்சியத்து உயர்குலப்பெண்களுடன் ரோடிகளுக்கிருந்த இடைவிடாத்தொடர்பு இன்று வரைக்கும் ரோடிப்பெண்களின் ராஜதோற்றத் திற்கும் மிக்கதுணிவுக்கும் காரணமாக இருக்கி ன்றது. ரோடிகள் அரசகுல அந்தஸ்து கோருவ தையும் இது விளக்குகிறது. சிறீமகாபோதிமரக் கிளையுடன் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இல ங்கை வந்த கிழக்கிந்திய வேடுவகுலத்தைச் சேர்ந்தவர்கள் இந்த ரோடிகள் என எம்.டி. ராகவன் நம்புகிறார். (இலங்கை ரோடிகள் - அழகிய பிச்சைக்காரர், 1957). ராகவன் ரோடி என்பதை பள்ளி ருத்தா (சமஸ்கிருதத்தில் ருத்திரா என்பது வேட்டை ஆடுபவன்) என்பது டன் இணைத்துப் பார்க்கின்றார். இவர்கள் கீழ் ஜாதியினராகவும் தீண்டத்தகாதவர்களாகவும் இருந்த காரணத்தைக் கொண்டு ராகவன் தரும் விளக்கம் கருத்திற் கொள்ளத்தக்கது.

ரோடிகளின் மூதாதையர் கறுப்புக்கடவுளா கிய "காளி" பக்தர்கள் என்று ராகவன் நம்புகி றார். இந்த மதப்பிரிவினர் மத்தியில் மனிதரைப் பலி கொடுக்கும் வழக்கம் மிக அண்மைக் காலம் வரை இந்தியாவின் கிழக்குப் பகுதிக ளில் வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றது.

முற்காலத்தில் ரோடிகள் தங்களை தெய் வத்திற்குப் பலிகொடுத்திருக்கலாம் என்ற இச் செய்தியானது காலப்போக்கில் ரோடிப்பெண்க ளால் பாடப்படும் மூதாதையர் பாடலில் விடுபட் டுப் போயிருக்கலாம் என்று அவர் கருதுகிறார்.

"ரத்தின-திலக-வள்ளி என்ற பெயர் உனக்கு மிக்க பொருத்தம், பருவம் இருபது வருடங்கள் தாண்டிய நீ இறைச்சியின் சுவையறியாது போக க்கூடாது" என்கிறது ஒரு பாடல். ரத்னாவள்ளி யைப் புகழும் மற்றொரு பாடல் இப்படிச் சொல் கிறது:

'ஆறுபோல இரத்தம் பெருக்கெடுத்தோட உனக்கு நான் செழிப்பைப் பெருக்குவேன்'
மேலும் ஒரு பாடல்

'கோரப் பயங்கர பவளமாலை கொண்டாள்' என ரத்னாவள்ளியைப் பாடுகின்றது. அந்த ரத்னாவள்ளி கழுத்திலிருக்கும் பவளமாலை மனித மண்டைஓடுகளாலான மாலை என ராக வன் சொல்கிறார். இந்தியாவில் காளியின் பெரு ம்பான்மையான சிலைகள் மனித மண்டை யோட்டு மாலைகளினுடனேயே செதுக்கப்பட்டுள் ளன. இத்துடன் இளவரசி ரத்னாவள்ளி நரமா மிசம் உண்பது சம்பந்தமான கதைகளும்

இதையொத்தே இருக்கின்றன.

"மனிதஉயிர்க் கொடையளிப்பதை முக்கியமாகக் கொண்ட பிராத்தனைகள் புத்தமத வழிபாட்டு வாழ்க்கைமுறைகளுக்கு எவ்விதத்திலும் பொருந்தி இருக்கப்போவதில்லை என்பது தெளிவு. அதுமட்டுமன்றி இவர்கள் எந்த சமூக வகுப்புக்குள் இருந்தாலும் கூட இத்தகைய மனிதஉயிர்க்கொலை வழிபாட்டுமுறையோ அல்லது அதன்மருவிய வடிவங்களோகூட இருப்பினும் புத்தசங்கத்தால் சமூகப்படி முறையில் இருந்து வெளித்தள்ளி ஒதுக்கப்பட்டிருப்பர் என்பதை யோசித்துப் பார்க்க அதிக முயற்சி தேவையில்லை" என்று இவர்களது சாதிய புறவொதுக்கல் குறித்து ராகவன் சொல்கிறார்.

ரோடிகள் சிங்களத்தில் இருந்து முற்றிலும் வேறான தேசியஇனம் என்பதற்கு அவர்கள் பேசும் பழங்குடிமொழியும் ஒரு முக்கிய காரணம். சிங்களத்தைப்போல இந்தோ ஆரியனோ அல்லது தமிழைப்போல திராவிடமோ அன்றி இவர்களின் மொழி கிழக்கிந்திய "முண்டா" இனப்பழங்குடிகளால் பேசப்படும் அவுஸ்ரோ ஆசியாட்டிக் வகையைச் சேர்ந்தது.

இற்றைவரைக்கும் ஒரிசாவிலும் பீகாரிலும் முண்டா இனமக்களால் பேசப்படும் மொழி தொடர்புடையதாய் இருக்கும் என ராகவன் நம்புகிறார்.

ஆரம்பகாலத்தில் ரோடிகளின் தலைவர்கள் ஹுலு-வாளியா (torch bearer) என அழைக்கப்பட்டனர். 'இது ரோடியா இனத்தினர் வேட்டுவப் பழங்குடிகளாக இருந்த காலத்தில் இருந்து வரும் மரபு' என ராகவன் கருதுகிறார். முற்காலத்தில் வன்னிப்பகுதியில் ரோடிகள் 12 புறமண இனக் குழுக்களாக இருந்தனர். (மகாபோலா, வாபோலா, அல்பகா போன்றவை) பிறதேசத்து இனக்குழுக்களிலும் தனித்தன்மைகள் இருந்தன. முற்காலத்தில் இருந்தது போலல்லாமல் ரோடிகள் இன்று தங்கள் இனக்குழுத்தன்மையை இழந்துவிட்டு நிற்கின்றனர். ரோடிகளில் பெரும்பான்மையினர் மலைநாட்டில் (பழைய கண்டிஅரசு) காணப்பட்டனர். சிறப்பாக வடமேற்கிலும் மத்திய பிரதேசத்திலும் ஊவா, சப்ரகமுவா பிரதேசங்களிலும் இவர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். இன்று முழு இலங்கையிலுமே இவர்களின் எண்ணிக்கை ஒருசில ஆயிரங்களே.

1911ல் நடந்த சனத்தொகை கணக்கெடுப்பே ரோடிகளை தனிஇனமாக அடையாளப்படுத்திய கடைசி கணக்கெடுப்பு. அப்போது அவர்கள் 1572 பேர்களாக இருந்தனர். ரோடிகளுக்கே உரித்தான தனித்துவமான கலாச்சார எச்சங்கள் சில இன்னும் எஞ்சியுள்ளபோதும் ரோடிகளின் பழைய மரபு வாழ்க்கை வேகமாக மாறிவரும் ஒன்று. ரோடிப்பெண்கள் தம் சமூகத்தில் உயர் அந்தஸ்து அனுபவித்து வந்ததாக சொல்லப்படுகிறது. குடும்ப வாழ்க்கை அதிகாரம் அவர்கள் வசம் இருந்ததாகவே இற்றைவரைக்கும் சொல்லப்படுகிறது.

அவர்கள் தமது பிள்ளைகளின் திருமணத்தை தாமே நிச்சயிப்பதுடன் விவசாயத்திலும் கலைநிகழ்வுகளிலும் கணிசமான வருவாயும் பெற்றுக்கொள்கிறார்கள்.

ரோடிப்பெண்களின் அழகும் கவர்ச்சியும் ஏராளமான மேல்சாதி இளைஞர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளது. ஒரு நவீனகாலத்து சிங்களக்கவிஞன் ரோடிப்பெண்களின் அழகை பின்வருமாறு பாடுவான்.


"விரிந்த தாமரை போன்ற அழகிய முகம்
செவ்லில்லி மலர்கள் அச்செவ்விதழ்கள்
இந்துவாரா மலர்களைப் போல் நீலம்
பாரித்தவை அவ்வகன்ற விழிகள்
வீங்கிப்பெருத்த அன்னத்து மென்
மார்புகள்
களைசொட்டுமோர் ஒளிபொருந்திய நாளில்
ரட்னபுரா வானம் வரும் நிலவு
இந்த ரோடிப்பெண்கள்.'
(கவசங்கரவா-1928)

(இக்கட்டுரை மேல்தட்டு வர்க்கமனப்பாங்கோடு ஒரு போலிச்சோகத்தை பிரதிபலிப்பதாக அமைந்திருப்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இருப்பினும் போலிச்சோகத்திற்கும் ரோடிகளின் துன்பத்திற்கும் சாட்சியாக ஒருசில மாற்றங்களுடன் முழுமையான மொழிபெயர்ப்பு அப்படியே தரப்படுகின்றது.

அரசின் சீர்திருத்தங்கள் ரோடிகளை வாழ்வின் மேற்தட்டுக்கு கொண்டுவந்து விடவில்லை. மற்றும் ரோடிப்பெண்களின் அழகுக்கும் துணிவுக்கும் ராஜகுடும்ப தொடர்பே காரணம் என்பது படுமுட்டாள்தனமான கணிப்பு. கொடிய வாழ்க்கைப்போராட்டத்தை நடத்திவந்த அவர்களுக்கு துணிவு சுகபோக ராஜகுடும்பத்திடம் இருந்து வரவேண்டி இருந்ததென்பதை நம்பமுடியவில்லை. மேல்தட்டு வாலிபநெஞ்சங்களுக்கு ரோடிப்பெண்களின் சமூக அவலமும் சோகமும் புரியாமல் கவர்ச்சியும் அழகும் மட்டும் தெரிந்து காதல்லீலைகள் செய்து கவிதை பாடுவது சகஜம் -நாட்டுநடப்புத்தான்.

- மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

சிங்களத்தில் இவர்கள்
ரொடியர்கள் என அழைக்கப்படுவர்.




# சிந்தி-ரோமா: நூற்றாண்டுத் துயரங்கள்

ராகவன்(ஜேர்மனி)


**“நாங்கள் ஒருபோதும் ஆக்கிரமிப்பாளராக இருந்ததில்லை; மற்றைய இனங்களைத் துரத்தியடிக்கவில்லை; அமைதியான குடியேற்றக்காரர்களாகவே வாழ்ந்தோம்”**

**- Grattan Puxon**
**பொதுச் செயலாளர், உலக ரோமா காங்கிரஸ்**



சிந்தி-ரோமா மக்களின் கதை கண்ணீரின் கதை; வரலாறு முழுவதும் இரத்தத்தால் எழுதப்பட்ட கதை. அமைதியான இந்த நாடோடி இனம் வாழ்ந்த இடங்களில் எல்லாம் வதைக்கப்பட்டது. ‘சிக்கோயினர்’[1] என்று ஜேர்மனியில் இழிவாக அழைக்கப்படும் இந்த ரோமா மக்கள் சரித்திரம் முழுவதும் அனுபவித்த தெல்லாம் அவமானமும் அலைக்களிப்பும் படுகொலைகளும்தான். ஹிட்லரின் இனவெறி ஆட்சியின்போது மட்டும் 5 இலட்சம் சிந்தி-ரோமா மக்கள் கொலைசெய்யப்பட்டனர்.

மேற்கு ஐரோப்பாவும் ஜேர்மனியும் ஒரு புதிய நாடோடி மக்களைச் சந்திக்கும் அபூர்வம் 15ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்தேறியது. அவர்கள் பேசிய மொழி இங்கிருந்தவர்களுக்குப் புரியவில்லை. ஆரம்பத்தில் இவர்களை யாத்திரிகர்கள், எகிப்திலிருந்து வந்த பாவிகள் என்று கருதினார்கள். அந்த நாடோடி இனத்தவரோ இசை, நடனக்கலைஞர்களாக, சிறந்த கைவினைஞர்களாகத் திகழ்ந்தனர். வியாபாரம் செய்தார்கள்; எதிர்காலம் பற்றிப் பலன் கூறினார்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமாக வாழ்ந்தும் பின் இடம் பெயர்ந்தும் கொண்டிருந்த இவர்களை ஆரம்பத்தில் இங்கு




படம் 1


ஏற்றுக்கொண்டாலும் சிறிது காலத்திலேயே அவர்க ளுக்கு எதிரான கருத்துகள் பரவத்தொடங்கின.

யேசுநாதரை சிலுவையில் அறைவதற்குப் பாவிக்கப்பட்ட ஆணிகளை இவர்கள் செய்து கொடுத்ததாகவும் மரியா யோசவ் வாழ்வதற்குக் குடிசை கொடுக்க மறுத்தவர்கள் என்றும் தேவா லயமானது இவர்கள்மீது குற்றஞ் சுமத்தியது.[2] கத்தோலிக்க ஜேர்மனியில் துருக்கிய ஒற்றர்கள் என்றனர். புரட்டஸ்தாந்து இங்கிலாந்தில் பாப்பா ண்டவரின் ஒற்றர்கள் என்றனர். தொடர்ந்து மந்திர வாதிகள், சூனியக்காரிகள், பிள்ளைபிடிப்போர் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். சிக்கோயினர் (Zie geuner) எனும் பெயர்கூட (Zi-Gauner-மோசடிக் காரன்) இழிவுபடுத்தலையே தாங்கி நிற்கின்றது.

இவர்கள் சிறந்த கைவினைஞர்களாக கொல் லர்களாக இருந்ததால் 1449இல் பிராங்போர்ட்டிலி ருந்து உள்ளூர் கைவினைஞர்களால் துரத்திய டிக்கப்பட்டனர். 1551இல் ஒக்ஸ்பேர்க் அரசனான வன் எல்லா 'சிக்கோயினரும்' மூன்றுமாத காலத் துள் நாட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டுமென் றும் தமது உரித்துக்குள் பிரவேசிக்கும் எந்த ஒரு 'சிக்கோயினரையும்' தண்டனையின்றிக் கொல் வதற்கு எவருக்கும் உரிமையுண்டு என்றும் அறி வித்தான். 1553ம் ஆண்டு போம்மர் பொலிஸ் சட்டமானது 'சிக்கோயினருக்குச்' சட்டப்பாதுகாப்பு இல்லை என அறிவித்தது. மீறி யாராவது புகலி டம் கொடுத்தால் 20 குல்டன் அபராதம் கட்டவே ண்டும் என்றது. 1589இல் பொலிஸ் மற்றும் மாகாண ஒழுங்குவிதியானது சக்ஸன், தூறிங் கன், மைஸன் ஆகிய இடங்களில் "சிக்கோயின ரின்" சொத்துக்களைப் பறிப்பதற்கும் அவர்களை நாட்டை விட்டுத்துரத்துவதற்கும் உரிமை வழங் கியது.

15.10.1725 இல் புரோயிச அரசனான பிரெடரிக் முதலாம் வில்ஹெல்ம் (Friedrich Wilhelm I) 8 வயதுக்கு மேற்பட்ட ஆண்களையும் பெண்களை யும் தூக்கிலிடச் சொன்னான்.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுக ளில் "சிக்கோயினர் பிரச்சனையை" தீர்க்க வேறு பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. "மனித நேய இலட்சிய அடிப்படையில்" "சிக்கோயின ரைக்" குடியேற்ற முயற்சிக்கப்பட்டது. ஆஸ்திரிய-



படம் 2



ஹங்கேரி அரசியான மரியா திரேசியாவாலும் (1740-1780), ஜேர்மனி அரசனான 2ம் பிரெடரிக் (Friedrich II -1775) ஆலும் இம்முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. நிலையான இடத்தில் குடியிருப்பு, பிள்ளைகளைப் பிரித்து பலவந்தமாக உள்ளூர் மக்களுக்குத் தத்துக் கொடுப்பது, அவர்களுடைய தாய் மொழியான ரொமானிமொழியைப் பேசத்தடை, ஆண்களுக்குக் கட்டாய இராணுவச் சேவை என்பனவும் இவற்றில் அடங்கும். இதன் மூலம் அவர்களின் அடையாளத்தை இல்லாதொழிப்பதே குறிக்கோளாயிருந்தது. பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களின் துயரம் சொல்லிலடங்காதது. சிலர் தமது பிள்ளைகளைத் தெரியாமல் திருப்பி மீட்டுச் சென்றனர். இக்காலத்திலேயே பிள்ளைபிடிகாரர் எனும் பெயர் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். இவர்கள் வாழ்வு ஒளிந்து வாழ்வதும், ஓடுவதும், கிடைக்கும் சிறுவேலைகளைச் செய்வதுமாகக் கழிந்தது.


## 'சிக்கோயின ஜந்துக்கள்'

ருமேனியாவிலும் பல்கேரியாவிலும் அடிமை முறை ஒழிக்கப்பட்டபின் -1864இற்கு பின்பு, பல ரோமா மக்கள் மேற்கு ஐரோப்பா நோக்கி வந்தனர். புதிய தொழில் வளர்ச்சி சமுதாயமானது ரோமா மக்களின் கொல்லர், கைவினைஞர் வேலைகளையும் தமதாக்கிக் கொண்டது. விரைவிலேயே கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வருவோரைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஹெசன் 1871 இல் ஜேர்மன் நாட்டுப்பத்திரமில்லாத சிந்தி-ரோமா மக்களுக்கு தொழில் செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதை நிறுத்தியது. 1886இல் குடியுரிமையில்லாத "சிக்கோயினரை" வெளியேறுமாறு ஆணை பிறப்பித்தது.

1891இல் ஜேர்மன் பாராளுமன்றமானது "சிக்கோயின ஜந்துக்களுக்கு[3] எதிரான போராட்டத்துக்கான ஆலோசனை" எனும் பெயரில் ஜேர்மன் பாஸ்போர்ட் இல்லாத சிந்தி-ரோமா மக்களைத் திருப்பியனுப்புமாறும், ஜேர்மனியைச் சேர்ந்த சிந்தி-ரோமா மக்களுக்கு வேலைப்பத்திரம் வழங்க வேண்டாம் எனவும் கூறியது. 1899இல் பயேர்ண் ஆனது "சிக்கோயினரை" முறையாக ஆராய்வதற்கான அலுவலகம் ஒன்றை உருவாக்கியது. அல்பிரட் டில்மான் எனும் கிரிமினல் அலுவலகர் தலைமையில் ஒரு மத்திய பொலிஸ் நிலையமும், பாதுகாப்பு பொலிசாருக்கு உதவுவதற்கென சிக்கோயினர் தகவல் சேவையும் உருவாக்கப்பட்டன. இவை சிந்தி-ரோமா பற்றிய- அவர்கள் இடப்பெயர்வு பற்றிய தகவல்களைச் சேகரித்தன. 1911 இலேயே கண்ணில்படும் "சிக்கோயினர்" அனைவரதும் விரல் அடையாளங்களைப் பதிவுசெய்ய ஆரம்பித்தனர். இருந்தபோதிலும் முதலாவது உலகப்போரில் ஜேர்மனிய இராணுவத்துடன் சேர்ந்து சிந்தி-ரோமாவினரும் போரிட்டனர். 1926இல் அவர்க




எது கூட்டுவாழ்வைப் பிரிப்பதற்கான நடவடிக்கைகளாக, குழந்தைகள்-இளைஞர்களை பராமரிப்பு நிலையங்களுக்கும் வயது வந்தவர்களை வேலைத்தலங்களுக்கும் அனுப்பிவைத்தனர்.



### நாசிகளும் இனப்படுகொலையும்

1933இல் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தபின்னர் ஜேர்மனியின் பொருளாதார நெருக்கடிக்கெல்லாம் இந்நாட்டில் பல நூற்றாண்டுகாலம் வாழ்ந்து வருகின்ற ஐரோப்பியர் அல்லாத சிறுபான்மையினரான யூதர்களும் "சிக்கோயினருமே" காரணமென சுட்டப்பட்டனர். அவனது பாசிச இனவெறியாட்சியின்போது ஜேர்மனிய ஆரிய இனத்தை இரத்தத்தைப் பாது காத்தல், இனச் சுத்திகரிப்பு என்ற கோஷங்களின் பின்னால் இங்குமட்டுமன்றி ஹிட்லர் ஆக்கிரமித்த நாடுகளில் வாழ்ந்துவந்த யூதர்களும் ரோமா மக்களும் திட்டமிட்ட முறையில் இனப்படுகொலை செய்யப்பட்டனர்.




**படம் 3**

1933இல் இனம் மற்றும் குடியேற்ற அலுவலகமானது சிக்கொயினர் மற்றும் சிக்கொயினக் கலப்பு இனத்தவரைக் கட்டாய இனவிருத்தித் தடை செய்யக் கோரியது. 1935இல் (Nurnberger Gestez, நூறன்பேர்க் சட்டம்) ஆனது ஆரியருக்கும் ஆரியரல்லாதோருக்குமான திருமணத் தடையை விதித்தது. யூதமக்களினதும் சிக்கோயினரதும் வாக்குரிமை பறிக்கப்பபட்டது. இச்சட்டமானது ஜேர்மனிய இரத்தத்தையும் குடும்பத்தையும் பாது காப்பதற்காக உருவாக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது.

1936 ஜூனில் உள்நாட்டு அமைச்சானது உள்ளூராட்சி மன்றங்களுக்கும், பொலிசுக்கும் சிக்கோயினர் வாழும் இடங்களில் சோதனை நடாத்தி அவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்குமாறு அறிவுறுத்தி



யது. அவர்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்ட குடியிருப்பு நிலங்களும் ரத்து செய்யப்பட்டன. இதே யாண்டு நவம்பரில் நரம்பியல் நிபுணர் றோபேர்ட் றிற்றர் (Robert Ritter) தலைமையில் இனச் சுகாதார ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது. பிச்சை எடுத்தல், களவு, ஏமாற்றுதல், நாடோடியாய் அலையும் விருப்பு, சமூகவிரோதப் போக்கு என்பன "சிக்கோயினரின்" பரம்பரையலகு மூலம் உருவானவை என்றும் "சிக்கோயினர் பிரச்சனையை" முடிவுக்குக் கொண்டுவருவதாயின் இவர்களை வேலை முகாம்களுக்கு அனுப்பவேண்டு மென்றும், இவர்களின் இனப்பெருக்கத்தை தடை செய்வதன் மூலமே ஜேர்மானிய எதிர்காலச் சந்ததியின் சுமையை விடுவிக்கலாம் எனவும் தன்னைக் குற்றப்புலனாய்வு உயிரியல் நிபுணர் என அழைத்துக்கொண்ட றிற்றர் எழுதினான். இவனின் உதவியாளன் றுடிக்கர் (Rudiger) இன்னும் தெளிவாக "இப்படிப்பட்ட மனிதர்களை அழிப்பதே நலம்" என எழுதினான். "சிக்கோயினர்", "சிக்கோயினக் கலப்பு" என மொத்தம் 35000 பேர்பற்றிய தகவல்களை மார்ச் 1944வரை இவர்களின் துறை சேகரித்துக் கொடுத்தது. இத்தகவல் சேகரிப்பே சிந்தி-ரோமா மக்கள் கொலைசெய்யப்பட நாசிகளுக்கு உதவியாக இருந்தது. இவைதவிர பல்கலைக்கழகங்களிலும் யூத, சிந்தி-ரோமா பற்றிய "இன ஆராய்ச்சிகள்" மேற்கொள்ளப்பட்டன.

1937, 38இல் சொந்தத் தொழில், அலுவலக வேலைத்தடை விதிக்கப்பட்டதுடன் இனவரியென மேலதிக வரியும் இவர்கள்மீது விதிக்கப்பட்டது.

13-18 ஜூன் 1938வரை ஆயிரக்கணக்கான சிந்தி-ரோமாக்களை மையப்படுத்திய கண்காணிப்பு முகாம்களான (Konzentrationslager) டா கவ், புகன் வால்ட் ஆகிய முகாம்களுக்கு அனுப்பினர். நாசிகளின் இனஅழிப்பு முறைகளாக கூட்டமாக சுட்டுக் கொல்லுதல், கடுமையான கட்டாய உழைப்பால் கொல்லுதல் (சிறிது உணவு மட்டும் வழங்கப்படும் Vernichtung durch Arbeit) திட்டமிட்டு அமைக்கப்பட்ட நச்சுவாயுக்கூடங்களில் கூட்டமாகக் கொல்லுதல் என்பன அடங்கும். கட்டாய உழைப்பாக ஆயுதத் தொழிற்சாலைகளில் வேலை முகாம்கள், வீதிகள் அமைத்தல், இராணுவ உடைத்தயாரிப்பு என 12-15 மணித்தியாலங்கள் தினமும் வேலை வாங்கப்பட்டனர். பலர் முகாம்களில் சுகாதார நிலைமைகளால் பட்டினியால் இறந்தனர். முகாம்களில் பிறந்த குழந்தைகள் கூடக் கொல்லப்பட்டனர். நாசிகள் தாம் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்தெல்லாம் பல்லாயிரக்கணக்கானோரை இவ்வாறு கொன்றொழித்தனர். 17மாதங்கள் மட்டுமே இருந்த போலந்து அவுஸ்விற்ஸ் - பிர்க்கனவ் முகாமில் மட்டும் 17000 பேருக்கு மேற்பட்ட சிந்தி-ரோமா மக்கள் பல்வேறு வழிகளில் கொல்லப்பட்டனர்.

Auschwitz-Birkenau
முகாமிலிருந்தோரின் வயது.

| வயது எல்லை | பெண்கள் | ஆண்கள் |
|---|---|---|
| -1வரை | 263 | 303 |
| 2-14 | 4494 | 880 |
| 15-21 | 1690 | 1394 |
| 22-40 | 2468 | 1840 |
| 41-59 | 1385 | 3743 |
| 60+ | 468 | 252 |

## மனிதாபிமானமற்ற மருத்துவர்கள்


கண்காணிப்பு முகாம்களில் இருந்த சிந்தி ரோமா மக்களைத் தமது பரிசோதனைகளுக்காக மனிதத்தன்மையற்ற முறையில் மருத்துவர்கள் பாவித்தனர். யுத்த அமைச்சகத்திற்காக சிக்முண்ட் றஸெர் அதிகூடிய, குறைந்த வெப்பநிலைகளில் இவர்களை வைத்து பரிசோதித்தார். எக்ஸ்ரே கருவிமூலம் தொகையாக பலர் கருத்தடை செய்யப்பட்டனர். மருத்துவர் லுகாஸ் மயக்கமருந்து கொடுக்காமலே 12வயதிற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளை இனப்பெருக்கத்தடை பரிசோதனைகள் செய்தார். நச்சுப் புகை பரிசோதனையும் செய்யப்பட்டன. Auswitz இல் முகாம் வைத்தியரான யோசவ் மெங்கல தனது இரட்டைக் குழந்தைகள் தொடர்பான பரிசோதனைக்கு சிந்தி-ரோமாக் குழந்தைகளைப் பயன்படுத்தினான்.

1938இல் நாசி மருத்துவர் கழகச் சஞ்சிகையொன்று "எலிகள், மூட்டைப்பூச்சிகள், தெள்ளுப் பூச்சிகள் போலவே யூதரும் சிக்கோயினரும். இவர்கள் கடவுள் தந்த உயிரினங்கள் எனினும் இவர்களை நல்ல சிகிச்சையின்மூலம் திருத்தவோ அல்லது சமூகவிரோத தன்னலம் மிகுந்த கிரிமினல்

மனிதர்களை ஒதுக்கி வைப்பதுபோல் வைக்கவோ முடியாது. ஆகவே நாம் இவ்வாறான சீரழிவுக்கான உயிரினங்களை அழித்தல்வேண்டும். அதாவது இன்றே எமது மக்களின் வாழ்விற்கான உத்தர வாதமாக இனப்பெருக்கத் தடைச் சட்டத்தை மாற்றி எமது மக்களின் இவ் எதிரிகளை ஆறுத லாக ஆனால் உறுதியாக அழித்தொழிக்க வேண் டும்" என எழுதியது.

## நாசிகளின் வீழ்ச்சியின் பின்

1945இல் நாசிகளின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்ன ரும்கூட நாசிகளின் இனஅழிப்புக்குத் துணை நின்ற பலரும் தண்டிக்கப்படவில்லை. நீதிமன்றம், பொலிஸ், பல்கலைக்கழகம், நிருவாகம் ஆகிய துறைகளில் அவர்கள் தொடர்ந்து முக்கிய பதவிக ளை வகுத்தனர். இனப்படுகொலையில் தப்பிப் பிழைத்திருந்த பலரும் தமது குடும்பத்தினர் பலரை இழந்திருந்தனர். அவர்களின் கூட்டுக் குடும்ப அமைப்பு, தொழில்கள் யாவும் சிதைந்து போயி ருந்தன. நாசிகள் சிந்தி-ரோமாக்களைக் கண்கா ணித்ததும் படுகொலை செய்ததும் இனவெறியால் அல்ல அவர்களின் கிரிமினல் வேலைகளால்தான் என்று காரணங்கள் கூறப்பட்டன. இவர்களுக்கு நஷ்டஈடுகூட வழங்கப்படவில்லை. 70களின் ஆரம்



பத்தில் சிந்தி-ரோமா மக்கள் மத்தியில் உரிமை இயக்கங்கள் உருவாகின. அதன்பின்னரே இம்மக்களின் குரல்கள் பதியப்பட்டன. இவர்களின் நீண்ட போராட்டத்தின் பின்னரே 1982இல் முதன்முதலில் ஜேர்மன் அரசஅதிபரான ஹெல்மற் சிமித்(SPD) சிந்தி-ரோமா மக்களின் படுகொலையானது இனப் படுகொலையே என அறிவித்தார். 1982இல் உருவாக்கப்பட்ட Der Zentraltrat Deutscher Sinti und Roma எனும் கூட்டமைப்பும் Rom and Cinti Union என்ற அமைப்பும் முக்கியமான அமைப்புகளாகும். 1992இல் ஐ.நா. மனிதஉரிமைகள் குழுவின் "ரோமா மக்களின் பாதுகாப்புத் தீர்மானத்திற்கு" ஐரோப்பியக் கூட்டில் ஜேர்மனி மாத்திரமே எதிராக வாக்களித்துள்ளது. மற்றைய நாடுகளில் வாழும் சிறுபான்மையினத்தவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சரத்தை தனது அடிப்படைச் சட்டத்தில் சேர்ப்பதை தட்டிக் கழிக்கின்றது.

## ரொமானி மொழி

"நான் சந்தைக்குப் போனால் அங்கே ஒரு மூலையிலே பாழாய்ப்போன சிக்கோயினர் எனக்குப் புரியாத மொழியிலே கூச்சலிட்டுக்கொண்டு நிற்கின்றனர்"

-ஸ்பானிய ஜிப்சிபற்றி இங்கிலாந்தைச் சேர்ந்த G.Borrow 1841

ஐரோப்பா முழுவதும் தற்போது 8மில்லியனுக்குமதிகமான சிந்தி-ரோமா மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் தமக்கிடையே ரொமானி (Romany) மொழியினைப் பேசுகின்றனர். இம்மொழியில் அவர்கள் வந்த, வாழ்ந்த நாடுகளின் மொழிச் சொற்களும் காணப்படுகின்றன. வெவ்வேறு வட்டாரவழக்குகளைப் (dialect) பேசுகின்றனர். 18ம் நூற்றாண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் இவர்களின் மொழிக்கும் இந்தியமொழிகளுக்குமிடையேயான ஒற்றுமை பற்றி ஆய்வாளர் சிலர் அறிந்தனர். தற்போது ரோமானி மொழியானது இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தில் வகைப்படுத்தப்படுகிறது. ரோமானிக்கும் சமஸ்கிருதத்துடனும் புதிய இந்திய மொழியான ஹிந்திக்குமான தொடர்பினைக் காட்டும் உதாரணங்கள் சில.

| தமிழ் | சமஸ்கிருதம் | ஹிந்தி |
|---|---|---|
| பெரியது(big) | Vadra | bara |
| குடித்தல்(drink) | Pibati | pi |
| தலைமுடி(hair) | vala | bal |
| மூக்கு(nose) | nakka | nak |
| தண்ணீர்(water) | paniya | pani |
| எங்களுடைய(our) | asmaka | hamara |

| தமிழ் | ரோமானி ருமேனியாவில் வாழ்பவர் | ரோமானி சேர்பியனில் வாழ்பவர் |
|---|---|---|
| பெரியது(big) | baro | baro |
| குடித்தல்(drink) | pe | pi |
| தலைமுடி(hair) | bal | bal |
| மூக்கு(nose) | nalk | nakh |
| தண்ணீர்(water) | pai | pai |
| எங்களுடைய(our) | amaro | amaro |

இவர்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த பாதைகளிலுள்ள மொழிச்சொற்களும் (ஈரானிய, ருமேனிய, ஆர்மேனிய, மத்திய கிரேக்கம்) இவர்களது மொழியில் கலந்துள்ளன; இவர்கள் தாம் வாழ்கின்ற நாட்டு மொழியையும் பேசுவதுடன் பெரும்பாலும் வாழ்கின்ற நாட்டின் மதங்களையே பின்பற்றுகின்றனர். கிழக்கு ஐரோப்பாவில் வாழ்பவர் Kalderasch எனப்பட்டனர். இது ருமேனியச் சொல்லான Caldarar-கேத்தல் செய்பவன் (கொல்லன்) இலிருந்து வந்தது.

Gitanos (கிரானோஸ்) என்பவர்கள் ஸ்பெயின், போர்த்துக்கல், தென்பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழ்பவர்கள். இதேபோல் இங்கிலாந்து அயர்லாந்தில் வாழ்பவர்கள் Gypsy (ஜிப்சி) எனப்படுகின்றனர். இவ்விரு பெயர்களும் இவர்கள் எகிப்திலிருந்து வந்தவர்கள் எனக் கருதப்பட்டதால் ஏற்பட்டன.

பிரான்ஸில் Manouches (மனுஷ் என்றால் சமஸ்கிருதத்தில் மனிதன்), ஜேர்மனி, இத்தாலியில் வாழ்பவர் Sinti (சிந்தி) என்றும் அழைக்கப்படுகின்றனர்.

பொதுவாக எல்லோரையும் குறிக்கும் சொல்லாக ரோமா (Roma) விளங்குகிறது. இவர்கள் தம்மை ரோம் (Rom) என்கின்றனர். ரோம் என்றால் ரோமானி மொழியில் மனிதன் என்று பொருள்படும்.

ஐரோப்பாவில் சிந்தி-ரோமாவின் சனத்தொகை
(படம் 3 பார்க்க)

## அடையாளம் தேடி

1917 ருஷ்யப்புரட்சி வெற்றியின் சோவியத் ரஷ்யா ரோமா இனத்தைத் தேசிய சிறுபான்மையினமாக அங்கீகரித்தது. அதன்பின்னர் ரோமானி மொழியியக்கம் ஆரம்பமானது. மொஸ்கோவில் ரோமானி எழுத்தாளர்களும் நாடகக் கலைஞர்களும் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வெளிக்

கொண்டு வந்தனர். ரேடியோ மொஸ்கோவில் முதன்முதலாக ரொமானிய மொழி ஒலிபரப்பு ஆரம பமானது. இவர்களின் நாடோடிப்பாடல்கள், கதை கள், ஐதீகக்கதைகள் என்பன சேகரிக்கப்பட்டன. ரோமா தியேட்டர் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களது வாழ்வுபற்றிய திரைப்படங்கள் எடுக்கப்பட்டன. துரதிஷ்டவசமாக இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இவை முடிவுக்கு வந்துவிட்டன. கிழக்கு ஐரோப்பாவில் கிடைத்த வாய்ப்புக்கள்மூலம் பல எழுத்தாளர்கள், கலைஞர்கள் உருவாகினர். செக் கோஸ்லாவாக்கியாவில் 80கள் வரையில் கட்டாயக் கருத்தடை செய்யப்பட்டனர். ஆனால் பொதுவாக சோசலிச நாடுகளில் வெளிப்படையான இனவெறி அனுமதிக்கப்படவில்லை. ஆனால் தற்போது இந்நாடுகளில் ரோமா மக்கள்மீது தேசிய/இனவெ றியர்களால் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. மேற்கு ஐரோப்பாவில் தனிப்பட்ட கலைஞர்கள் புகழ் சேர்த்தனர். இன்று ரோமானி மொழியியக்கம் அவர்களின் நலன்களை பாதுகாக்கும் இயக்க மாக, அடையாளத்தைக் காட்டும், கலாச்சர இயக் கமாக மாறியுள்ளது. இவர்கள் இன்று தமது அங்கீகாரம் தொடர்பாக, தமது பிள்ளைகளுக்கு கல்வியினை ரோமானி மொழியில் போதி க்கவேண் டுமென்றும் தமது கலாச்சாரமும் போதிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன் வைக் கின்றனர்.

### சிந்தி – ரோமாக்களின் தாயகம்

இவர்கள் வடஇந்தியாவில் சிந்துமாகாணத்தி லிருந்து அல்லது சிந்துநதியோரத்திலிருந்து வந்தி ருக்கலாம் என கருதப்படுகிறது. இதிலிருந்தே ஜேர்மனி, இத்தாலியில் வாழ்பவர்கள் இவர்களை சிந்தி என அழைத்திருக்கலாம். இவர்கள் ஏன் இந்தியாவிலிருந்து வெளியேறினார்கள் என்று தெரியவில்லை. இந்திய அரசனால் பேர்சிய அரச னுக்கு இசைக்கலைஞர்களாக அனுப்பப்பட்டோரே இவர்களென்றும், முஸ்லிம் படையெடுப்பின்போது இந்தியாவிலிருந்து அடிமைகளாக கொண்டுவரப் பட்டோரே இவர்கள் என்றும் பல கருதுகோள்கள் உள்ளன. மேற்கு ஐரோப்பாவிற்கு இவர்கள் வரு முன் பால்கன் நாடுகளில் (ருமேனியா, மசடோ னியன், சேர்பியன், கிரேக்கம்) அடிமைகளாக இருந்துள்ளனர்.[4]

இவர்கள் வடஇந்தியாவிலிருந்து ஈரான் வந்து பின்னர் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து ஐரோப்பா வந்து சேர்ந்ததாகவும் வரலாற்றாய்வாளர்கள் கருது கின்றனர்.

I. இந்தியா→ ஈரான்→ ஆசியதுருக்கி→ பால்கன் நாடுகள்

II. இந்தியா→ ஈரான்→ கஸ்பியன் கடல்→ ஆர்மேனியா→ ரஷ்யா/பால்கன்

III. இந்தியா→ ஈரான்→ அராபியா→ ஆப்ரிக்கா→ ஸ்பெயின்→ மத்திய ஐரோப்பா

### முடிவுரை:

ஐரோப்பாவில் பரவலாக வாழும் சிறுபான்மை யினமான சிந்தி-ரோமா மக்கள் பல நூற்றாண்டுக ளாகத் தொடரும் இனவெறித் தாக்குதல்களிலும் தமது தனித்தன்மையை, உயிர்த்துடிப்பைக் காத்து வருகின்றனர். இவர்கள் சுதந்திரவேட்கை மிகுந்த வர்களாகவே இருந்து வந்துள்ளனர்.


இவர்களின் வாழ்வின் இதயநாளமாக இசை இன்றும் இருந்து வருகின்றது. இவர்களின் இசை க்குழுக்கள் (உ+ம் Gypsy Kings) பிரபலமாயுள் ளன. ஹங்கேரிய இசையில் இவர்களின் பங்கு முக்கியமானது. இவர்களின் வருகையால் ஐரோப் பாவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் ஆராயப்பட வேண்டும். இவர்கள் தம்மிடையே உள்ள கதை கள், பாடல்கள், ஐதிகக் கதைகள், சடங்குகள், மருத்துவ அறிவு என்பவற்றைத் தொகுப்பது அவ சியமாகும்.

ஐரோப்பிய வரலாற்றில் ஐரோப்பியரல்லாத சிறு பான்மையினர் சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக் கொள் ளப்பட்டதாக வரலாறு இல்லை. காலம் காலமாக சிறுபான்மையினம்மீது பெரும்பான்மையினர் திணித்த கண்காணிப்பும் வன்முறையுமே வரலா றாக உள்ளது. ❑

### அடிக்குறிப்புகள்:

1. 'சிக்கோயினர்' என்று இவர்கள் ஜெர்மனியில் பரவலாக அழைக்கப்படுவதால் இக்கட்டுரை யில் இப்பெயரும் பாவிக்கப்படுகிறது. ஆனால் இது அவர்களைக் குறிக்கும் இழிவான சொல்லாகும். இக்கட்டுரையில் இவர்களின் ஜேர்மனிய அனுபவங்களே விபரிக்கப்படுகிறது.
2. Bayerischen Chronik
3. unwesen என்ற சொல் பாவிக்கப்பட்டுள் ளது. தமிழில் உயிரற்றவை, சடப்பொருள் எனப் பொருள் கொள்ளலாம்.
4. சிக்கோயினரும் ஆரியர் என்னும் கருத்து சில நாசி ஆய்வாளர்களிடையே இருந்த போதிலும், சிக்கோயினர் இடம் பெயர்ந்து வந்த வழிகளில் இனக்கலப்புக்குள்ளாகி விட்டனர் என்று கருதப்படுகிறது. இந்த இனக் கலப்பினரை கீழ்த்திசை-மேற்கு ஆகிய வழியில் முறை தவறிப் பிறந்தவர்கள் (Orientalisch-Westasiatisches Bastard-Gemi sch) என்றனர்.

'நன்றி' -The Sunday Times Magazine,21.12.97 (படங்கள்)



# தூக்கின் நிழலில்...

"நீங்கள் இருவரும் ஏன் இங்கு வந்தீர்கள்?"
இது நரகச் சிறைக்கூண்டிலிருந்து வெளிவரும் அவரது
தந்தையின் சோகக்குரல். தாயிடமிருந்து பதிலில்லை.
"இதுதான் எமது கடைசிச் சந்திப்பா?" என்கிறார் தந்தை.
அன்னையிடமிருந்து வார்த்தைகள் வெளிவரவிடாமல்
துயரம் தடுக்கிறது.
"அப்படித்தான் நினைக்கிறேன்" என்றேன் நான்.
அவர் ஜெயில் கண்காணிப்பாளரை அழைக்கின்றார். "இதுதான்
கடைசிச் சந்திப்பா?" என தந்தை வினவுகின்றார்.
"ஆம்" எனப் பதில் வருகிறது. "திகதி நியமிக்கப்பட்டாயிற்றா?"
"நாளை காலை" என்கிறார், ஜெயில் அதிகாரி.
"எத்தனை மணிக்கு?" "ஜெயில் ஒழுங்குவிதிகளின்படி 5மணிக்கு"
"இத்தகவல் உமக்கு எப்பொழுது கிடைத்தது?"
"நேற்றிரவு" தயக்கத்துடன் பதில் வருகிறது.
"எனக்கு என் குடும்பத்துடன் இருக்க இன்னும்
எவ்வளவு நேரம் இருக்கின்றது?"
"இன்னும் அரைமணிநேரம்" "ஜெயில் சட்டத்தின்படி இன்னும் ஒரு
மணித்தியாலத்துக்கு எனக்கு உரித்துண்டு" - தந்தை கூறுகின்றார்.
"இல்லை, அரை மணித்தியாலம்" இது அதிகாரியின் குரல்.
"அதுதான் எனக்கிடப்பட்ட கட்டளை" என்கிறார் தந்தை.
"வாழ்க்கையில் நான் உயிருக்குயிராக நேசித்த ஒருவரிடமிருந்து
விடைபெற எனக்குள்ள அவகாசம் இன்னும் அரைமணிநேரம் மட்டும்.
இன்னும் அரைமணிநேரம் மட்டுமே;" துயரம் என் நெஞ்சை அடைக்க
"ஓ" என்று கதறியழவேண்டும் போலிருந்தது. "இல்லை", நான்
அழக்கூடாது. நான் கலங்கிவிட்டால் அப்பா இன்னும் இக்கட்டான
நிலைக்கு ஆளாகிவிடுவார்."

*-'கிழைத்தேயத்தின் தவப்புதல்வி' பெனாசிர் பூட்டோவின் சுயசரிதையிலிருந்து (1988)*

# சிறையில் இருந்து மீள்வதற்காகவே ஜோன் ஜோனே எழுதினார்

## மொகமட் சூக்ரி (மரோக்க எழுத்தாளர்)

(மொகமட் சூக்ரி 1968இலே ஜோன் ஜோனேயைச் சந்தித்தபோது பிரபல எழுத்தாளராக இருக்கவில்லை. இன்றோ இவர் அங்கீகரிக்கப்பட்ட, புகழ்பெற்ற மரோக்கதேசத்து எழுத்தாளர்களில் ஒருவர். "ஜோன் ஜோனேயுடனான எனது நினைவுகள்" எனும் இவரது புத்தகம் 1972இல் William Burroughs இன் முன்னுரையுடன் Paul Powles இன் மொழிபெயர்ப்பில் அமெரிக்காவில் வெளிவந்தது. இவரது "நிர்வாண ரொட்டி" 10க்கும் மேற்பட்ட மொழிகளில் வந்துள்ளது. லாருஷில் உள்ள ஜோனே கல்லறைக்கு முன்னால் வைத்து 1986 இல் சூக்ரி Jeane Afrique நிருபர் Luc Lemonnier இற்கு வழங்கிய பேட்டி, ஜோனேயிற்கு ஓர் அஞ்சலியாக க.கலாமோகனால் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே ஜோனே பற்றி எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.)

பிரெஞ்சிலிருந்து
தமிழிற்கு:
**க. கலாமோகன்**


**கேள்வி:** நீங்கள் மரோக்கர், எழுத்தாளர், சுயபுத் திஜீவி, ஓர் வீதிமனிதர்... இந்தக் காரணங்கள் யாவும் என்றாவது ஒருநாள் ஜோன் ஜோனே யைச் சந்திப்பதற்கான வாய்ப்பை உருவாக்கியி ருக்கமுடியும். அவருடனான சந்திப்பு எப்படி ஏற் பட்டது?

**பதில்:** சுயபுத்திஜீவி என்பது உண்மைதான். மிகவும் பிந்தியே வாசிக்கவும் எழுதவும் கற் றுக்கொண்டேன். அதுவும் தனியாக. 1968இல் தான் பலருக்கும் தெரிந்த "இலக்கிய இதழ்" எனும் லெபனானிய இதழிலே எனது இரண்டு சிறுகதைகளைப் பிரசுரித்தேன். அப்போது நான் எழுத்தாளனாக அறியப்பட்டு இருக்க வில்லை. ஒருவனை எழுத்தாளன் என்று சொல்வதற்கு இரண்டு சிறுகதைகள் போதுமா னவையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது முக்கியமானது. ஏனெனில் முதலாவது தடவையிலேயே என்னை எப் படி ஜோன் ஜோனேயிற்கு அறிமுகப்படுத்து தல் என்பது எனக்குத் தெரியாமல் போய்விட் டது. தஞ்சரில் உள்ள பாஸ்ரர் நெடுஞ்சா லையின் கோப்பிக்கடை ஒன்றிலே எனது பெல்ஜிய நண்பனான ஜெறா பெற்றியுடன் இருந்தேன். அந்தக் காலகட்டத்தில் நகர் மிகவும் கட்டுக்களையுடன் இருந்தது. பிரபல எழுத்தாளர்களையும், சினிமாக் கலைஞர்க ளையும் அங்கே காணுதல் என்பது அபூர்வ மான விஷயமானதாக இருந்ததில்லை. தடி த்த முதுகு கொண்ட ஒரு மனிதர் எங்களது மேசையைக் கடந்து வேறு ஒரு மேசைக்குச் செல்லும்போது பெற்றி என்னிடம் இப்படிச் சொல்கின்றான்: "இந்த மனிதனை மிகவும் கவனமாகப் பார்! இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய எழுத்தாளன் இவன்தான்." அவர் ஜோன் ஜோனேயாக இருந்தார்.

அவரது எழுத்துக்களின் முக்கியமான

வேலைகளை நான் அப்போது படித்திருந்த தில்லை. சில கட்டுரைகளை மட்டுமே வாசித்திருந்தேன். ஆனால், அவரைப்பற்றி நிறைய க் கேட்டிருந்தேன். இந்த மனிதரை அறிந்து கொள்ள விரும்புகின்றேன் என்று பெற்றியிடம் சொன்ன போது அவரது பதில் மோசமான தாக இருந்தது. "உனக்கு ஜோனே பற்றித் தெரியுமா? அவர் ஒருவேளை உனக்குக் கை குலுக்குவார் அல்லது முகத்தில் ஓர் அறை விடுவார்." இது சற்றே அபரிமிதமானதாக எனக்குப்பட்டது. ஜோனேயுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு பெரிதாக வளர்ந்த காலகட்டத்திலே ஒருபோதுமே அவர் எவரது முகத்திலும் அறைந்ததை நான் கண்டதில்லை. எதிர்பாராத நேரத்தில் ஜோனே எதையும் செய்து விடுவார் என்பதற்குச் சாட்சியம் சொல்பவைகளே பெற்றியின் வார்த்தைகள். ஆம், ஜோனே அப்படிப்பட்டவராக இருந்தாநென்பதே உண்மை.

அன்று நான் அவரைச் சந்திக்கும் அபாயகரமான முயற்சியை மேற்கொண்டேன். எப்படி என்னை அறிமுகப்படுத்துவது? அந்தக் கால கட்டத்திலே நான் படிப்பித்துக்கொண்டிருந்தேன். பழைய கள்வன் என அறிமுகப்படுத்துவதா? ரஸிகன் என்பதா? அவரது மேசையை அண்மித்தபோது நான் இப்படிச் சொன்னேன்: எனது பெயர் மொக மெட்சூக்றி. மரோக்க எழுத்தாளன். மொகமெட்சூக்றியா? தனது தலைக்குள் எனது பெயரைத் தேடிவிட்டு "இங்கே எனக்கு கத்தேப் யாசினை மட்டுமே தெரியும்" என்றபடி எனது கைகளைக் குலுக்கிக் கொண்டார். பெற்றி இன்னொரு மூலையில் இருந்து எங்களது சந்திப்பு எப்படி நடக்கின்றது என அவதானிப்பதை அறிந்தேன். எனது முகத்தில் அறைவிழும் கணம் எப்போது என்பதைக் காத்துக்



கொண்டிருந்தாரா? அதை அவர் ஒருபோதுமே சொல்லவில்லை.

**கேள்வி:** உங்களது நட்பு இப்படித்தான் வீதி யோரத்தில் தொடங்கியது. இதன் பின்னர் நீங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக்கொண்டீர்கள். நீங்கள் உங்களுக்குள் பகிர்ந்துகொண்டவைதாம் எவை?

**பதில்:** 68இலும் 69இலும் ஜோனே அடிக்கடி தஞ்சருக்கு வந்து போய்க்கொண்டிருந்தார். நகரின் மிக ஆடம்பர ஹோட்டல் மின்ஷா வில்தான் தங்கினார். நானோ "சிறிய சொக் கோ"வில் வாடகை அறையிலே இருந்தேன். எனது கேள்விகள் இலக்கியம் சம்பந்தப்பட்ட வையாகவே இருந்தன. இன்றுபோல அன்றும் நான் ரஷ்ய எழுத்தாளர்களால் கவரப்பட் டிருந்தேன். நாங்கள் டொஸ்ரோ யெவ்ஸ்கி, டால்ஸ்டாய் பற்றி நிறையப் பேசினோம். பிரான்ஸியரான ஸ்ரெண்டல் பற்றியும் பேசி னோம். இலக்கிய உலகம் பற்றி அவர் பேசு கையில் வெட்டிக் கொத்தும் ஒருவராகவும், தனக்கென ஓர் தனித்துவமான பார்வை கொண்டவராகவும் இருந்தார். அரசியலில் ஒரு மானிசெயனாக (MANICHEEN) அவர் இருந் தார் எனப் பலரும் சொல்வது உங்களுக்குத் தெரியும். இலக்கியத்திலும் அவர் அப்படித் தான். நல்ல புத்தகங்களும் உள்ளன கூடாத புத்தகங்களும் உள்ளன என்று அவர் அடி க்கடி சொன்னார். உண்மையைச் சொல் வதாகின், அவருக்கு எழுத்தாளர்கள் பற்றி எந்த அக்கறையுமே இல்லை. விக்டர் ஹியூ கோ விடயத்தில் மிகவும் மோசமானவராக இருந்தார். நேரத்துக்கு நேரம் கருத்தை மாற் றுபவராகவும், சந்தர்ப்பவாதியாகவும் ஹியூகோ இருந்தார் என்பதும், கம்யூ ஓர் எருமை போல எழுதினார் என்பதும் ஜோனே யின் கருத்து. "இருத்தலும் இல்லாதிருத்த லும்" எழுதிய சார்த்தர் இந்தப் புத்தகம் வந்த போது பலராலும் பாராட்டப்பட்டார். இவர் தன்னைப் படிப்பாளி எனக்காட்டவே எழுதி னார் என்பது ஜோனேயின் அபிப்பிராயம். ஓர் உறவில் போல, எழுத்திலும் எளிமை, நியாயம் இவைகளைத் தேடுவதையே ஜோனே விரும்பினார்.

**கேள்வி:** இந்தச் சந்திப்பு காலகட்டத்திலே நீங்கள் இளம்எழுத்தாளராக இருந்தீர்கள். இந்தச் சந் திப்பும் நட்பும் உங்களது எழுத்து வேலைக ளிலே பெரிய தாக்கங்களை ஏற்படுத்தினவா?

**பதில்:** நிச்சயமாக. தொடக்க காலத்திலே அவருக்கு மிகவும் நெருக்கமானவராக நான் என்னை உணர்ந்து கொண்டேன். எனது சுயசரிதமான "நிர்வாண ரொட்டி"யின் ஒரு பகுதியிலே நான் இதனை விபரமாகச் சொல் லியுள்ளேன். இரண்டாவது பாகத்தின் தலை ப்பு "சிறிய சொக்கோ"வாக இருக்கும். எனது வாழ்க்கையும் அவரது வாழ்க்கைபோல என் பது உங்களுக்குத் தெரியும். நானும் வீதியில் இருந்தே வருகின்றேன். நான் கள்வனாகவும் ஏய்ப்பவனாகவும் இருந்தேன். தனிப்பட்ட ரீதி யாகவோ உளவியல் ரீதியாகவோ இவைக ளைப்பற்றி எழுதுதலும் பேசுதலும் அப் போதும் போல இப்போதும் மரோக்கர்களிற்கு கஷ்டமான விஷயமாக இருக்கின்றது. சமூக ஒழுங்கு வரையறைகளைக் கடந்து வாழ்த லும், அந்த வாழ்வை எழுதுதலும் கஷ்டமாக இருக்கின்றது. உங்களுக்குத் தெரியும்தானே என்னுடைய புத்தகங்கள் இங்கே அடிக்கடி தடைசெய்யப்பட்டுள்ளன என்பது. எழுத்து தொடர்பாக எனக்குக் கிடைத்த மிகப்பெரும் உதவி ஜோன் ஜோனேதான். சிருஷ்டியைக் கட்டுப்படுத்தும் ஒழுக்கமுறைகள், ஒழுங்கு முறைகள் இவைகள் யாவற்றையும் கடந்து செல்ல அவர் எனக்கு உதவிபுரிந்துள்ளார். அவர் என்னிடம் இப்படிச் சொன்னார்: நீ எழுதுபவைகளை இன்று எவருக்குமே காட்ட முடியாதிருந்தாலும் எழுது! கடுமையாக உழை! நாளை அவைகளைக் காட்டும் துணிச்சல் உனக்கு வரும்.

"நிர்வாண ரொட்டி" பல வெற்றிகளைக் கண்ட புத்தகம். இந்தப்புத்தகத்தை மையமாகக்கொ ண்டு நான் பல பிரயாணங்களை மேற்கொண் டேன். பாரிஸில் நிச்சயமாக ஜோனே வீட்டில். பீகாலில்தான் தனது வீட்டின் கதவை அவர் எனக்காகத் திறந்தார். வெறுங்கால்களோடு நின்ற அவர் என்னைத் தழுவிவிட்டு இப்படிக் கத்தினார்: "நீ ஓர் அற்புதமான புத்தகத்தை எழுதியுள்ளாய்." இந்தக்கணத்தில் "கள்வ னின் டயறி"யில் இருந்து சில வரிகள் எனது நினைவைத் தொட்டுச் சென்றன.

**கேள்வி:** தான் சபிக்கப்பட்டவர் என்ற உணர்வு அவருக்கு இருந்ததா?

**பதில்:** இது மிகவும் சிக்கலானது. ஆம் சமூக ஒழுங்குகளைக் கடந்து வாழ்பவர் எனும் பிரக்ஞை அவருக்கு எப்போதும் இருந்தது. எழுத்து வாசிப்பு விமர்சனம், எழுத்தாளர்கள் தொடர்பான தாக்குதல்களைச் செய்ய அவர் எப்போதும் காத்திருந்ததில்லை. இவரின் படைப்புகளை எதிர்பார்த்திருந்த பிரசுர கர்த்

தாக்கள், நாடக அரங்கக் காரர்கள் விடயத்திலே மிகவும் இறுக்கமானவராக இருந்தார். இதனால்தான் 1966இல் மரோக்க இளைஞனான அமிது "LES PARAVENTS"இல் நடிக்கக்கூடியதாக இருந்தது. மலிவுப்பதிப்பிலே தனது புத்தகங்கள் பிரசுரமாகுவதையும் ஒரு காலகட்டத்திலே இவர் மறுத்தார். ஒதுங்கியிருக்கும் மேற்கை இவர் மலிவுப் பதிப்பிற்கு ஒப்பிட்டார். இவை எதுவுமே சம்பாஷணையை இலகுவாக்க உதவவில்லை. தனது எழுத்தினைச் சுற்றிக்கொண்டோரிடமிருந்து மிகவும் தொலைவில் இருந்தார். பிரபலமடைவதையிட்டு எந்த அக்கறையும் இல்லாது இருந்த இவர், சிறையில் இருந்து மீள்வதற்காகவே தான் எழுதியதாக அடிக்கடி ஞாபகமூட்டினார். இவர் ஒருபோதும் தனது எழுத்தில் செய்திகளை வழங்கியதில்லை. கதறல்களை மட்டுமே கொண்டு வந்தார். சமூக ஒழுங்குகளிற்கு வெளியால் வாழ்பவர்களினதும், அடக்கப்படுபவர்களினதும், கறுப்பு பந்தர்களினதும், பாலஸ்தீனியர்களின் சட்டத்தரணியாக இருந்தார் என்றே நான் கருதிக்கொண்டேன். ஏதாவது கடமையைச் செய்வதற்காகப் பிறந்தவர் என அவர் உணர்ந்தாரா என்பது எனக்குத் தெரியாது. நிச்சயமாக அப்படி இருக்கமுடியாது. ஆனால் இயல்பான உணர்வினாலும், ஓர் உதைப்பினாலும், தனது பழைய தோலின்மீது வைத்திருந்த விசுவாசத்தினாலுமே அவர் இயங்கினார்.

இதனால் இன்னொரு பக்கத்திலே அவர் சபிக்கப்படாதவராக இருந்தார். இந்தக் கொள்கைப் பிடிப்பு அவருக்கு மட்டுமே சொந்தமானது. எழுத்தாளர் உலகிலே காண்பது அரிது. எனவே இவருக்கு நிறைய நண்பர்கள் கிடைத்தனர். இவர் ஓர் மனிதாபிமானியாகவும் தாராளமனமுடையவராகவும் இருந்தார். இவருக்குச் சளி பிடித்திருந்தபோது தஞ்சரில் உள்ள பார்மஸி ஒன்றுக்கு அழைத்துச் சென்றது நினைவுக்கு வருகின்றது. மூன்று டினாருக்கு (3 பிராங்) மருந்து வாங்குகின்றார். வெளியே வரும்போது ஓர் வறியவன் படுத்துக் கிடப்பதைக் காண்கின்றார். அவனை எழுப்பி மிகவும் இயல்பாக நூறு டிராம்களைக் கொடுக்கின்றார். அது உண்மையிலேயே பெரிய தொகை. 10 நிமிடங்களின் பின்னே சளி நின்று விட்டது. இவர்தான் ஜோனே. எப்போ எந்தக்கட்டத்திலே எதனைச் செய்வார் என்று ஊகிக்க முடியாதவர்

**கேள்வி:** மரோக்கிலே அவருக்கு நிறைய நண்பர்கள் இருந்தனரா? [redacted]

**பதில்:** 1968இலே ஜோனே தஞ்சருக்கு வந்த போது அரபு உலகம் பற்றிப் பெரிதாக எதுவும் தெரியாது. சிலரை மட்டுமே தெரிந்திருந்தார். சில காலங்களின் பின்னர் அரபு உலகம் பற்றி அதிக ஆர்வம் காட்டினார். இது அவரை பெய்ருத் மட்டும் கொண்டு சென்றது. அவருக்கு சிலர் மட்டுமே இங்கு (மரோக்க) நண்பர்களாக இருந்த போதும் அவர்களைப் பிரிய நினைத்ததில்லை. அவர்களுக்கு நாணயமானவராக இருந்தார். அவர்களோடு நிறைய நேரத்தைச் செலவளித்தார். "எது மெதுவாக வளர்கின்றதோ அது நீண்டகாலம் வாழும்" என்ற சோப்பன் ஹோகரின் வரிகளை நான் சொன்னபோது அவர் புன்னகைத்தவிதம் இப்போதும் எனது நினைவில் உள்ளது. இங்கே சந்தித்துக்கொண்ட மரோக்கர்களுக்காக அவர் நிறையச் செய்துள்ளார். 70களில் சந்தித்த மொகமெட்டைக் குறிப்பிடலாம். அதன்பின் அலிக்கும் தனது தத்துப்பிள்ளையான அசெடினிற்கும். அசெடினிற்காக லாருஷில் இவர் கட்டிய வெள்ளையும் நீலமும் கலந்த சின்ன வீட்டிலேதான் ஜோன் ஜோனேயின் கல்லறை உள்ளது.

**கேள்வி:** ஜோன் ஜோனே தொடர்பாகக் குறிப்பிடத்தக்க இன்னொரு நினைவு உள்ளதா?

**பதில்:** கடைசி நினைவு எனது மனதை மிகவும் உருக்கியதென நினைக்கிறேன். பாரிஸில் மரணிப்பதற்கு முன்னர் அலியையும் அசெடினையும் காண்பதற்காக ஜோனே லாருஷிற்கு வந்தார். இந்தவேளை தஞ்சரிற்கும் சென்றார். இவர் ஒரு போதுமே தனது பயணங்களை ஒருவருக்குமே அறிவிப்பதில்லை. நான் கூட அப்போது பிரயாணம் சென்றிருந்தேன். என்னை அவர் தேடினார் குறிப்பாக நாங்கள் அடிக்கடி ஒன்றாக மதிய உணவு சாப்பிடும் நெக்றெஸ்கோ உணவகத்தில். சூக்றி நிற்கின்றாரா? அவரைப் பார்க்கவில்லை என்கின்றான் பணிப்பையன். ஜோனே சாப்பிடுகின்றார். பின்னர் பார்மானிடம் சென்று "இந்த France-Soirஇனையும், ஓர் வைனையும் சூக்றி வந்தால் கொடு" என்று விட்டுச்செல்கின்றார். சில தினங்கள் கழித்து நான் நெக்றெஸ்கோ சென்றேன். அங்கே வைன் கிளாஸூம் பத்திரிகையும் எனக்காகக் காத்திருந்தன. ஜோனேயின் கடைசி ஜாடை இது. 15 தினங்களின் பின்னர் ஜோனேயின் மரணத்தை இன்னொரு பத்திரிகை எனக்கு அறிவித்தது. ❍



ஜேர்மெய்ன் கிரீர் எழுதிய 'THE FEMALE EUNUNH'
ஏழுபதுகளில் பெண்ணியச் சிந்தனையில்
பெரும் புரட்சியை எழுப்பிய படைப்பாகும்.
தாய்க்குலப் பெருமையைத் தூக்கியெறிந்து பேசிய அந்நாளில்
"தாய் குடும்பத்தின் செத்தொழிந்து போன இதயம்" என்றார் கிரீர்.
ஆனால்
சென்ற மார்ச் மாதம் லண்டன் சவுத் பேங்கில் பெண்ணியக் கருத்தரங்கில்
ஜேர்மெய்ன் கிரீர் உரையாற்றிய போது,
"தாய்மை நம் மத்தியில் உன்னதமாகக் கௌரவிக்கப்பட்டதில்லை"
என்று வருத்தம் தெரிவித்தார்.

காலம் என்பது கறங்குபோல் சுழன்று....

# சூலிக்குக் கதை சொன்ன சூல்களின் கதை

## றொனா போல்

இழுத்தலும் கைவிடலும் உந்துதலும் பிரிதலும் மோதலும் இருத்தலும் இன்மையுமான சுழற்சியும் இன்மையுமான சமிக்ஞை யாரைச் சேர்வதென்று தெரியாத நாழிகையில் நாட்கள் கரைந்து துளிகளாக உவர்ப்பு வெளிப்பட கபாலங்களும் யோனிகளும் குருதியும் சக்தியும் பிராணமும் நீரமமும் கரியை வெளிவிடக் குறிகளும் சேர்ந்துகொண்டு ஊழியில் உருவாக் கிய சமிக்ஞை கனவுப்பிம்பங்களின் சிதறல் தெறிப்புக்களில் வழிந் தோடி - அடி சேர்ந்து - அண்டம் காத்து நிற்க அண்டம் நடுநடுங்க சேர்ந்து கொண்ட கருந்துளையின் இருள் கவ்விய நான்காம் சாமத் தில், இப்படிப் பலப்பல நேரத்துளிகளில் அண்டங்கள் சேர்ந்து புடவிபடைக்க உத்வேகம் பெற்று உள்ளிருந்து வெளியேற ஏழாயிரம் மணிநேரக் காத்திருப்புக் காத்திருக்கக் காத்திருக்கக் களம் காலத்தி னால் இறுக்கம் பெற்று இறுக்கம் எல்லை மீறி எல்லைகள் உடைக் கப்பட்டுச் சிதறல்கள் தரை தொட்டன.

### இதுவுமது:
### அத்தியாயம் 1

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் சூரன் போருக்கு மயிலிட்டி ஆசாரி செய்த சூரனை ஐந்தாறு நாட்களுக்கு முன்னே ட்ராக்டரில் வைத்து றோட்டால் இழுத்துக் கொண்டு போவார்கள். சூரனை நேரில் பார்க்கப் பயத்தில் அம்மாவினதோ, ஆச்சியினதோ, அன்ரியி னதோ சீலைத்தலைப்பை எடுத்து விரித்து வைத்துக்கொண்டு அதுக் குள்ளால் பார்ப்பார்கள். பயமும் ஆசையும் கலந்து பயமுறுத்துவ தால் இப்படி. பிறகு வளர்ந்தாப்பிறகு சூரனைக் கந்தசாமி வேலெ றிந்து வயித்தைப் பிளக்க வயர்களாகக் குடல் வந்து ரத்தமில்லாமல் கண்களூடு வயிற்றினில் மின்சாரம் பாய்ச்சிக் கலங்கடிக்கும். கொஞ் சம் பிந்திய காலங்களில்தான் சூரனுக்குக் குடலோடு வயர் மட்டும் தானா? வேறு ஏதுமில்லையா என்ற கேள்வியெல்லாம் வந்து பிறகு அது ஏன் சூரன் ஒரு நாளும் சூரியாகவும் க்கந்தன் ஒருநாளும் கந்தியாகவும் வரவி ல்லை என்ற யோசனைகளும் வந்தது. இதுவும் போய் பல இலையுதிர் காலங்கள் கடந்த பின்னர் சூரன் சூரியாயிருந்தால் வயிறு பிளக்கேக்கை பிள்ளையி ருந்தால் எண்ட கேள்வியெல் லாம் பதிலாகத் தெரிந்தது.

### இதுவுமது:
### அத்தியாயம் 14

கமலராணி மெதுவாக நடந்து தான் வந்தவள். படலையிக்கை கால் வைக்கவும் தாய்க்காறி கத்தின சத்தம் கமலத்தின் கால டிகளைப் பெரிதாக்கி ஒரேயெட் டில் வீட்டுக்குள் நின்றாள்.

“ஏனணை கத்துறாய்?”

“கொக்காவைப் பாரடி. திகை ப்பூண்டில மிதிச்ச மாதிரியெ ல்லோ இருக்கிறாள்.”

“என்ன சொல்லுறாய்?”

“போய்ப் பாரண பிள்ள என் னமோ?”

கமலம் உள்ள போனால் அக்கா இருக்கிறாள். சின்னறை

யுக்க, அதுதான் அவளின்ர அறை, ஸ்ரூலிலை இருக்கிறாள். உள்ள நுழையவும்

"கமலம் நான் குளிக்க வேணும் தண்ணியள்ளித் தாறியோ?"

"ஏன் உங்களுக்கென்ன கை கால் இழுத்துப் போட்டுதோ?"

"இல்லையடி. பயமாக்கிடக்கு தனியப் போய்க்குளிக்க."

"உன்ன ஆர் பொழுதுபட்ட நேரத்தில குளிக்கச் சொன்னது. நாளைக்குக் குளியேன்."

"இல்லை. இஞ்ச பார்."

சாறத்தைக் காட்டினாள். அவள் 'மிடி'தான் போட்டிருக்கிற வள் சில நேரம் குடைவெட்டுப் பாவாடை. ஆனால் அதுக்கு மேலாக சாறம் எப்பவும் உடுப் பாள். அத்தான் வெளிநாட்டுக்குப் போனபிறகு சாறம்தான் அவள் உடுப்பு. சாறத்தில் யன்னலுக் குள்ளால் மேறக விழுந்து கொண்டிருந்த செம்பவளச் சூரி யனின் கதிர்கள் பட்டுத் தெறி த்து ஈரமென்று காட்டின. இன் னும் உற்றுப் பார்க்க அவை ரத்தமென்று தெரிந்தன. 'ஏதோ காலைக் கையைக் கிழிச்சுப் போட்டா போல. அதுவும் பிள் ளைத்தாச்சி.' எண்டபடி "என்ன க்கா" என்றதில் பரிவு பெரிதாக வியாபித்து சின்னறை முழுதும் வெளிச்சமாயிற்று.

"ஏதேனும் காயமே?"

"இல்ல."

"அப்ப"

"வடிவாப் பார்."

சாறத்தை அவிட்டுக் கையில் குடுத்தாள். இப்ப குடவெட்டுப் பாவாடையும் நனஞ்சு கிடக்கி றதும் தெரியுது. கால்பாதத்தில் இருந்து மேலே வரை ரத்தம் காய்ந்து கிடந்தது. கோடாக நீண்டு பாவாடைக்குள்ளேயும்.

"என்ன? என்ன இது?" பயமா, பதட்டமா என்று தெரியவில்லை கமலத்தின் குரலில்.

"என்ர, என்ர ... கலைஞ்சு போச்சடி"

ஸ்ரூலிலிருந்து எழும்பி கமலத்தைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு அழத்தொடங்கினாள். 'எப்பிடி! எத்தனை மாசம்? குறைஞ்சது 5 மாசமெண்டாலும் இருக்குமே எண்டது' கமலத்தின் சிந்தனை. என்ன நடந்தது? கட்டிப்பிடிச்சபடியே நிண்ட அக்காவின் முகத்தை நேரே பார்த்தாள். கமலத்தின் கண்ணில் என்னவோ சந்தேகம் என்றது கண்ணில் பாவை சுருங்கியிருந்த ஒளிர்வுக் குறைவில் விளங்கியது அக்காவுக்கு. மெல்லக் கமலத்தின் இடதுகையைத் தன் வலதுகை யால் பிடித்துக்கொண்டுபோய் தன்னுடைய அடி வயிற்றில் வைத் தாள். ஏதேனும் சந்தேகம் உண்மையிலேயே இருந்திருந்தாலும் இனி வராது அவளுக்கு. அக்காவின் அடிவயிறு மிகவும் பழுத்து அழுகும்போதுள்ள பப்பாளிப்பழத்தைத் தொட்டது போலப் 'பொசுக்' கென்று இருந்தது.

அவளை இழுத்துக்கொண்டு போய் கிணத்தடியில் தண்ணியை அள்ளி இறைத்து விட்டு வந்து சாப்பிட்டாள். இடையில் அம்மா

"என்னடி பிள்ள பிரச்சனை?"

"அதொண்டுமில்லை. மத்தியானம் நான் அவளைப் பேசிப் போட டன் எண்டுதானப்பிடி இருந்தவளாம்"

நல்லவேளை அம்மா இரண்டுபேரும் கதைக்கேக்கை புட்டவிச்சுக் கொண்டு நிண்டபடியால் சின்னறையுக்க நடந்தது தெரியாமப்போச்சு.

படுத்தாச்சு. அம்மா விறாந்தையில. இரண்டு பேரும் சின்னறையில. ஒரு 30-40 நிமிசம் கழிஞ்சிருக்கும். அம்மாவின் மூச்சு சீராகக் கேட்டது. கமலா கேட்டாள்.

"என்னக்கா நடந்தது?"

பெருமூச்சு எண்டுமில்லை, பயத்திலை மூச்சு வாங்குகிறது எண்டுமில்லை. சாகிற நேரம் இழுக்கிறமாதிரி இருந்தது அக்காவின் மூச்சு. பாயில் நகர்ந்து அவள் தலையைத் தடவினாள். ஒரு பத்து நிமிசம் இன்னும் ஓடியிருக்கும். அக்கா கதைக்கத் தொடங் கினாள். அதுக்கு முதல் கமலம் கேட்டாள்.

"எங்கயேன் விழுந்தனியே?"

"இல்ல. அப்பிடியொண்டும் வித்தியாசமா நடக்கேல்லை. நான் சொல்றத இடையில குழப்பாம கேள். கேட்டு முடிச்சுப்போட்டு நீ எதை யெண்டாலும் சொல்லு. ஆனா இடையில நக்கலடிக்காத." இப்ப அக்காவின் கை ஆதரவுக்காக கமலத்தின் கையைப் பிடித் திருந்தது. கமலம் சரிந்து படுத்திருந்தாள்.

"ம்..."

"மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அம்மா லேசாச் சரிஞ்சு விட்டா. அப்பா வேலைக்கு வெளிக்கிட்டு விட்டார். நான் றேடியோக் கேட்டுச் சலிச்சுப் போய் படுக்கலாம் எண்டு வந்தன். யன்னலுக் கால வெயில் விழத்தொடங்கியிருந்துது. யன்னலைச் சாத்திப்போட்டுப் படுத்தா இருட்டாயிருந்துது. அப்ப ஏறக்குறைய பின்னேரமாகுது. 4 மணியிருக்கும். நித்திரை வாற நேரமில்லையே. கொஞ்சம் சும்மா படுத்துக்கிடந்து விட்டு தேத்தண்ணி வைப்பம் எண்டு கிடந்தன். எனக்கு அரை மயக்கம். நித்திரையுமில்லா-நித்திரையுமான நேரம். திடீரெண்டு காலுக்கிடையில எலி பூந்த மாதிரி இருந்துது. பயத்தில மூச்சு நிண்ட மாதிரி துள்ளி அடிச்சு எழும்பினன். எலி மூலை க்கு ஓடின மாதிரி இருந்துது என்றதுக்கிடையில காலுக்குள்ள சூடா உணர்ந்தது. காலில ஈரம். விரிச்சுப் படுத்திருந்த துணியெல் லாம் தொப்பலான சூடான ஈரம். அக்காவுக்கு மனசு குழறியடிச்சுக் கொண்டிருந்தது. மூச்சு அவசர அவசரமாய் வந்தது. ஓடிப்போய் லைற்றைப் போட்டால் ஓடின இடமெல்லாம் சிவப்பாய், பாயும்

நனைஞ்சு. அம்மாவைக் கூப்பிட எடுத்தவாய் மனிசிக்கு உடன சொல்றது சரியில்ல எண்டு புத்தி தடுத்தபடியால் சத்தம் போடாமல் நின்றது. விசயம் விளங்கி விட்டுது. நித்திரையால் எழும்பி அம்மா வந்தாலும் கதறுவாள் எண்டு லைற்றை நூத்துப்போட்டு லேசாக யன்னலைத் திறந்துவிட்டு திரும்புறதுக்கிடையிலையே அவளுக்கு மயக்கம் மாதிரி வந்தது. கமலா வரேக்கை இருந்த ஸ்ரூலில் போய் இருந்தாள். சுவரைப் பிடிச்சுக்கொண்டு நினைச்சாள். என்ன இது நான் ஏதோ கனவு கண்டபடியால்தான் வயித்திலை இருந்த பிள்ளை கலைஞ்சு போட்டுதோ. அதெப்பிடி இப்ப எனக்கு ஐஞ்சர மாசமெ ல்லோ. இப்ப கலையாதே. அப்பிடியெண்டால் நானே செத்துப் போடுவனே. ஒண்டும் விளங்காமல் குழப்பமாக வயிற்றில் கையை வைத்துப் பார்த்தாள். உண்மைதான். வயிற்றில் ஒண்டுமில் லை எண்டதை முதலிலேயே உடம்பு உணர்ந்ததை, புத்தி தெரியப்ப டுத்தியதை திரும்பவும் கையும் ஒத்துக்கொண்டது. இப்பதான் கவலையும் பயமுமாக விசும்பல் வெடித்தது. இப்ப திரும்ப எலி ஓடுவதுபோல சலனம். நிலத்தில் கண்ணைத் திருப்பிப் பார்த்தாள். முதலில் எலி ஓடியது உண்மைபோல. அதே மூலைக்குள் இருந்துதான் சலனம். உன்னிப்பாகப் பார்த்தால் லேசாகத் திறந்த யன்னல் வெளிச்சத்தில் மூலையை நோக்கித் திட்டாக ரத்தக்கோடு கள். இப்ப விசும்பலும் நிண்டு பயமுமாகிப்போனது. மூலைக்குள் உற்றுப்பார்க்க தடம் இருந்த வழியே ஒரு குட்டி உருவம் ரத்தத்தில் தோய்ந்த முயல் மாதிரி வெளியில் வந்தது. வந்து யன்னல் வெளிச்சத்தில் தெரியும்படியாக நின்றது. இனி உற்றுப்பார்க்கத் தேவையில்லை. அதன் கண்கள் பெரிசாக தலைமுழுக்கவும் வியா பித்திருந்தது. தலையில் முடிகள் இல்லாமல் அல்ல குறைவாக. உடலின் மொத்தத்துக்கும் தலையே பெரிதாகத் தலையின் மொத் தத்துக்கும் கண்ணே பெரிதாகக் கையும் காலும் இருக்குமிடத்தில் புதிதாக முளைக்கத் துவங்கின கறிமுருங்கைக் கிளைபோல செக்கச்செவேல் எண்ட நிறம், ரத்தத்தில் தோய்ந்ததாலும் இருக்க லாம். ‘அது’ என்ற உணர்வு மாறி பார்வையைச் சந்தித்த கணத்தில் அறுந்த கொப்பூழ் கொடி கண்களில் இணைந்தது. அக்காவுக்கு அது தன் பிள்ளை என்று உணர்த்தப்பட்டது. அந்தக் கொப்பூழ் நாணே பேசியது. அக்காவுக்குச் செய்திகள் சொல்லப்பட்டன. பல் வேறு காரணங்களுக்காக கருவிலிருந்தே திருக்கொண்டு இறங்கிப் போய் விடத் தீர்மானித்து விட்டதாக. அவளுக்கு என்ன ஆனதோ! எல்லாம் புரிந்து கொண்டவள்போல் ஒரு சாந்தமனதுடன் செயல் பட்டாள். பன்னீர்க்குடம் உடைந்து, ரத்தம் வெளியாகி தரை நனைந் ததை துப்பரவாக்க வேணுமே என்ற எண்ணம் மேலோங்க செயல் படத் தொடங்கினாள். இந்த இடையுக்குள் வயிற்றிலிருந்து வெளியே றிய சூல் யன்னல் வழியாக வெளியேறிவிட்டது. எல்லாம் சுத்தப் படுத்தித் துடைத்து மூலையில் போட்டு வேற ஊத்தைத் துணியள் அள்ளிப்போட்டு முடிக்கேக்க அம்மா ‘தேத்தண்ணி இருக்கு குடி பிள்ள. வாறன்.’ எண்டபடி போய்விட்டா. திரும்பி வந்தபோதுதான் அக்கா யோசித்துக் கொண்டிருந்ததைக் கண்டவ. என்னண்டு கேட் டவ. ‘தலைமுறை இடைவெளிகள் புரிந்து கொள்ளாது’ எண்ட செய்தியை அக்காவின் பிள்ளை சொல்லிவிட்டுப் போயிருந்ததால் அக்கா நடந்ததைச் சொல்ல விரும்பவில்லை. பேசாமல் இருக்க அம்மா ரெண்டுதரம் கேட்டுப் பார்த்துப் போட்டு கத்தினவ இல்லை யெண்டால் சத்தம் போட்டுப் பேசினவ. அம்மாவின் சத்தம் கமலத் தின் காலடிகளைப் பெரிதாக்கி ஒரே எட்டில் வீட்டுக்குள் நின்றாள்.

## இதுவுமது: அத்தியாயம் 15

கலட்டிக்காணிகளை ஊடறுத் துப்போகும் பெரிய கல்றோட்டு.

ஒரு பெரிய பனங்காணி.

ஒரு மூலையில் சின்னக் கொட்டில்.

பனங்காணி கணபதிப்பிள் ளையின்ர.

கொட்டில் ‘சீனி’யின்ர.

சீனி சீவிறது.

மனிசிக்காறி கொட்டிலுக்கை.

‘சீனி’ பின்னேரப் பனையில.

அது இன்னொரு பனங்காணி.

ஒரு தடுக்கு பின்னி முடிச்ச களைப்பு.

மனிசி படுத்திருக்கிறா.

நித்திரையில் என்னவோ ஓடுற கனவு.

மிஞ்சி மிஞ்சிப் போனால் 80 நாள் தான் இருக்கும்.

அதுக்குள்ள என்ன அவ சரமோ!

எழும்பிய மனிசிக்காறிக்கும் நிண்டு செய்தி சொல்லிப் போட் டுத்தான் போனது.

எப்பிடி மனிசனுக்கு இதைச் சொல்றது?

அந்தாள் கோபத்தில என்ன சொன்னாலும் கேக்காதேயிது தான் முதல்பிள்ளை.

‘சீனி’ சீவல் முடிச்சு வாறார்.

**இதுவுமது –**
**(இது அத்தியாயமல்ல.**
**வேறு ஒரு கதையில் இருந்து**
**வெட்டி எடுக்கப்பட்ட துண்டு)[1]**

ஒரே நேரத்தில் மூன்று விக்கற், மூன்று கோல் எண்டால் 'ஹற்றிக்'. அப்ப மூன்று பேரப்பிள்ளையள் என்றால். குஷியில் இருந்தார் பரமசிவம். அமெரிக்காவில கொம்பியூட்டர் என் ஜினீயருக்குக் கட்டிக்குடுத்த மகள். தன்னோடு அருகிலி ருக்கும் மகள். ஜெர்மனியிலிருக்கும் மகன். என்ன ஒண்டு 3 மாசம், மற்றது 6ம் 7ம்.

'எப்பிடி என் திறமை' என்று கேட்டு கிழம் மனைவியைப் பார்த்து மீசை முறுக்கிவிட்டார். நாளை ஞாயிற்றுக் கிழமை எல்லாரும் போன் பண்ணுவார்கள் என்ற நினைப்புடன் உறக் கம் வந்தது. பாதி உறக்கத்தில் போன் அலறியது. செய்தி சொல்லப்பட்டது. அதிர்ச்சி தீருமுன் மறுபடியும் போன். அழுகை வருமுன் இன்னுமொரு போன். அட இதிலும் ஒரு 'ஹற்ரிக்'!

## இதுவுமது: 9

ஊழித்தாண்டவம் நடத்துவது திரிசடை என்றாலும் பார்ப் பதற்குக் கொடுத்து வைத்ததாருமில்லை. தமிழ் கூறும் நல்லுலகுப் பார்வையாளர் கட்டியம் கூற நடந்ததந்தத் தாண்டவவூழி. எல்லாரும் பார்க்க எல்லாரும் கேட்க ஊழியின் மயிர்க்கால் எங்கும் விரவி குத்திட்டு நின்றது. மூன்றா வது கண் திறந்தும் மூன்றாம் கண்ணன் ஊழி நடக்கிற தென்று பார்க்க முடியாமல் போனதொரு சந்ததி. பல்நூறு ஆண்டுகள் கொண்டு வந்த கூறுகள் கண்பட்டுப் போனதென முரண்டு பிடித்தன. இத்தனைக்கும் கண்ணில் ஒளியில்லை, விழியில் பார்வையில்லை, வாயில் மூச்சில்லை, நாக்கில் பேச்சில்லை, தோலில் உணர்வில்லை, மூளையில் சுர ணையில்லை என்றொத்துக் கொள்ளுமொரு சந்ததி - கிளித் தட்டுப் பார்ப்பது போல் வேடிக்கை பார்க்கிறது. நிகழ்வுக்களத்திலிருந்து ஏழு மலைகள், ஏழு கடல்கள் தாண்டி பூக்காத பூவின் மகரந்தமும், நீந்தாத மீனின் முதுகுச் செதிலும், ஓடிப் போன கரடியின் புனுகும் எடுத்து மூன்று விரல் இரண்டு விரல் ஒரு விரல் அளவுகளில் குழைத்து இமயத்தின் கல்லில் சந்தனக் கட்டை வைத்து அரைத்து பட்டுப் போன்ற விழுதெடுத்து காணாமல் போன ராஜகுமாரியின் நெற்றியில் திலகமிட நடனத்தாண்டவ ஊழி நின்றுவிடுமென்று கிளித்தட்டு வேடிக்கை மறந்து தூரப் போயிருக்கிறது சனக் கூட்டம்.

எத்தனை சந்ததிகள் கடந்தாலும் சனக்கூட்ட ராஜகு மாரன் திரும்பப் போவதில்லை விழுதாயரைத்த மருந்துக்க லவையுடன். இடையிடையே பாரிஜாதப்பூவின் மணம் மயக் கிவிடும் என்று, மயங்கிய ராஜகுமாரிக்கு இன்னுமின்னும் மயக்கம் வந்துவிடக்கூடாதென்று - பாரிஜாதப் பூக்கள் மணம் வீசக்கூடாதென்று கட்டளையிட்டார் ராசா. ராசா இருக்கிறார். அரசாள்கிறார். ராஜகுமாரியிருக்கிறாள். ஆனால் காணாமல் போய்விட்டாள் - உயிருடன் தானென்று ஒத்தூதி கள் சொல்கிறார்கள். ஊழித்தா ண்டவம் நடக்கின்றது. ஜனங்கள் ஜீவிக்கிறார்கள். ஊழியின் தாண் டவம் அவர்களுக்குத் தெரியாது. தெரிய அறிவில்லை. கண்ணி ல்லை. புலனில்லை.


தெரிந்து கொண்டது ஒருவன் மட்டுமே. சீனி. அவன் வானத்துக் குப் பாலம் போட்டு கள் எடுப் பவன். அந்தக் கள்ளில்[2] போதை யேறிப் புடவிப் பயணம் செய்ய முடிபவர்களுக்குத் தாண்டவவூழி அவ்வப்போது தென்படுமாம். ஊழியின் போக்கை மாற்ற யாரால் முடியும் என்று பலரும், ஊழியே நான்தான் என்று சில ரும், ஊழியின் ஊழியர்கள் நாங் கள் மட்டும்தான் என்று இன்னும் பலரும் ஊழிக்குப்பின் ஊழி யாகி நாங்கள் அடையும் அடு த்த புடவி சிங்காரத்தோட்டம், ஊட்டோப்பியா, எத்தியோப்பியா என்று சிலரும், 5000 வருடங்கள் முன்பதான சிந்துவெளி நாகரி கத்தின் 200 மீற்றர் நீளமான துறைமுகத்தின் சந்ததிதான் நாங்களென்றும், இதுவும் வேண் டாம் அதுவும் வேண்டாம் புனு கும் செதிலும் மகரந்தமும் அரைத்துத் தடவியே நாங்கள் ராசகுமாரியின் கண்விழிக்க வைப்போம், கைப்பிடிப்போம் ராச குமாரன் ஆவோம் என்றும் ஒன் றுமே தெரியாமல் சிந்துவெளி யில் இருந்து இன்றுவரை சோம பானத்தில் திளைத்து மகிழும் நடைமுறை ஜீவராசிகளாயும் வியாபித்து வாழும் மக்களுயி ரினம் இருந்து வர, ஊழித்தாண் டவம் காட்சியாகியது சீனிக்குத் தான். மேலயிருப்பதால் நீதான் விரிந்த பார்வையுடையவன் நீயே கடவுள் என்று ஊழியின் நாய கன் சொன்னானாம்.

கள் கொடுத்துக் கள்ளுக்குப் பலியாகாது தப்பித்து நின்றதால் சீனியின் உச்சிபிளந்து ஒரு கண் வெளிப் போந்து காட்சிகளைக்

1. பதிப்பாசிரியருக்கு, நன்றி 'விகடன்' என்று போடவும் தயவுடன்.
2. கள்: பனை, தென்னையில் இருந்து எடுக்கப்படும் போதை தரும் சாறு; ஈழம்; கள்ளிறக்குவோர் - ஈழவர்


கண்டது.[3]

"அட்டட்டோ கானகப்படைகளை
வெட்டட்டோ சொல்லடா மந்திரி
கிட்டவே திடுமென வந்திடும்
மட்டியை வெட்டியே தீருவேன்" என்று சிந்து பாடிக் கொண்டு அம்மாக்களின் வயிற்றிலிருந்து வெளிப்போந்த சூல்களின் பல கும்பல்களில் ஒன்றின் தலைவி கூத்தாடிக் கொண்டு நின்றதாம். ஒரு கமலத்தின் இதழ்களை விரித்து வைத்ததுபோல், மேலிருந்து பார்க்கும் போது இருந்ததாம் கும்பல்கள்.



பூவின் நடுவிலான மகரந்தங்கள்போல நின்றனராம் தலைவர்கள்/தலைவன்கள்/தலைவிகள். உலகம் வியாபித்து ஒரே தினத்தில் வெளிப்போந்த சூல்கள் சீனி நின்றிருந்த பனங்காணிக்குள் கமல இதழ்களின் முனைகள் சுட்டிய திசைகளில் இருந்தெல்லாம் வந்து வந்து வந்து இறுகித் திரண்டு வடம் திரித்த நாராகி உறுதியுடனும் மண்வெட்டிப்பிடி போல மெருகேறி திசை தெரியாது தாண்டவஊழி இதழ்களுக்கிடையேயே நிகழ்ந்ததாம்.

"ஆவென்றே அலறிடும்
ஊழியும் ஒடுங்கிடும்
கதிரவன் என் பெயர் கேட்டால்
கூவென்றே குழறவே
மாகொடுமை செய்துமே
கால்கரம் தறித்துக்
கழுகருந்த வைப்பேன்"



இது மற்ற இதழின் தலைவன் கையிலிருக்கும் செங்கோலை இடப்பக்கமும் வலப்பக்கமும் மாறிமாறிக் குத்திக் கொண்டு சொன்ன கல்வெட்டாம். இந்தக் கல்வெட்டின் அடுத்த அடி முடிந்ததுமே கோபத்தில் செங்கோலைச் சுழற்றிவீச கெட்டிக்காரக் கட்டியங்காரன் ஓடிப்போய்ப் பிடித்துக் கொண்டானாம். இவ்வாறாகப் பலகோடி பல கணங்கள் பல யுகங்கள் தாண்டித் தாண்டி ஊழித்தாண்டவம் நடந்ததாம். நடந்துகொண்டேயிருந்ததாம். ஊழியின் பலிக்குப் பலியான சூல்களும் சீனியின் தலைக்கு மேலே சுத்திக் கொண்டிருந்தனவாம். அதிலொன்று எப்பவும் அந்தரத்தில் எதற்கென்று ஓய்வெடுக்க வந்து கங்குமட்டை யொன்றில் பிடித்துக்கொண்டு தொங்கியதாம்.அப்போது சீனியின் ஏனிந்த சூல்களின் பெருவெடிப்பு. எதை விழுங்க. எதைப் பிறப்பிக்க. காலத்தையும் வெளியையும் இப்படி இல்லாமல் செய்வது எதற்காக என்ற உலோக நெருப்புக் கேள்விகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தன் பெரிய கண்களால் பார்த்ததாம். சின்னப் புன்னகை பூத்ததாம். கொஞ்சம் கள்ளெடுத்து அருந்தியதாம். பழையபடி அந்தரத்தில் மிதந்ததாம். மெல்ல மெல்ல ஊழியின் தாண்டவப் பெரும்வெடிப்பு சூல்களை உள்ளெடுத்து வெளித்தள்ளி மெல்ல மெல்ல உருமாறுகிறதாம். கமல இதழ்கள் ஒவ்வொன்றாக வாடி விழுகின்றன. கமல இதழ்கள் செல்லரித்துப் போகின்றன. கமல இதழ்களைக் காற்றடித்துக் கொண்டு போகின்றன. கமல இதழ்கள் சில ஒன்றுடன் ஒன்று சேருகின்றன. சேர்ந்த இதழ்கள் உருமாறுகின்றன. இதைப் பார்த்துக்கொண்டு நிற்கும் பத்தாண்டுகளில் கமலம் நாகலிங்கப் பூவாகிறதாம். நாகலிங்கப்பூ கமலம்போல் முனைகளற்றது. அதன் இதழ்களில் ஒன்று மகரந்தங்களைக் கொள்ளவரும் சூலைப் பாதுகாக்கும். அதன் ஆணும் பெண்ணுமான தன்மை ஊழியில்இல்லாமல் போகும் காற்றடித்த திசைச்சருகுகளை மீண்டும் பிறக்கவைக்கப் போதுமானவையாக இருக்கின்றன. நாகலிங்கப்பூவின் வாசம் ஊழியில் ஓர் தியான நிலை தருகிறதாம். முகர்ந்து பார்க்காதவர்கள் கள்ளருந்தி



3. இந்தக் கதையைப் படித்துவிட்டு இந்திய விஞ்ஞானி ஒருவர் பனையில் இருந்து பார்ப்பதை ஏன் துணைக்கோள் வழியாகப் பார்க்கமுடியாது? என்றுவிட்டு முயற்சித்து சிதம்பரரகசியம் த்வைதமா, அத்வைதமா என்று சிண்டைப் பிக்கிறாராம்.

உணர்வீர்களாம். ஆதலால் நாகலிங்கப்பூவின் வடிவமே இறுதி வடிவமான ஊழித்தாண்டவத்தின் பெருவெடிப்பின் அத்தியந்தக் குறியீடு என முத்திரை குத்தப்பட்டு பூமியின் பல்லடுக்கு ஆழங்களில் புதைக்கப்பட்டு லாவாக்களில் கரைந்துவிட்டதாம். அது வெடிக்கும் காலம்வரை ஊழியின் போக்கு இதுதான் என்றும் இப்படியேதான் போகுமென்றும் இடையில் சொல்லப்பட்டவை எல்லாம் பேத்தல்கள் என்றும் உச்சியில் அடித்து 'அம்மாவாண' என்று சத்தியம் செய்த சீனி வாழ்க்கையில் ஏனோ முதல் முறையாக கொஞ்சம் கள்ளெடுத்து வாய் கொப்புளித்துத் துப்பினானாம்.

## இதுவுமது: அத்தியாயம் 16

சீனி சீவல் முடிச்சு வாறார்.
முட்டியுக்க தனிப்பனைக் கள்ளு.

## இதுவுமது: அத்தியாயம் சுழி

ஊழித்தாண்டவப் பெருவெடிப்பு நிகழ்ந்த பனங்காணியில் இருந்த பெருவெளிச்சத்துடன் பத்துச் சூரியன்களை அம்பின் நுனியில் வைத் துப்பூட்டி அமாவாசை இரவில் விட்டதுபோல ஓர் ஒளிக்கோடு 45°சாய்வாக வானத்தை நோக்கிப் போனது. கண்ணிலிருந்து மறையும் நேரம் போன பாதைக்குக் குறுக்காக நிலைகுத்தி நின்றது தூமகேது.


இந்த நிகழ்வுக்குப்பின் அந்தப் பனங்காணி வழியாகப் போய் வருபவர்களுக்கும், அருகே போகும் றோட்டில் பழுதுபட்ட வண்டியில் இருந்து கால் தரைபட இறங்குபவர்களுக்கும் ஒரு பாட்டுக் கேட்கிறது." கள்ளுக்[4]குடிப்பவர்களுக்கும் பாட்டின் முணுமுணுப்பு மட்டும் கேட்கிறது. இது போலப் பெருவெடிப்பூழி மீகாமன் கோட்டைக்கு மேற்கேயுள்ள கடலும் மழைநீர்த்தேக்கமும் கலக்குமிடத்திலும், நல்லூர் ராஜ வீதி வழியாகப்போய் நிலாவரைக்கிணறு தொடும் இடத்து வாழைத்தோட்டத்துக்கிடையிலும், கற்சிலை மடுவிலிருந்து பூநகரி சிவன்கோயிலுக்கு குறுக்காக ஒரு நேர்கோடு கிழித்தால் அதில் 13வது மைல் கல்லிலும், கோணேசர் கோயில் ராவணன் வெட்டில் நின்று வடக்குமுகமாக மூக்குநுனியின் கண்கள் இரண்டும் குவியப் பார்த்தால் நீர்ப்பரப்பின் மீதொரு தூரத்திலும் இன்னும் பெயர் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத இடங்களிலும்[5] ஊழி நடந்துகொண்டது. இந்த ஊழிகளைக் கண்ணுறக் கண்ணில்லை.

(பாட்டு- திரிசங்குக்கு அனுப்புதல் -காத்தான்கூத்து)

திரிசங்கின் பாட்டு நினைப்பிலிருப்பவர்களுக்குக் கதை விளங்கும் என்பதும் பாட்டுத் தெரியாதவர்கள் கண்டடையும்போது கதை முற்றுப் பெறும் என்பதும் நியதியாகிறது.

4. மறுவாசிப்பு இல்லாமல் இந்தக்கதை முற்றுப்பெறாது.
5. இந்த இடங்களை ரகசியமாக வைக்கும் படி உத்தரவு.

அபிமானி



# வேட்கை

சுதிங்கால்கள் பிடறியில் பட ஓடிவந்தான் இசக்கியப்பன். வேர்த்து விறுவிறுத்துப் போயிருந்தான். கண்கள் இரண்டும் அக்கினிக்குண்டுகளாய் தகிதகிக்க, வெக்கையாய் சுவாசமிட்டான். இருபத்தைந்து வயசுக்குரிய இளவட்ட வேகம். இடுப்பு லுங்கியை இழுத்துக்கட்டியி ருந்தான். முறுக்கிவிட்ட வீச்சரிவாள் மீசையும், சுருட்டி விடப்பட்ட முழுக்கைச் சட்டைக்குழாய்களும், அவன் மிகவும் ஆத்திரத்தில்தான் வருகிறான் என்பதை அந்தப் பறைத்தெருச் சனங்களுக்கெல்லாம் பளிச்சென்று தெரிவித்தன. மாலைநேரத்துக்குரிய ஆசுவாசத்தில் திண்ணைகளிலும் தெருவிலும் கூடிநின்று வாயாடிக் கொண்டிருந்தவர்கள் பதற்றமடைந்து அவனின் வேகத்துக்குக் காரணம் கேட்பதிலே குறியாயிருந்தனர்.

"ஏ என்ன எசக்கியப்பா,. இந்த வரத்துவாற? என்னாச்சி ஒனக்கு?"

அவனின் நடையில் சிறிதும் பிசகாது வேக மாய் வந்துகொண்டே அவன் சொன்னான்:

"எனக்கொண்ணும் ஆவல... எங்கப் பெரியண்ணனதான் கீழத்தெரு செம்பகப் பாண்டி அடிச்சுப்புட்டான்"

"அட பாதரவே... அவன் அப்பாவி ஆச்சே... ஒரு வம்பு தும்புக்குப் போகாத ஆளாச்சே... அப்படியென்ன அக்குரும்புப் பண்ணிப்புட்டான் அவன்?"

"செம்பகப்பாண்டிக் கடையில போய் எல்லாரையும் போல பெஞ்சில ஒக்காந்து காப்பி சாப்பிட்டுப்புட்டானாம்... இப்ப அந்தப் பாண்டிய என்னச் செய்யறம் பாரு."

தான் விருந்துக்கு வந்திருக்கிற வீட்டுக்குள் - குடிசைக்குள் - நுழைந்து எரவாணத்தில் செருகி வைத்திருந்த வெட்டரிவாளை எடுத்துக் கொண்டு வெளிக்கிளம்ப எத்தனித்தான். முற்றத்தில் அமர்ந்திருந்த சொந்தங்களுக்கு இப்போது தான் விவரம் புரிந்து அவனை ஆவிச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு கெஞ்சலானார்கள்.

"எய்யா வேண்டாமய்யா... அவன் கொலைகாரப் பாவி அய்யா... ஊரு பெருத்தச் சனங்க அவிய... நம்ம சாதிய ஒண்ணுமில்லாம ஆக்கிப் புடுவாவ"

இசக்கியப்பனின் அத்தையும் மாமாவும் அண்ணியும் அவர்கள் குழந்தைகளும் அவனைப் பிடித்துக்கொண்டு அழுதார்கள். திமிறிப் பார்த்தான். கால்களைப் பிடிக்க இரண்டுபேர். இடுப்பைச் சேர்த்துப் பிடிக்க இரண்டுபேர். கை அரிவாளைப் பிடித்து இழுக்க இரண்டுபேர். அவனால் தட்டமுடியாமல் போயிருந்தது.

"விடுங்க... இன்னிக்கு நா அவன ரெண்டுல ஒண்ணுப் பாத்திருதேன்... பெஞ்சுல ஒக்காந்து குடிச்சா அவனுவளுக்கு என்னக் கொறஞ்சிப் போவுதாம்? என்ன மயித்துக்கு யாவாரம் போட் டிருக்கானுவ? யாருகிட்ட வெள்ளாடுதானுவங் கங்கிதேன்... என்னியவுடுங்க... இன்னிக்கு அவனக் கூறு போட்டாத்தான் எனக்கு மனசு ஆறும்."

"வேண்டாம்ய்யா... நல்லாயிருப்பய்யா... அவனுவ சங்காத்தமே நமக்கு வேண் டாம்யா."

மாமா கெஞ்சினார். அவரின் விழிகளில் ஒரு கோடிப் பயப்பிம்பங்கள். அண்ணியும் குழந்தைகளும் போட்ட கூச்சலில் அந்தப்

பறைத் தெருவின் அத்தனை சனங்களுமே ஒட்டுமொத் தமாகக் கூடி நின்று ஆதங்கத்துடன் வெறித்துக் கொண்டிருந்தனர்.

"ஏன் பயந்து சாவுதிய? எத்தன நாளுக்குத்தான் இப்பிடிச் செத்துக்கிட்டே இருப்பிய? நாலு பேர வெட்டித் தள்ளிட்டு உள்ளப் போவதுக்கு என்ன பயம்?"

இசக்கியப்பன் 'உள்ளே' என்று அழுத்திச் சொன்னதன் அர்த்தம் புரிந்தது அவர்களுக்கு. சிறைச்சாலை என்கிற அர்த்தம். எதற்கும் துணிந்தவனாகத் தெரிந்தான் அவன். அந்தத் தெருப் பறையர்களைப்போல் அல்லாமல் துணிவே துணையாக நின்றிருந்தான். எல்லாம் அவரவர் மண்வாக்கு என்று தோன்றியிருக்க வேண்டும் மாமாவுக்கு. விழிகள் அகன்ற பெருமையுடனும் - சிறிது பதற்றத்துடனும் - அவனையே வெறித்துக் கொண்டிருந்தார். உருட்டுக்கட்டை போன்ற தேகம் அவனுக்கு. எட்டு பேரையும் ஒத்தைக்கு ஒத்தை நின்று வெட்டிச் சாய்க்கும் வீராப்புத் தெரிந்தது. அவனின் துடுக்கான இளமையைக் கட்டுக்குக் கொண்டுவர அவருக்குத் திணற வேண்டியிருந்தது. வயதான மாமாவால் அவனை இனிமேல் தடுத்து நிறுத்த முடியாது என்பது புரிந்தது. நேற்றிரவிலிருந்து கோவிலில் சாமியாடிக் கொண்டிருந்த களைப்பில் இருந்தார். ஊர் முனிசாமிக் கோயில் கொடைவிழாவின் இறுதிக்கட்டம் இன்னும் நெருங்காத குதூகலத்தில் சனங்கள் திளைத்துக் கொண்டிருந்த வேளையில் மயிர்க்கூச்செறியும் அந்தச் சம்பவம் நடந்துவிட்டிருந்தது.

சற்றைக்கெல்லாம் இசக்கியப்பனின் பெரியண்ணன் மாடசாமி - வந்தான் சுறுசுறுப்பாக.

"அருவாளத் தூரப் போடுல. செம்பகப்பாண் டிய என்னோடு சமரசம் பண்ணி வச்சிட்டாங்க. இனி பிரச்சினை பண்ண வேணாம்."

'படக்'கென்று இசக்கியப்பனின் கையைத் தட்டி அரிவாளைப் பறித்துக் கொண்டான் மாடசாமி. இசக்கியப்பனை விட பத்து வயசுதான் மூப்பு என்றாலும் ஏறக்குறைய ஐம்பது வயசுக் குரிய முதிர்ச்சியில் தெரிந்தான். புற்களாய் கன்னத்தில் முடிகள் அப்பியிருந்தன. தலைக் கேசம் உலைந்து கிடந்தது, காயப்போட்ட வைக்கோல் தளைகளைப் போல. மேல்சட்டை யில் கசங்கல் தெரிந்தது. தம்பியைப் போலல்லாமல் அண்ணனுக்கு மெலிந்த ஈர்க்குச்சித் தேகம்.

அடித்து ஓய்ந்த மழையைப்போல சற்றைக் கெல்லாம் அமைதி நிலவியது அங்கே. இரவுக் கொடைவிழாவைக் கண்டு ரசிக்கும் சுவாரஸ்யத் தில் சனங்கள் எல்லாம் பிரிந்து போனார்கள். இசக்கியப்பனின் மனசுக்குள் மட்டும் சுவாரஸ்யம் வர மறுத்தது. புயல் வீசிக்கொண்டிருந்தது உள்ளே. புழுதியும் இரைச்சலும் விரவிய புயல்.

◆◆◆◆

அந்த நிகழ்ச்சியை அவன் நேரிலே கண்டிருந்ததால் அத்தனை சுலபமாக மறந்துவிடமுடியவில்லை அவனால். தற்செயலாக ஓடைப்பக்கம் ஒதுங்கப் போனவன் கண்களில் அந்தக் காட்சி விழுந்தது. ஒய்யாரமாய் பந்தலிட்டு அலங் கரித்திருந்த சாமிக்கோயிலுக்கு எதிரேயிருந்த வெட்டவெளியில் ஓலைக்கீற்றுகள் வைத்து அடைத்து காபிக்கடைப் போட்டிருந்த செம்பகப் பாண்டிக்கும் இசக்கியப்பனின் பெரியண்ணனுக்கும் தள்ளு முள்ளு வந்துகொண்டிருந்ததைக் கண்டு கொண்டான். சட்டென்று பொறி கலங்கிப் போனான். வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு பாய்ச்சலாய் அங்கு ஓடுவதற்குள் பெரியண்ண னைத் தள்ளிக்கொண்டு வந்த ஊர்ப் பெரிசுகள் சிலர் இசக்கியப்பனையும் இழுத்துக்கொண்டு வரலாயினர். பெரியண்ணனின் முகத்தைப் பார்க்க சங்கடமாயிருந்தது. இசக்கியப்பனுக்கு நேர் மூத்தவனுக்கு, மாடசாமி மூத்த அண்ணனாயிரு ந்ததால் பெரியண்ணன் என்ற பேரே அவனுக்கு வழங்கிற்று. மாடசாமி என்றால் இசக்கியப்பனுக்கு ரொம்ப மரியாதை. பாசம். குடும்பத்திலே மூத்தவனாயிருந்ததால் தனக்குப் பின்னே நின்றி ருந்த தங்கை தம்பிகளை கரை சேர்த்ததில் கணிசமான பங்கு இருந்தது அவனுக்கு. பெரியண்ணனின் உடம்பில் ஒரு ஈ எறும்பு உட்காரக்கூட சம்மதிக்கமாட்டான் இசக்கியப் பன். அப்படிப்பட்டவருக்கா இன்று இந்தக் கதி என்பதை நினைக்க, மிகவும் அகோரமாயிருந்தது அவனுக்கு. இதே இது அவனுடைய ஊராக இருந்திருந்தால் இதற்குள் ஒரு ரத்தக்களறியே ஏற்பட்டிருக்கும் என்பதை மானசீகமாக நினைத்துப் பார்த்தான்.

அண்ணியோட பெற்றோர்

வீட்டுக்கு கொடைவிழா விருந்தாளியாய் அண்ணனோடும் அவர் குடும்பத்தோடும் வந்திருந்தான் இசக்கியப்பன். நேற்றிலிருந்து ஒரே கூத்தும் கும்மாளமுமாய் கொடிகட்டிப் பறக்கிறது கொடைவிழா. ஏர்வாடி கிருஷ்ணன் மேளமும், தளவாய்புரம் ராசாத்திக் கரகஆட்டமுமாய் களைகட்டிக் கொண்டிருந்தது. அக்கம்பக்கத்துக் கிராமங்களிலிருந்து வந்திருந்த சொந்தக்காரர்களாலேயே கூட்டம் நிறைந்திருப்பதாகத் தெரிந்தது அவனுக்கு.

அந்தத் தெருவில் முப்பது முப்பத்திரண்டு வீடுகளே - அநேகமாய் குடிசைகளே -அடங்கியிருந்ததை நினைத்துப் பார்த்தான் இசக்கியப்பன். எல்லோரும் கீழைத்தெரு முதலாளிமார்களின் வயல்களில் பாடுபட்டு ஜீவனம் கழிக்கும் ஏழை பாளைகள். அவர்களை மீறி இவர்களால் ஒரு அஞ்சு பைசாகூட சம்பாதித்துவிடமுடியாத சங்கடத்தில் நெளிந்தார்கள். எசமானர்கள் எள் என்பதற்குள் எண்ணெயாகி விடவேண்டும் இவர்கள். இல்லையென்றால் வேலை கிடையாது என்று வெளியே தள்ளுவார்கள். பாவம், பறைச்சனங்கள், அடுப்பைப் போலவே தங்கள் வயிற்றையும் காயப்போட்டுக் கொண்டு கிடந்தாக வேண்டும். அந்த எழவுக்காகத்தான் மேல்சாதி மொதலாளிகளை நேர் நின்றுப் பார்க்கக்கூடத் தைரியமின்றி ஒதுங்கி, ஒடுங்கி நின்றார்கள்.

அவர்களுக்குச் சந்தோசம் என்பதெல்லாம் தீபாவளி, பொங்கலைத் தவிர ஊர் சாமிக்கோயில் கொடைவிழாவும்தான். மூன்று நாட்கள் மும்முரமாக நடக்கும். தெருக்காரர்கள் முந்திய நாட்களின் வேலை அலுப்பை மறந்து கொடை விழாவின் கூத்திலும் கும்மாளத்திலும் சிந்தனையைச் செலுத்துவார்கள். குஞ்சுகுளுமான்களின் சந்தோசமெல்லாம் கோயிலுக்கு எதிர்த்தாற் போல கடைவிரித்திருக்கும் பலூன்களை வாங்கி ஊதி உடைப்பதிலும், ராட்டினம் ஆடுவதிலும், இனிப்புப் பதார்த் தங்கள் வாங்கிச்சாப்பிடுவதிலும் நிறைந்திருக்கும். பெரியவர்க ளுக்கென்று காபி, வடை, பீடி, வெத்தலை வைத்திருக்கும் கடைகள் உண்டு. அயர்வாய் இருக்கும் பொழுதுகளில் வேகமாய் உள்ளே சென்று வாங்கிக் கொண்டு வருவார்கள்.

கடை வியாபாரங்கள் எல்லாம் கீழத்தெரு மேல்சாதிக் காரர்களே போட்டுக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பா டிருந்தது அங்கே. மேல்சா திக்காரர்கள் வைத்திருந்தக் கட்டுப் பாடுதான். ஆத்திர அவசரத்துக்கு ஒரு காபித் தண்ணீர் குடிக்கப் போகவேண்டும் என்றாலும் கடையின் முன்னே நின்று காசு தந்து பதிலுக்குக் காபி வந்தவுடன் அப்படியே வாங்கிக் குடித்துவிட்டு - அண்ணாந்துதான் - வந்துவிட வேண்டும். அங்கே போட்டிருக்கும் பெஞ்சில் அவர்கள் உட்கார அருகதை இல்லையாம். அனுமதி இல்லை.

இந்த சூக்குமம் தெரியாமல் பெரியண்ணன் பெஞ்சியில் உக்காந்து காபி சாப்பிட்டு விட்டான். செம்பகப்பாண்டிக்கு தன் சாதிப்பெருமையில் மண்ணள்ளிப் போட்டது மாதிரி உறுத்தியிருக்க வேண்டும். பாய்லரை விட்டுவிட்டு அப்படியே ஆவேசமாய் ஓடி வந்து பெரியண்ணனைத் தள்ள, பெரியண்ணனும் பதிலுக்கு செம்பகப்பாண்டியைத் தள்ளிவிட... களேபரம் ஆகிவிட்டிருந்தது நிலைமை. அப்படியொன்றும் செம்பகப்பாண்டி பெரிய பயில்வானாகத் தெரியவில்லை இசக்கியப்பனுக்கு. பெரியண் ணனை விடக் குள்ளம்தான். ஆளுக்கு மீறிய மீசை வைத்திருந்தான். எப்போதும் மேனியில் முண்டாப் பனியன் அணிந்து அதற்குமேல் இடுப்பில் இறுக்கிக் கட்டிய பட்டைப் பெல்ட்டோடு காட்சி தந்தான். பெரியண்ணனை விடக் குறைந்த வயசுக்காரன். சாராயநெடி இல்லாமல் அவ னால் பேசிக்கொள்ளவே முடியாதுபோலத் தெரிந்தது. பறைத்தெருவுக்கு வடக்கேயிருந்த சுடுகாட்டுக்குப் பக்கம் அவனுக்குக் கள்ளச் சாராயம் விற்பனையாகிக் கொண்டிருந்ததையும் இசக்கியப்பன் அறிந்திருந் தான். கூலிஆள் வைத்து வியாபாரம் நடந்தது. காபிக் கடையிலிருந்து அடிக்கடி கள்ளுக்கடைக்கு நடந்துபோய் போதையைச் 'சீராக்கி' கொண்டு அவன் வந்ததை இசக்கியப்பன் பார்த்திருக் கிறான். குடிவெறியில்தான் தன் அண்ணனை அவன் விளமெடுத்துத் தள்ளியிருக்க வேண்டும் என்று தோன்றியது இவனுக்கு. பாவம் பெரியண்ணன், ஓடாய் தேய்ந்துப் போயிருந்தான். மாடான உழைப்பு அவனுக்கு. தினமும் கான்ட்ராக்ட் ட்ராக்ட ருக்கு மண்ணள்ளி நிரப்பும் வேலை. இசக்கியப்பனும் அந்த வேலைக்குத்தான் போய்க் கொண்டிருந்ததால் பெரியண்ணன் படும் சிரமங்களைக் கண்கூடாகக் கண்டிருந்தான். யாரையும் கடிந்துப் பேசிவிடத் தெரியாது அவனுக்கு. எல்லோருக்கும் நல்லவனாய் நடந்து கொண் டிருந்த அவனையா அந்தப் படுபாவி கை நீட்டித் தள்ளி விட்டான் என்பதை நினைக்க நினைக்க இசக்கியப்பனுக்கு கொந்தளிப்பாய் வந்தது.

◆◆◆◆

சாமக்கொடை நடந்து கொண்டிருந்தது. முனியசாமி வேட்டைக்குப் போகும் நேரம். மேளக்கோஷ்டிகள் தாளம் முழங்க... உச்சம் தெறிக்க ஆடிக் கொண்டிருந்தார்கள் அம்மன் சாமிகள் எல்லாம், பந்தலுக்குள்ளே. நாதஸ்வரம் மூச்செடுத்து ஊதிற்று. கண்ணைப் பறிக்கும் குழல் விளக்கு வெளிச்சத்தில் இரவு, பகலாகத் தெரிந்தது.

இசக்கியப்பனின் மாமாதான் முனியசாமி ஆடுகிறவர். வேட்டைக்குப் போகும்போது அவரின் கோலத்தைப் பார்க்கவே பிரமிப்பாக இருக்கும் எல்லோருக்கும். எல்லோரையும் மீறி நெஞ்சில் ஒரு பயம் வந்து ஒட்டிக்கொள்ளும். இடுப்பில் அங்கியைக் கட்டி, தலையில் குல்லாவை மாட்டி, கையில் மணிகள் சலசலக்கும் குத்தீட்டியும், பண்டம் பலகாரங்கள் மணமணக்கும் துணிப்பொட்டலத்துடனும் தப்படிக்குத் தகுந்தாற் போல் முன்னும் பின்னும் அடிகள் எடுத்து வைத்து அவர் வேட்டைக்குப் போகும் வேகத்தைப் பார்ப்பதற்கென்றே சுற்றுப்பட்டிச் சனங்களின் கூட்டம் நிறைந்திருக்கும் பந்தலுக்குள். ஓடையைத் தாண்டி பறைத்தெருவுக்கு வடக்கே இருக்கும் சுடுகாட்டுக்குப் பயணம் செய்வார். பந்தலிலிருந்து கேட்டால் ஓடையைத் தாண்டுகிறவரை குத்தீட்டியின் மணிகள் சத்தம் கிணிங் கிணிங்குவது கேட்கும் சாதாரணமாய். அதற்குப் பிறகுதான் எல்லாமே மவுனத்தில் உறைந்து போகும். பந்தலுக்குள் கூத்திருக்காது. கும்மாளமிருக்காது. மனிதர்களின் பேச்சுவார்த்தைகள் கூட கிணற்றுக்குள்ளிருந்து கூப்பிடுவது போலத்தான் வெளிக் கேட்கும். வேட்டைக்குப் போயிருக்கும் சாமியின் வரவு குறித்த எச்சரிக்கையாய் அவர்களின் செயல்பாடுகள்.

அரைமணி அவகாசத்தில் திரும்பி வரும் சாமியின் முகத்தைப் பார்த்தால் கோரமாயிருக்கும் எல்லோருக்கும். நெருப்புப் பந்துக்களாய் கண்களை உறுத்திக்கொண்டு, வாய்க்குள் மனித எலும்புகளை 'நறநற'வென்று கடித்துச் சுவைத்துக் கொண்டு...

மறுநாள் காலையில் சுடுகாட்டுக்குப் போய்ப் பார்த்தால் சாமி அங்கே கும்மாளமிட்டு ஆடியிருந்த தடங்கள் தெரியும். எதையும் தீர்க்கமாகப் பார்வையிட்டால் புல்லரித்துப் போகும் யாருக்கும். வேட்டைக்குப் போய்விட்டு வந்தவுடன் பலி கேட்கும் சாமி. கிடாவெட்டுக்கள் சகட்டுமேனிக்கு நடக்கும். அப்போது கேட்கும் வரங்கள் எல்லாம் குறைவில்லாமல் நிறைவேறும் என்று நம்பும் சனங்கள் இடியாய் இடித்துக் கொண்டு சாமியைக் கும்பிடுவார்கள்.

◆◆◆◆

கும்பிட்டார்கள்.

திடீரென கூட்டமெல்லாம் சரசரவெனக் கலைந்துபோய் பந்தலுக்குள் வெறுமை நிலவத் துவங்கியதும் சாமியாடிக் கொண்டிருந்த மாமாவுக்குத் திகைப்பாயிருந்தது. எல்லா சனங்களுமே ஆச்சரியத்தாலும் அதிர்ச்சியாலும் கதிகலங்கிப் போய் நின்றிருந்தது புரிந்தது. எதனால் இருக்கும் என 'முனிசாமி' குழம்பிக்கொண்டார். ஒரு சிலர் வடக்கே ஓடை நோக்கி ஓடுவது தெரிந்தது அவருக்கு.

"அய்யோ... என் தெய்வமே... எங்கள அனாதயா விட்டுட்டுப் போட்டியே... இனி என்ன செய்வோம் நாங்க" என்கிற ஒப்பாரியும் ஓலமும் கேட்கத் துவங்கியது. தூரத்திலிருந்து வந்ததால் யாருடைய குரல் என்று அறிய முடியவில்லை முனிசாமியால். மேளங்கள் சுருதி குறைந்து ஒலித்தன. அவர்களால் தாளத்தில் கவனம் செலுத்த முடியவில்லை என்பது புரிந்தது. 'முனிசாமி'க்கும் ஆட்டத்தின் மேல் அக்கறையின்றி வெறுமனே தேகத்தை மட்டும் குலுக்கிக் குலுக்கி நின்று கொண்டிருந்தார்.

பந்தலுக்குள் ஓடிவந்த வில்லுக்காரர்களில் ஒருவன் பதற்றமாய் மேளக்காரர்களிடம் சொல்லிக் கொண்டது நாராசமாய் 'முனிசாமி'யின் காதிலும் விழுந்தது:

"செம்பகப்பாண்டி சுடுகாட்டுப்பக்கம் செத்துக் கிடக்கிறானாம்"

'பகீர்' என்றாயிற்று 'முனிசாமி'க்கு. எப்படி இது நடந்தது என்பதை நினைத்து மறுகலாயிருந்தது. அவர் சுடுகாட்டில் நின்றபோதெல்லாம் செம்பகப்பாண்டியின் அணக்கம் அங்கே இல்லாதிருந்ததை மனக்கண்ணில் ஓட விட்டுப் பார்த்தார். நிச்சயமாக அவர் மயானத்திலிருந்து திரும்பி வந்தபிறகுதான் அது நடந்திருக்கிறது. யார் நடத்தியிருப்பார்கள்? சாயங்காலம் நடந்த சம்பவம் நினைவுக்கு ஓடி வந்தது. கூட்டத்தில் சுற்றும் முற்றும் இசக்கியப்பனைத் தேடினார். ஆளைக் காணவில்லை. ரொம்ப நேரமாக அவன் அந்த பந்தலில் இல்லாதிருந்ததை

யோசனைப் பண்ணிப் பார்த்துக் கொண்டார். சந்தேகம் இல்லை. அவன்தான் அந்தக் கொலையைப் பண்ணிவிட்டான். எப்படிச் செய்திருப்பான் என்று தனக்குத்தானே கற்ப னைப் பண்ணிப் பார்த்தார். வேட்டை முடிந்து அவர் திரும்பி வந்ததும், தன் சாராயக் கடைக்குப் போதை ஏற்றப் போன செம்ப கப்பாண்டியை மறைந்திருந்து இசக்கியப்பன் தாக்கியிருக்கலாம். ஊருக்குத் தெரிந்தால் தன்னுடைய சாதிக்காரர்கள் எல்லாரும் சங்கடப்பட வேண்டியிருக்குமே என்பதை நினைத்து மறுகினார் மாமா. வீடுகளில் குடியிருக்க முடியாது. மேல்சாதிக்காரர்கள் எல்லோரும் கிளர்ந்தெழுந்து வந்து தீ வைத்து விடுவார்கள். கைகளில் சிக்கிய வர்களின் கழுத்தைச் சீவி விடுவார்கள். முதலாளிமார்களின் காடுகரைகளுக்கு வேலைக்குப் போகமுடியாது. ஏழைபாளைகள் பட்டினிகிடந்து சாகவேண்டிவரும். என்ன செய்வது? இதை எப்படிச் சரிக்கட்டுவது?

அப்போதுதான் அவருக்கு அந்த யோசனை வந்தது. பந்தலுக்குள் நின்றிருந் தவர் 'தொப்'பென்று தரையில் விழுந்து புரண்டார். 'ஆ ஊ' என்ற கத்தல் வேறு. தேகத்தை எல்லாம் வேகம் வேகமாய் குலுக் கிக்கொண்டு கண்களை உறுத்திக்கொண்டு...

"சாமிக்கு மேளத்தை அடிங்கடோய்"

ஊர்க்காரன் ஒருவனின் ஆணைக்கு கட்டுப்பட்டு மறுகணமே 'கணங்கணங் கண'வென முழங்கின மேளங்கள். ஊதின நாதஸ்வரங்கள். 'முனிசாமியை' நாலைந்து பேர் சேர்ந்து தூக்கி விட, அதிகோபமாய் துள்ளித்துள்ளி ஆடினார் 'முனிசாமி'.

மக்கள் எல்லோரும் பயபக்தியுடன் வணங் கிக்கொண்டே சாமியிடம் வரங் கேட்டு நின்றனர்.

'சட்'டென்று மேளத்தை நிறுத்தினார் சாமி. "எப்பா... நா வேட்டைக்குப் போகும்போது குறுக்கால ஒரு குருமான் வந்திட்டான்... வரலாமா? அவன நாந்தாம்பா எடுத்துக்கிட்டேன்."

மீண்டும் மேளங்கள் முழங்கின. அவரின் ஆட்டம் தொடர்ந்தது. குருமான் என்று அவர் சொன்னது 'உயிரை' என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல. வேட்டைக்குப் போன சாமி க்கு மத்தியில் செம்பகப்பாண்டி போனதே தவறு என்றும், அதற்குரிய தண்டனையைத் தான் அவன் பெற்றிருக்கின்றான் என்றும் சனங்கள் பேசிக்கொண்டனர். எல்லோரும் சாமியைக் கரந்தூக்கிக் கும்பிட்டனர். ❑



ஓவியம்: சௌந்தர்

# தவறு

மூலம்: டினோ

பிரெஞ்சிலிருந்து தமிழில்: க. கலாமோகன்

டினோ புஷாற்றி (DINO BUZZATI) இத்தாலிய எழுத்தாளர் (Belluno 1906 - Milan 1972) மிலானில் சட்டப்படிப்புகளை முடித்தபின்னர் இலக்கியத்துறையில் தனது கவனத்தைத் திருப்புகின்றார். இளம்வயதிலேயே கவிதைகளை எழுதுகின்றார். இருபதுவயதில் CORRIERE della sera வின் எதியோப்பிய நிருபராகவும் பின்னர் கடற்படைத்துறையில் யுத்த நிருபராகவும் கடமையாற்றுகின்றார். இவர் ஓர் ஓவியரும் கூட. நாடகங்கள் சிறுகதைகளை நிறைய எழுதிய இவரது சிறுகதையான LE DEFUNT PAR ERREUR, 'தவறு' எனும் தலைப்பில் பிரெஞ்சு மொழிபெயர்ப்பிலிருந்து தமிழிற்கு வழங்கப்படுகிறது. தலைப்பு மொழிபெயர்ப்பாளரினுடையதே.



நீண்டகாலமாக விமெர்கற்றில் உள்ள தனது நாட்டுப்புறத்து வீட்டில் வாழும் எண்பத்தாறு வயதான பிரபல ஓவியர் லூசியோ பிறெடொன்ஸானி ஓர் காலையில் எழுந்து தனக்கு ஒவ்வொருநாளும் வருகின்ற தினப்பத்திரிகையைத் திறந்தபோது பிரமித்துப்போய்விட்டார். காரணம் மூன்றாம்பக்கத்தின் கீழ் வலதுபக்கத்திலே கண்ட பின்வரும் தலைப்பால்தான்.

இத்தாலியக் கலைஉலகம் கவலையில்

ஓவியர் பிரேடோன்ஸானி காலமாகிவிட்டார்.

தலைப்பின்கீழ் பின்வரும் குறிப்புகள் இருந்தன:

21 பெப்ரவரி, விமெர்கற், மருத்துவர்களால் குணப்படுத்தமுடியாத ஓர் குறுகியகால நோயால் ஓவியர் பிறெடொன்ஸானி இரண்டு தினங்களின் முன்னே காலமானார். தனது மரணக்கிரியைகளுக்குப் பின்னரேயே தனது மரணம் அறிவிக்கப்படவேண்டும் எனத் தனது விருப்பத்தைக் காலமானவர் வெளிப்படுத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஒரு பந்தியிலே காலமானவரின் மகிமை, பெருமை இவைகளைப் புகழ்ந்துரைக்கும் கட்டுரையொன்று கலைவிமர்சகர் ஸ்தெபானியின் பெயரில் வெளிவந்திருந்தது. இதேவேளையில் இருபது வருடங்களுக்கு முந்திய படமொன்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பிரமித்துப்போய், தனது விழிகளையும் நம்பாமல் நோயாளியைப்போல மிகவும் மனவேதனையுடன் தனது அவதியையும் மீறி புகழாரக் கட்டுரையில் விழிகளைப் போடுகின்றார். புகழாரவரிகளுக்கு மத்தியிலே மறுக்கப்படமுடியாத ராஜதந்திரத்துடன் கூடிய சில விஷவரிகளும் சேர்க்கப்பட்டிருந்தன.

மூச்சுத்திணறலில் இருந்து தப்பிய பிறெடொன்ஸானி "மதில்ட்! மதில்ட்!" எனத் தனது மனைவியை அழைக்கிறார்.

பக்கத்து அறையிலிருந்த அவரது மனைவி "என்ன நடந்துவிட்டது?" எனக் கேட்கின்றாள்.

"விரைவாக வா! மதில்ட்! விரைவாக வா!" எனக் கெஞ்சி அழைக்கின்றார்.

"ஒரு கணம் பொறுத்திரு. நான் உடைகளுக்கு அழுத்தம் போட்டுக் கொண்டிருக்கிறேன்."

"உடனடியாக வாவென்று நான் உனக்குச் சொல்கின்றேன்."

அவரது குரல் மிகவும் கலக்கமாக இருந்த தால் அயன்பொக்ஸைக் கீழே வைத்துவிட்டு மதில்ட் ஓடி வருகின்றாள்.

"பிடி! இதனை வாசி!" ஓவியர் பெருமூச்சோடு பத்திரிகையை அவளிடம் நீட்டுகின்றார்.

பத்திரிகையை அவள் பெறுகின்றாள், முகம் வெளிறுகின்றது. பெண்களுக்கேயுரிய அற்புத மான ஞாயமின்மையோடு தனது நம்பிக்கையீ னத்தை வெளிக்கொட்டுகின்றாள்.

"ஓ! எனது லூசியோ! எனது பரிதாபத்திற்கு ரிய லூசியோ! எனது புதையலே!" எனும்போது கண்ணீர் கொட்டுகின்றது.

இந்தக் காட்சி ஓவியருக்குச் சினத்தையூட்டு கின்றது.

"மதில்ட், உனக்கு என்ன விசரா? நான் உயி ரோடு இருப்பது உனக்குத் தெரியவில்லையா? இது ஓர் தவறு என்று, நினைத்துப்பார்க்கமுடி யாத தவறு என்று உனக்கு விளங்கவில் லையா?"

உடனடியாகவே மதில்ட் தனது அழுகை யை நிறுத்திவிட்டு, கணவனைப் பார்க்கின்றாள். அவரது முகம் சாந்தியடைகின்றது. சில கணங் களின் முன்னர் தன்னை விதவையாக உணர்ந் துகொண்ட அவளும் நிலைமையின் ஹாஸ்யப் போக்கால் ஓர் மகிழ்ச்சி விபத்துக்குள்ளாகி ன்றாள்.

"ஓ! எனது கடவுளே! இது எவ்வளவு முசுப் பாத்தியானது. ஓ! ஓ! எத்தகைய கதை! என் னை மன்னித்துவிடு. லூசியோ, உனக்குத் தெரி யுமா கலையுலகின் கவலையை... நீயோ இங்கு விறைத்தும் மென்சிவப்பாகியும்..." கீச்சுக் குர லில் கெக்கணம் கட்டிச் சிரித்தாள்.

"உனது நடிப்பை நிறுத்து. நடந்தது என்ன வென்று உனக்கு விளங்குகின்றதா? இது மோச மானது. மிகவும் மோசமானது. பத்திரிகைப்பணிப் பாளருக்கு நான் யாரென்பதைக் கட்டாயம் காட்டு வேன். இந்த முசுப்பாத்திக்காக அவர் நிச்சயம் நிறையக்கட்ட வேண்டிவரும்."

பிறெடொன்ஸானி விரைந்து நகருக்குச் செல் கின்றார். உடனடியாகவே பத்திரிகா அலுவலக த்தை நோக்கி விரைகின்றார். மிகவும் நாகரிக மாக பணிப்பாளர் அவரை வரவேற்கின்றார்.

"குருவானவரே! உட்காருங்கள் எனத் தயவு செய்து உங்களை நான் கேட்கின்றேன். அதில் உட்காரவேண்டாம். இது வசதியானது. இதில் உட்காருங்கள். ஒரு சிகரெட்? இந்த லைட்டர் கள் ஒருபோதுமே ஒழுங்காக வேலைசெய்வ தில்லை. இது சினத்தையூட்டுவது. இதோ! சாம் பல்தட்டு. இப்போது நீங்கள் சொல்வதை நான் கேட்பேன். எந்த நல்காற்று உங்களை இங்கே அழைத்து வந்தது?"

தனது பத்திரிகை பிரசுரித்ததையிட்டு நடிக்கி ன்றாரா? அல்லது நக்கலடிக்கின்றாரா? பிறெடொ ன்ஸானி இளைத்துப் போய்விட்டார்.

"உங்களது இன்றைய பத்திரிகையிலே... மூன்றாவது பக்கத்திலே... எனது மரணத்தை அறிவிக்கும் செய்தியொன்று...

"என்ன உங்களது மரணத்தை அறிவிக்கும் செய்தியா?"

மேசையிலே மடிக்கப்பட்டுக் கிடந்த பத்திரி கையொன்றை எடுத்துப் பணிப்பாளர் விரிக்கின் றார். பார்க்கின்றார். விளங்கிக் கொள்கின்றார் (அல்லது விளங்கிக்கொண்டதைப்போல காட்டுகி ன்றார்.) ஓர் சங்கட கணத்தை வாழ்ந்ததுபோல "ஓ!"என்கின்றார். ஓர் கணத்தின் முறிவில் தன் னை நன்கு சுதாரித்துக் கொண்டவரைப் போல இருமுகின்றார்.

"உண்மையிலேயே ஓர் சிறு தவறு நடந்து விட்டது. ஓர் மெல்லிய விபரீதம் நடந்துவிட் டது..."

பிறெடொன்ஸானி தனது பொறுமையை இழக் கின்றார்.

"விபரீதமா? நீங்கள் என்னைக் கொன்றுவிட் டீர்கள். நீங்கள் செய்தது இதுதான். இது அரக் கத்தனமானது."என்று கத்துகின்றார்.

"ஆம், ஆம்." சாந்தமாகச் சொல்கின்றார் பணிப்பாளர். "நான் என்ன சொல்லுகிறேன் எனில்... ஹூம்... ம்... ஓர் செய்தி பற்றிய பார்வை யில்... ஹூம்... ஹூம்... எங்களது நோக்கத்தைச் சற்றே கடந்துவிட்டது. இன்னொரு வகையிலே பார்த்தால் எங்களது பத்திரிகை உங்களது கலைக்குச் செய்த காணிக்கையின் உண்மை யான பெறுமானத்திற்கு மதிப்பளித்திருப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்..."

"என்ன காணிக்கை! நீங்கள் என்னை அழித்து விட்டீர்கள்".

"ஹூம்... ஓர் மெல்லிய தவறு நடந்துவிட்டது என்பதை நான்...

"அது எப்படியாம். நானோ உயிரோடு இருக் கின்றேன். நீங்களோ நான் இறந்துவிட்டேன் என எழுதியிருக்கின்றீர்கள். இதற்கு மெல்லிய தவறு என நீங்கள் பெயரிடுகின்றீர்களா? மிகவும் சாதா ரணமாகப் பைத்தியமாகுவதற்கு இதைவிட வேறெதுவும் தேவையில்லையல்லவோ? இந்தக் கட்டுரை வந்த இடத்தில் ஓர் திருத்தம் முறைப் படி போடப்படவேண்டும் என்பதை நான் வலியு றுத்துகின்றேன். இதேவேளையில் மானநஷ்டம் கேட்டு வழக்குத் தொடரும் உரிமையையும் நான் எடுத்துக்கொள்கின்றேன்."

"மானநஷ்டமா? வேண்டாம் எனது திருவா

ளரே!"

"குருவானவர்" என்ற நிலையில் இருந்து உடனடியாகவே ஓர் சாதாரணர் நிலைக்கு அவர் போய்விட்டார்.

"உங்களை வந்து சேர்ந்திருக்கும் அசாதாரணமான அதிர்ஷ்டத்தைப்பற்றி ஒரு தடவை யோசித்துப் பார்க்க முடியுமா? எந்த ஓவியரும் இப்படியொரு சந்தர்ப்பத்தைக் கண்டால் துள்ளிக் குதித்துவிடுவார்..."

"என்ன! அதிர்ஷ்டமா?"

"ஆம், அதிர்ஷ்டம்! எப்படி! ஓர் கலைஞன் இறக்கும்போது அவனது படைப்புகளின் விலை குறிப்பிடத்தக்க விதத்தில் உயர்ந்துவிடுகின்றது. நீங்கள் அதைத்தேடவில்லை. நிச்சயமாக அது எங்களுக்குத் தெரியும். ஆனால், விலைமதிக்க முடியாத சேவையொன்றை நாங்கள் உங்களுக்குச் செய்துள்ளோம் என்பதை அறுதியிட்டுச் சொல்லமுடியும்."

"இதற்காக நான் இறந்துபோக வேண்டுமா? காணாமல் போகவேண்டுமா? ஆவியாகிப் போய்விடுவதா?"

நிச்சயமாக. இந்த உணர்வுமயமான சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்தவேண்டுமா? இதனை நீங்கள் இழக்கத் தயாரில்லையா? கொஞ்சம் சிந்தியுங்கள் மரணத்திற்குப் பின்னான ஓர் ஓவியக் கண்காட்சி, இதனை அட்டகாசமாகச் செய்தல் எங்களது பொறுப்பு. எனது குருவானவரே! பல லட்சங்களை எமக்கு அள்ளித் தரும் ஓர் விஷயம் இது."

"நீங்கள் இவைகளைச் செய்யும்போது நான் என்னவாகுவேன்? வெளியுலகத்திலிருந்து நான் காணாமல் போகவேண்டும் அல்லவா?"

"சொல்லுங்கள், அசந்தர்ப்பவசத்தால் சகோதரர் யாரும் உங்களுக்கு உள்ளனரா?"

"ஆம். இது எதற்கு? அவர் தென்னாபிரிக்காவில் வாழ்கின்றார்."

"அற்புதம். அவர் உங்களை ஒத்திருக்கின்றாரா?"

"ஆம், கிட்டத்தட்ட. ஆனால் அவருக்குத் தாடியுள்ளது."

"அற்புதம். உங்களது தாடியையும் வளரவிடுங்கள். உங்களது சகோதரர் நீங்களே எனச் சொல்லுங்கள். தபால் ஆபீஸிற்கு ஒரு கடிதம் அனுப்புவதைப்போல எல்லாம் நடக்கும். என்மீது நம்பிக்கை வையுங்கள்.விஷயங்கள் எந்தவழியில் போகின்றனவோ அந்த வழியில் போக விடவேண்டும். என்னை விளங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வதுபோல ஒரு திருத்தம் போட்டால் அதனால் என்ன பயன் கிடைக்கப் போகின்றது. நான் இப்படித் தனிப்பட்டரீதியாகச் சொல்வதற்கு என்னை நீங்கள் மன்னிக்கவும். திருத்தம் போட்டால் கேலிக்குரியவராகவே பலர் முன்னேயும் நீங்கள் தோற்றம் அளிப்பீர்கள். மறுபிறப்புகள் ஒருபோதுமே இரக்கத்துக்குரியன வல்ல என்பதை மறுத்துச் சொல்வதில் எந்த அர்த்தமுமே இல்லை. கலையுலகில் விஷயங்கள் எப்படி நடக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும்தானே. உங்கள்மீதான பல புகழாரங்களின் பின்னர் உங்களது மறுபிறப்பை அறிவித்தால் அது உங்கள் மீதான மோசமான படம் ஒன்றையே காட்டும், அத்தோடு உங்கள்மீது பலருக்கு சந்தேகத்தையும் ஏற்படுத்தும்."

அவருக்கு இல்லை என்று சொல்லத் தெரியாது போய்விட்டது. தனது நாட்டுப்புறத்து வீட்டிற்குச் சென்று ஒரு அறைக்குள் பதுங்கிக் கொள்கின்றார். தனது தாடியை வளரவிடுகின்றார். அவரது மனைவியோ கவலையில் மூழ்குகின்றாள். நண்பர்கள் கவலை தெரிவிக்க அவளிடம் வருகின்றனர். குறிப்பாக ஒஸ்கார் பிறடெலி, அவர்கூட ஓர் ஓவியர், எப்போதுமே பிறெடொன்ஸானியின் நிழலாக இருந்தவர். பின்னர் ஓவிய ரசிகர்கள் வரத் தொடங்குகின்றனர். அதன்பின் வணிகர்கள், ஓவியம் சேகரிப்போர், வியாபாரத்துக்கான நல்ல வாய்ப்புக் கிடைத்துவிட்டது என்பதை முகர்ந்து கொண்டோர் முன்னர் மிகவும் சிரமத்துடன் 40ஆயிரம் 50ஆயிரத்துக்கு விற்கப்பட்ட ஓவியங்கள் இப்போதோ பிரச்சனையில்லாமல் 200ஆயிரத்தைத் தொட்டன. இதே வேளையில் பிறெடொன்ஸானி தனது பதுங்கு குழியில் இருந்து புதிய படங்களைக்கீறி அவைக்குப் பழைய திகதிகளைப் போட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு மாதத்தின் பின்னர் அவரது தாடி உண்மையிலேயே நீண்டு வளர்ந்துவிட்டது.

பின்னர் தென்னாபிரிக்காவில் உள்ள தனது சகோதரர் வந்துவிட்டார் என்று மற்றவர்களை நம்பவைக்க தனது பதுங்குகுழியை விட்டு வெளியேறுகின்றார். கண்ணாடி போட்டிருந்தார். தனது உச்சரிப்பையும் வெய்யில்தேச உச்சரிப்புப்போல மாற்றிக்கொண்டார். "அவரைப்போலவே, இவரும் இருக்கின்றார்" எனப்பலரும் வியந்து கொண்டனர்.

தனது மறைவு வாழ்க்கையின் பின்னர், ஓர் ஆவல் உந்தித்தள்ளியதால் மேற்கொண்ட உலாவொன்றின்போது மயானத்தை நோக்கிச் செல்கின்றார். தனது குடும்பத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலவறைக்குள், ஓர் பளிங்குக் கற்பலகையில், சிற்பி ஒருவர் தனது பெயரையும் தான் பிறந்த இறந்த திகதிகளையும் செதுக்கிக் கொண்டிருப்பதைக் காண்கிறார்.

காலமானவரின் சகோதரன் எனத் தன்னைச்

சிற்பிக்கு அறிமுகம் செய்துகொள்கின்றார். பின்னர் வெண்கலக்கதவைத் திறந்து - தனது பெற்றோர்களினது சவப்பெட்டிகள் ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோவிற் கீழறைக்குச் செல்கின்றார் ஆ! எவ்வளவு பெரிய குடும்பம்! ஒரேயொரு பெட்டி மட்டும் புத்தம் புதியதாகவும் அழகியதாகவும் இருந்தது. அதன் மீதுள்ள பித்தளைத்தகட்டில் "லூசியோ பிறெடொன்ஸானி" என எழுதப்பட்டிருப்பதை வாசிக்கின்றார். பெட்டியின் மூடி ஆணிகளால் இறுக்கப்பட்டிருந்தது. இனம்புரியாத ஒரு பயத்துடன் பெட்டியின் மூலையில் தட்டிப்பார்க்கின்றார். சந்தோஷம் தருவதுபோல சவப்பெட்டியில் இருந்து வெறுமையான சத்தம் ஒன்று வந்தது.

ஆச்சரியம், ஆனால் மெல்லமெல்லமாக விமர்சகர் ஒஸ்கார் பிறடெலியின் வரவுகள் அதிகரிக்கத் தொடங்கின. மதில்ட் மகிழ்ச்சி கொண்டவளாகவும், புத்திளமை கொண்டவளாகவும் தோன்றினாள். சந்தோஷமும் ரசனையும் கலந்த உணர்வோடு பிறெடொன்ஸானி தனது உருமாற்றத்தை அவதானித்தார். ஓர் மாலை நேரத்தில், பல ஆண்டுகளாக வராத விருப்பம் தனக்கு வந்ததைப்போலவும், தான் அவளை விரும்புவதாகவும் ஓர் விழிப்பு அவருக்குள் வந்தது. தனது விதவையை அவர் விரும்பினார்.

ஆனால், பிறடெலியின் ஒழுங்கான வரவுகள் நேரஒழுங்குகளையும் கடக்காதிருந்தன எனச் சொல்லமுடியுமா? இதனை பிறெடொன்ஸானி மதில்ட்டிற்குச் சுட்டிக்காட்டியபோது அவள் இப்படிச் சீற்றமடைந்து கொண்டாள்: "உனக்கு என்ன நடந்துவிட்டது? ஒஸ்கார் பாவம்! உனது உண்மையான ஒரேயொரு நண்பன். உனக்காக இரங்கும் ஒரேயொரு நண்பன். எனது தனிமையை நினைத்து ஆறுதல் சொல்ல வந்துபோகும் அவனை நீ சந்தேகிக்கின்றாய். உனக்கு வெட்கமாக இல்லையா?"

OOOO

இதேவேளையில் மரணத்துக்குப் பிந்திய ஓவியக்கண்காட்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டு அது பெரிய வெற்றியைக் காண்கின்றது. முழுச்செலவையும் தள்ளி லாபமாகமட்டும் ஐந்தரை மில்லியன் கிடைக்கின்றது. பின்னர் குறிப்பிடத்தக்க ஒரு வேகத்தில் பிறெடொன்ஸானியாவும் அவரது படைப்புகளும் மறையத் தொடங்குகின்றன. கலைச்சஞ்சிகைகளில் அவரைப்பற்றிய சேதிகளுக்கு சிறிய இடங்களே கிடைக்கின்றன. விரைவில், அவர் துண்டாகவே மறைந்துபோய்விடுகின்றார்.

கவலை தரும் ஒருவித பயத்தோடு, லூசியா பிறெடொன்ஸானி இல்லாமலேயே உலகம் - முன்புபோல சுற்றிக்கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார். சூரியன் முன்புபோல உதித்தும் மறைந்துகொண்டுமிருந்தது. பணிப்பெண்கள் முன்புபோலவே காலையில் கம்பளங்களைத் தட்டித் துடைத்துக்கொண்டிருந்தனர். ரயில்கள் புகையால் கறுத்துக்கொண்டிருந்தன. சனங்கள் சாப்பிட்டனர். சந்தோஷம் செய்தனர். பூங்காவின் இரும்புவேலிக்கு முன்னால் நின்றபடி பையன்களும் பெட்டைகளும் இருட்டில் முத்தமிட்டுக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் நாட்டுப்புற உலாவொன்றிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போது, முகப்பறையில் தனது இனிய நண்பர் ஒஸ்கார் பிறடெலியின் மழைக்கோட் தூக்கப்பட்டுக் கிடப்பதை அடையாளம் கண்டுகொள்கின்றார். வீடு அமைதியாகவும், ஓர் விநோதமான அந்தரங்கத்திலும், அழைப்புக்கரம் நீட்டுவதைப் போலவும் இருந்தது. அத்தோடு கீழ்க்குரலில் பேசும் சத்தமும், முணுமுணுப்புகளும், மிருதுவான பெருமூச்சுகளும் கேட்டன.

அவரது கால்கள் உடனடியாகவே வாசலை நோக்கிச் சென்றன. பின்னர் மிகவும் மெதுவாக வெளியேறி மயானத்தை நோக்கி நடக்கின்றார். அது ஓர் மழைக்கான இனிய மாலையாக இருந்தது.

தனது குடும்பத்துக்குரிய மயானகோவிலுக்கு வந்தவுடன், தன்னைச் சுற்றி ஒருதடவை பார்க்கின்றார். வாழும் உயிர்கள் என்று எதுவுமில்லை. எனவே வெண்கலக்கதவைத் திறக்கின்றார்.

இரவு வந்ததும் அவசரப்படாமல் மிகவும் மெதுவாக ஓர் சின்னக் கத்தியின் உதவியுடன் புத்தம்புதிய சவப்பெட்டியை மூடியிருந்த ஆணிகளைக் கழட்டுகின்றார். அவரது சவப்பெட்டி, அதாவது லூசியோ பிறெடொன்ஸானியின் சவப்பெட்டி.

மிகவும் அமைதியாக பெட்டியைத் திறக்கின்றார். இறந்தவர்களுக்கான அமர நித்திரைக்குத் தோதாக எப்படிக் கிடந்தால் நல்லது என யோசித்து முதுகை நீட்டி அதற்குள் கிடந்து பார்க்கின்றார். தான் நினைத்ததைக் காட்டிலும், கிடந்த விதம் தோதானது என அவருக்குப் படுகின்றது.

எந்தப் பதட்டமும் இல்லாமல் சவப்பெட்டியின் மூடியைத் தனக்கு மேல்கொண்டு வருகின்றார். அது மூடப்படுவதற்கு ஒரு சிறுவெளி மட்டுமே தெரியும்போது - யாரும் தன்னை அழைக்கின்றார்களா என்பதை அறிய சில கணங்கள் தனது காதுகளைக் கூர்மையாக்குகின்றார். ஆனால் எவருமே அவரை அழைக்கவில்லை.

எனவே மூடிப்பெட்டியை முழுமையாக விழவிடுகின்றார். ■

# ஆசைதீர்க்க ரசிக்க

உதயசேனன்




'உன் கோத்தயோட போய்ப்படு கொக்கா வோட போய்ப்படு'

'உன் கோத்த ஆடின ஆட்டம் எங்களுக்குத் தெரியாதா'

'யாருக்குப் பிறந்தனியோ?'

(இவன் படுக்கிறத்துக்கு அலையிற மாதிரி இன்னும் கன கத)

மூதேசி என்ர அம்மாவத் திட்ட இவள் ஆர்? நான் வாழ்ந்த இந்த 26 வருஷ காலத்தில ஒரு பொம்பிள கக்கூசு வார்த்தைகள வாயால கக்கிறத முதல் தடவயா கேட்டன். அம்மா தின்னப்போறன் எண்டாலே பேசுவா சாப்பிடப் போறன் எண்டு சொல்லு என உறுக்குவா.

(நான் பாருங்கோ இந்தப் பொடியனுக்குத் தூரத்துச் சொந்தம். அங்க ஊரில இருக்கேக்க வீட்டவிட்டு வெளியில இறங்கினா பள்ளிக்கூடம் அல்லது ரியூசனுக்காத்தான் இருக்கும் அதுவும் இல்லாட்டி கடைக்காயிருக்கும். தப்பித்தவறி எங்காவது மேயப்போனாலும் கணக்கா கட்டுக்கு வந்துபோடுவான்.

பிரான்சுக்கு வந்த புதிசில இவன் முதல் செய்தது கிடந்த தமிழ் படமெல்லாம் பாத்து முடிச்சதுதான். இந்தத் தமிழ் சினிமா ஒரு கெட்ட சாமான். பாக்கேக்க ஒருத்தரும் இப்பிடி

யெல்லாம் நடக்குமெண்டு நம்பியெண்டு பாக்கி றேல்லத்தான் எண்டாலும் இந்தக் குதியாட்டங்கள் மண்டைய விட்டு விலகுறேல்ல. கனபேற்ற கலியாணவீட்டுக் கொப்பிகளில பாத்திருக்கிறன் ஆளையாள் தீத்திறதும் கனக்க ஏன் டுயட் மாதிரி ஆளையாள் மரத்தச் சுத்தி ஓடிப் படமெடுத்ததும் பாத்திருக்கிறன். இப்பிடி எல்லாம் அவையள் படத்த வாழோணும் எண்டு கிடந்து தவிக்கிறது சாதாரணமாப் போச்சு.

இவனுக்கு நடந்த விசயமும் இதுதான் இரத்தத் துடிப்போட தவிப்பும் கூடிப்போட்டுது. விசயம் இதுதான் இவற்ற காதல் கிழிஞ்சு போச்சு. பொட்டயின்ற தாய்க்காறி ரெலிபோன் எடுத்து கிழிகிழி எண்டு கிழிச்சது இதுக்குத்தான். அவவின்ர பெட்டயோட அவள் பெரியபிள்ள ஆக முதலிலிருந்தே இவருக்கு காதல் தெரியுமோ ஆருக்கும்?

கிட்டடியிலான் சாமத்தியவீடு கொண்டாடி எல்லாம் நல்லபடியாகத்தான் போய்க் கொண்டிருந்தது. சாடைமாடையான சந்தேகத்தில அத்தக்காறி இவளையும் அவனையும் வச்சு பகிடி பண்ணேக்க வெக்கப்பட்டபடி விசயத்த அரைகுறையா விட்டுப்போட்டாள். அத்தக்காறி இந்த விசயங்களில வலு கெட்டிக்காறி. சத்தியம் கித்தியம் எல்லாம் செய்து ஒரு குஞ்சுக்கும் சொல்லமாட்டன் எண்டு மெல்ல விசயத்த கறந்து போட்டா. பிறகு என்ன எல்லாம் பீச்சிப்போன கதைதான்.

இது நடந்து கனநாள் இருக்காது இன்னுமொருக்கா இவர் கையோட பிடிபட்டுப் போட்டேர். அது அவற்ற பிழை. நேரம் போட்டுது போப்போறன் போப்போறன் எண்டு நிண்டவள நேரம் கிடக்கு நேரம் கிடக்கு எண்டு நிப்பாட்டி வைச்சிருந்தது இவற்ற பிழை. சந்தியில கதைச்செண்டு நிக்கேக்கை தமயன் வந்திட்டான். இவளுக்கு பள்ளிக்கூடம் விட்டு 45 நிமிசத்துக்குப் பிறகுதான் அவனுக்கு விடுகிறது.)

ஒருக்கா நினைச்சன் ஓடிப்போய்க் காலில விழுவமோ எண்டு. 'அய்யோ ராசா வீட்ட போய்க் காட்டிக் குடுத்திடாத'யெண்டு கெஞ்சுவமோ எண்டு நினைச்சன். கெட்டகாலத்துக்கு பேசாம விட்டிட்டன்.

(வீட்டுக்குள்ள கால் வைக்க முதலே அரிச்சனையத் துவங்கிப் போட்டான் தமையன். பிறகு எல்லாருமாச் சேந்து பெடிச்சியை துவசம் செய்து போட்டுதுகள்.

போனமுறைதான் கிடந்த இரும்புக் கம்பியள் பலகைகள் எல்லாத்தாலையும் பொடிச்சிக்கு விளாசின விளாசல்ல பிரஸ்ஸர் கூடி இந்தா அந்தா எண்டு தாய்க்காறி ஆஸ்பத்திரியில கிடந்தவ. யோசிச்சதால வருத்தம் எண்டு டாக்டர் சொல்லிப் போட்டேராம். இவள் பொட்டயால அவள் யோசிக்கிறாள் எண்டு வெளியால கத. மோனை கொம்மாவ யோசிக்க விடாதையெண்டு தேப்பன் ஒரே வெருட்டல்.)

'என்னடி உன்ர அம்மாவுக்கு ஏதும் நடந்தா? பிரச்சினை வேண்டாம் பிரிஞ்சு போவம்.' எண்டு சொல்லிப் பார்த்தன்.

'அவ செத்தா அது விதி. நீ என்ன விட்டுப் போட்டயெண்டா நான் தற்கொலை செய்து போடுவன்' எண்டு அவள் ரெலிபோனில கத்தின பிறகு எனக்கு மனம் வருமோ?

காதல் எண்டு இறங்க முதல் நானும் கனதடவை யோசிச்சனான். ஒரே பெட்ட ஊரிலையே எங்கள விட காசுக்காறர் - இங்கயும் நல்ல நிலயிலான் இருக்கினம் - சொந்த வீடு கார் உட்பட. அவளில நான் ஒரு கண்போட இவைகளும் காரணங்கள். இவளை நான் கட்டினா எனக்கும் பெருமை என் வீட்டுக்காரருக்கும் பெருமை. இப்படி காரணங்களை மேலும் விரிக்கலாம். ஆனாலும் எனக்கு உண்மையிலேயே காதலும் இருந்தது.

(மேற்குறிப்பிட்ட காரணங்களால்தான் தங்கட பிள்ளைய இவன் மடக்கப் பாக்கிறான் எண்டு அவையள் நினைக்கினம். ஆள் எல்லாம் வெண்டிருப்பான். ஆனா பொட்டைக்கு இப்பான் வயசு 17. இன்னும் ஒரு வருசம் கடக்கேலாமப் போட்டுது. மூத்தவனுக்கே வயசு 21. அவையள் கற்பனையே செய்திருக்காயினம் தங்களுக்கு இப்பிடி வேகமா ஒரு பிரச்சினை வரும் எண்டு)

விசயம் கேள்விப்பட்டு சீவரெத்தினத்தார் மினக்கெட்டு ரெலிபோன் எடுத்து கதகதயாச் சொன்னேர். அவள் அப்பிடிஇப்பிடி எண்டு. "அந்தக்காலத்தில உனக்குத் தெரியாதடா தம்பி இவளின்ர ஆட்டம் அதுக்குள்ள உன்ர தாயப் பத்தி பேச வந்திட்டாள்."

"ஒண்டுக்கும் யோசிக்காத எல்லாரும் வலிய வருவினம். விசயத்த பரப்பிப்போடு, லாச்சப்பலில நியூஸ் வெளிக்கிட்டிட்டுதெண்டா பிறகு யாருக்கவ கட்டிக் குடுக்கிறது.

(சீவரத்தினம் வலு கேவலமான ஆள். இண்டைக்கும் பொடிச்சிகளின்ர குண்டிகளப் பார்த்துக் கொண்டு திரியிற பேர்வழி. இவற்ற பொட்ட சொந்த மாமன காதலிச்சுக் கலியாணம் கட்டினது கொஞ்ச நாள் ஒரு பெரிய கத. கதயோட கதயா இவற்ற விலாசத்தையும் சேர்த்துத் தான் கதைச்சவன்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் தனித்தனியா பழிவாங்க பழி கிடக்கிறான் மனுசன். அவற்ற கரிசனை விளங்காத அளவுக்கு இவன் பொடியனும் அவ்வளவு விசரனில்ல.)

எல்லாற்ற கரிசனையும் எனக்கு விளங்கும். நான் ஆஸ்பத்திரியில கிடக்கேக்க இவரோ அல்லது பிராக்கட்டுக்க கதைக்கிறவரோ கூட வரேல்ல என்ர வேதனை எனக்குத்தான் தெரியும். ரெண்டு மூண்டு நாளா சரியாச் சாப்பிடாமக் கிடந்ததாலான் நான் ஆஸ்பத்திரி போகவேண்டி வந்தது. ஒண்டும் தின்னப் பிடிக்கேல்ல. தொண்டைக்குள்ள கட்டி கிடந்தமாதிரி வேதனை. போதாக்குறைக்கு சனங்களின்ர நாக்குகளும் எனக்காகக் காத்துக் கிடந்த மாதிரி இருந்ததால நான் வீட்டுப்பக்கமும் போகேல்ல.

(இவர் சமறிக்கிருந்தது சித்தப்பற்ற குடும்பத்தோட)

களைப்புக் கூடி நடக்கிறது நடக்கட்டும் வீட்டை போவம் எண்டு வீட்டுக்குக்கிட்ட வரேக்க மகேசன் (பொட்டயின் தமையன்) சிவபாதத்தார் (அவளின்ட தகப்பன்) சீவரத்தினத்தார் மூண்டு பேரும் கதவத்திறந்தெண்டு இறங்கி வருகினம்.

வயிறு ஒரு கலங்கு கலங்கியது - பசியும் களைப்பும் - பயமும் தலைக்குள் புரக்கேறி ஒரு சுற்றுச் சுற்றியது - விழுந்திட்டன். விழுந்தனான் நல்ல சாட்டாப் பட்டதால எழும்பேல்ல. பொம்பியர்சுக்கு அடிச்சு ஆஸ்பத்திரியில கொண்டு போய்ப் போட்டிட்டீனம். 'பொடியன் மயங்கி விழுந்திட்டான்' எண்ட கதை கிளம்பட்டுமன். இப்பிடியாவது என்ர கவலை பரவட்டுமன் எண்டது என்ர நினைப்பு - நடந்து தனிமையைச் சுவாசித்து சில சனியன்களுடன் சமறிக்கு வந்து குந்தினான்.

## II

யாராலயும் துரத்தப்பட்டு வந்து சமறிக்கிருந்தா வாழ்க்கை குடுத்த மாதிரி நினைக்கிறான்கள் இவங்கள். அதுவும் பொட்டப் பிரச்சினையில வெளிக்கிட்டு வந்தவனுக்கு போக்கிடம் இருக்காது எண்ட தெம்பு.

சமைச்சுப்போடெண்டு புறா அரிசி வாங்கியந்திட்டான் புண்ணாக்கு. ஏறமுடியாது. வேற இடம் ஒண்டு தேடி வைச்சிட்டுத்தான் அதைச் செய்யோணும். அதுவரைக்கும் 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடிக்கொண்டு சாப்பிடவேண்டியதுதான்.

எல்லாம் பிழைச்சுப் போய் இப்ப கிடந்து தவிக்கிறன். ஐயோ இவங்களோட நான் படுற பாடு. ஒரு விசரன் கக்கூசுக்கு போனா போனதுதான். வெளியில வரான். சிங்கில கைய நனைச்சு முகத்தத் துடைச்சுப் போட்டு பொக்கற்றுகளுக்கையும் தேடி பழய சுயிங்கத்த எடுத்து வாயில போட்டெண்டு வேலைக்குப் போகவேண்டிக்கிடக்கு.

இதுக்குள்ள நான் கனவில கத்திறன் எண்டு ஒரே கிண்டல். ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமா விடியக் காத்தால காலாட்டிக்கொண்டு சரிஞ்சு கிடந்தனான். நித்திரையாய்ப் போட்டன். நல்ல சிரிப்பு - கிக்கிக்கீ எண்டு நல்ல சிரிப்பு. பக்கத்தில கிடந்த மற்ற விசரன் எழுப்புவமெண்டில்ல வடிவா பாத்தெண்டு கிடந்திருக்கிறான். திடுக்கிட்டு முழிச்சுப்பார்த்தன் ஒரே வெக்கமாப் போச்சு. அவங்கட கிண்டலுக்குப் பேந்து அளவு கணக்கில்ல.

இதப்போலான் ஒருக்கா RER இல வேலை முடிஞ்சு சரியான களைப்பில வந்தனான் மெல்ல அரண்டிட்டன்.வேலை முடிஞ்சு போகமுதல் சுவரையெல்லாம் ஏறிக் கழுவிப்போட்டுப் போ எண்டிட்டாங்கள். சரியான நித்திரை வெறியில நல்ல சிரிப்பு. முழிச்சுப் பார்த்தா - ரெயின் - முன்னாலை ஒரு அடையான் திடுக்கிட்டுப்போய் இருக்கிறான்.

என்ர அம்மாவும் இப்பிடித்தான் ஆனா அவ கொஞ்சம் வேற மாதிரி. 'ஆ ஊ' எண்டு அடித்தொண்டயில இருந்து கொஞ்சம் அவலக் குரலா வரும் எணை எணை எழும்பணை எண்டா 'ஆ' எண்டு திடுக்கிட்டுப்போட்டு பேசாம கிடந்திடுவா. 'என்னணை ராத்திரி கனவு கண்டனி' எண்டு ஒரு நாளும் கேட்டதில்ல ஊரில பலபேர் பல மாதிரி கத்திறத பாத்திருக்கிறன். இதில விசயமிருக்கு. உள்ளுக்க ஒரு வில்லங்கமான மர்மம் கிடக்கு. ஏன் தெரியுமோ? இப்ப நான் சிரிக்கிறேல்ல அனுங்கிறனான். எவள நெச்சும் அழுத படி படுக்கிறேல்ல. எண்டாலும் 'ம் ம்' எண்டு அனுக்கம்.

(முந்தி மாதிரியில்லாம இப்ப கிண்டலுக்குள்ளால இவனை அவங்கள் போட்டுத் திட்டிறது சாதாரணமாய்ப் போச்சு. ஆள் ஒரு மாதிரி கேஸ் எண்ட முடிவுக்கு வந்திட்டாங்கள். இவனும் வெளிப்படயா கதைப்பம் எண்டில்ல எல்லாத்தையும் மூடிமறைக்க வெளிக்கிடுறது.)

'சொந்த மச்சாள் தான்டாப்பா ஆனால் உள்ளுக்குள்ளால கன பிரச்சனையள்' - இவங்களுக்கு என்னெண்டுதான் விளங்கப்படுத்திறது? வெளியில சொல்லக்கூடிய நிலமையிலா நானிருக்கிறன்?

என்ர காதலிலும் சந்தேகங்கள் யாருக்கும் தெரியாது அதன் சுவைகள்.

(இவற்றை வெறும் பம்மாத்துக் காதலெண்டு அவங்கள் நினைச்சா இவருக்கென்ன? தன் மானப் பிரச்சினையாம்? தன்னோட மட்டும் பழசுகள கதைக்கிறான். வெளியில கொட்டியிருந்தா இந்த மாதிரி அனுங்கவேண்டி இருக்காது. இவர் என்னத்தச் சொன்னாலும் கவல அரிக்கத் தொடங்கிட்டுது ஆளை.)

(எனக்கு சில விசயங்கள ஆள் சொல்லி யிருக்கு)

## III

தண்ணி தாடியெண்டா பேணியை விழுங்கிறது போல் வாய் முழுக்க உறிஞ்சி எடுத்து பிறகு அதையே திருப்பி கொப்பளிச்சு எடுத்துத் தருவாள். சாப்பாட்டில துப்பிப் போட்டுத்தான் சாப்பிடத் தருவாள். 'வாயில கொஞ்சிறியள் என்ன நினைப்பெண்டு பார்த்தனான்.' என்று விளக்கம் வேறு வரும்.

யாருமற்ற பொழுதுகளில் அவளோடு வாழ்ந்திருக்கிறேன். குறைந்தது மாதமொரு நாளாவது. தகவல் கிடைத்ததும் சந்தியில ஒழிச்சு நிண்டு வடிவாப் பாத்தபடி நிப்பன்.

'மூத்தவர் போறார், இரண்டாமவர், தேப்பன், தாய், இனி மச்சாள்தான், பிறகென்ன ஒரு முழு நாள் எனக்குத்தான்' என்றபடி வீட்டுக்குள் ஓடிப் போய்ச் சேருவேன்.

உப்புப்புளி எடுப்பதில் இருந்து சமையல் முடிந்து ஆளையாள் தீத்துவது வரை கொண்டாட்டம் தான். இந்தப் படங்களில வாறத எல்லாம் அப்படியே வாழ்ந்து - அதற்குப் பெயர் தான் வாழ்க்கை.

ஒரு நாள் அல்லோலகல்லோலமாக சாப்பிட்டுக் கொண்டிருக்கேக்க பாவி மனுசன் வந்திட்டான். கதவு திறக்கிற சத்தம் தொண்டைக்க தண்ணிய வறட்டி எடுத்துப்போட்டுது. பக்கத்தில மாமின்ரை சாறிதான் கிடந்தது. ஜன்னல்ல கட்டிக்கொண்டு இறங்குவம் எண்டு யோசிச்சு முடிச்சுப் போடுறதுக்குள்ள கதவத் திறந்து உள்ள வந்துட்டான் பாவி மாமன். அந்தரத்தில என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல. கட்டிலுக்குக் கீழ அப்பிடியே கோப்பையோட பதுங்கிட்டன். தற்சமயம் குனிஞ்சு பார்த்தாலும் எண்டு பெற்சீற்றை இழுத்து மறைச்சன். உள்ள ஒரே இருட்டு மயம். எனக்கு மரணப்பசி வேற. முட்டையைக் கடிச்சு விழுங்கினேன். மகளோட கதைக்கிறது கேட்டது. வந்த கழுத தின்னுவம் எண்டில்ல களைப்பாக் கிடக்கெண்டு போட்டு போய் கட்டிலுல விழுந்ததுதான். 5 நிமிசத்துக்குள்ள கொறட்டைச் சத்தம் வீட்டைத் தூக்கித் தூக்கி போட்டது. சப்பாத்தக் கழட்டி கையில எடுத்தெண்டு மெதுவா பெருவிரலால நடந்து ஆள விட்டால் காணுமெண்டு வந்து சேந்திட்டன்.

முந்தியுமொருக்கா மாட்டப் பாத்தனான். மச்சாளோட சொந்தம் கொண்டாடிப் போட்டு வரேக்க வந்திட்டான் பாவி. மம்மல் இருட்டு. நல்ல காலம் எதிர்பார்த்தெண்டு வந்தபடியா நான் முதல்ல கண்டுபோட்டன். ஒழிக்க - திரும்ப இடமில்ல பக்கத்தால நடந்து போனாலும் தெரிய வரும். ஒரு வான் கார் இல்லாத வெறிச்ச ரோட் அது. என்ன செய்யிறதெண்டு தெரியாம மெதுவாக் குனிஞ்சு நாலு காலால நடந்து வந்திட்டன். நாயெண்டு நினைச்சிருப்பேர்.

(சக்தி கடையோ குமார் கடையோ வாற ஒவ்வொரு படமும் தவறாம எடுத்து எல்லோரும் பாக்கிறபடியா இந்த காதல் லீலைகளை சொல்லிக்கொண்டு வீணா மினக்கெடத் தேவையில்ல. இந்தப்பினாத்தல்கள் இந்தக்காலத்துப் பெடி பெட்டையள் எல்லாரும் செய்யுறதுதான். ஆனாலும் இவன் ஆள் சூரன். பொட்டயின்ர சித்தப்பர் தகப்பனுக்கு ஊசி குடுத்து வண்டில் விடப்பாத்தவர். ஆளக் கொண்டே பொலிசிட்ட மாட்டிறபிளான் அவையளுக்கு கதைச்சதெல்லாம்கூட கசற் பண்ணி வைச்சிருக்கிறான் இவன்)

என்னைப்பற்றி அவைக்குச் சரியாத் தெரியாது. எடுத்து நல்ல கிழி. உங்கட பொட்ட எனக்கனுப்பின லெட்டருகள் கிடக்கு சேட்டுகள் கிடக்கு வேணுமா? இதயெல்லாம் விடுங்க உங்கட பொட்டயின்ர காதல் மொழியக் கொஞ்சம் கேளுங்க எண்டுபோட்டு ஏற்கனவே சரியான இடத்தில செற் பண்ணி வைச்சிருந்த வாக்மேனை டெலிபோனுக்குப் பக்கத்தில பிடிச்சன். 'ஐயோ அத்தான் சீ விடுங்கோ' மாமாவுக்கு காது வெடிச்சிருக்கும் எண்டு நினைக்கிறன். டெலிபோன பொத்தெண்டு வச்சவர்தான். இனி மேலும் பொலிஸ்பக்கம் நினைச்சுப்பாக்க மாட்டேர் எண்டு எனக்குத் தெரியும்.

நான் விசரன். அப்பவே மேரியில பதிஞ்சிருக்கோணும். வயசு வரும்வரையும் வச்சிருந்து போட்டு இந்தா உன்ர சரக்க கொண்டு போ எண்டு அவங்களே கூப்பிட்டு தந்துவிட்டிருப்பாங்கள். நான் விட்ட பிழை என்ன செய்யிறது?

(கசற் விசயம் இவர் காவுக்க காதல் செய்யேக்க சாதிச்சது. ஆளுக்கு வடிவாத் தெரியும் பொட்டைக்கு வயசு குறைய இண்டைக்கில்லாட்டியும் ஒரு நாளைக்கு பிரச்சினை வருமெண்டு)

காவுக்கை லைற் இல்ல மெழுகுவத்தியக் கொழுத்தி வச்சுப்போட்டுத்தான் இருக்கிறனாங்கள். யாரும் வாற சத்தம் மாதிரிக் கேட்டா அதையும் அணைச்சுப்போட்டு பெட்சீட்டால் இறுக்கிப் போத்துக்கொண்டு படுத்துக்கிடப்பம். பிறகென்ன அன்பொழுகக் கதைச்சதெல்லாம் கைவசம் கிடக்கு.

## IV

(அவனால இப்ப அவையள் கஸ்டப்படுகினம் போல கிடக்கு. ஒரு நல்லது கெட்டதில கலந்து கொள்ளுறேல்ல. கிட்டடியில ஜேர்மனியில நட

ந்த ஒரு கலியாண வீட்டில அவையபா நல்லா நொந்து போட்டினம். 'இவன் ஏன் இங்க வந்த வன்?' எண்டு தகப்பன்காரன் ஏறிப் பாஞ்சி ருக்கிறார்)

'அவனும் எங்களுக்குச் சொந்தக்காரன்தான் கூப்பிட்டனாங்கள் வந்திருக்கிறான்' எண்டு போட்டு என்ன வந்து கூப்பிட்டு 'நீங்க இல்லாம நாங்க கலியாணம் நடத்துவம் போறதெண்டா போங்கோ' எண்டு சொல்லவோ எண்டு என்னைக் கேட்டபோது 'ஐயோ வேண்டாம் என்னால கலி யாணத்தில பிரச்சினையள் வேண்டாம். சமாளிச் சுப் போங்க' எண்டு சொல்லிப் போட்டன்.

(அவையள் பொட்டய அறைக்குள்ள பூட்டி வைச்சபடி கவனமாய் இருந்தும் ஒருக்கா கண்டு போட்டான். அவள் நிமிந்து கூடப் பார்க்கேல்ல. இழுத்துப்பறிச்சுக் கிட்டப்போய் 'எப்பிடிச் சுகமோ?' என்று கேட்டதுக்கும் பதிலில்ல. அவருக்கு மண்டைக்குள்ள விறைச்சுப்போச்சு. பொட்டை மாறிப்போட்டாளோ எண்டு மண்டையப் போட்டு உடைக்கத் தொடங்கீட்டான்.

இப்ப பொட்டை எங்கை போனாலும் கை யோட ஒரு ஆள் போய் வருகுது. தமையன் தான் பள்ளிக்கூடத்துக்கு கொண்டுபோய்க் கொண்டு வாறார்)

செய்வினையோ என்ன இழவெண்டு தெரியே ல்ல. பொட்டய மாத்திப் போட்டாங்களோவெண்டு பயமாக்கிடக்கு. நித்தம் ஒரே தாக்குதல்களாயி ருக்கும் எண்டு நினைக்கிறன். பொட்டயும் வளர வளர இவனிட்ட என்ன காரிருக்கா காசிருக்கா எண்டு யோசிக்கத் தொடங்கினாலும் தொடங்கி யிருக்கும். இதுக்குள்ள இவன் படு குடிகாரன். ஒரு சிகரட்டில அடுத்ததைக் கொழுத்திப் பத்தி றவன். இவனக் கட்டிக்கொண்டு என்ன செய்யப் போற எண்டு அளந்து தள்ளியிருப்பினம். நானும் போற வாற சனத்துக்கெல்லாம் சொல்லிக் கொண்டு திரியிறன் முந்திமாதிரி சிகரட் தண்ணி யெல்லாம் விட்டிட்டன் எண்டு. ஆனா இது அவ ளின்ர காதுக்க எட்டாமப்பாக்கிறது அவைக் குப் பெரிய வேலை இல்லை.

(உன்ர தங்கச்சிமாரை முதலில கரைசேர். உனக்கு ஞாயமான பொறுப்புக் கிடக்கு. விளை யாடிக் கொண்டு திரியாத எண்டு நானும் சொல் லிப் பாத்தன். எனக்கெண்டாத் தெரியேல்ல இவன் ஏன் மாற இந்தக் கஸ்டப்படுகிறான் எண்டு)

நானும் எட்டாப்பழம் புளிக்கும் எண்ட மாதிரி இந்தச் சனியன் இனி வேண்டாம் எண்டு விடுவம் எண்டுதான் பாத்தன் ஆனா மனசுக்க ஏதோ கிடந்து கடக்கு முடக்கெண்டு பெரிய தலையிடி யாக் கிடக்கு.



(பொட்டைக்கு 18 வரமுதல் நாடு மாறப் போகினம் எண்டும் ஒரு கதையாக் கிடக்கு - கனடாவுக்காயிருக்கும். இவன் பொடியன் சிகரட் டையும் விட்டு தண்ணியையும் விட்ட அவஸ்தை யில இப்ப கட்டையெல்லோ அடிக்கிறான். 'சொல்வழி கேள் மோனே' நானும் சொல்லிப் பார்த்தன்; அவன் மனம்போன போக்கில் போ றான். பொடியன் மாறின மாற்றத்த நினைக்க என்னால நம்பேலாமக் கிடக்கு)

நல்லா லேட்டா வந்தா எல்லாரும் படுத்திருப் பாங்கள். எழும்பி வீணா கதை பேசுற அளவு க்கு இன்னம் அவங்களுக்கு விசர் முத்தேல்ல.

கட்டினா இவளத்தான் கட்டிறது எண்டு ஒரு காலம் நினைச்சதெல்லாம் கனவாய்ப் பழங் கதையாய்ப் போச்சு. சிலவேளையில இரவில நடந்து வரேக்க எனக்குத் தெரியாம எனக்குள்ள இருந்து சத்தங்கள் வாறதில எனக்குக் கொஞ்சம் பயமாத்தான் கிடக்கு.

(பொடியன் பயப்படுறான் அவள எல்லாருமாச் சேர்ந்து மாத்திப்போடுவாளயள் எண்டிறதில இவனுக்குச் சரியான நம்பிக்கை. அவள இவன் காதலிச்சுத்தான் இருக்கிறான் எண்டு எனக்கு விளங்கிறமாதிரி மற்றாக்களுக்கும் விளங்கு மெண்டில்ல. ஆனா ஒண்டுமட்டும் சொல்லுவன் எவனாவது விசரன் காச வாங்கிப்போட்டு எந் தப் பேப்பரில எண்டாலும் எழுதுவாங்கள் வாற படமெல்லாம் நல்லாக் கிடக்கெண்டு நம்பிப் போய் பார்த்திடாதையுங்கோ. பேந்து மூளைக் குள்ள பூந்த கனவத் தூக்கிக் கொண்டு லாச்சப் பல் முழுக்க அல்லது எங்கயும் வீடுகள் வழிய அலையவேண்டியிருக்கும். அதுக்கு என்னமாதிரி ஒரு போத்தல் சாராயத்தக் குடிச்சுப்போட்டு சிவனேயெண்டு வீட்டில விழுந்து கிடக்கலாம்.)■

# எல்லோரும் மௌனமாக

கௌரிமனோகரன்



அந்த இரு காகங்களும் என் மூளையை மண்டைக்குள்ளிருந்து வெளியே எடுத்து விடுவதற்காய் ஒன்றுமாறி ஒன்றாய் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தன.

ஒன்று கொத்திக் கொண்டிருக்க மற்றையது என் நெஞ்சில்மேல் ஏறி நின்றுகொண்டும் இடையிடையே எழுந்து வட்டமடித்துக்கொண்டும், கா... கா... என கரைந்து கொண்டுமிருந்தது. சரியாக விடியவில்லை. லேசான தூற்றல் மழையும் கூட. மற்றைய காகங்களை காணவில்லை போலும். சற்றுநேரத்தின் பின் கொத்தியது கத்தத் தொடங்க, கத்தியது கொத்தத் தொடங்கும். இப்படியே மாறி மாறி ஒன்றன்பின் ஒன்றாய் என் மண்டை படாதபாடு பட்டது.

தூரத்தே ஒரு மாட்டுவண்டி. இரு காகங்களும் ஒருமித்தே உயரப்பறந்தன. என்னருகே வண்டி வருகிறது. ஆம் கூப்பிடு தூரத்தில் நிட்சயம் என்னைக் கண்டு விடுவான். இல்லை. இல்லை என்னை அவன் காணவில்லை. என்னைக் கடந்து...

நாட்டப்பட்டிருந்த மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்த என்கைகள் பின்புறமாக... இல்லாவிடின் தவழ்ந்து தவழ்ந்தாவது நடுவீதிக்கு வந்திருப்பேன். வந்துதான் என்ன செய்வது. ஆம் சில வேளை அந்த வண்டிக்காரனாவது என்னைக் கண்டு ஓர் சாக்குத்துண்டையாவது போட்டு என் ஆணுடம்பை மறைத்திருப்பானே. இப்படி நான் இழிநிலையில்...

எல்லோரும் பார்க்கப்போகிறார்களே இன்னும் கொஞ்ச நேரத்தில். பார்த்துத்தான் என்ன இப்பாழுடம்பை; பறந்து போனபின் என் ஆவி. என் சாறனைத்தான் உரிந்து என் வாயை நிரப்பிக் கொண்டார்கள் என்றால் என் கோவணத்தை எதற்கு உரிந்தார்கள்? அதன்மீது என்ன கோபமோ? நான் இப்படி பிறந்தமேனியாய் அகோரமாக.

மீண்டும் காகங்கள். ஆனால் பல. என்னால் எண்ணிக்கொள்ள முடியவில்லை. அந்த அண்டங்காகம், அதன் சொண்டுதான் என்ன பலம். கொத்திக்கொத்தி என் மண்டைக்குள்ளிருந்த அனைத்தையுமே வெளியே எடுத்துவிட்டது.

அவர்களின் பாசையில் சொன்னால் அவர்கள் என் வலதுபக்க காதுக்குள் "வைத்ததால்" என் இடதுபக்க காது கன்னம் எல்லாமே பிய்த்துக்கொண்டு பாதி தலையே உடைந்து தூங்கி

வழிந்து கொண்டிருந்தது.

பொழுது நன்றாய் விடிந்து விட்டது. என்னை முதலாவதாய் கண்டுகொண்ட அந்த சைக்கிள் காறன். ஆம் நிறுத்திவிட்டான் மறுபக்க வேலியில் தனது சைக்கிளைச் சாத்திவிட்டு குனிந்த படி என்னருகே ஓடி வருகிறான். இந்த மனிதன் என்னைக் கண்டுவிட்டான் போலும். இனி என் ஊருக்கு எப்படியும் கதை போய்விடும். அது சரி ஊரின் அடையாளத்தை எப்படிக் கண்டு பிடிப்பான்? அப்படித்தான் கண்டேபிடித்தாலும் இன்னார்தான் என எப்படி?...

தன் நெற்றியிலே வலக்கையை வைத்தபடி குனிந்து மெதுவாய்ப் பார்க்கிறான்.

"ம்...கும் நம்மட ஊரில்லை" சைக்கிள் உருளத் தொடங்கியது. அந்த மனிதனும் போய் விட்டான். வாகனங்கள் ஒன்றும் இரண்டுமாய் ஓடத் தொடங்கிவிட்டன. ஒவ்வொரு வாகனங்களும் என்னருகே வந்ததும் தங்கள் வேகத்தைக் குறைத்தவாறு...

ஒவ்வொரு கண்ணாடி யன்னலூடும் முட்டி மோதிக்கொண்டு எட்டிப் பார்க்கும் தலைகள்...

மீண்டும் உறுமிக்கொண்டு வழமைபோல் வாகனங்கள்.

"என்னதானெண்டாலும் என்ன வேலது" யாருமே இல்லை.

என்மீது அனுதாபம் காட்டுவது அந்த வேலியில் உள்ள கிடுகுகளாய் இருக்கமுடியுமா? அதிசயித்தேன் இல்லை, அதைத் துளைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் குரல். எதைச் சொன்னாளிவள்! என்னைக் கொன்றதையா? இல்லாமல் அவளின் வேலியருகே கொண்டு போட்டதையா? யாருக்குப் புரியும்.

என்னைப்பார்க்கவென்றே குழுமிக் கொள்ளும் பள்ளிச்சிறார்களை துரத்திவிட்டு தாங்கள் அவ்விடத்தை நிரப்பிக்கொள்ளும் பெரியவர்கள். இப்போது என் பிள்ளைகளும் பள்ளிக்குப் போக புறப்பட்டிருக்கலாம் அவர்களுக்கு யார் போய்ச் சொல்வது தங்கள் தந்தையைக் கொன்று இந்த ஊரிலே போட்டிருப்பதைச் சொன்னால்கூட புரியும் வயதா? சிலவேளை மூத்தவள் கொஞ்சம் புரிந்து கொள்வாள் இளையதோ ஏழே வயது தான். என்னைக் கட்டிக்கொண்ட பாவத்திற்காய் என் அன்னலட்சுமிக்கு ஏன் இந்த வயதில் இப்படியொரு கொடுமை?

கூடியிருந்த கூட்டமும் ஒவ்வொன்றாய் நகர்ந்து கொண்டு நான் இப்படியே இந்த வெயிலெல்லாம் கிடந்து உருகி...

ஏறுவெயில் இனி எனக்கு மட்டுமே சொந்தம் போலும்.

போனமாதமும் இப்படித்தான் யாரோ ஒருவனைக் கொண்டுவந்து எங்களூர் ஈச்சமரத்தடி சந்தியில் கட்டியிருந்தார்கள். இரண்டாம் நாள் பின்னேரந்தான் எங்கிருந்தோ வந்த சொந்தக் காரர்களாம் எடுத்துக்கொண்டு போனார்கள். அப்படித்தான் நானும் இப்படி நிராதரவாக...

இப்படிப் போட்டவர்கள் எங்காவது காடுகண்ணிக்குள் போட்டிருந்தாலும் மேல். இல்லை இனி என் அன்னலட்சுமி வரமாட்டாள் இன்றைக்கு. இதுவரை அறிந்திருக்கமாட்டாளா? யார் போய்ச் சொல்வது அப்படி அறிந்திருந்தால் குளத்து பக்கமாய் இறங்கி ஓடி வந்திருந்தாலும் ஒண்டரைக்கட்டைதான் வரும். ஓடியே வந்து விடுவாள் ஆனால் இதுவரை...

எஞ்சியிருந்த கூட்டத்தினர் யாரோ ஒருவருக்கு வழிவிட்டு விலகிக்கொண்டு. என் அன்ன லெட்சுமியாயிருந்தால் எவ்வளவு நல்லது. இப்படி என் கோலத்தைக்கண்டால்? இல்லை வேண்டாம். அவள் வரவே வேண்டாம். நல்ல காலமாய் வந்தது அவளல்ல.

"உங்களுக்கு யாரெண்டு தெரியுமா?"

"யார் முதலில கண்டது?"

"எத்தின மணிக்கு நடந்திருக்குமோ?"

ஒட்டுமொத்தமாக ஒவ்வொருவரும் தலா மூன்றுதரம் தலையசைத்துக் கொண்டார்கள் தெரியாதென்பதாய்.

வேட்டியை தூக்கி மடித்துக்கட்டியிருந்த அந்த மனிதரின் குரலில் கம்பீரம்.

அவர்தான் அவ்வூர் விதானையார் என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன்.

"அவர்களுக்கும் நம்மட ஊர்தான் நல்ல வசதியாப் போயிட்டுது." முணுமுணுப்புடன் வந்த வழியே திரும்பி அவரும்...

நாலைந்து நிமிடத்தில் பழைய சாறன் ஒன்றுடன் திரும்பி வந்த அவர் அதனால் என்னை மூடிவிட்டபோது நான் எண்ணியது சரிதான் என விளங்கிற்று.

மீண்டுமொருமுறை எல்லோரையும் பார்த்து "யாருக்கும் ஏதுமே தெரியாதா?" உரத்துக் கத்தினார்.

எனக்குத் தெரியும். எல்லாக் கேள்விகட்கும் பதில்.

உரத்து சொல்லவேண்டும் போலிருந்தது. ஆனால் என்னால்தான் பேசமுடியாதே! இல்லாவிட்டால்...

"...கண்ணைக் கட்டு"

"இல்லை முதல்ல கையைக் கட்டு"

"பொறுங்கோ நான் கேட்டுக்கொண்டு வருகிறேன்." "இரண்டையும் கட்டட்டுமாம்." பொறுப்பாளர் சொல்கிறார். மூன்றாமவனின் பதில் கிடைப்பதற்கு முன்பே இரண்டுமே கட்டப்பட்டுவிட்டது.

இவர்கள் தலைவன் காலாலிடும் கட்டளைகளை தலையால் செய்யும் தொண்டரடிப் பொடியர்கள் போலும் என்று என்னுள் எண்ணிக்கொண்டேன். எனக்குப்பயம் அதிகரித்தது.

"...யை சந்திக்கப் போனாயா?"

"ஆம் போனேன்."

"போனது மட்டுமில்ல உனக்கு வாய்வேற"

வயிற்றில் ஓங்கி குத்திய தலைவனைத் தொடர்ந்து... நெஞ்சு, கழுத்து, தலை என்று தொண்டர்கள் கவனித்துக் கொண்டார்கள்.

என் ஓலம் பக்கத்துவீட்டு நாய்களை எழுப்பி விட்டதுபோலும்.

"இவன் வாயை ஏன் கட்டவில்லை" தலைவன் உறுமினான்.

"சனங்கள் எழும்பிவிடும்"

இடுப்பில் இருந்த எனது சாறன் இரண்டாகக் கிழிபட்டது. ஓர் துண்டை எனது வாய்முழுக்கத் திணித்து, மறுதுண்டால் வாயைமூடி தலையைச் சுற்றிக் கட்டப்பட்டது.

என் கைகள் கட்டப்பட்டது அவர்களுக்கு மாறாய் நான் எதையும் செய்யாதிருக்க.

என் கண்கள் கட்டப்பட்டது அவர்கள் செய்யும் எதையும் நான் பார்க்காதிருக்க.

என் வாயும் கட்டப்பட்டது அவர்கட்கு முரணாய் நான் எதையும் பேசாதிருக்க.

இவையனைத்தும் நேற்றிரவுச் சம்பவங்கள். அத்தனையும் எனக்குமட்டுமே. ஆனால் இவர்களுக்கோ ஏதுமே கட்டப்படவில்லை. கைகள், கண்கள், வாய்கள் அனைத்துமே அப்படியப்படியே இருக்கின்றன. ஆனால் யாருமே பேசவில்லை. யாருமே காணவில்லை.

விதானையாருக்கு விடை கிடைக்கவில்லை. எல்லோரும் ஒன்றில் மட்டும் உறுதியாய் இருந்தனர். ஒருமித்து மௌனமாய் இருப்பதில். அந்தக் குழந்தையொன்றைத் தவிர.

"அப்பா... அப்பா... யாரிவர்?"

"தெரியாது"

"இவரை யார் சுட்டது?"

"உஸ்... சத்தம் போடாதே."

"ஏனப்பா சத்தம் போட்டாலும் சுடுவார்களா?"

"பேசாமல் வா. பள்ளிக்கு நேரம் போயிற்றுது"

அயலவன் தனையிழந்தோம்
　　தாண்டவக்கோனே
அதற்குமோர் பதிலிழந்தோம்
　　தாண்டவக்கோனே
எதையுமே ஏற்றுக்கொண்டோம்
　　தாண்டவக்கோனே
எமக்கென்னவென்றிருந்தோம்
　　தாண்டவக்கோனே.

■



# 687430743 V D584 L 8367

ஷோபாசக்தி



எல்லாம் முடிந்தது.

இக்கணத்தில் நகரத்தின் ஒரு புள்ளியில் செக்கல் கிழித்து பொறி பறந்திருக்கும். அது முளாசும். ஈபிள்கோபுரம் தழலாய் உருகி உருகியோட ஐம்பது-நூறு அர்த்தங்களில் சிரிக்கும் மோனலிஸாவும் அவுட். வெண்ணிற மாதாகோவிலுக்கு ஐயோ கேடு. லாச்சப்பல் பிள்ளையாரும் வயிறு வெடித்துச் சாவார். உரிந்து போட்டு திரியும் எல்லோருமே எரிவீர்... கூய்... கூய்...

"சனியனே கத்தாம இருடா" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கையை ஓங்கிய படியே சித்தப்பன் எனக்கு அடிக்க ஓடி வந்தான். கைகளால் முகத்தை மூடிக்கொண்டே முழங்கால்களுக்குள் பத்திரப்படுத்துவதற்காய் கதிரைக்குள் குறண்டினேன். கண்கள் தாமாகவே இறுக மூடிக்கொண்டன. மூடிய கண்களுக்குள் சிணிப்பிடித்த இலக்கங்கள் உன்னிக்கொண்டு மில்லியன் முறைகள் மோதி வெடித்தன. அதிர்வுகள் என் பிடரியையும் பொத்துப் போடலாம். இனியும் கண்களை மூடியிருக்க முடியாது. அடி விழுந்தால் காரியமில்லை. மெல்ல கண்களை திறந்து பார்த்தேன். சித்தப்பன் ஓங்கிய கை ஓங்கியபடியே எனக்கு ஓரடி முன்னால் ஒரு சடன் பிரேக் அடித்த கோலத்தில் மூசிக்கொண்டு நிர்வாணமாய் நின்றான்.

"சரியாய் குளிருது ஒரு சிகரெட் தாறியோ" என்று சித்தப்பனிடம் கேட்டேன்.

"இண்டைக்கு கனத்த நாளல்லோ, அதுதான் அட்டகாசம் கூடிப்போச்சு" என்று சித்தி சொன்னாள்.

"எடியே உடுப்பில்லாமல் நிற்காதே எரிந்து போவாய்" என்று சொன்னேன்.

"செருப்பால் அடிப்பன் நாயே" என்று சித்தி செருப்பெடுக்க ஓடினாள். சித்தப்பன் கண்ணெல்லாம் கலங்கிப்போய் என் தலை முடியை பிடித்து என்னை உலுக்கியெடுத்தான். செருப்பு தோதாக கிடைக்காததால் சித்தி எட்ட நின்று காறித் துப்பினாள். வலதுகை சுட்டிவிரலை சித்தியின் மூஞ்சிக்கு நேராய் பிடித்து இடது கையைப் பொத்தி முழங்கையோடு மடக்கி நரம்புகளை இறுக்கிப் பிடித்து எழுந்து நின்று அடி வயிற்றிலிருந்து ஒரு கூவடித்தேன். சித்தி காதுகளை பொத்திக் கொண்டு ஓடிப்போனாள்.

சித்தி உள்ளே போகமட்டுக்கும் பார்த்துக்

4.06.1990 08.09.1979 02.0

கொண்டிருந்த அந்த குத்தியன் சித்தப்பனிடம் நெருங்கி "பொடியனுக்கு இந்திரியம் உச்சந்தலைக்கேறி அடிச்சுப்போச்சு... அது தான் இப்படிப் போட்டு பூமரத்த உலைக்குது" என்று அடிக்குரலில் சொன்னான். இந்தக் குத்தியன்தான் இன்று பின்னேரம் என்னைப்பிடித்து இங்கே வைபோசாக இழுத்து வந்தவன். சித்தப்பனோடு ஒட்டு.

இவர்கள் நாளைக்காலையில் என்னை ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போக திட்டமிடுகிறார்கள். பாவம் இவர்கள். உரிஞ்சாங்குண்டிகளுக்கு நாளை என்பதே இருக்கப்போவதில்லை.

ஆஸ்பத்திரி எனக்கு எப்போதுமே சலிப்பூட்டுவது. கடைசியாக சென்ற கோடை காலத்தில் சித்தப்பன் என்னை ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போயிருந்தான். டொக்டரும் நானும் எதிரெதிராய் இருந்தோம். "நீ ஏன் கூவுகிறாய்? நீ ஏன் குதிக்கிறாய்?" என்று என் கண்களை உற்றுப் பார்த்தவாறே டொக்டர் கேட்டான். எனக்கு அலுப்புத் தட்டியது நான் எப்போதும் உண்மையையே பேசிவந்தாலும் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் முடிவாக கல்யாணம் செய்து வைக்கவோ, சாத்தானை விரட்டவோ, பொலிஸில் பிடித்துக் கொடுக்கவோ அல்லது ஆஸ்பத்திரியில் மறிக்கவோதான் முற்றெடுக்கிறார்கள். நான் இந்த முறை பேசப்போவதில்லை.

ஆனால் இந்த டொக்டர் சிங்கனாய் இருந்தான். விடாமல் என் கண்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன் திடீரென்று உச்சிக் கொண்டு என் கண்களுக்குள் பாய்ந்தான். டக் கென்று கண்களை மூடிக் கொண்டேன். இலக்கங்கள் உன்னிக்கொண்டு மோதிப்பறக்க, இம்முறை அதிர்வுகள் நாளங்களை அரித்துக் கொண்டு உள்ளங் கால்களில் இறங்கின. எனது கண்களுக்குள்ளால் புகை கிளம்பியது. "டொக்டர் என்னை விட்டுவிடு, எனக்குள் இலக்கங்கள் மின்னி தெறிக்கின்றன. என்னை எரிய விடாதே" என்று துடித்துப் பதைத்தேன்.

டொக்டர் குறுக்குமறுக்காக தலையை ஆட்டிக் கொண்டான். "பிசாசே நீ என்னை நம்பவில்லையா? எனது கண்களுக்குள்ளால் புகை கிளம்புவது உன் பொட்டைக்கண்களுக்கு தெரியாமல் போனதோ?"

டொக்டர் எனது தோள்களில் தனது கைகளை மெதுவாக வைத்து என்னை படுக்கையில் சாய்த்தான் "அது உண்மைதான் நண்பனே" என்று எனது காதுக்குள் சொன்னான். டொக்டரின் குரல் இன்னும் இன்னும் வேகமாகவும் மெதுவாகவும் என்னை வருடிற்று "நீ நிம்மதியாக தூங்கு நண்பனே, உன்னை தின்னும் இலக்கங்களோடு நான் இப்போது பேசுவேன், நண்பனே நீ தூங்கிவிடு" நான் வாய் கிழிந்து கொட்டாவி விட்டேன்.

▼▼▼▼

**687430743 V பேசுகிறது**

பிள்ளைபிடிகாரர்களின் ஆட்சியில் கிராமம் இருந்தது. ஒழுங்கைகள் நெடுகலும் கறுப்பு முண்டாசு கட்டிய, தலைப்பாகையணிந்த புல்லுத் தொப்பி போட்டவர்கள் பனைகளையும் வேலிகளையும் குரோட்டன் செடிகளையும் வெட்டிப்போட்டார்கள். அவர்கள் என்னை ஒரு புத்தகம் படித்துக்கொண்டிருக்கும்போதோ, மேகலை மச்சாள் தந்த கடிதத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போதோ இல்லை ஐயாவும் நானும் கண்டப்பட்டை அவித்து சாயமிடும்போதோ சுற்றி வளைத்தார்கள்.

அக்காலத்தில் நான் நிறைய மீன்குஞ்சுகள் வளர்த்தேன். அவர்கள் ஒருபோதும் கண்களை விரித்து என் மீன்குஞ்சுகள் குறித்து கேட்டதில்லை. அந்தக் காலத்தில் நான் பென்னம் பெரிய சிப்பிகள் சேகரித்து ஓவியங்கள் வரைந்து வைத்திருந்தேன். அவர்கள் ஒருபோதும் ஒரு ஓவியம் கேட்டதில்லை. அவர்கள் எப்போதும் எனது அடையாள அட்டையையே கேட்டார்கள்.

அடையாள அட்டையை புரட்டி புரட்டி பார்த்தவர்கள் எனது பெயரை கேட்டார்கள். சொன்னேன். அவர்களுக்கு தமிழோ, சிங்களமோ படிக்கத் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் அடையாள அட்டையை தமது உள்ளங் கைகளுக்குள் பொத்தியவாறே அதன் இலக்கத்தை கேட்டார்கள். நான் அதை ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை. சந்தேகத்துடன் என் கன்னத்தில் இடித்தார்கள். சப்பாத்துக்கால்களை முத்தமிட்ட அம்மாவை ஏறி மிதித்தார்கள்.

அந்தோனியார்கோவில் சுவாமி ஆடி அசைந்து வந்து நான் சோலிசுறட்டுக்கு போகாதவன் என்று அவர்களிடம் சொன்னான். சுவாமி அவர்களின் நம்பிக்கைக்கு

23.12.1994 17.01.1981 23.0

உரியவனாய் இருந்திருக்கவேண்டும். அவர்கள் என்னை விட்டுவிட்டார்கள். நான் மீன் குஞ்சுகளை சாகக்கொடுத்தேன். உட்கார்ந்திருந்து ஓவியங்களை அழித்தேன். மேகலை மச்சாளுக்கும் பதில் கொடுக்கவில்லை. எனக்குரிய எல்லாவற்றையும் விட்டு அடையாள அட்டையின் இலக்கத்தை மட்டுமே பிடித்துக்கொண்டேன். தளர்பாடம் செய்தேன்.

பிள்ளைபிடிகாரர்கள் உக்கிரம் கொண்டார்கள். பள்ளிக்கூடத்துக்குள் புகுந்து கரும்பலகைகளில் 'ராக்கற்' எழுதி சுட்டுப்பழகினார்களாம். ஒருநாள் மேகலை மச்சாளையும் பிள்ளைபிடிகாரர் தூக்கிச்சென்றார்கள். ஆனால் மேகலை மச்சாள் அடையாள அட்டையை கரைந்த பாடம் பண்ணியிருந்ததாக மாமி குளறினாள்.

**D 584 பேசுகிறது**

மேகலைமச்சாளின் செத்தவீட்டுக்கு அடுத்த நாள் நான் பலாலியில் ஏறி இரத்மலானையில் இறங்கினேன். சூளுக்கு போனபோது திருக்கை அடித்து படுத்தபடுக்கையாய் கிடந்த ஐயாவுக்கு அராலி பரவைக் கடலையும் சின்ன களங்கண்ணி கூட்டத்தையும் தவிர வேறெதுவுமே தெரிந்திருக்கவில்லை. அம்மா கொஞ்சம் வாயாடி கையாடியாக இருந்தாள். என்னை விமானத்தில் ஏற்றிவிட்டு கொழும்புக்கு ரயிலைப் பிடித்தாள்.

விமானத்தில் இருந்தவர்கள் எல்லோருமே பிள்ளைபிடிகாரருக்கு தப்பிவருபவர்கள். நாங்கள் இரத்மலானையில் இறங்கியபோது. எட்டு திக்குகளிலிலுமிருந்து 'ஆய்போவன்' ஓதப்பட்டது. எங்கள் உச்சிகள் முகரப்பட்டன. அம்மா நிமிசத்துக்கு நூற்றிப்பத்து ரூபா கொடுத்து சித்தப்பனை கெஞ்சிமன்றாடினாள். மனுசிக்கு மன்றாடுவதை தவிர வேறு மொழியில் பேசபழக்கப்பட்டிருக்கவில்லை. அம்மா எனக்கு தோல் ஜக்கட் வாங்கித்தந்தாள். குளிரேறாத சப்பாத்துக்கள் வாங்கித்தந்தாள். வறுத்த மிளகாய்த்தூளும், மிக்ஸர் பக்கெட்டுக்களும் வைத்து ஒரு பொதி தயார் செய்தாள்.

ஒரு சாமத்தில் எல்லாம் தலைகீழாய் போக கதவை உடைத்து சனியன் பிடித்தது. இந்த நாட்டில் என்ன இழவு நடக்கிறது, யார் சொல்லி விழுகிறது என்ற சூத்திரம் எனக்கு பிடிபடாமல் போனது. அவர்கள் என்னை ஜீப்பில் கூட்டிச் சென்றபோது போனமாதம்



முழுதும் விகாரைகளில் மினுக்கிய வெசாக் கூடுகள் அவிந்துபோய் கிடந்தன. ஜீப்பிலிருந்து இறக்கிய கையோடு என்னை உருட்டி உருட்டி எத்தினார்கள். நூறு படிகளும் மூன்று திருப்பங்களும் கடந்து வீழ்ந்தேன்.

"உண்மையை சொல்லிவிடு புலியே, ஜனாதிபதியை கொல்லத்தானே இங்கு வந்திருக்கிறாய்? ஜனாதிபதி மாளிகையை படம் பிடித்து விட்டாயா? எப்படி வெடிப்பதாகத் திட்டம்?"

"ஐயாமாரே என்னில் இரக்கம் செய்வீர். நான் தொலைவுக்கு ஓடிவிட என் அம்மா ஜக்கட்டும் சப்பாத்தும் வாங்கி வைத்திருக்கிறாள். "

"சும்மா அணங் மணங் கதைவிடாதே! மகனே, நீ நினைப்பதுபோல் இங்கு எதுவும் சுலபமாக செய்துவிட முடியாது. சரி மாளிகையைப் பற்றி ஏதாவது சொல்லேன். "

"அம்மா ஏங்கிப்போய் இருப்பாள். என்னில் கருணை காட்டுங்கள். நீங்கள் சொல்லும் மாளிகை எங்கேயுள்ளது என்பதைக்கூட அறியமாட்டேன்."

"நமக்கு மிகவும் அருகில்தான் உள்ளது. நான் உனக்கு இப்போது காட்டுகிறேன் பார்" என்றவன் சரக்கென்று தனது களுசானை அவிழ்த்து என் முகத்தில் மூத்திரம் பெய்தான். உடைந்துபோயிருந்த முகம் பற்றிக்கொண்டெழும்ப கைகளையும் கால்களையும் அசைக்கவிடாமல் சிலர் கால்களுக்குள் மிதித்து வைத்திருக்க 'ஐயோ' என்று உயிர் போக கத்தினேன். பிரேமதாஸாவுக்கு கேட்டி

21.07.1983 23.07.1983 27.07

ருக்குமோ தெரியாது.

என்னோடு அவர்கள் மூன்று நாட்களாக மண் நிரப்பிய எஸ்-லோன் பைப்புக்கள், ஊசி கள், பனிக்கட்டிகள், நாம்பன்மாட்டின் சாமான் சகிதம் மினக்கெட்டு களைத்தபொழுதில் நான் வெறும் சோத்துமாடு என்று அவர்கள் முடிவெடுத்திருக்க வேண்டும். என்னைக்கூட்டி அள்ளிக் கொண்டுபோய் மருதானை பொலிஸ் கூட்டுக்குள் கொட்டினார்கள். அந்த ஒரு சவப்பெட்டி X சவப்பெட்டி அளவுள்ள கூண்டுக்குள் ஏற்கனவே* இருபத்தியொருவர் வீழ்ந்து கிடந்தார்கள். நான் இருபத்தியிரண்டாவது.

எங்களில் சிவலைக்கு மட்டுமேதான் சிங் களம் பேசத் தெரிந்திருந்தது. நாள் முழு தும் கம்பிகளை பிடித்தவாறே நின்று தண் ணீர் கேட்டு கத்துவான். கம்பிகளுக்கு இடையால் பெற்றன் பொல்லு இடிகளும் எப்போதாவது தண்ணீரும் பெற்றுக்கொள் வான். இருபத்தியிரண்டு மிடறுகளுக்கு தண் ணீர் போதுமானதாக இருப்பதில்லை. அவன் மீண்டும் மீண்டும் கத்துவான். அவன் ஓர்ம மும் பெண்ணின் சாயலும் கொண்ட மனி தன். எனது புண்களில் ஈக்கள் மொய்க்கும் போது ஊதிக் கலைப்பான். ஒரு இரவில் நான் குலைப்பனில் கிடந்தபோது தனது சாரத்தை அவிழ்த்து எனக்கு போர்த்துவிட்டு ஜட்டியோடு இரவு முழுதும் குந்திக்கொண்டி ருந்தான். ஒரு முறை எங்களுக்கு ஒரு பைக்கட் பற்பொடி கிடைத்தது. சிவலை எனக்கு பல் துலக்கிவிட்டான்.

ஏழாவது நாளில் என்னால் கம்பிகளை பிடித்தவாறு மெல்ல எழுந்து நிற்கக்கூடிய தாக இருந்தது. சிவலை சந்தோசப்பட்டு சீட் டியடித்தான். "ஹட்டனுக்கு இப்போழுது செய்தி போயிருக்கும். எனது அக்காச்சி வந்து என்னை மீட்டுப் போவாள். ஹே! நான் உன்னையும் வெளியில் கொண்டு போ வேன்" என்று நம்பிக்கையோடுபேசினான்.

சிவலையின் பெயர் பிரபாகரன் என்று தெரிந்து கொண்டேன். டவர்மண்டபத்துக்கு முன்னாலுள்ள சைவக்கடையில் ரீயடித்து ீவித்த சிவலை கூண்டுக்குள் வீழ்த்தப் பட்டதற்கு அவனுடைய பெயர் மட்டுமே கார ணமாயிருந்ததாம்.

எட்டாவது நாளில் நாங்கள் ஒரு மூடிய வாகனத்தில் ஏற்றப்பட்டோம். வாகனம் களனி ஆற்றை நோக்கித்தான் ஓடிக் கொண்டிருப்பதாக சிவலை ஊகித்துச் சொன்னான். வழியில் கொஞ்ச நேரம் வாக னம் எங்கேயோ நின்றபோது "ரயர் வாங்கி அடுக்குபண்ணுகிறார்களாக்கும்" என்று ஒரு குரல் இரகசியமாய் அழுதது. இல்லை... இரண்டு மணித்தியாலங்களுக்கு பின்பு நாங்கள் மாற சிறைச்சாலையில் ஒப்புக் கொடுக்கப்பட்டோம். அம்மாவிடமிருந்து முன்னர் என்னைப் பறித்தவர்கள் இப்போது எனது கையில் கிடந்த ஏழாலையம்மன் கட்டிவிட்ட கறுப்புநூல், அடையாள அட்டை ஆகியவற்றைப் பறித்துக்கொண்டு எனக்கு இல D854 ஐ மட்டுமே வழங்கினார்கள். அலுமினியக்கோப்பை அடுத்த நாள் வழங் கப்பட்டது.

D என்பது பயங்கரவாத தடுப்புச்சட்டத் தின் கீழ் அடைத்து வைக்கப்பட்டிருப்போரை மற்றைய கைதிகளிடமிருந்து பிரிப்பதற்கான சிறப்பெழுத்தாம். ஆக நான் பயங்கரவாதி 854 ஆகியிருந்தேன். சிவலை பயங்கரவாதி 590 ஆகியிருந்தான்.

காலை ஐந்துமணிக்கு இலக்கங்களை ஏறுவரிசை கட்டி நிற்கவைத்து எண்ணிப் பார்ப்பார்கள். எந்தவொரு இலக்கமும் தப்பி யோடவில்லை, தற்கொலை செய்யவில்லை, கொலை செய்யப்படவில்லை என்று உறுதியான பின்பாக இலக்கங்களுக்கு பாணதுண்டு வழங்கப்பட்டது. பன்னிரெண்டு மணிக்கு சோறு போடப்படும். இலக்கங்கள் நெடுநேரம் சோற்றுக்குள் கல் பொறுக்கி உசும்பின. இலக்கங்களுக்கு இருந்த ஒரே பொழுதுபோக்கு அதுதான்.

நான் புகைவிட பழகிக்கொண்டேன். சிக ரட், பீடி கிடைக்காது. மரத்தூள்களை கொண்டு 'லோக்கல்' என்று ஒன்று சிறைக் குள் இரகசியமாக தயாரிக்கிறார்கள். சிவலை விரைவாகவே இந்த வித்தையை கற்றுக் கொண்டான். உண்மையாகவே 'லோக்கல்' இன்பமானதுதான்.

ஒரு திங்கட்கிழமை சிவலையின் அக் காச்சி சிறைச்சாலைக்கு வந்து சிவலையை

---

* அச்சுப்பிழை என்று எண்ணவேண்டாம், அது 21 மனிதர்கள்தான்.

# 29.07.1987 10.10.1990 D 59

சந்தித்தாள். சிவலை என்னைப் பற்றித்தான் அதிகம் பேசினானாம். அவள் வெள்ளிக்கிழமை வரும் போது என் அம்மாவையும் கூட்டிவந்தாள்.

அம்மா தைரியமாகப் பேசியது எனக்கு புதினமாய்க் கிடந்தது. தானும் சிவலையின் அக்காச்சியுமாக செல்லச்சாமி ஐயாவைக் கொண்டு அலுவல் பார்ப்பதாகவும் எங்களை விரைவாக வெளியிலே எடுக்கலாமென்றும் சொன்னாள்.

அன்றிரவு முழுவதும் நானும் சிவலையும் நித்திரை கொள்ளவில்லை. "அவர் மலைகளின் மைந்தன் எங்களை ஒருபோதும் கைவிடார்'' என்று சிவலை முணுமுணுத்தான். சென்ற வருட மேதினக் கூட்டத்தில் அவர் பேசியதை சிவலை கேட்டிருந்தானாம். எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடி முடிய பேச எழுந்தவர், தேயிலைச் செடிகளில் நட்சத்திரங்களைப் பூக்கச் செய்வதைப் பற்றி பேசினாராம். கூட்டம் முடிய காலிமுகத்திடலிலிருந்து மருதானைவரை இவன் பறந்தே வந்தானாம். "மினிஸ்டர் இல்லாவிட்டால் இவர்கள் எங்களை கடல்களுக்கும் அப்பால் விரட்டி கஞ்சிக்கு சிங்கியடிக்க விட்டிருப்பார்கள். போக மறுத்தவர்களும் பச்சைக் கூப்பன்களாகவே செத்திருப்பார்கள்.'' என்று கண்கலங்கிச் சொன்னான்.

செவ்வாய்க்கிழமை என்னை அவசர அவசரமாக சிறைச்சாலை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். சிவலையிடம் சொல்லி விட்டுக்கூட போகமுடியவில்லை. அவன் எந்த செல்லுக்குள்ளாவது யாரும் வருத்தக்காறருக்கு ஒத்தடம் பிடித்துக் கொண்டிருப்பான். அழைத்துச்செல்ல வந்த காக்கிச்சட்டை சுடுகுது மடியைப் பிடி என்று நின்றான்.

என்னை ஒரு ஜீப்வண்டியில் ஏற்றி பின்புறமாய் விலங்கிட்டார்கள். ஜீப்வண்டி கடவத்த சந்தியில் போய்க்கொண்டிருப்பதை விளம்பர பலகைகளின் ஆங்கில எழுத்துக்களை வாசித்துப் புரிந்துகொண்டேன். அது களனிப்பாலம் ஏறி பஞ்சிகாவத்தைக்குள்ளால் விரைந்து மாளிகாகந்தை நீதிமன்றத்தில் என்னை நிறுத்தியது.

நீதவான் அசுவாரசியமாய் என்னைப் பார்த்தான். மிகவும் சோர்வாய் காணப்பட்டான்- பாலாஜிக்கு கிட்டவும் நெருங்கான்- "நான் உன்னை விடுதலை செய்கிறேன்" என்றான். எழுந்து போய்விட்டான் என்னை கைதுசெய்த காரணத்தையும் ஏன் விடுதலை செய்த காரணத்தையும் கூட எனக்கு சொல்வது தனது பொன்னான நேரத்தை மண்ணாக்கும் வேலையென அவன் நினைத்திருக்கலாம்.

நீதிமன்றத்திலிருந்து நேராக கொள்ளுப்பிட்டிக்கு அம்மா ஓட்டோ ரிக்ஷா பிடித்தாள். போய்க்கொண்டிருக்கும்போது சிவலையின் அக்காச்சியைப் பற்றி விடுத்து விடுத்துக் கேட்டேன். "அவள் யாரோடு எப்படிப் பேசுவது என்பதைத் தெரிந்திராத மரியாதை தெரியாத தோட்டக்காட்டாள்'' என்று மட்டுமே அம்மா சொன்னாள்.

கொள்ளுப்பிட்டி சென்மைக்கல் வீதியில் உயர்ந்திருந்த கட்டடத்துக்குள் சுவர்முழுதும் செல்லச்சாமி ஒரு கள்ளப்பூனைச் சிரிப்புடன் கும்பிட்டுக் கொண்டிருந்தான். கும்பிட்டவனுக்கு கீழே மேசைபோட்டு அமர்ந்திருந்தவனை அம்மா எனக்கு அறிமுகப்படுத்தினாள். "இவர்தான் கோவிந்தராஜன், செல்லச்சாமி மினிஸ்டருக்கு இடதும் வலதும், எமக்கு தெய்வமுமானவர். இவர்தான் உன்னை வெளியில் எடுத்துவிட்டு இரட்சித்தவர்."

கோவிந்தராஜன் "ஆ... இவர்தானா உங்களின் மகன்" என்று அமர்த்தலாக கேட்க அம்மா ஒரு பல்லிமாதிரி சிரித்தாள். கோவிந்தராஜன் அலுவலகத்தை விட்டு வெளியேறி அருகிலிருந்த தேனீர்கடைக்குள் போய் அமர்ந்து கொண்டான். அம்மா என்னை இழுத்துக்கொண்டு பின்னாலேயே ஓடினாள். அவள் நெஞ்சுசட்டைக்குள்ளிருந்து ஒரு என்வலப்பை எடுத்து இரண்டு கைகளாலும் நீட்டினாள்.

ஏதோ தும்புமுட்டாசு வாங்குவது போல அலட்சியமாக வாங்கிக்கொண்ட கோவிந்தராஜன் "எவ்வளவு" என்று கேட்க "ஐயாயிரம் இருக்கிறது'' என்று அம்மா இளித்தாள். "அவ்வளவு தானா"? என்று கேட்டுக்கொண்டே கோவிந்தராஜன் சிகரட் மூட்டினான்.

"எங்களுக்கு வெளியிலிருந்து காசு வர வேண்டியுள்ளது. வந்தவுடன் இன்னும் தருவேன்."

"சரி...சரி... இது மினிஸ்டருக்கு மட்டுமே போதுமானது. என்னை பிறகு நீங்கள் கவனிக்க வேண்டும்."

எனக்கு கொஞ்சம் குழப்பமாய் இருந்தது. "ஐயா நீங்கள் தயவுசெய்து சிவலையையும்

687430743 V D584 L 83675

மீட்க வேண்டும்" என்று அழுவார்போல கேட்டேன். கோவிந்தராஜனின் கண்கள் வேட்டை நாயின் கண்களாக மின்னின. "யாரது சிவலை?" என்று கேட்டான்.

அம்மா என்னை இரகசியமாய் நுள்ளி விட்டு "அன்று உங்களோடு சண்டைபோட்டு விட்டு போனாளே அவளின் தம்பியைச் சொல்கிறான்" என்று பொச்சடித்தாள்.

"ஓ அவளா... எங்களுக்குத்தான் வோட்டு போட்டதாகவும், காதுக்குச்சியை விற்று ரயிலுக்கு கொடுத்தவளை சல்லி கேட்பது நியாயமில்லை என்று சட்டம் பேசிவிட்டு போனாளே அவளா? சரி மன்னித்துவிடுவோம். பத்தாயிரம் ரூபா தாருங்கள் சிவலையை வென்று தருகிறேன்."

நான் கண்களை இறுக மூடிக்கொண்டேன் -D590க்குள் சிவலை சுருண்டுபோய் கிடக்க D590 உன்னி உன்னி சூனியத்தில் சிதம்பர சக்கரமாய் சுழன்றடிக்க சிவலை குளறியழுதான். D590 போட்ட ஆட்டத்தில் குலுங்கிப்போய் கண்களைத் திறந்தேன். கோவிந்தராஜன் வேட்டியை உரிந்துபோட்டு நிர்வாணியாய் நின்றான். எனது முகத்தை பொத்திப்பிடித்துக் கொண்டே அடிவயிற்றால் கூவென்று குரலெடுத்தேன்.

**L 836753 பேசுகிறது.**

ஒரு மாதமாய் ஒரு வருத்தமும் இல்லாத என்னை பம்பலப்பிட்டி ஆஸ்பத்திரியில் கட்டாயப்படுத்தி வைத்திருந்தார்கள். அம்மா விடாமல் இந்தா கதிரேசன்கோவில் விபூதி, இந்தா பொன்னம்பலவாணேசுவரர் விபூதி என்று கம்மாரிசு அடிக்கற சாங்கத்தில் என் நெற்றியைப்பொத்தி விபூதியும் குங்குமமும் அடித்துக் கொண்டேயிருந்தாள்.

ஒரு நாள் கொச்சிக்கடை அந்தோனியாருக்கு பாணும், செக்கட்டித்தெரு முருகப்பெருமானுக்கும் கொட்டாஞ்சேனை மாரியம்மனுக்கும் தலா ஆயிரம் ரூபாயும் கொடுத்து என்னை சுகப்படுத்தியதன் நிமித்தமாக நேர்த்திக்கடன் முடித்துவிட்டதாய் சொல்லி விட்டு என்னை சிங்கப்பூருக்கு ஏற்றி விட்டாள்.

சிங்கப்பூரில் எனக்காக சித்தப்பன் காத்திருந்தான். என்னை பிரான்சுக்கு அனுப்பி விடுவதற்காய் ஒவ்வொரு ஏஜெண்டுகளாய் அணுகிக் கொண்டேயிருந்தான்.

அந்தக்காலத்தில் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் கோபால் பற்பொடிக்கு இணையாக புகழ் பெற்றிருந்த சிகாமணி, ஹொங்கொங் பாலா, இத்தாலி பாலா, கைதடி பாலா, மியாமி மோகன், பரிஸ் மோகன், பிலிப்பைன்ஸ் மோகன், கச்சாய்மோகன், மட்டக்கிளப்பு வரதன், மாளிகாவத்தை வரதன், கனடா பரம், மொட்டை சக்தி, டென்மார்க் விக்கி, கனகநாயகம், அற்புதசிங்கம், சிங்கப்பூர் கோபால் போன்ற எந்தச்சுழியனாலும் என்னை பிரான்சுக்கு ஏற்றிவிட முடியாமல் போனது.



அவர்கள் எவ்வளவு பக்காவாக எனக்கொரு பாஸ்போர்ட் தயாரித்து பெயர்களையும் இலக்கங்களையும் எனக்கு தீத்தி அனுப்பினாலும் சிங்கப்பூர் விமானநிலைய அதிகாரிகளை கண்டதுமே நான் நடுங்கிப் போவேன். அவர்கள் நான் கொண்டுபோகும் பாஸ்போர்ட்டைப் பற்றிய கேள்வியில் தொடங்கி என்னை அனுப்ப முயலும் ஏஜெண்டுகளைப் பற்றிய விபரங்களையும் ஒட்ட கறந்துகொண்டு என்னை விமானநிலையத்துக்கு வெளியே கலைத்து விடுவார்கள்.

ஏஜெண்டுகளின் சரித்திரத்திலேயே இல்லாத ஒன்று நடந்தது. அதாவது பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்று சித்தப்பனிடம் வந்து அழுதார்கள். இவ்வளவு அமளிக்குள்ளும் நன்றாக அனுபவப்பட்டு ஏகலைவன் பாணியில் சுயமாக ஏஜெண்டாகி விட்ட சித்தப்பன் L836753 ஐ எனக்காக தயார் செய்தான். பெயர்களையும், இலக்கங்களையும் மண்டை காய பாடம் செய்தேன். எனது பெயர், மொழி, பிறப்பு, ஓவியங்கள், ஐயா, கடற்கரை, கிராமம், எல்லாம் பொய்யாகிப்போக L836753ல் தொங்கினேன். வியட்நாம் ரூட்டால் சித்தப்பன் போடிங் உடைத்தான். பின்பு கொடிகட்டிப் பறந்த வியட்நாம் ரூட்டை

04.06.1990 08.09.1979 02.

முதன் முதலாய் கண்டுபிடித்த பெருமை சித்தப்பனுக்கே! விசயம் வெற்றி!

**04.06.1990, 08.09.1979... மற்றும் பல பேசுகின்றன.**

பனியிலே முதற்காலை வைத்தவன் அடுத்த காலை கேஸ்கார திருநாவுக்கரசு வீட்டில் வைத்தேன். மேகலை மச்சாள் செத்துப் போனதையிட்டு திருநாவுக்கரசு சரியாக சந்தோசப்பட்டான். அந்தப்பிரேதத்தை வைத்தே வழக்கை வென்று தருவதாகச் சொன்னான். மேகலை மச்சாளை தான் சுதந்திரப்பறவைகளில் சேர்த்து விடுவதாகச் சொன்னான். ஐயாவை பிடித்துக்கொண்டு போய் கச்சேரி சத்தியாக்கிரகத்தில் இருத்தி-எழுப்பி எண்பத்திமூன்று வன்செயலுக்குள் கா.பொ.இரத்தினத்தின் விசுவாசியாகச் சாகக் கொடுத்தான். அம்மாவை அன்னையர் முன்னணியில் சேர்த்துவிடுவதில் உறுதியாக நின்றான். நான் மாற சிறையில் இருந்ததற்கான ஆதாரப் பத்திரங்கள் இல்லாத காரணத்தால் அது அகதி வழக்குக்கு பொருத்தமில்லாத புள்ளி என்றான். அவனிடம் வெலிகடை சிறைச்சாலை சம்பந்தமான ஆதாரங்களே வெற்றுத் தாள்களில் கிடந்தன. என்னை கேட்டுக்கேள்வியின்றி வெலிகடை சிறைச்சாலைக்கு மாற்றம் செய்தான்.

முடிவாக அகதிச்சட்டத்தின் ஓட்டை ஒழுங்கைகளில் புகுந்து புறப்பட்டவன் இரண்டாயிரம் பிராங்குகளை வாங்கிக் கொண்டு என் கழுத்துக்கு மேலே என் பாதங்களை பொருத்தி அவற்றில் ஆயிரக்கணக்கான இலக்கங்களை நாளாக, மாதமாக, வருடமாக, வாகனங்களின் அடையாளமாக கட்டிச் சுமத்திவிட்டான். விழுந்தேன்.

விழுந்து விழுந்து ஆறுமாதமாக இலக்கங்களை பாடம் செய்தேன். ஏதாவது பிழை விட்டேனோ வாழ்க்கை முடிந்ததாம். நிறையப் பேர் சரியாகப் பாடம் பண்ணாததால் ஜெர்மனிக்கும் ஹொலண்டுக்கும் ஓடிப்போனார்களாம். சித்தப்பன் வழக்குவிசாரணையின் போது எப்படி மாய்மாலம் செய்வதென்றும், சித்தி கடல், கம்பு, வலை, ஓவியம், மேகலைமச்சாள் இனிமையாகப் பாடுவது, மாற மறியல்வீடு எல்லாவற்றையும் மறந்து போகச்சொன்னாள். இல்லாவிட்டால் அகதிமட்டை கிடைக்காதாம். நான் முன்பின் அறிந்தேயிராத இலக்கங்களை பாடம் செய்தால் மட்டை கிடைக்குமாம்.

எனது அகதிவழக்கை பரிசீலிப்பதற்காக நேர்முக விசாரணைக்கு கூப்பிட்டிருந்தார்கள். இலக்கங்களை பொறுக்கி மூட்டையாக்கி தலையில் காவிக்கொண்டு போனேன்.

ஒரு அழுகல் உருளைக்கிழங்கு போல அதிகாரி கதிரைக்குள் நசிந்துபோய்க் கிடந்தான். மொழிபெயர்ப்பாளன் நெட்டி முறித்துக் கொண்டிருந்தான். கேட்கும் கேள்விகளுக்கு மட்டுமே பதில் சொல்லவேண்டுமென்று அதிகாரி எனது தொண்டைக்குழிக்குள் கத்திரிக்கோலை செருகிய நேரத்தில் மூட்டை அவிழ்ந்து போய் இலக்கங்கள் குதியாட்டம் போட்டுக்காட்டி ஓடிப்போயின.

"சொல்லு நீ யாரைச் சாகக்கொடுத்தாய்?"

"நான் எனது மீன்குஞ்சுகளை சாகக் கொடுத்தேன்?" அதிகாரி என்னை கூர்ந்து கவனித்தான்.

"உனது கிராமத்தில் குண்டுகள் வீசப்பட்டதோ?"

"ஆம் அது ஏழு கடலும் ஒன்பது மாடுகளும் இரண்டு சிட்டுகுருவிகளும் உயிரோடு எரிந்த கதை."

"அது ஊரோடு ஒத்ததுதானே. நீமட்டும் தானே இங்கு வந்திருக்கிறாய். மற்றவர்கள் அங்கு இன்னும் வாழ்கிறார்கள்."

"நீ எனது கிராமத்துக்கு ஒரு கப்பல் விட்டுப் பார்".

அதிகாரி கோப்புக்களை அடித்து மூடினான். வழக்கு பெயில். ஆனால் பிரண்டு போவான் என்னை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு சிபாரிசு செய்தான். இந்தப் புள்ளியை வைத்தே கொமிசனில் வெல்லலாம் என்று திருநாவுக்கரசு மகிழ்ந்து போனானாம்.

எதுவித வருத்தமும் இல்லாத என்னை எண்ணிமாளாத நாட்கள் ஆஸ்பத்திரியில் வைத்திருந்து கொடுமை செய்தார்கள். இந்த காலத்தில் எனக்கு பிரஞ்சுமொழி பிடிபட்டுப் போனது. டொக்டரின் கையைப் பிடித்துக்கொண்டு எனக்கு அகதிமட்டை கிடைப்பதற்காக லூட்ஸ் மாதாவிடம் போய் நேர்த்தி வைக்கப்போகிறேன் என்றேன். எனக்கு நல்ல சுகமாகிவிட்டது என்று கூறிய டொக்டர் என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். கொஞ்சநாள் கழித்து நிர்வாணிகள் திரும்பவும் ஆடத் தொடங்கினார்கள். ஆஸ்பத்திரி

29.07.1987 10.10.1990 D 590

க்கு திரும்ப திரும்ப கூட்டிக்கொண்டு வந்து கொடுமை செய்கிறார்கள்.

▼▼▼▼

நான் தூங்கி எழுந்திருந்தபோது டொக்டர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். என்னை நிமிர்ந்து பார்த்து "நண்பனே நிம்மதியாக தூங்கினாயா" என்று கேட்டான். நான் அமைதியாக தலையாட்டினேன். "சரி நண்பனே ஒவ்வொரு புதன்கிழமையும் தயவு செய்து என்னை வந்து சந்தித்துப்போ" என்றவன் எனது கையை பற்றி குலுக்கினான். நான் கையை ஒத்திப் பறித்துக்கொண்டேன்.

கோடை செத்து குளிர் கிளம்பியது. திருநாவுக்கரசு சித்தப்பனிடம் மூவாயிரம் பிராங்குகள் பெற்றுக்கொண்டு என்னை மறு விசாரணைக்காக தயார்செய்ய முயற்சித்தான். இந்தமுறை இலக்கங்களை கட்டிக் கொண்டு மாரடிக்க நான் மறுத்துவிட்டேன். "நீங்கள் இலக்கங்களில் தொங்குவதானால் தொங்கிக் கொள்ளுங்கள். கடலும் ஓவியமும் மேகலை மச்சாளும் உயிர் கொண்டு உசும்புவன. நான் கடல், நான் ஓவியம், நான் மேகலைமச்சாள், நான் வெறும் இலக்கமில்லை. நான் கடல், நான் ஓவியம், நான் மேகலைமச்சாள்..." என்று சொல்லிவிட்டேன்.

"இந்த லூசை இஞ்ச கூப்பிட்ட என்னை செருப்பால அடிக்கவேணும்' என்று சித்தப்பன் கத்தினான். அடிக்கடி என்னை வெளியே இறங்கி குளிரில் தள்ளி வீட்டுக்கதவை அடித்துச் சாத்தினான். எனக்கு படுக்க ஒரு இடம் தேவை, கொஞ்சக்காசு தேவை, ஒரு வேலை தேவை.

உணவுவிடுதி முதலாளிகள் நான் சரளமாக பிரஞ்சு பேசுவதைக்கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் வேலைதர மறுத்துவிட்டார்கள். முதலாளிகளாலும் குளிராலும் விரட்டப்பட்டு வீட்டுக்கு ஓடி வந்து கதவைத்தட்டினேன். உள்ளே கேட்டுக் கொண்டிருந்த பாட்டு நிறுத்தப்பட்டது. நெடுநேரமாய் தட்டினேன். உள்ளே விளக்கும் அணைக்கப்பட்டது.

கதவை உடைக்குமாற்போல தட்டிக் கொண்டிருந்தேன். கைகள் சோர்ந்து போக கண்களை மூடி அழுதேன். மண்டைக்குள் இலக்கங்கள் உன்னிக் கொண்டு பறக்க வீதி முழுதும் கூவடித்து நடந்தேன். சில நிர்வாணிகள் தங்களுடையதை பொத்திப் பிடிப்பதை விட்டுவிட்டு என்னை வேடிக்கை பார்த்தார்கள்.நான் ரயில் நிலையத்துக்குள் நெடுநேரமாய் உட்கார்ந்திருந்தேன். எனக்கு சோறோ, தண்ணியோ தேவைப்படவில்லை. ஆனால் ஒரு புகை தேவைப்பட்டது. கொழுத்து திரிந்தவர்களிடம் கேட்டுப்பார்த்தேன். யாருமே ஒரு புகை தரவில்லை.

உரத்து பாடிக்கொண்டே அவள் வந்து எனக்கு அருகில் இருந்தாள். கையிலிருந்த பையைத் திறந்து தரையிலே கொட்டினாள். ஒரு வைன் போத்தல், ஒருசோடி கம்பளி கையுறை, கொஞ்சம் வர்ணநூல் பந்துகள், ஒரு கத்தி, நீண்ட ஊசிகள் ஆகியவை நிலத்தில் சிதறின. நூல்பந்தையும் ஊசியையும் எடுத்துக் கொண்டு சிதைந்து கிடந்த ஒரு நூல்சிக்கலை நாக்கை துருத்திக் கொண்டே சீர்படுத்தி பின்னலிட ஆரம்பித்தாள். நிலத்தில் போட்ட பொருட்கள் போட்டபடியே கிடக்க, அவள் ஒரு குஞ்சுக் குழந்தைக்கே அளவான கம்பளிச்சட்டை பின்னிக் கொண்டிருந்தாள். அவளின் வயிறு ஊதிக்கிடந்தது.

"மன்மஸல்" என்று மெதுவாகக் கூப்பிட்டேன்- மன்மஸலுக்கு தமிழ் என்ன செல்வியா? சீலம்பாய் நீங்கள் சாமத்தியச் சடங்கு அழைப்பிதழ்களில் மட்டும் தானே அதை உபயோகிக்கிறீர்கள்- மன்மஸல் கடும் யோசனையில் இருந்திருக்க வேண்டும், திடுக்குற்று என்னை நிமிர்ந்து பார்த்தாள். "உன்னிடம் ஒரு சிகரட் இருக்குமா" என்று கேட்டேன். அவள் உதட்டை பிதுக்கி தோள்களை குலுக்கினாள். அவள் ஊதிய வயிற்றை தடவியவாறே ஏதோ யோசித்தாள். திடீரென "கமறாத்" என்று என்னைக் கூப்பிட்டாள். -கமறாத்துக்கு தமிழ் என்ன தோழனா? மண்ணாங்கட்டி நீங்கள் மாப்பிள்ளை அழைப்புகளில் மட்டும்தானே அதை உபயோகிக்கிறீர்கள்- "வேண்டுமானால் கொஞ்சம் வைன் குடியேன்" என்று வைன் போத்தலை எடுத்து நீட்டினாள். "நன்றி எனக்கு தாகமில்லை" என்றேன். மன்மஸல் தலையை ஆட்டிக் கொண்டு சிரித்தாள். திடீரென்று எழுந்து குறுக்காலே வந்த கோட் சூட்காரனை மறித்துப் பிடித்து சிகரெட் கேட்டாள். மன்மஸலின் திடீர்பாய்ச்சலால் கொஞ்சம் கெலித்துப்போன கோட்சூட் ஒரு சிகரட்டை எடுத்து மன்மஸலின் கைகளில் முட்டுவதை கவனமாக தவிர்த்துக்கொண்டே கொடுத்தான்.

# 21.07.1983 23.07.1983 27.0

மன்மஸல் சிகரட்டை கொண்டுவந்து என் னிடம் கொடுத்தாள். "மன்மஸல் உனக்கு தேவையில்லையா?" என்று கேட்டேன். வயிற்றை தடவிக் காட்டி "இதுக்கு கூடாது" என்று சொன்னாள்.

நானும் அவளும் மிகவும் அருகருகாய் இருந்தோம். அவள் ஒரு போத்தல் வைனையும் குடித்து முடித்தாள். ஒவ்வொரு வாய் குடிக்கும் போதும் என்னையும் குடிக் கச் சொல்லிக் கேட்டாள். மன்மஸலின் கண் கள் சொக்கிப்போக பிரஞ்சில் மூச்சுவிடாமல் பேசிக்கொண்டிருந்தாள். "இவ்வளவு வேக மாக பிரஞ்சு பேசினால் எனக்குப் புரியாது" என்றேன். "மன்னித்துக்கொள் கமறாத்தே" என்று எனது கைகளை அழுத்தி மன்னிப்புக் கேட்டாள்.

நேரமாக இன்னும் சில சொக்கிப்போன மனிதர்கள் எங்களோடு வந்து அமர்ந்து கொண்டார்கள். அவள் தனது புதிய தோழனை சொக்கிப் போனவர்களுக்கு அறி முகப்படுத்தினாள். நான் அவளின் வயிற்றை தொட்டுக்காட்டி "இரவாகிப்போனதே நீ இந் தக் குஞ்சின் அப்பாவிடம் போகவில்லையா?" என்று கேட்டேன். "அவன் எங்கேயாவது ஒரு ரயிலை ஓட்டிக்கொண்டிருக்கலாம், அல்லது ஒரு கடையை உடைத்து திருடிக்கொண் டிருக்கலாம் இல்லை பொலிஸ் நிலையத்தில் யாருடைய மண்டையையாவது பிளந்து கொண்டிருக்கலாம்" என்று தெளிவாகப் பேசினாள்.

சற்று கழித்து ரயில்நிலைய அதிகாரி ஒருவன் ரயில்நிலையத்தை மூடிக்கொண் டிருந்தான். ரயில்களே ஓடாத அந்தநேரத்தில் நானும் மன்மஸலும் இன்னும் சில சொக்கிப் போன மனிதர்களுமே அங்கிருந்தோம். அதிகாரி எங்களை ரயில்நிலையத்துக்கு வெளியே விரட்டியடிக்க முயன்றான்.

சொக்கிப்போனவர்களின் பிரதிநிதியாக தாடிக்கிழவன் பேசினான். "மதிப்புக்குரிய அதிகாரியே, எங்களை கொல்லவா போகி றீர்? வெளியில் போனால் நாங்கள் பனி குத்தி சாவோம். நாங்கள் குளப்படி செய்யா மல் படுத்துவிட்டு காலையில் போய்விடுகி றோம். நீர் எங்களை நம்பலாம். எங்களோடு நின்று மினக்கெடாதையும். ஆண்டவர் உம்மை ஆசீர்வதிப்பார். உமது மனைவி உமக்காக காத்துக் கொண்டிருப்பாள். உமக்கு நல்ல இரவாகட்டும்."

அதிகாரி ஒவ்வொரு இரவும் இவர்களோடு இந்த விளையாட்டு விளையாடி சலித்துப் போனவனாய் இருக்கவேண்டும்.

"சரி... சரி நீர் முதலில் நடையைக் கட் டும். யாரது? ஒரு புதிய கடலைக்காரனும் உங்களோடு சேர்ந்திருக்கிறானே, இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளுங்கள், உங்கள் எல்லோருக்கும் நாங்கள் நல்ல பாடம் கற்பிக்கிறோம்."

அதிகாரி முடிக்கவில்லை மன்மஸலின் கையிலிருந்த வைன்போத்தல் அதிகாரியை நோக்கிப் பறந்தது "அவனே இவனே அம்மா வோடு படுப்பவனே, உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள். எங்களுக்கு நீங்கள் பாடம் கற்பிக்க முன்பே நாங்கள் உங்களை கொன்று போடுவோம். பார்த்துக்கொண்டே யிரு. கடலைக்காரன் கதைபேசினாயோ உன் அழுக்குப்பிடித்த தொண்டையை குதறிப்போ டுவேன். உன் பாட்டன் இருட்டுக்குள் யாரை ஊம்பப் போனான்?"

எறியப்பட்ட போத்தல் அதிகாரியின் தலைக்கு ஒரு சாண் உயரத்தில் சுவரில் மோதிப் பறந்திருந்தது. அதிகாரி ஓட்டமாய் ஓடினான்.

தாடிக்காரக் கிழவன் கெக்கட்டமிட்டு சிரித்தான். "அவனுக்கு நல்லாய் கொடுத் தாய் மகளே. பாரேன் அவன் இப்பொழுது பொலிஸைக் கூட்டிக்கொண்டு வருவான்." மன்மஸல் என் கைகளைப் பிடித்துக் கொண்டு "ஒன்றுக்கும் அஞ்சாதே கமறாத். நாங்கள் உன்னை எங்களது உள்ளங்கை களில் தாங்குவோம்." என்றவள் எனது நெற் றியில் முத்தமிட்டாள்.

"இல்லை மன்மஸல் எனக்கு பயமாய் இருக்கிறது. போலிஸார் எங்களிடமிருந்து எல்லாவற்றையும் ஒத்திக்கொண்டு இலக் கங்களை எங்கள் நெற்றியில் எழுதுவார்கள். வா ஓடிவிடுவோம்" என்று கெஞ்சினேன்.

மன்மஸல் என்ன நினைத்தாளோ "கம றாத் குளிர் அவ்வளவு கொடுமையானதல்ல" என்று மெதுவாகச் சொன்னாள். நானும் மன்மஸலும் ரயில்நிலையத்தை விட்டு வெளியே வந்தோம். ஒரு தொலைபேசி கூண்டுக்குள் போய் அமர்ந்து கொண்டோம். குளிர் கண்ணாடி துளைத்து குத்த மன்மஸலுக்குள் ஒடுங்கிப்போனேன். மன் மஸல் "நீ எனது மூத்தது இது இரண்டாவது" என்று சொல்லி வயிற்றை

தடவிக்காட்டி புன்னகைத்தாள்.

மூன்று நாட்களாக மன்மஸலோடும் சொக்கிப் போனவர்களோடும் சீவித்திருந்தேன். இலக்கங்களை சுத்தமாய் மறந்திருந்தேன். இலக்கங்கள் மட்டுமல்ல பெயர்கள்கூட எங்களுக்கு இல்லை. கமறாத் வார்த்தைக்கு மறு வார்த்தை கிடையாது. நான் இலக்கமில்லை. நான் கமறாத்.

நேற்று முழுதும் எங்களுக்கு சாப்பிட எதுவும் கிடைக்கவில்லை. கிளிமூக்கன் கொஞ்ச வைன்போத்தல்களை எங்கேயோ திருடிக் கொண்டு வந்திருந்தான். வைன் மட்டுமே குடித்துக் கிடந்தோம்.

காலையிலிருந்து மன்மஸல் வீதியோரமாய் மயங்கிக்கிடந்தாள். "பிள்ளைத்தாச்சி பசியால் சாகப்போகிறாளே... மூச்சுக்கு மூச்சு இது எங்களின் நாடு எங்களின் நாடு என்கிறாயே, அவசரத்துக்கு உதவாத சொத்து இருந்தென்ன விட்டென்ன, இந்த தொலை பேசி கூண்டை யாருக்காவது தீர்த்து விற்றுவிட்டு அவளை காப்பாற்றுவோமா?"என்று தாடிக்காரக் கிழவனைக் கேட்டேன்.

தாடிக்காரக் கிழவன் சோகமாக தலையாட்டினான். "அது முடியாது தோழரே அதை ஏற்கனவே அரசாங்கம் விற்றுவிட்டது."

மன்மஸல் எழுந்து சுவரோடு சாய்ந்திருந்தாள். வாயால் எச்சில் வடிந்தது. "சாப்பிட ஏதாவது உள்ளதா" என்று கேட்டாள். நாங்கள் எதுவும் பேசாமல் இருந்தோம். தாடிக்கார கிழவன் காலை தொடங்கி பிச்சையெடுத்து இரண்டு பிராங்குகள் மட்டுமே சேர்த்திருந்தான். மன்மஸல் திடீரென வயிற்றை தொட்டுக்காட்டி "இதை கொல்லவா போகிறீர்கள் என்று கத்தினாள். பின் மெதுவாக ஒரு சனியன் பிடித்த ஆணுறை உள்ளதா" என்று கேட்டாள். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. மன்மஸல் நாரியைப் பிடித்துக் கொண்டே எழுந்து நின்றாள். நான் ஏங்கிப்போய் மன்மஸலையே பார்த்துக் கொண்டிருந்தேன். "பொறுத்துக்கொள் கமறாத் இழவெடுத்த காசை கொண்டுவருகிறேன்" என்று சொல்லிவிட்டு சுவரைப் பிடித்துக்கொண்டே நடந்தாள்.

"நானும் உன்னோடு வருகிறேன்"என்றேன். "இல்லை நீ இங்கேயே இருந்துகொள் இருட்டுவதற்குள் வந்துவிடுவேன்."

"இல்லை, நீ இல்லாவிட்டால் என்னை இலக்கங்களுக்கு தின்னத் தருவார்கள்."

"பயப்படாதே கமறாத். உன்னில் யாராவது உரசினால் இந்த நகரத்தையே எரித்துப் போடுவேன்" என்றவள் என் நெற்றியில் முத்தமிட்டுப் போனாள். தாடிக்காரக் கிழவனும் சொக்கிப் போனவர்களும் ரயில்நிலையத்துக்குள் சோர்வாகப் போனார்கள்.

என்னோடு மன்மஸல் பேசிக்கொண்டிருந்த போது இந்தக்குத்தியன் இரண்டு மூன்று தடவைகள் எங்களுக்கு குறுக்குமறுக்காய் போய்வந்து கொண்டிருந்தான். மன்மஸல் தெருமுனையில் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவன் ஓடி வந்து என் கையை இறுக்கி பிடித்துக்கொண்டான். "நீ ராசலிங்கன்ர சிறியமோன்தானே" என்று உறுக்கிக் கேட்டான். "இல்லை நான் கமறாத்" என்றேன். தமிழன்ர மானத்த வாங்கிறத்துக்கு எண்டே பிளேனை புடிச்சு பரீசுக்கு வந்திருக்கிறியள் என்று கன்னத்தை பொத்தி அறைந்தான். கிறுகிறுத்துப் போனேன். குத்தியனுக்கு கராட்டியோடு அல்லது காண்டாமிருகத்தோடு சம்பந்தமிருக்கிறது.

என்னை குத்தியன் காருக்குள் தள்ளியது ஞாபகமிருக்கிறது. பிறகு பார்த்தால் சித்தப்பனின் வீட்டில் இருக்கிறேன். இவர்கள் என்னை நாளைக் காலையில் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்லப் போகிறார்களாம்.

"என்னை விடுங்கள் நான் மன்மஸலை சந்திக்க வேண்டும். இருட்டும்போது அவள் எனக்காக காத்திருப்பாள். நான் அவளை காணவில்லையெனில் நீங்கள் சாகவே சாவீர்கள்." கூய்... கூய்...

குத்தியன் சித்தப்பனை பார்த்து கண்சிமிட்டி விட்டு எனக்கு அருகாக வந்திருந்தான். "தம்பி அவள் ஊத்த வேசை, உமக்கு ஒரு நல்ல குடும்பத்து பொட்டையா பார்த்து வைச்சிருக்கிறன். வெள்ளக்காறியளோட சீவிக்க ஏலுமே நீர் ஒண்டுக்கும் கவலைப்படாதேயும். குழப்படி செய்யாமல் இரும், நானெல்லோ உமக்கு சோக்கான பொம்புளையா செய்து வைக்கிறது."

"ஏய் நீ ஏன் உன்னுடையதை வெட்கமில்லாமல் காட்டிக்கொண்டு நிலத்தில் தேய்க்கிறாய்." என்று கத்திக்கொண்டு விடாமல், உயிர் போனாலும் விடாமல் கூவடித்தேன். சித்தப்பன் ஓடிவந்து என் முகத்தைப் பொத்தி அறைந்தான்.

எல்லாம் முடிந்தது. ❑

# அநுபவம் தனிமை

அர்விந் அப்பாதுரை



பூமியின் கீழ் ஓடிக்கொண்டிருக்கும் ரயிலில் அமர்ந்திருந்த விஜியின் இடதுகையில் ஒரு புட்டி தண்ணியும் வலதுகையில் ஒரு ஆப்பிள் பழமும் இருந்தன. நின்று நின்று ஓடும் வண்டி இருப்பினும் போகவேண்டிய இடத்திற்கு நேரத்தில் கொண்டு சேர்த்துவிடும். விஜியின் உதடுகளில் புன்சிரிப்பு. கண்களில் கவலை. ரயில்பெட்டியில் வேறுயாரும் இல்லாமல் இருந்ததால் பாட ஆரம்பிக்கிறாள். "கண்போன போக்கிலே கால் போகலாமா?" என்ற பாடலை உரத்தக்குரலில் பாடுகின்றாள். பாடி முடிய அவள் இறங்கவேண்டிய இடம் வந்துவிடுகிறது. மணி இரவு 12.30. ரோட்டில் ஜனநடமாட்டம் அதிகம் இல்லை. கோடைகாலம் என்பதால் குளிர் ஏறாத காற்று துல்லியமாக அடிக்கிறது. விஜி நடக்கிறாள்.

அவளுக்கு தாயும் தகப்பனும் ஒரு அக்காவும் தம்பியும் உள்ளார்கள். பெற்றோர்கள் இலங்கையில் உள்ள காட்டில் குடிசை ஒன்றைப் போட்டுக்கொண்டு வாழவேண்டிய நிலை மூன்று வருடங்களுக்கு முன் உருவாயிற்று. அவள் தம்பி கடலில் வாழ்கிறான். அக்கா கணவன் பிள்ளைகளோடு சென்னையில் வாழ்கிறாள். இப்போது பாரீசில் மணி எட்டு, இந்தியாவில் என்ன மணி இருக்கும் என்று அவள் கணக்கிட்டுக் கொண்டிருந்தாள். நள்ளிரவு 12மணி இருக்கும். விஜி சென்னைக்குப் போனதே இல்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன் தம்பி கடலுக்குப் போக, பெற்றோர்கள் காட்டுக்குப் போக, அக்கா இந்தியாவுக்கு போக, விஜி பிரான்சுக்கு வந்துவிட்டாள். அக்கா சென்னையில் எதைப்போன்ற வீட்டில் வசிக்கிறாளோ என, கற்பனை செய்து கொண்டே காலை தமிழ் பத்திரிக்கை கடையில் வாங்கிவந்த உமாவரதராஜனின் 'உள்மன யாத்திரை' என்னும் சிறுகதைத் தொகுப்பினை எடுத்தாள். சில பக்கங்களைப் படித்துவிட்டு, புத்தகத்தை மூடி தன்முன் இருந்த தாழ்வான மேஜையின்மீது திருப்பி வைத்தாள். சினிமா எக்ஸ்பிரஸ் என்னும் திரையுலக வாழ்க்கைகளை விமர்சனம் செய்யும் பத்திரிகையை புரட்டிப்பார்த்தாள். கமல், ரஜினி, சிவாஜி, பாரதிராஜா மற்றும் பல புதுமுகங்களின் புகைப் படங்களும் அவள் கவனத்தை ஈர்த்தன. என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதைப் படிக்க அவளுக்கு ஆர்வமும் இல்லை. இஷ்டமும் இல்லை. பிறகு அந்தப் பத்திரிகையையும் மேஜைமேல் தூக்கி எறிந்துவிட்டு, தனது வலப்பக்கத்தில் இருந்த அலமாரியைத் திறந்தாள். அக்கா சென்னையில் இருந்து அனுப்பிய கலர் புகைப்படங்களை எடுத்து ஒன்று ஒன்றாகப் பார்க்கத் துவங்கினாள். அக்கா, அத்தான் பிள்ளைகள் அனைவரும் ஒரு வீட்டின்முன் நின்று எடுத்தபடம் ஒன்று இருந்தது. ஒருவேளை இந்த வீட்டில்தான் வசிக்கிறாளோ? அக்கா எழுதும் கடிதங்களில் அவள் இருக்கும் வீட்டை ஒருமுறையும் வர்ணித்ததே கிடையாது. ஒரு வீட்டின்முன் நின்று படமெடுத்தால் அந்த வீட்டில் வசிக்கிறோம் என்று அர்த்தமா? இருப்பினும் அந்த வீட்டில்தான் தன் தமக்கை வசிக்க வேண்டும் என்றுதானே நம்பவேண்டும்போல விஜிக்கு ஒரு ஆசை மனதில் தோன்றியது. இப்போது இந்தியாவில் மணி இரவு 12.30.



விஜி வசிப்பது ஒரு சின்ன அறையில். ஆறாவது மாடியில். ஒன்றரை வருடமாக அந்த வீட்டில் வசித்திருந்தும் அவள் இருந்த மாடியில் அவள் கதவுக்கு பக்கத்தில் வசிக்கும் நபரை அவள் நேருக்கு நேராக கண்டதில்லை. சிலவேளைகளில் இரவுவேளைகளில் சத்தமாக இரண்டு மூன்று குரல்கள் பேசிக்கொண்டிருக்கும். அப்போது அவள் உறக்கம் கெட்டுப்போகும். அப்படி இருந்தும் அவள் அவர்களிடம் சத்தம் போடாதீர்கள், எனக்குத் தூங்கமுடியாமல் ஆகிவிடுகிறது, நீங்கள் எழுப்பும் கூச்சல் மிகுந்த சூழ்நிலை என்று அவர்களிடம் போய் ஒரு நாளும் சொன்னதில்லை. அப்படி செய்வதற்கு விஜிக்கு துணிச்சல் இருந்ததில்லை. எங்கும் அமைதி நிலவுகிறது.

கார்காலம், தெருவிளக்கின்கீழ் பார்வையைச் செலுத்தினால் மழை துளிகள் தென்படுகின்றன. விஜிக்கோ தாகம் எடுக்கிறது. தனிமை அவளுடைய மனநிலையை எந்த அளவுக்கு பாதித்திருந்ததென்றால் தனக்கு தாகம் எடுப்பதையே அது தாகம்தான் என்று நிச்சயமாக நிர்ணயிக்க முடியாதவளாய் ஜன்னலின் வழியே தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நாக்கின் வரட்சி மேலும் மேலும் அதிகரிக்கவே கொஞ்சம் தண்ணியைக் குடிப்போம் என்று ஒரு டம்ளர் சில்லென்று வரும் குழாய்த்தண்ணியைக் குடித்தாள்.

"ஏன் எனக்கு சத்தமாகப்பேசி என் நித்திரையைக் குழப்புபவர்களை போய் பார்த்து வாயை மூடுங்கள் என்று சொல்ல துணிச்சலில்லை?" தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள்.

"அடுத்தமுறை அப்படி நடக்கும்போது, நிச்சயம் போய்ச்சொல்வேன்."

அப்படி பேசிக்கொண்டிருக்கும் நபர்கள் கெட்டவர்களாக இருந்து தன்னை பலாத்காரம் செய்துவிட்டார்கள் என்றால்? விஜிக்கு பயமாக இருந்தது. அவள் அப்படி பயப்படுவதற்கு காரணம் அவளுடைய பெற்றோர்களின் வளர்ப்புதான். சிறுவயதிலிருந்தே அவளுக்கு மற்றவர்களுடன் அதிகமாக பேச அவர்கள் வாய்ப்பளித்ததில்லை. விஜியின் தாய் ஒரு சிடுமூஞ்சி, வெகு கண்டிப்பான பெண். மூன்றுவேளை சாப்பாடு செய்து போடுவது, விஜியும் அவளுடைய தமக்கையும் பள்ளிக்கூடம் போகும்காலத்தில் அவர்கள் தலையில் எண்ணை தடவி தலைவாரி ஜடைபோட்டு

அனுப்பிவைத்ததைத் தவிர தன் தாயைப்பற்றிய வேறுநினைவுகள் ஒன்றும் விஜிக்கு இல்லை. அவள் தந்தையோ மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும் இரண்டு மூன்று வாக்கியங்களில் சுருக்கமாக தன் எண்ணத்தைச் சொல்லிவிட்டு மற்ற நேரங்களில் தினசரிகளைப் படித்துக்கொண்டிருக்கும் ஒரு 'அமைதியான' மனிதர்.

விஜிக்கு ஒரு மிகப்பெரிய கம்ப்யூட்டர்களை தயாரிக்கும் நிறுவனத்தின் தலைமையலுவலகத்தை சுத்தம் செய்யும் வேலை. காலை இரண்டு மணிநேரம், மாலை இரண்டு மணிநேரம் (அலுவலகம் துவங்குவதற்கு முன்னும் பின்னும்) ஒரு குழுவாக பெண்கள் போய் சுத்தம் செய்வார்கள். விஜி அப்படிப்பட்ட ஒரு குழுவுடன் சேர்ந்து வேலை செய்பவள். மாத வருமானம் இரண்டாயிரத்துஎண்ணூறு ப்ராங்குகள். ரூம் வாடகை ஆயிரத்துஇருநூறு, ரயில் பஸ்களில் ஏறிப் பயணம் செல்ல மாத சந்தா முன்னூத்திஇருபது ப்ராங்குகள். மின்சாரம் தண்ணி வரி மாதம் முன்னூறு ப்ராங்குகள். விஜியின் முக்கியமான பொழுது போக்கு நீண்ட நேரம் சுடுதண்ணியில் குளித்தல். குளித்த பின்பு எதையாவது தின்று கொண்டே டிவியில் படம் பார்த்தல். கார்காலம் முடிந்து குளிர்காலம் துவங்க இன்னும் சில நாட்களேயுள்ளன. அன்று இரவு அடுத்த ரூமிலிருந்து பேச்சு சத்தம் அதிகமாக வந்து கொண்டிருந்தது. விஜியால் தூங்கமுடியவில்லை. அத்துடன் டிவியில் பார்த்த ஆபாசக்காட்சிகள் வேறு அவளுக்கு காமஉணர்ச்சியை கிளப்பிவிட்டுவிட்டிருந்தன. திடீரென்று விசித்திரமான எண்ணங்கள் விஜியின் மனதில் தோன்றின. பக்கத்து ரூமில் பேசிக்கொண்டிருக்கும் மூன்றுபேரோடும் உடலுறவு கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவள் மனதில் தோன்றியது. எப்படி அவர்களைக் கேட்பது.? மெல்லமாக கட்டிலிலிருந்து எழுந்தாள். கதவைத் திறந்து பக்கத்துக் கதவைத்தட்டினாள். ஒருவன் வந்து கதவைத்திறந்தான். அந்த அறை ஒரே புகைமூட்டமாக இருந்தது.


"என்னவேண்டும் பெண்ணே?" என்றான் அவன்.

"உங்கள் மூன்றுபேருடனும் உடலுறவு கொள்ளவேண்டும்" என்று கூற விஜிக்குத் தைரியமில்லை.

"மிகவும் சத்தமாக பேசுகிறீர்கள். தூங்குவதற்கு கஷ்டமாக இருக்கிறது" என்றாள் விஜி.

"மன்னிக்கவேண்டும், இனி சத்தத்தைக் குறைத்துக் கொள்கிறோம், குட் நைட்." என்று ஒரு புன்சிரிப்புடன் கதவைச் சாத்திக்கொண்டான்.

விஜிக்கு கனவு காண்பதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது. அந்தநிலையிலேயே திரும்ப சென்று கட்டிலில் ஏறிப்படுத்தாள். போர்வையை இழுத்து மூடிக்கொண்டாள். ○



ஓவியம்: தேவதாசன்

கூடரையினூடாக திமிறிக்கொண்டு மேலெழுந்த புகையினை உள்வாங்கி இழுத்து வெளியெங்கும் வெண்மேக சிதறல்களாய் துப்பியது ஈரக்காற்று. விட்டேற்றியாய் வானத்தை வெறித்தபடி இருந்தன முனியனின் வெறுமை தோய்ந்த விழிகள். கவலை அவனுள் இறங்கிக் கொண்டிருந்தது மழையைப் போல. தனிமையின் அழுத்தத்திலிருந்து தற்காலிகமாய் விடுபடும் விதமாய் கடுதாசியை விரித்தான். தாடைகள் இறுக்கம் தளர்ந்து அசைந்தன. வெறுப்பை மென்று உமிழ்ந்த வாய்க்கு கிடைத்தன சுகமான குதப்பலாய் வெற்றிலைப் பாக்கு. மென்று சுரந்த முதல் எச்சிலை மிழுங்கி வேர்க்க விறுவிறுக்க புகையிலையை திருகி கொரட்டில் அடக்கினான். வரச்சொல்லி ஆள் அனுப்பியிருந்தார் பெரியபண்ணை. யோசித்துப் பார்க்க, என்ன போய் சொல்வது என்ற பயமே கபாலத்தைத் தாக்க வலியெழும்பின.

# எதிரொலிப்பு

## பாப்லோ அறிவுக்குயில்



கரண்டியோடு வந்த நாவம்மா கேட்டாள்.

"மச்சான் அக்கா இல்ல"

"நடவுக்கு போயிருக்கா"

"இல்ல நெருப்பு வேணும்".

அவனின் இறுக்கமான முகங்கண்டு தயங்கியபடி கேட்டவளுக்கு விரல் நீட்டி அடுப்படியைக் காட்டினான். அலுமினிய கரண்டியில் எடுத்து ஊதி ஊதி கங்கு அணைந்திடாமல் முந்தானையால் மறைத்தபடியே சென்றாள். மீண்டும் சிணுங்கத் தொடங்கியது வானம்.

நடுளவள் சரோஜா கல்யாணத்திற்கு பெரிய ஆண்டையிடம் வாங்கிய கடன் அசல் அஞ்சாயிரத்தோடு வட்டி எவ்வளவு சேர்ந்திருக்கும், கணக்கு கூட்டிப் பார்த்தான். 'தையோடு தை ஒரு வருஷம் இப்ப அய்ப்பசியோடு ஓம்பது மாசமாவுது, வட்டி மட்டும் அசலையும் தாண்டி புடுச்சி' மழை வலுத்தது. பக்கத்தில் எங்கோ இடி விழ கொட்டாயில் கட்டியிருந்த ஆடுகள் பயந்து கத்தின. சத்தங்கள் எதுவும் காதில் விழாத செவுடன் கணக்காய் மலைத்து போய் குந்தியிருந்தான். புறச்சூழலின் அதிர்வுகளால் பாதிக்காத பாறையாய் இருந்தான். மகளின் பிரசவத்துக்கு பழைய மணியக்காரரிடம் வாங்கிய பணத்திற்கு வேறு வட்டி ஏறிக்கொண்டிருந்தது. போன சந்தையில் ரெண்டு கெடாயை விற்று ரெண்டு நாளு பெரிய ஆண்டையிடம் அனுமதி கேட்டு கிட்டுதான் பெரியவளுக்கும் நடுளவுளுக்கு தீபாவளி சீர்

செய்துவிட்டு வந்திருக்கிறான். அதற்குள் ஆள் அனுப்பிவிட்டார்கள். இனி எதை விக்க? இந்த எழவு கருமாதி நாளெல்லாம் ஏன்தான் வந்து தொலைக்குதோ? 'அவனவன் ஒவ்வொரு நாளும் நாப்பொழுப்பா அல்லாடும்போது இது வேற திரு நாளா ஒண்ணு மாத்தி ஒண்ணு...' நாவம்மாவின் கால்பதிவை தூறல் அழித்திருந்தது. மனித ஜென்மங்களை விழுங்கிக்கொண்டே வரும் காலத்தபோல மிச்ச மீதி ஏதுமின்றி அடையாளங் களை எல்லாம் அழித்துக்கொண்டே வருகிறது எதுவும் தெரியாததுபோல.

உரசாக்கை மடித்துத் தலையில் கவிழ்த்துக் கொண்டு தூறலில் குதி போட்ட கொடி ஆட்டுக் குட்டியை கொதைபோட்டுவிட்டு, சரிந்து கிடந்த தழைகளை பழையபடி ஒழுங்காய் கட்டிய கை யோடு தாழ்வாரத்தில் ஒழுகிய இடத்தில் கீற் றைத் தூக்கி வரகு வைக்கலைப் பரப்பி சரி செய்துவிட்டு வந்து அமர்ந்தான். வேகமாய் சீறித் தொலைத்தது சாரல். மோட்டுவளை கூரை சரியி ல்லையே என்ற நினைவு வர அலுமினிய ரோட் டாவை ஒழுகும் இடத்திற்கு நேரே கீழாய் வைத்துவிட்டு அடுப்படி பக்கம் ஆடை சட்டியை வைத்தான். வீட்டிலிருந்த வெண்கல கிண்ணி, குத்துவிளக்கு, பித்தளை சருவம், தவலைப் பானை, செப்புக்குடம், குவளை, பித்தளைபடி எல்லாம் வரிசையாய் சீர்செனத்தி, தேவை நா வை, காயிலு கடனுக்காய் அடகுக்குப் போயி விட்ட பின்பு தற்சமயம் வீட்டில் இருப்பது தகரப் பெட்டி, ரெண்டு மண்தோண்டி, பாதி நஞ்சிப் போன கோரப்பாயி, அலுமினியதட்டு மூணு, கொ ழும்பு சட்டியோட ஆட சட்டிய சேர்த்து நாலு போக மீதி சோற்ற ஆரப்போட ஒரு தாங்கட, ரெண்டு முறம் அதிலொன்று நாலு வருட அழுக் கால் பிஞ்சி அடிப்போடப்பட்ட பழைய முறம். ஒரு சொளகு, ஒரு தாழ்ப்பாள் கூடு, அஞ்சி களக்காடு (களை வெட்டி) வாய்ப்பூட்டி ஒரு சோடி, கோழி கவிழ்க்கும் பெரிய மூங்கில்கூடை ஒண்ணு தானியம் வைக்கும் ரெண்டு கொடிக் கூடை இதோட மரஉரல் ஒண்ணு. 'சோறாக்க ரெண்டு கலையம், ஒரு ஈய தேக்சா இவ்வளவு தான். இதுபோல வீட்டை ஆள சில்லறை சாமா ன்கள் ரெண்டு பங்கு இருக்கும். இதுல எதையும் அடகு வைக்கவோ விலைக்கு விற்கவோ முடி யாது. அவள் போட்டு வந்த அத்தனை நகைக ளையும் பெரியவளுக்கும் நடுளவளுக்கும் போட் டது போவ, வெறும் முகத்தோடு மூளியாய் இருப்பதை பார்க்கும்போது சூரியால் சங்கை அறுத்துக் கொள்ளலாம் போல் தோன்றுகிறது. கோழிக்குஞ்சின் குரல் அவனின் கவனத்தைத் திசை திருப்பியது. தாய்க்கோழி வேறு கெதா விக்கொண்டே இருக்கிறது. ஆபத்தை நேர்கொ ள்ளும்போது எழுப்பும் ஒலியைப்போலிருந்தது கோழியின் கெதாவல். எழுந்துபோய் பார்த்தான். முதலில் ஒன்றும் தெரியவில்லை. கோழியின் பார்வையும் கெதாவலும் வேலியை சுற்றியப டியே இருக்க பார்வையை குவித்து அலசினான். கோவை கொடி ஓடியிருந்த பக்கம் கிளுவை கிளை ஒன்றிலிருந்து குஞ்சு தொங்குவது தெரிந் தது. 'கொடியில தல சிக்கிகிட்டு கிடக்குமோ?' எடுத்து விடலாமென அருகில் போனவனுக்கு உலுக்கியது போல் தூக்கிவாரிப்போட்டது. கழு த்து முழுவதையும் முழுங்கியபடி கொடியைப் போலவே கிளுவையில் சுற்றிக் கொண்டிருந்தது பச்சைப்பாம்பு. கழியை எடுத்து நடுமுதுகில் வீசி னான். அடி பலமாய் வீழ்ந்திருக்கும் போல வலி தாளாமல் வாயைப் பிளக்க குஞ்சு பொத்தென்று கீழே விழுந்தது. பதைபதைப்போடு கையிலெ டுத்துப் பார்த்தான். தலை வெளிறிப் போய் சப்பப்பட்டிருந்தது. குஞ்சு செத்து ஒரு சில நொடி களே இருக்கும். ஆத்திரத்தோடு கழியை சுழற்றி யபடி வேலியைப் பார்த்தான் பாம்பைக் காணல தப்பிப் போயிடிச்சி. கோழியைப் பார்த்தான், பத் துக் குஞ்சோடு வலம் வந்தது எசாவும் பருந்து ருசித்தது போவ, இப்ப அஞ்சில் ஒன்று போய் விட, நாலு குஞ்சோடு கெதாவிக்கொண்டே இருந் தது. அதன் விழியில் மிரட்சி இன்னும் ஒட்டிக் கொண்டே இருந்தது. குப்பையில் புதைத்துவிட்டு ஒளி முகமது கடைக்குப் போனான். முன்பை விட நெஞ்சில் சுமை கூடி இருந்தது. எதிர்த் தாப்பில் ஆட்டிற்கு கட்டு தழையோடு வருவதைப் பார்த்ததும் ஒழுங்கையை விட்டு ஒதுங்கி அழிஞ் சிமர ஓரத்தில் நின்றான் அவளுக்காக.

"வேல கலஞ்சி வர்றதுக்கு இவ்ளோ நாழியா?"

"செத்த நாழிக்கு முன்னாடியே கலைஞ்சா ச்சி, பெரிய ஆண்ட கூப்டு இருந்தாரா அப்படியே ஒரு எட்டு போயிட்டு வாறேன். காலனி விசயமா. கெவுருமண்டில ஊடு கட்டி தர உத்தரவு போட் டுட்டாங்களாம், ஊட்டுக்கு ரெண்டாளும் ஆயிரம் ரூவாயும் தந்தாத்தான் ஊடு கட்டித் தருவோம் னுட்டாரு".

"ஆளு என்னே கூலிக்குத்தானே?"

"நானும் அப்புடிண்ணுதான் நெனச்சேன். கெவ ருமண்டுல ஒதுக்கிய பணம் ஊடுகட்ட பத்தாதாம். அதான் அவங்க அவங்க ஊடு கட்ட கூலி இல்லாம ரெண்டு ஆளா சித்தாளு வேலைக்கு வரணுமாம். கூடுதலா நல்லா செமன்டு போட்டு கட்டத்தான் ஆயிரம் ரூபாயாம். அதான் ஆண்ட ஒன்னுகிட்ட சொல்லச் சொன்னாரு. ரூவாயும் ஆளும் இல்லேன்னா ஊடு இல்லேன்னுட்டாரு.

அவரு தம்பிதானே பெரசண்ட்டா இருக்காரு".

"ஆமா நல்லா ஊடுகட்டி தாரானுவ நம்ம கிட்டயே புடுங்கி நக்கிப்புட்டு, தே புள்ள நம்ம வீசமாமா மவன் கோவாலு இல்ல, அவரு மன கெட்டு இல்லேன்னு சொல்லிகிட்டு இருந்தாரு, அவரப் பாத்து சொல்லிவை, நம்ப மனையை வித்துபுடுலான். நமக்கு ஊடும் வேணாம் ஒரு மசுரும் வேணாம். வித்தா வட்டிக்காவது ஆவும்"

"சரி உடுமாமா வீணா ஏன் ஊரு பொல்லாப்பு, பெரியஆண்ட ஆயா நான் போறேன்னு போயி சேர்ந்துட்டா. ஆளுவல்லாம் எழவு வாசல்ல இருக் காங்க ஒன்ன 'தப்பு' எடுத்து கிட்டு அர்சன்டா வரச்சொன்னாரு, வா வா ஊட்டுக்குப் போவலாம்."

பொங்கிய ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு சென்றான். புலம்பிக்கொண்டே பின்னால் சென் றாள் அஞ்சலை. "தே புள்ள பேசாம வா, சாவுர வர நம்ம உறிஞ்சிகிட்டுதான் உடுவானுவ போலி ருக்கு. இதுல புலம்பி எத தீக்கப் போற சொல்லு, நானும் நடுளவள கட்டிக் கொடுத்த கடனத் தீக்க பண்ண அடிச்சிகிட்டு தானே இருக்கேன். வருஷம் ஒண்ணையும் தாண்டி யாச்சி இன்னும் வட்டியில பாதி இருங்குங்குறான் பேசாம போயேன் வயித்தெரிச்சல நிண்டாதே".

புருஷனுக்கு தெரியாமல் வழிஞ்சக் கண் ணீரை துடைத்தபடி சென்றாள். இவளை பார்த்த தும் ஏதோ குறை சொல்லுவது போல் முகம் பார்த்து கத்தியது கொடி ஆடு. உள்ளே உத்த ரத்தில் தொங்கிய தப்பை அவிழ்த்து எடுத்துக் கொண்டு படவாசல்வரை சென்றவன் திரும்பி, "தோ பாரு அஞ்சல நான் வர முன்ன பின்ன ஆவும். நீ காத்திருக்க வேணாம், எனக்கு எடு த்து வச்சிட்டு ஊத்தி மூடிடு, வாரேன்" அவன் குரலில் மட்டுமில்லை நடையிலும் ஒரு வேகம் இருந்தது. எட்டி நடை போட்டு எழவு வாசலை அடைந்தான்.

கோலியன், முறுவன், செங்கான், நசையன் ஆளுக்கொரு தப்போடும் மொட்டையன், மெனை யத்தான் மாரி அலுக்கு சட்டியோடும் சுள்ளியி லிருந்து வீசும் தணலில் காச்சிக் கொண்டிருந் தனர். இவனைக் கண்டதும் எல்லா தப்புக்காரர் கள் முகத்திலும் உற்சாகமும் மகிழ்ச்சியும் எழுந் தன. எல்லோரையும்விட முறையாகவும் வேகமா கவும் மாற்றி மாற்றி பலவித அடவுகளோடும் நாலைந்து ஆள் போட்டி போட்டாலும் சளைக் காமல் ஈடு கொடுத்து சோர்ந்து போகாமல் போட் டிப் போட்டுக்கொண்டு ஒற்றை ஆளாய் களத்தில் நின்று தப்பு அடிப்பதில் பயிற்சியும் அனுபவமும் உள்ளவன். அலுக்குகாரர்களுக்கு மட்டும் பய மும் பீதியும் உண்டாயின. முனியனோடு போட்டி போட்டுக்கொண்டு வாசிக்க முடியாது. எதிரெதி ராய் நின்று வாசிக்கத் தொடங்கினால் கை சோரும் வரை அலுக்கை நிப்பாட்ட முடியாது. நிப்பாட்டினால் அவ்வளவுதான் சுற்றி நின்று பார்ப் பவர்களும் மாமா மச்சான் முறையுள்ள தப்புக் காரர்களும் பரிகசித்தே மானத்தை வாங்கிவி டுவார்கள்.

பெரிய ஆண்டைக்கு குனிந்து கும்பிடு போட் டான் முனியன். சாறு வழிய வெற்றிலையை குதப்பியபடியே தன்வீட்டு எழவின் சாயல் படி யாத என்றுமுள்ள இயல்பான முகபாவத்தோட உள்ளவரின் பார்வை இவனை மட்டும் வன்ம மாய் பாய்ந்து குதறுவதுபோல் பதிந்து இருந் தது. குரலில் ஒரு அதட்டல் எழுந்தது.

"என்னடா நிக்குறே வெடச்ச பண்ணியாட்டம் போயி அடிடா" வார்த்தை உள்ளுக்குள் அமிழ்ந் துக் கிடந்த குமுறலுக்கு தீ வைத்தது போல் இருந்தது. ஊர் வழக்கப்படி கொட்டுக்காரர்க ளுக்கு ஊற்றி கொடுக்கும் முறைக்கு, கோலி யன் எழவுவீட்டின் சந்துப் பக்கம் அழைத்துச் சென்று 'கேன்' வைத்திருந்தவனிடம் ஒரு கிளா சை ஊற்றித் தரும்படிச் சொன்னான். குடித்து முடித்து "இன்னொண்ணு வாங்குடா" ஒரு கிளா சுக்கு மேல குடிக்காத வராச்சே ஆச்சரியத்தோ டும் பயத்தோடும் அடுத்தடுத்து மேலும் ரெண்டு கிளாஸ் வாங்கிக் கொடுத்தான்.

தளர்ந்த உடல் முறுக்கேறின. சலிப்பையும் களைப்பையும் 'பட்டை' உறிஞ்சிக்கொண்டு பத்து ஆள் பலத்தை உடலுக்குள் பாய்ச்சியது. வேட்டியை தார்பாய்ச்சிக் கட்டிக்கொண்டான். தோளில் கிடந்த துண்டை உருவிய வேகத்தில் சுழற்றி முண்டாசாய் இறுக்கினான். சுள்ளியை கிளறி தீயை எழுப்பி அனலில் காட்ட காட்ட தோய்ந்திருந்த தோல் திமிரோடு விரைத்துக் கிடந்தது. குமுறிய நெஞ்சுக்கு நேராக தப்பை நிமிர்த்தி குச்சியை சுழற்றச் சுழற்ற உள்ளுக் குள் உறைந்து கிடந்த உணர்வெல்லாம் பீறிட்டு விரல்வழி தப்பில் பட்டு ஆக்ரோஸமாய் விழுந் தது ஒவ்வொரு அடியும். எல்லோரும் சுற்றிநிற்க விரல்கள் பலப்பல விதங்களில் சுழன்று கொண் டிருந்தன. எழவு வீட்டின் சுற்றிலுமுள்ள சனங்க ளின் உருவங்கள் மறைந்து, குதப்பும் வாயும் குதறும் பார்வையுமாய் பெரிய ஆண்டையின் கோரமுகம் மட்டுமே இவனுக்குத் தெரிந்தது. எல்லா ஓசைகளையும் மீறிக்கொண்டு, தாடை இறுக, விழிகள் சிகப்பேற நெஞ்சு விரைச்சிக் கெடக்க ஈரமண்ணை கிழித்து கால்சுழல அடி "சண சண சஞ்சண சண சஞ்சண சண சண..." விரல் சுழற்றி சுழற்றி வீச எழவு வீட்டையும் தாண்டி ஊரெங்கும் முழங்கிக் கொண்டிருந்தது பறையொலி.

# ஒரு குற்றவாளியாகிப் பிறந்தவனின் நாட்குறிப்பு

**Johan Borgan (1902-1979)** நிருபராகவும் இலக்கிய விமர்சகராகவும் பணியாற்றியவர். யுத்தத்திற்கு பின்பு பல தரமான படைப்புகளை நோர்வேஜிய இலக்கியத்திற்கு வழங்கியவர். மக்களிடையே வானொலி மூலம் பிரபல்யம் பெற்ற **Johan** தனக்கென பிரத்தியேகமான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கியவர்.

தாத்தா ஒரு தடி.

தாத்தா மேல்மாடியில் இருக்கிறார். நான் நித்திரையிலை சீச்சி செய்து காற்சட்டையை நனைச்சு முடிக்கேக்க தாத்தா நிலத்தில தட்டுறார். இல்லாட்டியும் நான் புதுக் காற் சட்டை போட்டு நித்திரையாகேக்கையும் தாத்தா நிலத்தில தட்டுவார். ஒருதரம் தாத்தா கீழ வந்தார். அப்பாதான் அவரத் தூக்கிக் கொண்டு வந்தார். அப்பா சொன்னார். தாத்தாக்கு என்ன வேணும் எண்டு கேக்க ஏலா தெண்டிட்டார். தாத்தா அடிக்கடி தட்டிக் கொண்டிருக்கிறாராம். அதாலதான் அப்பா தூக்கிக்கொண்டு வந்திட்டாராம். தாத்தா நீட்டமா இருந்தார். தாத்தாக்கு ஒரு பக்கத்தில் பளபளப்பான உருண்டையும் உடம்பெல்லாம் முடிச்சு முடிச்சா இருந்தது. அவரோட இன்னொரு வயசுபோன மனிசனும் இருந்தார். அம்மா கொஞ்ச நேரத்தால தாத்தாவை மேல கொண்டுபோகச் சொல்லிப்போட்டா. இல்லாட்டி தாத்தா நிலத்தில தட்ட ஏலாது தானே. பாவம். தாத்தா எங்களோட கீழ இருக்கேக்க ஒருதரும் நிலத்தில தட்டேல்ல. அப்பா தாத்தாவ மேல கொண்டு போனார்.

JOHAN BORGEN
தமிழில்: தயாநிதி



பிறகு நான் காற்சட்டையை நனைக்கேக்க தாத்தா நிலத்தில தட்டுற சத்தம் திரும்பவும் கேட்டது.

அப்பா சரியான உயரத்தில இருந்தார். அப்பா எனக்கு கிட்டவரேக்க எனக்கு கொஞ்சம் பயமா இருந்தது. அப்பான்ர முகத்தில நிறைய சிகப்புப்புள்ளி இருக்கு. நான் வண்டில வெளியில இருக்கேக்க அப்பா வானத்தைக் காட்டி "பிளேன் போகுது" என்று காட்டுவார். அப்ப நான் கையயுயத்தி "ஆ ஆ" எண்டு சொல்லுவன். இது அப்பாக்கு பிடிக்கும். அம்மா சொல்லுவா "இது ஹோப்பன் ஹேகனுக்கு வழக்கமா போற பிளேன். நீங்க பிள்ளைக்கு பிளேன தவிர வேற ஒண்டையும் காட்ட வேணும் எண்டு யோசிக்கிறேல்ல. பிள்ளை எந்த நேரமும் இப்படி படுத்திருந்தா எப்பிடி?" அப்பா முணுமுணுத்துக்கொண்டு போறார். அம்மா கிட்ட வந்திட்டா. மெல்லமா கழுத்தில கொஞ்சுறா நல்ல குரலில. எனக்கு கீழ நான் படுத்திருக்கிற வண்டிலுக்கு கீழ இருக்கிற ஏதோ ஒண்டு என்ர வண்டில சரிக்குது. எனக்கு அதபாக் கேலாம இருக்குது.

அது என்ர சின்ன தங்கச்சி என்னட்ட வாறதுக்கு வண்டில சரிக்கிறா. அவ கட்டாயம் சின்னக் குட்டியா, சுக்குட்டியா இருக்க வேணும். அது எனக்கு கீழ அடியில இருக்க வேணும். இவ்வளவு பெரிசா வண்டில படுத்திருந்து வானத்த தொடுறது நல்லது.

இப்ப நான் சின்னனாகிப் போனன். நானும் சின்னத்தங்கச்சி மாதிரி சின்னதா அடியில வந்திட்டன். சின்னத்தங்கச்சி எண்டு சொல்லுவினம். அவவவிட சின்னதா வந்திட்டன். இவை சொல்லுகினம் நான் வளந்திட்டன் எண்டு.

தாத்தா இருக்கிற இடத்தில இருக்கிற வானத்தில இருந்து வெள்ளையா துணியொண்டு தொங்கிக்கொண்டிருக்கு. நான் அத இழுத்தன். நிறைய சாமான் கீழ வந்தது. விழுந்தவுடனே இன்னும் கனக்கவா வந்திட்டுது. அப்பா மேல இருந்து ஓடி வந்தார். முந்தி ஒருதரம் தாத்தாவ கூட்டிக்கொண்டு வரேக்க கேட்டமாதிரி உரத்தகுரலில என்னவோ சொன்னார். நான் "ஆ, பிளேன்" எண்டு சொன்னன். அப்பான்ர முகம் நல்லா வரும் எண்டு. அப்பா என்ர கைய இறுக்கிப் பிடிச்சு தூக்கினார். நான் கக்கா செய்திட்டன். அம்மா வந்தா. அம்மான்ர மூக்கு சிவந்து போயிற்று. ஆனா அப்பா சொன்னார் "பிசாசின்ர பிள்ளை" எண்டு. நானும் "பிசாசின்ர பிள்ளை" எண்டு சொன்னன். அம்மான்ர



முகம் பழையமாதிரி வந்திட்டுது. அப்பான்ர முகம் நல்லா வந்திட்டுது. "பிசாசின்ர பிள்ளை" எண்டார். நானும் அப்படிச் சொன்னன். தங்கச்சி அழத்தொடங்கிற்றுது. அவவ தூக்கி வண்டிலிலிருந்து வெளியில விட்டிட்டினம்.

இனி நான் வண்டில படுத்திருக்க ஏலாது. எல்லாரும் சொல்லுகினம் நான் நடப்பன் எண்டு. நான் சின்னனா சின்னனாகிக்கொண்டு வாறன். நான் நடக்கேக்கையும், படுத்திருக்கேக்கையும் பாக்கேக்க வண்டில் சரியான உயரத்தில மேல இருக்கு. நான் எவ்வளவு சின்னனா வரவேணும் பெரிசா வாறதெண்டா எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கிறன். சின்னத் தங்கச்சிக்கு எல்லாம் எட்டுது. வானத்திலை இருக்கிற எல்லாத்தையும் எட்டுது. மேல இருக்கிற எல்லாத்தையும் கீழ நிலத்தில போடஏலுது. நாங்க சாப்பிடுற பீங்கானை தங்கச்சி "ங்கா" எண்டு சொல்லுறா. தங்கச்சி ஒரு ங்காவை இழுத்து கீழ எங்களிட்ட கொண்டுவர அதில இருந்து நிறைய சின்ன பீங்கான் வந்திட்டுது. சின்னத் தங்கச்சி நல்லவ.

வெளியில இறங்கிப்போறது நல்லம். முந்தி நான் வண்டில படுத்திருந்து வானத்தில ஹோப்பன்ஹேகனுக்கு ஒவ்வொரு நாளும் போற பிளேன பாக்கிறனான். ஆனா இப்ப எனக்கு கீழ இருக்கிற கால்விரல் எல்லாத்தையும் பாக்கலாம். முந்தியெண்டா போர்வைக்கு வெளியில தெரியிறதை மட்டும்தான் பார்க்கலாம். நான் என்னமோ மினுங்கிற மாதிரி இருக்கிறதில படுத்தன் நனைஞ்சு போனன். ஆனா நான் சிச்சீ செய்யேல்லை. நான் அம்மாவோட கட்டிலில படுத்திருக்கேக்க அப்பா சொன்னவர் நாங்க கிணத்துக்கு ஒரு பூட்டுப் போடவேணும் எண்டு. அம்மா சொன்னா நீங்க இப்ப அஞ்சு வருசமா இதைச்சொல்லிக்கொண்டு இருக்கிறீங்கள்.

அப்ப அப்பா சொன்னவர் நான் இனியும் போய் கிணத்தடியில படுத்தன் எண்டா என க்கு அடிவிழும் எண்டு. சின்னத் தங்கச்சி சொன்னவ, நாங்க ரெண்டுபேரும் போய் கிணத்தடியில படுப்பம் எண்டு. எனக்கு அடி வேணும்.

நான் மேல ஏறிப்போனேன். கனநேரம் எடுத்தது. தாத்தாவ நான் காணேல்ல. ஆனா ஒரு மனிசன் படுத்திருந்து ஆ எண்டு சொன் னது. நான் பெரிசா இருக்கேக்க கட்டில படுத்திருந்தமாதிரி அந்தமனிசன் படுத்திருந் தது. அவர் படுத்திருந்து மேல கொழுக்கியில இருந்து கனக்க நூல் தொங்குது. ஒரு உரு ண்டை மேலயும் கீழயும் வந்து வந்து போய்க் கொண்டிருக்கிறத பாத்துக் கொண்டிருக்கி றார். இதுக்கு மேலயும் ஒரு மாடி இருக் கோணும். அங்கயும் ஒரு தாத்தாவும் இருப்பி னம். தாத்தாவ பார்த்துக்கொள்ள ஒரு வயது போன கிழவனும் இருக்கவேணும். நான் அந்த வயசு போன கிழவனுக்குப் பக்கத்தில கட்டில படுத்தன். அப்பதான் நான் தாத்தாவ கண்டன். தாத்தா அந்த கிழவனுக்கு பக்கத் தில படுத்திருந்தார் கட்டிலில. அந்த கிழவன் தாத்தாவ எடுத்து நிலத்தில தட்டினார். உடனே அம்மா வந்து என்னை தூக்கிக் கொண்டு போனா. அடிதருவன் எண்டு சொன்னா.

நான் காற்சட்டைய நனைச்ச பிறகு சின்ன தங்கச்சியையும் கேட்டுக்கொண்டு மேல போகவேணும். எனக்கு அடிவேணும். இவை கனதரம் சொல்லிப்போட்டினம்.

இப்ப நான் சரியான சின்னனாப் போனன். அவை சொல்லுகினம் நான் வளந்திட்டன் எண்டு. என்ர கட்டிலுக்குக் கீழ சட்டி ஒண்டு வைச்சிருக்கு. காற்சட்டையோட சீச்சா போறது நல்லம்.

நான் செத்து போயிருக்கிறன். சரியான சூடாயிருந்தது. அவை கதைக்கேல்ல. ரகசி யமா ஏதோ சொல்லுகினம். அந்த தாத்தாவ பார்த்துக் கொள்ளுற மனிசன். கட்டிலில படுத்திருக்குது. சிலநேரம் சொல்லிச்சினம். "போட்டார்" எண்டு மெல்லமாச் சொல்லிச் சினம். எனக்கு கேட்டது. எல்லாற்ற மூக்கும் சிவந்து இருந்தது. எனக்கு செத்துப்போக விருப்பம்.

இப்ப நான் எழும்பி நடக்கவேணும். நான் சின்னனாகியிட்டன். இப்ப நான் சாகேல்ல. எல்லாரும் பெரிசா சத்தமா கதைக்கினம். நானும் தங்கச்சியும் கிணத்தடியில போய்ப் படுத்தம். எல்லாரும் சத்தமா கத்திச்சினம். நான் மேல தாத்தாவும் அந்தக் கிழவனும் இருந்த மேல்மாடிக்குப் போனன். நான் படி யில தடக்கி உருண்டு விழுந்தன். அப்பா சொன்னார் "பிசாசின்ர பிள்ளை" நானும் சொன்னன். அப்பா சொல்லுறார் நான் கதைக் கிறன் எண்டு. நான் பெரிசா வண்டில படுத்தி ருக்கேக்க நிறைய கதைப்பன். இப்ப எனக்கு கனக்க சொல்ல வருகுதில்ல. சின்னத் தங் கச்சிமாதிரி நிறைய சொல்ல வருகுதில்லை.

மேசையில கேக் வைச்சிருக்கு. அதில மூண்டு வெளிச்சம். எல்லாரும் மூண்டு



வெளிச்சம் எண்டு சொல்லிச்சினம். அப்பிடி யெண்டா மூண்டுதான். எனக்கு வயத்துக்க நோ வந்தது. நான் நித்திர கொள்ளேக்க வெளிச்சத்த நினைச்சுப் பார்த்தன். முதல் ஒரு கறுப்பு நூல், பிறகு சின்ன தடி வெளிச்

சத்தோட, கறுப்பு நூல் வெளிச்சமாயிட்டுது.


நான் அப்பிடி சின்ன தடியோட இருக்கிற 2பெட்டிய எடுத்து என்ர தலாணிக்குக் கீழ வச்சிட்டன். 3பெட்டிய எடுத்து தங்கச்சின்ர தலாணிக்குக் கீழ வைச்சிட்டன். தாத்தா அந்த கிழவனால நிலத்தில தட்டேக்க, அம்மா கோப்பி எடுத்துக்கொண்டு மேல போகேக்க நான் சின்ன சின்ன தடியால வெளிச்சம் செய்வன்.

நான் கேக் இருந்த மேசையில இருந்து தொங்கிக் கொண்டிருந்ததில வெளிச்சம் வரச் செய்தன். கதிரையில இருந்த கேக் மூடி வந்த ஏதோ ஒண்டிலையும் வெளிச்சம் வரச் செய்தன். பிறகு யன்னலுக்கு முன்னால தொங்கிக் கொண்டிருந்ததிலையும் வெளிச்சம் செய்தன். குச்சியால பெட்டியில உரஞ்ச வெளிச்சம் வந்திட்டுது. பிறகு அம்மா படியால இறங்கி ஓடி வந்தா. அப்பா வந்தார். எல்லா ஆக்களும் வந்தினம். ஆரோ வெளிச்சத்தில தண்ணி ஊத்தி விட்டினம். என்ர வெளிச்சத்த இல்லாமல் செய்து போட்டினம்.

அப்பா சொன்னார் அடிவிழும் எண்டு. ஆனா எனக்கு இன்னும் அடி தரேல்ல. என்னட்ட இருந்த பெட்டி எல்லாத்தையும் சின்ன தங்கச்சியின்ர கட்டிலில போட்டிட்டன். நாளைக்கு நான் வெளிச்சம் செய்வன்.

தங்கச்சி மாட்டன் எண்டு சொல்லிப் போட்டா. கிணத்துக்கு பின்பக்கத்தில ஒரு பேரும் சேர்ந்து ஒரு முழு வீட்டையும் வெளிச்சமாக்குவம். என்னட்ட நிறைய குச்சியிருந்தா எல்லா வீட்டையும் வெளிச்சமாக்குவம். அப்பா நெருப்புக்குச்சி எல்லாத்தையும் ஒளிச்சுப் போட்டார். நான் அத இலேசா கண்டு பிடிச்சுப் போட்டன். முந்தி அது ஹோலுக்குள்ள இருக்கிற நெருப்பெரிக்கிற பெட்டிக்கு மேல இருக்கும். நான் அத எடுக்கிறத்துக்கு கன சாமான எடுத்து விழுத்துவன். இப்ப குசினி அலமாரிக்க போத்தலுக்குப் பின்னால இருக்கு. இந்த போத்தலுக்குள்ள இருக்கிற தால பாத்திரம் எல்லாம் கழுவுறது. நானும் தங்கச்சியும் போத்தலுககுள்ள இருந்த சோடாவ குடிச்சிட்டம். நான் திரும்பியும் செத்துப்போனன், அவை இரகசியம் கதைக் கேல்ல. அப்பா சொன்னார் அம்மா அந்த போத்தல் எல்லாத்தையும் ஒளிச்சு வைச்சிருக்கவேணும் எண்டு. நானும் பக்கத்துவீட்டுப் பெடியனும் அப்பா போத்தலுக்கு பின்னால ஒளிச்சு வைச்ச நெருப்புக்குச்சி பெட்டி யெல்லாத்தையும் ரொயிலற்றுக்கு பின்னால இருந்த பெட்டிக்கு பின்னால ஒளிச்சு வைச்சிட்டம்.

முதல் நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து கிணத்தில வெளிச்சம் செய்தம். அதில வரேல்ல. நாங்க ரொயிலற்றில வெளிச்சம் செய்தம். அதில நல்லா வெளிச்சம் வந்தது. அப்பா வந்தார். அந்த பெடியன்ர அப்பாவும்




பெடியன் இருக்கிறார். அவர் சொல்லுறார் சின்னத் தங்கச்சி பொம்பிள பிள்ளையெண்டு. அவர் சொல்லுறார் அந்த நெருப்புக் குச்சி, அதான் சின்ன தடியெல்லாத்தையும் என்னை எடுத்துக்கொண்டு வரட்டாம். நாங்க ரெண்டு வந்தார். அவர் வந்த வீட்டிலயும் கொஞ்ச வெளிச்சம் செய்து பார்த்தம். அந்த பெடியனுக்குப் பேர் யோன். அவன்ர அப்பா எங்கட அப்பாவோட கோவத்தோட கதைச்சார். அப்பாவும் கோவத்தோட சொன்னார் யோன்தான்

எல்லாம் செய்ததெண்டு. ஆனா நான்தான் போத்தலுக்குப் பின்னால ஒளிச்சு வைச்சிருந்த நெருப்புக்குச்சி பெட்டிய எடுத்தனான். அந்த போத்தலுக்குள்ள இருந்த சோடா குடிச்சு தங்கச்சிக்கு கடுமையா வருத்தம் வந்தது. கிட்டத்தட்ட செத்துப்போச்சு. சின்ன தங்கச்சி எப்பவும் அதிஷ்டசாலி.

யோன் கூடாத பிள்ளை. எனக்கு அவனோட விளையாட லோ(lov) இல்லையெண்டு சொல்லுகினம். நாங்க எந்தநேரமும் ஒண்டாத்தான் இருக்கிறம். அப்பா இப்ப நெருப்புக்குச்சிப் பெட்டிய ஒளிச்சு வைக்கிறேல்ல. அதக் கண்டுபிடிக்கவே ஏலாமல் கிடக்கு. அப்பா ஹோலுக்குள்ள இருக்கிற பெட்டிக்க நிறைய வெளிச்சம் செய்கிறார். பிறகு நெருப்புக்குச்சிப் பெட்டிய பொக்கற்றுக்குள்ள வைச்சிருக்கிறார்.

நான் அம்மான்ர தையல் சாமான் இருக்கிற மேசையில இருந்து கத்திரிக்கோல எடுத்து என்ர காற்சட்டையில ஒரு பொக்கற் வெட்டினன். நாங்க முந்தி வெளிச்சம் செய்த இடத்தில இருந்த பெட்டிக்குப் பின்னால இருந்த நெருப்புக்குச்சி பெட்டிய கண்டிட்டன். அத நான் எடுத்து பொக்கற்றுக்க போட அது உடனே கீழ விழுந்திட்டுது. இப்ப நான் என்ர பொக்கற்ற கையால பொத்திப் பிடிச் சுக்கொண்டு போறன். அப்பா கேட்டார் "என் னத்துக்கு இந்த பெடியன் காலைப் பிடிச் சுக்கொண்டு திரியிறான்" எண்டு. அவை நெருப்பெட்டிய கண்டுபிடிச்சினம். அம்மா அழுதா. அப்பா வெளியால போட்டார்.





போகேக்க கதவ அடிச்சு சாத்திப்போட்டு போனார். இப்படி அடிச்சு சாத்திறத நானும் பழகவேணும். தாத்தா தட்டினார். நான் காற்சட்டையில கக்கா செய்தன் அம்மா சிரிப்பா எண்டு. ஆனா தங்கச்சி கத்திரிக்கோலால விரல் நுனிய வெட்டிப்போட்டுது. அம்மான்ர சட்டையிலிருந்து துணி எடுத்து தன்ர பொம்மைக்கு சட்டை தைக்க வெட்டேக்க விரல வெட்டிப் போட்டா. திரும்பியும் டொக்டர் வந்தார். தங்கச்சி எப்பவும் அதிஷ்டசாலி.

யோன் கூடாத பெடியன். அவனோடதான் எனக்கு விளையாட விருப்பம். அப்பா சொன்னவர் அடி தருவன் எண்டு. அவர் நல்லவர். தாத்தாவோட படுத்திருந்த அந்த வயதுபோன மனிசன் வீட்ட இருந்து சுடலை என்ற இடத்துக்கு காரில கூட்டிக்கொண்டு போட்டினம். அம்மாவும் அப்பாவும் மேல்மாடிக்கு போட்டினம். அங்க தாத்தா ஒரு மூலைல ஒரு பக்கத்தில பளப்பா உருண்டையா இருந்தார். தங்கச்சி அம்மான்ர சட்டையையும், நான் அப்பான்ர தொப்பியையும் போட்டுக்கொண்டு, தாத்தாவையும் கையில எடுத்துக்கொண்டு வெளியில போனம். தூரத்தில இருக்கிற கல்லுக்கும்பிக்கு எங்கள போகவேண்டாம் எண்டு சொன்னவை. ஆனா நாங்க அங்க போக தங்கச்சி அம்மான்ர பெரிய சட்டையில தடக்கி கீழ விழுந்து திரும்பவும் கிட்டத்தட்ட செத்துப்போச்சுது. காரில ஆஸ்பத்திரிக்கு கொண்டு போச்சினம். டவுனில அப்பா எனக்கு அடி தந்தார். எல்லாரும் அதிர்ஷ்டசாலிகள். ஆனா அப்பா மட்டும் கவலைப்பட்டார். எனக்கு நோக அடிச்சுப்போட்டாராம் எண்டு. எனக்கு சந்தோசம் எனக்கு அடிவிழுந்ததெண்டு. யோனுக்கு ஒவ்வொரு நாளும் அடி விழும். அவன் கூடாத பெடியன் எனக்கு அவனோடதான் விளையாட விருப்பம்.

அம்மா சொல்லுறா தாத்தா செத்துப் போனார் எண்டு. அண்டைக்கு தங்கச்சி அம்மான்ர சட்டையில தடக்கி கல்லுக்கும்பியில விழுந்த இடத்தில தாத்தாவ நான் விட்டிட்டு வந்திட்டன். ஒரு நாளைக்குப் போய் கூட்டிக்

கொண்டு வருவன். பிறகு அம்மா அழமாட்டா. அப்பாவும் யோனின்ர அப்பாவும் ரொயிலற்ற கட்டி முடிச்சுப்போட்டினம். இனி நாங்க நெருப்புக்குச்சிய கண்டுபிடிச்சு வெளிச்சம் செய்தா அவைக்கும் ஒரு புது ரொயிலற் கிடைக்கும்.

அப்பா சொல்லுறார் நான் பெரிய பெடியன் எண்டு. இன்னும் மூண்டு வருசத்தால பள்ளிக்கூடம் போகவேணும் எண்டு சொல்லுறார். அங்க நிறையப் பிள்ளையள் இருப்பினமாம் எண்டும் சொல்லுறார். ஆனா நான் அம்மாட்ட சொன்னன் நிறைய பிள்ளையள் இருக்கிற வீட்டில கேக் இருக்கும் வெளிச்சம் செய்யலாம் எண்டு. அம்மா போய் ரேடியோவில சின்னப்பிள்ளை புரோகிராமில கதைக்கிற குரலில கதைக்கிற ஒரு பொம்பிளைய கூட்டிக்கொண்டு வந்தா. வெளியில மழை பெய்து கொண்டிருந்தது. அவ தடி மாதிரி ஒண்டு கொண்டு வந்தா. பறவைக்கும் அவ கொண்டு வந்த தடி மாதிரி ஒண்டுக்கும் என்ன வித்தியாசம் எண்டு கேட்டா. அப்ப நான் சொன்னன் தாத்தா பறவையில்லையெண்டு. அவ கேட்டா தாத்தாக்கும் பறவைக்கும் என்ன சம்பந்தம் எண்டு. அந்த பொம்பிளைக்கு விசர்.

பின்னேரம் அம்மா அப்பாட்ட சொன்னவ அந்த பொம்பிள சொன்னவவாம் தாத்தா செத்துப்போனதால எனக்கு ஒரு சொக்(sjokk) வந்திட்டுது எண்டு. அவ ஒரு தடியெண்டு சொல்லியிருக்கவேணும். உடனே நான் சொன்னன் தாத்தாவை நான் கல்லுக்கும்பியில மறந்து போய்விட்டிட்டு வந்திட்டன் எண்டு. அம்மா அப்பாவ பார்த்தா. அப்பா தலைய ஆட்டிப்போட்டு அலுமாரிக்க இருந்து எடுத்துக் குடிச்சார். நாளைக்கு நான் தலைய ஆட்டிப்போட்டு அந்த அலுமாரியில இருந்து எடுத்துக் குடிக்கவேணும். நான் இப்ப கதவை அடிச்சு சாத்திறதிலயும், தலையை ஆட்டிறதிலயும் கெட்டிக்காரனா வந்திட்டன். இண்டைக்கு முழுக்க நான் தலைய ஆட்டினனான். நான் அலுமாரியில இருந்து ஒரு கிளாசை எடுத்து கதவ அடிச்சு சாத்தேக்க அவை ஓடிவந்து கிளாசை வேண்டிப்போட்டினம். நான் தலையை அசைச்சும் அவை தரேல்ல. டொக்டர் வந்தார். சின்ன தங்கச்சி கல்லுக்கும்பியில தடக்கி விழுந்ததில எனக்கு "ஷொக்" வந்திட்டுது எண்டு. நான் சொன்னன் தடி எண்டு. அது தாத்தா. அம்மா சொன்னவ அந்த பொம்பிளையும் சொன்னவ "ஷொக்" எண்டுதான். நான் தலையை ஆட்டினனன். ஒண்டு எண்டு டாக்டர் சொன்னார். நானும் ஓம் ஓம் ஒண்டு தடி எண்டு சொன்னனன். டொகடருக்குக் கோபம் வந்திட்டுது. அடுத்தநாள் அந்த சின்னப்பிள்ளை புரோகிராமில கதைக்கிற குரலில கதைக்கிற பொம்பிள வந்தவ. நான் சொன்னன் எனக்கு ஒண்டு தடி வந்திட்டுது எண்டு. அவ சொன்னா ஒரு தடியெண்டு. அவவுக்கு விசர்.

சின்ன தங்கச்சி ஆஸ்பத்திரியில இருந்து வீட்ட வந்திட்டுது. நாங்க இப்ப முழுநாளும் ஆஸ்பத்திரி விளையாட்டு விளையாடிறம். ஒருநாள் அம்மா தங்கச்சியிட்ட என்னைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிப்போட்டு வெளியில போட்டா. தங்கச்சி குசினிக்க அடுப்புக்கு வைச்சிருந்த காஸ் வாற வயற எனக்கு சொருகி என்ர கால பின்பக்கமா மடக்கினது. அது சரியா நொந்தது. நோகுது எண்டு சொன்னன். நோகுந்தான் எண்டு சொல்லிச்சுது. சட்டையில குத்துற ஊசியால கையில ஊண்டிக் குத்திப்போட்டுது. அதுவும் சரியா நொந்தது. அந்த நேரம் அம்மாவும் அந்த பொம்பிளையும் வெளியில் இருந்து வந்தினம். நான் காலுக்குள்ள வயரும் ஊசியும் குத்தின மாதிரி படுத்திருக்கிறன். தங்கச்சி தலையணை உறையால நேர்ஸ் மாதிரி வாய மூடிக்கொண்டு அழுதுகொண்டிருந்தது. ஏனெண்டா எனக்கு ஊசியால நோகக் குத்தேக்க நான் உதைச்சு விட்டன். அவவுக்கு நொந்து போட்டுது. அந்த சின்னபிள்ளை புரோகிராமுக்கு வாற குரலில கதைக்கிற பொம்பிளை சொன்னா தங்கச்சிக்கு பொறாமை வந்திட்டுது எண்டு. தங்கச்சி வாய சுற்றி கட்டியிருந்த துணி யன்னல் சீலை எண்டு சொல்லுகினம். தங்கச்சி சொன்னது தலாணி உறையெண்டு. நாங்க யன்னலுக்கு கிட்ட போகவே இல்லை. நாங்க ஆஸ்பத்திரி விளையாட்டு விளையாடிக்கொண்டிருக்கிறம்.

சின்னத் தங்கச்சி சொன்னவ நாளைக்கு நாங்க எக்ஸ்ரே படம் பிடிச்சு விளையாடுவம் எண்டு. அப்ப எல்லாம் இருட்டா இருக்க வேணும். நாங்க நிலவறைக்குப் போய் விளையாடுவம். நாங்க ஒருத்தருக்கும் சொல்லக்கூடாது... ■

*இங்கு குழந்தை sjokk என்ற சொல்லை stokk என்று உச்சரிக்கிறது. Sjokk என்பது அதிர்ச்சி. Stokk என்பது தடி.



ஓவியம்: கிருஷ்ணராஜா

# ஒரு பூனை சகுனம் பார்க்கின்றது அல்லது ஒரு பேனா மையை இழக்கின்றது

எப்படியாவது சிறுகதை ஒன்றை எழுதிவிட வேண்டும். நண்பனின் கரைச்சல் தாங்க முடியவில்லை. ஏதோ என்னை ஒரு எழுத்தாளன் என்று நினைத்துக்கொண்டு தாங்கள் வெளியிடப்போகும் புத்தகத்திற்கு சிறுகதை எழுதித்தரும்படி கஷ்டப்படுத்துகிறான். தொலை பேசியில் தந்த தொல்லை போதாதென்று நேரிலும் வந்து கரைச்சல் தாறான். நானும் ஏதோ எழுத்தாஎன் என்ற நினைப்பில் இந்தக் கிழமைக்குள் எப்படியும் சிறுகதை எழுதித்தருகிறேன் என்று சொல்லிவிட்டேன். குடுக்காவிட்டால் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள்போல அசிங்கமாய் போய்விடும். அதுமட்டுமல்ல என்னைப்பற்றி அவன் வைத்திருக்கிற எழுத்தாளக் கற்பனையும் உடைந்து போய்விடும். எப்பிடியாவது இன்றைக்கு சிறுகதையொன்றை எழுதி முடித்தேயாக வேண்டும். மனம் உறுதி எடுத்துக்கொண்டது.

எனக்கு வசதியாக இன்றைக்கே நல்ல சந்தர்ப்பம் ஒன்று கிடைச்சிருக்கு. வீடும் அமைதியாக இருக்கு. வேறை அலுவல்களும் பெரிசா இல்லை. போதாதற்கு எனக்கு விருப்பமான கால நிலை. மெல்லிதாக மழை தூறிக்கொண்டிருக்கு. இதமான குளிர். எழுதுறதுக்கான பேப்பர்களையும் எடுத்தாச்சு. பேனையும் ரெடி. எழுதத் தொடங்கமுதல் பேனையை ஒருதரம் பார்க்கிறேன். எனக்கு இந்த பேனையில் எழுத எழுத மை முடிஞ்சு போறத்தைப் பார்க்கிறதில ஒரு சந்தோஷம். அதுவும் மை கடைசிவரை எல்லை குறைஞ்சுகொண்டுபோக ஏதோ ஒரு விளையாட் டுப் போட்டியில் பங்குகொள்வதுபோல மனதுக்குள் விறுவிறுப்பு ஏறும். மை முடிந்ததும் வெற்றிக் கிண்ணம் ஒன்றைக் கைப்பற்றிவிட்ட சந்தோஷம் மனம் முழுக்கப்பரவும். மை முடிஞ்ச பேனையை அப்படியே வெற்றிக்கிண்ணத்தை கண்ணாடி அலுமாரிக்குள் அடுக்கி வைத்து அழகு பார்ப்பது போல லாச்சிக்குள் சேர்த்துவைப்பேன். ஏன் என்று தெரியாது எனக்கு அப்படியொரு பழக்கம். அதுசரி இப்ப நான் சிறுகதை எழுதப்போகின்றேனா அல்லது பேனையின் கதை எழுதப்போகின்றேனா?

சிறுகதை எழுதுறது என்பது ஒரு பிரச்சனைக்குரிய வேலைதான். எனக்கு விளங்குது. ஆனால் நண்பனுக்கு விளங்கேல்லையே. இப்ப



தி. உமாகாந்தன்

வெல்லாம் வாழ்க்கை மாத்திரம் இயந்திரமயமா கப் போகேல்லை. எழுத்தும் இயந்திரமயமாகி விட்டது. கட்டுரை, கிட்டுரை எழுதுகிறதென்றால் பரவாயில்லை. விசயங்களை பார்த்து, சேர்த்து, கோர்த்து ஒருவாறு ஒப்பேற்றிவிடலாம். இவன் பாவி சிறுகதை கேட்கிறான் என்ன செய்யிறது. எதுக்கும் முயற்சிசெய்து பார்ப்பம் என்று நினை ச்சுக்கொண்டு எழுத இருக்க வாசல் அழைப்பு மணி அடித்தது.

யாரப்பா இது சிவபூசையில கரடிமாதிரி என்று சலித்துக்கொண்டு போய் கதவைத் திறந்தேன். அங்கே நண்பன் அரவிந்தன் நின்றான். இவன் எப்பவுமே இப்படித்தான் வரப்போறன் என்று போன்பண்ணுவதுமில்லை. சொல்லாமல் கொள் ளாமல் வந்து நிற்பான். ஒருவகைக்கு அவன் வந்ததும் நல்லதுக்குத்தான். ஏனென்றால் ஆளும் நிறையப் புத்தகங்கள் வாசிக்கிறவன். கூட்டங் கள், கருத்தரங்குகள் எல்லாம் போய் வாறவன். உவனோடை கதைச்சால் கதை எழுத ஏதும் ஐடியா கிடைக்கும். "என்ன மச்சான் திடீரென சொல்லாமல் கொள்ளாமல்" என்று கேட்க, "இல்லை மச்சான் பக்கத்திலை ஒரு இடத்துக்கு வந்தனான் அப்படியே உன்னை வந்து பார்த்துப் போட்டுப் போவம் என்றுதான் வந்தனான்" என் றான் அவன்.

உந்த வசனத்தை நீ வாழ்க்கையிலை விட மாட்டாய் என்று நான் மனசுக்குள் சொல்லிக் கொண்டேன். "உள்ளே வா" என்று அவனையும் கூட்டிக்கொண்டு ஹோலுக்குள் போனேன். "என்ன மச்சான் வீட்டிலை நீ தனியப்போலை இருக்கு, எங்கே மனிசி போயிட்டுது" என்று கேட்டான் அரவிந்தன்.

"மனுசி தமக்கை வீட்டை போயிட்டுது" என்று சொல்லிக்கொண்டே இருவரும் அமர்ந்தோம்.

மேசையிலிருந்த பேப்பர்களையும், திறந்து வைத்திருந்த பேனையையும் பார்த்த அரவிந் தன் "என்ன மச்சான். ஏதோ பெரிய எழுத்து வேலை ஒன்று செய்யப்போறாய் போல இருக்கு" என்றான்.

"பெரிய எழுத்துவேலை இல்லை மச்சான், இவன் மோகன் சிறுகதை ஒன்றை எழுதித் தரச்சொல்லிக் கழுத்தை அறுக்கிறான். இன்றைக் குத்தான் நேரம் வந்தது. எப்பிடியாவது எழுதிக் குடுத்திடோணும். இல்லையென்றால் அவனிட் டைத் தப்பேலாதடாப்பா. ஆனால் எழுத இருந் தாப்பிறகுதான் என்னத்தைப்பற்றி எழுதிறதெண்டு யோசனையாயிருக்கு. நல்லவேளை நீ வந்தாய். ஏதாவது ஐடியா சொல்லு மச்சான் என்னத்தைப் பற்றிக் கதை எழுதலாம் என்று."

இதை நான் கேட்க அவனுக்கு தலையில பாரம் ஏறிட்டுது. அவன் சொன்னான் "மச்சான் உன்ரை கேள்வியே பிழை. சிறுகதை என்றது என்னத்தைப்பற்றி எழுதுறது எண்டில்லை என் னத்தை வைச்சு எழுதுறதெண்டு கேள்."

என்ரை தலைவிதி இவனட்டை எல்லாம் நான் பாடம் படிக்கவேண்டி இருக்கு என்று நான் மன துக்குள் நினைத்தபடி அவன் சொல்றதைக் கேட் டேன்: "சிறுகதை எழுதுறத்துக்கு மச்சான் பேப்ப ரும் பேனையும் மட்டும் இருந்தாப் போதாது. சிறுகதைக்கான கருதான் முக்கியமா வேணும். கரு இருந்தால் கதையை டெவலப் பண்ணிவிட லாம். சரி இப்ப உன்ரை சிறுகதைக்கான கரு என்னெண்டு சொல்லு பார்ப்பம்."

அப்ப தான் சிறுகதை எழுத கரு ஒன்று தேவை என்பது என் மரமண்டைக்கு உறைச்சது - என்ரை முழியைப்பார்க்கவே அரவிந்தனுக்கு விளங்கிவிட்டது என்ரை நிலைமை.

அவன் சொன்னான்: நீ இப்ப சிறுகதை எழு தப்போறாய். அதுக்கான கரு தாயகக்கருவா அல்லது புகலிடக்கருவா.?

கருவுக்கே பிரச்சனை அதுக்குள்ளை தாயகக் கருவா, புகலிடக் கருவா என்றால் எனக்கு தலை சுத்தியது. அவன் தொடர்ந்தான்: "நீ புகலிடத்தில் இருந்து எழுதும்போது புகலிடக்கரு ஒன்றைத் தெரிவு செய்யிறதுதான் நல்லது. அதுதான் யதார் த்தமும்கூட. செடி மண்ணுக்குள்ளிருந்து முளை த்து வருவதுபோல் இருக்கும். இல்லையென்றால் எங்கேயோ முளைச்ச செடியை தொட்டிக்குள் வைத்துக் கொண்ட மாதிரித்தான் இருக்கும்." அவன் சொன்னது எனக்கும் சரியாய்த்தான் இருந் தது. ஆனால் அவன் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டுவிட்டால் அவனுக்கும் தலைக்க னம் கூடிவிடும். எனக்கும் மரியாதை இல்லை. அதாலை நான் அவனட்டைச் சொன்னேன், "இல்லை மச்சான் சொந்தநாடு ரத்தத்திலை நனைஞ்சு கிடக்கேக்கை நேற்றைய நினைவு களை, இன்றைய நிகழ்வுகளை, நாளைய கனவு களை தாயகக் கருவினால்தான் பிரதிபலிக்க முடியும். அதாலை தாயகக்கருவை வைச்சுக் கதை எழுதுறதுதான் நல்லது" என்று.

அதுக்கு அவன், "மச்சான் உந்த புல்லரிக்கிற வசனங்கள் எல்லாம் இப்ப தமிழ்ப் படங்கள்ல கூட வாறேல்லை. நீ நாட்டைவிட்டு வந்து எவ்வ ளவு காலம். உன்னைச்சுற்றி என்ன நடக்கிற தெண்டதை வைச்சு எழுதினால் கதையில கூட யதார்த்தம் இருக்கும். அதுக்கு மேல உன்ரை விருப்பம்" என்று அவன் என்னைக் கைவிட ரெடியானான். "இல்லை மச்சான், என்ரை அபிப்பி ராயத்தைச் சொல்லிப் பார்த்தனான்" என்று சமா ளித்துக் கொண்டேன்.

சரி, எந்த வகைக்கரு என்று முடிவெடுத்தாச்சு. இனி கருவை உருவாக்குவதில் பெரிய பிரச்சனை இருக்காது என மனம் எண்ணிக் கொண்டது. பிரச்சனையே இனித்தான் தொடங்கப் போகுது என்பதை விளங்கிக் கொள்ளாமல், "சரி மச்சான், புகலிடக்கருதான் நல்லதென்று சொல்லுறாய். அப்ப சின்னதாய் ஒரு ஐடியா சொல்லு பார்ப்பம்" என்று நண்பனிடம் நசிந்தேன்.

அதுக்கு அவன், "புகலிடக்கருதான் ஆயிரம் இருக்கே. இதுக்கேன் மண்டையைப் போட்டு உடைக்கிறாய். பிரான்ஸ் என்றால் முன்வீட்டிலோ அல்லது மேல்வீட்டிலோ, கீழ்வீட்டிலோ இருக்கிற அல்ஜீரியனைப்பற்றி அல்லது ஆபிரிக்காக் காரனைப்பற்றி எழுது. ஜேர்மனியென்றால் அதையே துருக்கிக்காரனாக மாத்து. இங்கிலாந்து என்றால் பாகிஸ்தான்காரனை பக்கத்து வீட்டுக்காரனாக்கி கதையெழுது" என்றான்.

இல்லை மச்சான் இப்ப எல்லாருமே இப்பிடித்தான் கதை எழுதினம். நான் கொஞ்சம் வித்தியாசமா எழுதலாமென்று பார்க்கிறன்.

"அப்பிடியென்றால் நீ ஒரு தமிழனை பக்கத்து வீட்டுக்காரனாக்கி கதை எழுது" என்றான் அரவிந்தன்.

"உனக்கு என்னில ஏதாவது கோபமிருந்தா சொல்லு மச்சான். அதைவிட்டுவிட்டு தமிழனை பக்கத்து வீட்டுக்காரனாக்கி கதை எழுதிவிட்டு நான் ஒழுங்காக, உருப்படியாக உலாவித் திரியிரேல்லையா" என்றேன் நான். "நல்ல ஐடியா ஏதாவது சொல்லு மச்சான் மனுசி வரமுதல் எழுதிப் போடோணும். வந்துது என்றால் கதையுமில்லை கத்தரிக்காயுமில்லை" என்றேன் நான்.

"மச்சான் முதலில் இந்தக் கிழமை பேப்பர்களையும் புதிசா வந்த விகடன் குமுதத்தையும் தா. நான் மேலால வாசிக்கிறன். அதுக்குள்ளை நீ கதையை உன்ரை ஐடியாவிலை எழுதத் தொடங்கு பிறகு பாத்து ஷேப் பண்ணுவம்" என்றான். எனக்குத் தெரியும் நீ இங்கு வந்ததே ஓசிப்பேப்பர் படிக்கத்தான் என்று மனதுக்குள் அவனைத் திட்டியபடியே எழுந்துபோய் பேப்பர்களை அவனிடம் எடுத்துக் கொடுத்தேன். சரி சரி நேரத்தைக் கடத்தாமல் நீ எழுதத் தொடங்கு. கொஞ்சத்திலை சரியா வருகுதா என்று நான் பார்க்கிறன். ஐடியா கேட்ட குற்றத்திற்காக நண்பன் தன்னை ஆசிரியனாக்கி என்னை மாணவனாக்கினான். எல்லாம் என்ரை கஷ்டகாலம். என்னை நானே நொந்தபடி எழுதத் தொடங்கினேன்.

மலைபோல் குவிந்திருந்த கோப்பைகளை பச்சைத்தண்ணீரில் கழுவி - ஏன் பைப்பிலை சுடுதண்ணீர் இல்லை என்று கேட்கிறீர்களா நான் வேலைக்குச் சேர்ந்து ஒரு கிழமையிலேயே றெஸ்ரோரன்ற் முதலாளி எனது வேலைத் திறமையையும், விசுவாசத்தையும் பார்த்து சுடு தண்ணியை நிற்பாட்டிப்போட்டான். வந்த காசு குடுத்து முடிக்கவேணும். அக்காவுக்கு சீதனம் குடுக்க வேணும் எண்டெல்லாம் நானும் கொஞ்சம் அடக்கி வாசித்து ஓவர்டோசாக விசுவாசத்தையும் காட்டிவிட அது இப்ப எனக்கே வில்லங்கமாகிப் போய்விட்டது. களைப்பிலை இந்தக் குளிருக்கையும் வேர்க்குது. கைவிரல்கள் எல்லாம் விறைச்சுப் போயிட்டுது. நெற்றியில வழிஞ்ச வேர்வையைத் துடைத்து விட்டு நிமிர்ந்த போது அடுத்த கோப்பை மலை வந்து குவிந்திருந்தது. இப்பவே நேரம் இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது. காலமை வந்து கழுவுவோமென்றால் முதலாளி விடமாட்டான். எல்லாத்தையும் கழுவி முடித்தால் தான் வெளியே போகமுடியும். கழுவி முடிக்க எப்படியும் ஒரு மணியாகிவிடும். கடைசி மெற்றோவும் (மெற்றோ என்றால் தமிழில் என்ன சுரங்க ரயிலா? ரயில் என்பது தமிழ்ச் சொல்லில்லையே. அதோடை சில இடத்தில மெற்றோ சுரங்கத்துக்குள்ளை இல்லாமல் வெளியிலையும் ஓடுதே. உந்த தேவையில்லாத விசயங்களை விட்டுட்டு அலுவலைப் பார்ப்பம்) போய்விடும். வேறு வழியில்லை நடைதான் என்று நினைச்சுக்கொண்டு கோப்பைகளை கழுவத் தொடங்கினேன். கோப்பையள் கூடிச்சுது என்றால் நான் பழைய சம்பவம் ஏதாவதை நினைக்கத் தொடங்கிவிடுவேன். மனம் அந்த நினைவில் சஞ்சரிக்க கைகள் கோப்பைகளைக் கழுவி அடுக்கும். இன்றைக்கும் அப்படித்தான் எப்பவோ ஒருக்கா யாழ்ப்பாணத்திலை சைக்கிள்ளை லைற் இல்லாமல் போய் பிடிபட்ட சம்பவம் ஞாபகத்துக்கு வந்துவிட்டது. பொலிஸ் பறிச்சு வைச்சிட்டு நாளைக்கு வழக்குக்கு பொலிஸ் வரச்சொல்ல நான் பதுங்கிப் பதுங்கி வீட்டுக்குப்போய் விசயத்தைச் சொல்ல, கோட்டு வாசல்படி மிதிக்காத பரம்பரையை கோட்டுக்குக் கொண்டுபோய் மான பங்கப்படுத்திவிட்டான் என்று அப்பர் துள்ள அடுத்தநாள் கோட்டிலை நிண்ட நீளமான கியூவில நின்று பத்துருபா அபராதம் கட்டிய சம்பவத்தை நான் ∴பிறேம் ∴பிறேமாக நினைத்துப்பார்க்க கோப்பை மலையும் கரைந்து விட்டிருந்தது. நேரமும் ஒரு மணியைத் தாண்டி விட்டது. றெஸ்ரோரன்ற் கதவைத் திறந்து வெளியே வந்தபோது குளிர் ஊசியாய்க் குத்தியது. ஓட்டமும் நடையுமாக மெற்றோ நிலையத்துக்குப் போனபோது நினைச்ச மாதிரியே பூட்டிய மெற்றோ நிலையக் கதவுகள் என்னைப் பார்த்துச் சிரித்தன. ஆந்தை

பஸ்ஸிலை அது தான் நம்மவர்களால் செல்லமாக அப்படி அழைக் கப் படும் இரவு பஸ்ஸில போகலாம். ஆனால் அது எத்தனை மணிக்கு வருமென்று தெரியாது. இனி என்ன நடைதான். ஒரு பக்கம் குளிர். மற றப் பக்கம் ஆபிரிக்கர்கள், அல்ஜீரியர்களை நினைத்துப் பயம். அங்கை எங்கடை பொடியனை ஆபிரிக்கன் கத்தியால குத்தி சங்கிலியைப் பறிச்சான். இங்கே அல்ஜீரியன் கத்திகாட்டி பேர் ஸைப் பறிச்சான் என்று நம்மவரிடையே உலவும் செய்தித் தலைப்புகளால் இரவில தனியப் போகும்போது எப்போதுமே பயம்தான். ஒன்றும் செய்யவே இயலாது, நடக்கிறது நடக்கட்டும் என்று ஏதோ போர்க்களத்துக்குப் போற மாதிரி இரண்டு கைகளையும் ஜக்கற் பொக்கற்றுக்களுக் குள் வைத்துக் கொண்டு கிடுகிடு வென்று நடக் கத் தொடங்கி விட்டன். நடக்க நடக்க என்னைச் சுற்றி நினைவுகள். ஊர் நினைவு அல்லது காதலியின் நினைவு என்று நீங்கள் நினைச்சா அது உங்கள் பிழை. நம்மடை யோசனையெல் லாம் றெஸ்ரோரன்ருக்கு நாளைக்கும் நிறையச் சனம் வருமோ வந்தால் நாளைக்கும் கோப்பை கள் குவியும். நாளைக்கும் மெற்றோவை விடவே ண்டிவரும். நாளைக்கும் நடைதான். இனி எப்ப போய் படுத்து எத்தனை மணிக்கு எழும்பி வேலைக்குப் போறது. அது சரி இப்ப எத்தனை மணி இருக்கும். ஆபிரிக்க, அல்ஜீரிய நண்பர்க ளுக்குப் பயந்து வோச்சையும் பொக்கற்றுக் குள்ளை ஒழிச்சிட்டன். இப்ப எடுத்து நேரம் பார்க்கேக்கை தப்பித் தவறி அவங்கள் யாரும் கண்டால் பிறகென்ன கத்திதான். ஏன் வீண்சோலி. நடந்து கொண்டு போகேக்கை திடீர் என்று எனக்குப் பக்கத்திலை கார் ஒன்று வந்து நின்றது. பார்த்தால் பொலிஸ் கார். சடசடவென்று மூன்று பொலிஸ்காரர் காரிலிருந்து இறங்கி என்னை அப்படியே தள்ளிக்கொண்டு போய் முகம் சுவர் பக்கம் இருக்கத்தக்கதாக சாத்தி கைகளையும் மேலே தூக்கி இரண்டுபேர் என்னைப் பிடிக்க மூன்றாவது பொலிஸ்காரன், பொக்கற்றுக்குள் ளை கையைவிட்டு திறப்பு, ரிக்கற், வோச், வீட் டிலிருந்து வந்த கடிதம், ஸமறிக் காசை நாளை வைக்கவும் என்று றூம் நண்பன் எழுதி வைச்ச துண்டு என்று எல்லாத்தையும் எடுத்தான். ஏற்க னவே பொலிஸைக் கண்டவுடன் எனக்கு பாதி உயிர் போய்விட்டது. ஏனோ தெரியாது எனக்கு பொலிஸைக் கண்டால் எப்பவும் பயம்தான். மண் வாசனையோ தெரியாது. பொக்கற்றுக்குள்ளை வித்தியாசமான சாமான் ஒன்றும் இல்லை. நல்ல வேளை வீட்டிலிருந்து வந்த கடிதத்துக்குள்ளி ருந்த அர்ச்சனை திருநீற்றை காலமை சாமித் தட்டில் வைத்துவிட்டேன். இல்லையென்றால் அது என்னெண்டு இவங்களுக்கு விளங்கப்ப டுத்திறதுக்குள்ளே விடிஞ்சிடும். விசாவைக் கேட் டாங்கள் கொடுத்தேன். ஒருதன் காருக்குள் விசா வைக் கொண்டுபோய் கம்பியூட்டரிலை அடிச்சுப் பார்க்கப்போக மற்ற இரண்டு பொலிஸ்காரரும் எனக்குப் பக்கத்திலை நின்று என்னென்னவோ கேட்டார்கள். எனக்கு ஒண்டும் விளங்கேல்லை. தறவாய் பினி, மெற்றோ பார்த்தி என்றேன். என்ரை பிறெஞ் அவங்களுக்கு விளங்கிவிட்டது. என்ரை பிறெஞ்சுக்கு அவங்களும் இறங்கிவந்து தறவாய் ஊ என்று கேட்டாங்கள். றெஸ்ரோறன்ற் காட்டைக் கொடுத்தேன்.அதுக்குள்ளை விசாவை அடிச்சுப் பார்க்கப்போன பொலிஸ்காரனும் செ போம் என்று வந்தான். பொலிஸ்காரன் விசாவை தந்து எஸ்கியிஸே நூ மிஸ்யூ, போஸ்வா மிஸ்யூ சொல்லிப் போட்டுப் போயிட்டாங்கள். எஸ்கி யிஸே நூவும் மண்ணாங்கட்டியும். ஒரு நிமிஷத் துக்குள்ள குலைப்பன் வரப்பண்ணிவிட்டாங்கள் நாசமறுத்தவங்கள். அவங்கள் போனாலும் நடுக் கம் இன்னும் போகேல்லை. நடையை விரைவுப டுத்தி, நாக்கை இழுத்து இழுத்து ஆறு மாடி ஏறி, சத்தம் கேட்காமல் பூட்டில் திறப்பை பொருத்தி, திருப்பி, கதவைத் திறந்து குசினி லைற்றைப் போட்டு பூனை போல சப்பாத்தையும் உடுப்பையும் கழட்டி சாரத்துக்கு மாறினேன். பசித்தது. குளிச்சால் நல்லாக இருக்கும். இர வில லேற்றா வந்து லைற் போடுறத்துக்கே சத் தம் போடுகிற றூம் நண்பன் இப்ப குளிச்சா சொல்லவே தேவை இல்லை. மெதுவா பைப் பைத் திறந்து முகத்தையும், காலையும் கழுவி விட்டு பசி தாங்காமல் குசினிக்குள் போய் என்ன இருக்கு என்று பார்த்தன். இரண்டு தேக்கரண்டி அளவான இரண்டு கறிகள் இருந்தன. அது கடைசி ஆளைக்கொண்டு சட்டியைக் கழுவ வைக்கும் ரெக்னிக். றைஸ் குக்கரைத் திறந்து பார்த்தேன். அடிப்பிடிச்ச சோறு கொஞ்சம் இருந் தது. மூடிவிட்டு தண்ணியைக் குடித்தேன். அம்மா வின் நினைவு வந்தது. எத்தனை மணியாகி னாலும் எனக்காக சாப்பாடு எடுத்துவைத்து தானும் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருக்கும் அம்மா நெஞ்சுக்குள் வந்து கண்ணிலிருந்து கண் ணீராய் வந்தா. சுற்றி வைக்கப்பட்டிருந்த எனது படுக்கையை விரித்துப் படுத்தேன்.

கதை ஒரு ஷேப்புக்கு வந்துகொண்டிருப்பது குறித்துச் சந்தோஷமடைந்த நான் பேனையை நிமிர்த்தி மை மட்டத்தைப் பார்த்தேன். மை கொஞ்சங்கூட குறைஞ்சமாதிரி தெரியேல்லை. உறைஞ்சுபோய் ஒரே நிலையிலேயே மை நின் றது. இரண்டு பேப்பரை வாசிச்சு முடிச்சு விட்ட

அரவிந்தன், "என்ன மச்சான் உனக்கு இன்னமும் அந்த பேனை விசர் போகேல்லையா? கொண்டுவா பார்ப்போம் உன்ரை கதை எப்படிப் போகுது" என்றான். நான் கொடுக்காமலே எழுதின பேப்பர்களை அரவிந்தன் எடுத்து வாசிக்கத் தொடங்கினான். நான் யன்னலுக்கால் மழை பெய்வதை ரசித்தேன். மாலைநேரத்தில் மெல்லிய தூறலாய் மழை பெய்வது எனக்குப் பிடித்த ஒரு விஷயம். மரங்கள், செடிகள்மீது மழைத்துளிகள் விழுவது, வித்தியாசமான ஒரு வாசனை எழுவது எல்லாமே உடம்பிலும் மனதிலும் ஏதோ ஒரு உணர்வை ஏற்படுத்தும். அப்பிடியான நேரத்தில பழசு, புதிசு என தினுசு தினுசான நினைவுகள் மனம் முழுக்கப் பரவும். மழையிலே மயங்கிக் கொண்டுபோன என் மனதை இழுத்து நிறுத்தினது அரவிந்தனின் குரல்.

"என்ன மச்சான் புகலிடக் கதைகள் என்றால் இப்படித்தான் என்று ஏதாவது வரைவிலக்கணம் இருக்கா? பொதுவா பெரும்பாலான வசனங்களில் குளிர் ஊசியாய் குத்தியது என்ற றெடிமேற் வசனம் வருகுதே. ஏன் புகலிடத்தில் வேற பருவகாலங்களே இல்லையா?"

இவனட்டை மாட்டுப்பட்டுவிட்டன். இன்றைக்கு சப்பித்துப்பப் போறான். இனி கதை எழுதின மாதிரித்தான். நான் மனதுக்குள் அவனைச் சபித்தேன்.

அவன் விடவில்லை. தொடர்ந்தான்: அது சரி உங்கடை புகலிடக்கதைகள் பெரும்பாலானவற்றில் மெயின் கரெக்றர் பரிதாபத்துக்குரியது. ஒன்றில் பாஷை தெரியாதது அல்லது பாஷை தெரிந்து பாதை மாறியது. அந்த மெயின் கரெக்ரரை சுற்றியிருக்கிற சப்கரெக்ரர்கள் எல்லாமே வில்லன்கள். முதலாளி வில்லன். றூம் நண்பன் வில்லன். பொலிஸ்காரன் வில்லன். அல்ஜீரியன் வில்லன். ஆபிரிக்கன் வில்லன். இது என்ன கதையை வாசிக்கிறவையின்ரை மனசை சென்ரிமென்ரா தொடுகிற தந்திரமா என்று நக்கல் பண்ணினான் அரவிந்தன்.

ஏன் நக்கலடிக்க மாட்டாய்? உன்னட்டை ஐடியா கேட்ட என்ரை புத்தியைச் செருப்பாலை அடிக்கவேணும். எழுதினதை இடையிலை நிப்பாட்டி பேனையிலை மை பார்த்ததுதான் பிழையாய் போயிட்டுது. அந்த இடைவெளியைப் பாவிச்சு இவன் குழப்பிப்போட்டான். இவனை இப்படியே விட்டால் பெரும் வில்லங்கமாய் போய்விடும். திருப்பிக் கதைச்சு தலையடி குடுக்காவிட்டால் தம்பி சண்டப்பிரசங்கமாகிவிடுவார் என மனதுக்குள் நினைச்சுக் கொண்டு என்ன மச்சான் வித்தியாசமாக யோசிக்கிறது, வித்தியாசமாக எழுதிறது என்றால் என்னென்று விளங்கேல்லை. கொஞ்சமும் விளங்காத கடும் தமிழ்ச் சொற்களைப் போட்டு ஒரு நாலு பக்கம் எழுதிவிடுவமா. அப்பிடியெண்டால் யாருக்கும் விளங்காது. வித்தியாசமான கதை என்று சொல்லுவாங்கள். எப்படி என் ஐடியா என்று கேட்டேன்.

"உன்ரை ஐடியா சரிதான். ஆனால் உனக்கு நல்லா தெரிஞ்சவை என்னத்தைப் பற்றி எழுதினனி என்று உன்னட்டைக் கேட்டால் நீ என்ன சொல்லுவாய். உன்ரை கதை கந்தலாகிவிடும். பிறகு சப்பித்துப்பிடுவாங்கள்" என்ற பயங் காட்டினான் அரவிந்தன்.

கனநேரம் இருந்ததிலை காலுக்குள்ளயும் பிடிச்சிட்டுது. எழும்பிக் கொஞ்சம் நடந்தேன். "மச்சான் விஸ்கி, கிஸ்கி ஏதாவது இருக்கா?" அரவிந்தன் கேட்டான். அதுதானே பார்த்தன் இவ்வளவு நேரமா அவன்ர வாயில இருந்து இந்தக் கேள்வி வரேயில்லை என்று. ஓசி விஸ்கி என்றால் நாக்கை தொங்கப்போட்டுக் கொண்டு நிப்பான் இவன். மனதுக்குள் சபித்துக் கொண்டேன். "பொறு வாறன் இருக்கோ எண்டு பார்ப்பம்" என்று குசினிக்குள் போன என்னைத் தொடர்ந்த அரவிந்தன், "வரேக்குள்ளை நான் ஒரு போத்தில் வாங்கிக் கொண்டு வரவேணுமெண்டு நினைச்சனான் மச்சான் அதுக்குள்ளை வேறை யோசனையில மறந்திட்டன்" என்றான்.

இந்த டயலொக்கை நீ இன்னும் எத்தனை வருஷத்துக்கு சொல்லிக்கொண்டிருக்கப் போறாயோ தெரியாது மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். மனுசிக்குத் தெரியாமல் பதுக்கி வைச்சிருந்த விஸ்கிப் போத்தலை எடுத்து இரண்டு கிளாஸ்களில் ஊற்றி விட்டு எனக்கு கலப்பதற்கு கோலா எடுத்து வருவதற்கிடையில் காஞ்ச மாடு கம்பில விழுந்த மாதிரி அவன் இரண்டு பெக் றோவாக அடித்து விட்டான். ஒரு பெக் விஸ்கியை அடித்து விட்டு யன்னலைத் திறந்து மழை பெய்யிறதை அப்படியே கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். அரவிந்தனின் கிளாசுக்குள் விஸ்கி பாய்ந்து கொண்டிருந்தது. மழை, குளிர், விஸ்கி எல்லாமே ஒரு வித்தியாசமான உணர்வை பரவவிட்டன. யன்னலைப் பூட்டினேன். மச்சான், உனக்கு சம்பந்தமில்லாததைப் பற்றி கதை எழுதாமல், உன்னைச் சுற்றி நடக்கிறதை வைச்சு கதை எழுது. அப்ப யதார்த்தமாக இருக்கும். குரங்கு இஞ்சி திண்டாலே அட்டகாசம். இஞ்சி திண்ட குரங்கு கள்ளையும் குடித்தால் எப்படி இருக்கும். மாட்டுப் பட்டுட்டன் அனுபவிக்கத்தானே வேணும். மச்சான் நான் பேப்பரை வாசிக்கிறன். நீ வித்தியாசமாக கதையை றைபண்ணு என்றான். நானும் எதையாவது வித்தியாசமாக எழுதிப் பார்ப்போமென்று எழுதத் தொடங்

கினேன்.

இன்று வேலை செய்யும் இடத்தில வேலை கூட. அதால எனக்கு ரென்ஷனும் கூட. ரென்ஷனின் விளைவு முதலாளியுடன் மோதல். சக தொழிலாளியுடன் பிரச்சனை. ஒருமாதிரி நாளை வாரவிடுமுறை என்ற சந்தோஷத்தில் எல்லாவற்றையும் சமாளிச்சு வேலையை முடிச்சுக் கொண்டு வாறவழியில அவசரப்படாமல் பாறில இரண்டு பியரும் அடித்தேன். பியர் மறந்துபோன முதலாளி மீதானதும், சக தொழிலாளியுடனானதும் கோபத்தை ஞாபகப்படுத்தியது. மூன்றாவது பியருக்கு ஓடர் பண்ணினேன். குடித்தேன். பணத்தைக்கொடுத்தேன். விடைபெற்றுக்கொண்டு வீடு நோக்கிப் போனேன். வீட்டுக்கதவைத் திறந்தபோது ஹோலுக்குள் ஸ்பைஸி கேர்ல்ஸ் கஸெட்டைப் போட்டுவிட்டு மகனும், மகளும் டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தார்கள். அதை பிரதம ரசிகையாக என்ரை மனுசி பார்த்து ரசித்துக்கொண்டிருந்தா. அதிக வேலையால் ஏற்பட்ட களைப்பு, வேலை செய்யும் இடத்தில் நடந்த பிரச்சனையால் ஏற்பட்ட கொதிப்பு, மூன்று பியர்கள் அடித்ததால் ஏற்பட்ட மதர்ப்பு (எதுகை, மோனைகள் நல்லாத்தான் வந்து விழுகுது) எல்லாம் சேர்ந்து என் மூளைக்குள் பொத்தான்களை அமுக்கி கட்டளையை பிறப்பிக்கச் சொன்னது. எல்லாத்தையும் நிப்பாட்டுங்கோ. என்ன பாட்டும் கூத்தும் இங்கே. மனுசன் களைச்சு, விழுந்து வீட்டுக்கு வந்தால் வீட்டிலும் நிம்மதி இல்லை என்று சத்தம் போட்டன். வாரவிடுமுறைக்கு முன்னாலான இரவின் சந்தோஷம் பூத்திருந்த என்வீடு ஆமி புகுந்த வீடாக தன் சூழ்நிலையை மாற்றியது. மகன் கசெற்றை நிப்பாட்ட, மகள் வழமையான தன் கொஞ்சி வரவேற்கும் முறையை ரத்துச் செய்து தனது அறைக்குள் புகுந்து கதவை அடிச்சுச் சாத்தி தனது எதிர்ப்பை வெளிக்காட்டினாள். மனுசியும் தன்ரையும், பிள்ளையளின்ரையும் சந்தோஷத்தைக் குழப்பின கோவத்தில என்ரை முகத்தைப் பார்க்க விருப்ப மில்லாமல் குசினிக்குள்ள போய்ப்புகுந்துவிட்டா. தனியே ஒரு தீவுபோல் கதிரையில் சரிந்தேன். மெதுவாய் கண்களை மூடினேன். ஏன் இப்படி நடந்தேன் கதையைத் தொடர முதல் கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டேன்.

ஆனால் குதிரையை அரவிந்தன் இழுத்துப் பிடித்தான். எனது அனுமதி இல்லாமலே எழுதிய பேப்பர்களை எடுத்தான் வாசிப்பதற்கு. மச்சான் எனக்கு ஒரு பெக் விஸ்கி தா என்றான். எழுதினதை வாசிக்கிறத்துக்கு என்னத்துக்கு விஸ்கி என்னை நானே கேட்டுக்கொண்டு அவனுக்கு விஸ்கி எடுக்க குசினிக்குள் போனேன். அவனிடம் கிளாஸைக் கொடுக்க ஒரே இழுவையில் இழுத்தான்.

"மச்சான் வித்தியாசமாத்தான் கதை தொடங்கி இருக்கிறாய். நல்ல விசயம். ஆனால் மச்சான் இப்ப எல்லாம் ஒரு சிறுகதைத் தொகுப்போ, புத்தகமோ வந்து இரண்டு மூன்று கிழமைக்குள் விமர்சனம் என்ற பெயரில் கிழியல் தொடங்கிவிடும். அதுக்கெண்டே இங்கே கொஞ்சப்பேர் இருக்கிறாங்கள். இப்ப பார் இந்த றூட்டில நீ கதை எழுதினாய் என்றால் உன்னை நல்லாப் போட்டுக் கிழிக்கப் போறாங்கள் கவனம். பார், பியர், ஸ்பைஸி கேர்ள்ஸ், பிள்ளைகளது டான்ஸ் எல்லாமே பூர்சுவாத்தனமாக உள்ளதே. மார்க்ஸிஸ அடிப்படையில் மக்களை ஒழுங்குபடுத்தும் எதுவுமே உங்கள் கதையில் இல்லையே. வெறும் முதலாளித்துவத்தின் எச்சில் துப்பலாகவே உனது கதை உள்ளது என்று இடதுசாரிச் சிந்தனை வாதிகள் தத்துவவித்தகர்கள் எல்லாம் கிழிக்கப் போறாங்களடாப்பா. அதுக்கான மறுமொழிகளையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு கதையைத் தொடரு" என்று அரவிந்தன் சிவப்பு விளக்குக் காட்டினான். அவன் சொல்லுறதும் சரிதான். இப்ப பேப்பருகளிலையும், புத்தகங்களிலையும் கிழிக்கிறதுக்கெண்டே கொஞ்சப்பேர் வெளிக் கிட்டிருக்கிறாங்கள். ஏன் நான் வீணா பொல்லைக் கொடுத்து அடியை வாங்குவான். அதே நேரத்தில இவனை வைச்சுக்கொண்டு நான் கதை எழுதிறது என்றது பூனையை மடியில கட்டிக்கொண்டு சகுனம் பார்க்கிற மாதிரி.

அதுக்குள்ள குசினிக்குள் போய் விஸ்கிப் போத்தலின் கடைசித்துளியையும் உறிஞ்சிப் போட்டு வந்த அரவிந்தன் மச்சான், "நான் வெளிக்கிடுறன். நீ கொஞ்சம் வித்தியாசமா ஏதாவது எழுத றை பண்ணு. இந்த விகடனையும், குமுதத்தையும் கொண்டு போறன். நாளைக்கு கொண்டு வந்து தாறன்" என்று புறப்பட்டான். கொண்டுபோன புத்தகம் நீ எப்ப திருப்பிக் கொண்டு வந்திருக்கிறாய் - அவனை மனதுக்குள் திட்டியபடியே "ஓகே மச்சான்" என்று அவனை வழிஅனுப்பி வைத்தேன்.

கதையும் வந்த மாதிரி இல்லை. பேனையிலையும் மை குறைவது மாதிரி இல்லை. மனுசி வாற நேரமாகுது. இப்போதைக்கு எல்லாத்தையும் எடுத்து வைச்சிட்டு குசினிக்குள் போய் கோழியை வெட்டுவம். நண்பனிட்டை நல்லபேர் எடுக்கேலாட்டிலும் மனுசிட்டை நல்லபேர் எடுப்பம். நண்பன் கேட்டால் இன்னும் இரண்டு நாளில எப்படியும் ஒரு வித்தியாசமான கதையை தந்து விடுவதாக வழக்கம்போல வாக்குறுதியைக் கொடுப்போம். ■

# விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்

இரா. நடராசன்

ஒருவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செருப்பு தைப்பவனாக பிறக்க நேர்கிறது. கவனிக்கவும். இந்த நாட்டில் செருப்பு தைப்பவன் உருவாக்கப்படுவதில்லை. இங்கு ஒருவன் செருப்பு தைப்பவனாய் பிறக்கிறான். பிறக்கும்போதே எருமைத் தோலின் இளம் நாற்றத்தையும் இந்த உலகிற்கு எடுத்துவரும் அவன் பின் செருப்பு தைப்பதை ஒருபோதும் நிறுத்தமுடிவதில்லை. வீதியோரங்களில், தியேட்டர்வாசல்களில், "செருப்பு ரிப்பேர்", என்று தெருத் தெருவாக அல்லது அரசாங்கமே அமைத்துக் கொடுத்த "டாக்டர் முதலமைச்சர் மிதியடி நிலையம் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை" போர்டு போட்ட கொட்டகையில் இந்த தேசத்தினது கோடிக்கணக்கான மக்களின் பாதணிகளுக்கு சேவை செய்ய (அபாரமான சால்சாப்பு அல்லவா) ஒருவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செருப்பு தைப்பவனாக பிறக்க நேர்கிறது.

"அண்ணே... எவ்வளவு வாங்க வேண்டி?"

ரங்கன் திடுமென்று சுயநினைவுக்கு வந்தான். தம்பி செருப்பை நீட்டிக் கொண்டிருக்கிறான். எதிரில் ஸ்டூலில் பார்ட்டி. எப்போ வந்தது பார்ட்டி? யாருக்கு தெரியும்? எதிரில் நடப்பதுகூட தெரியாத குருடனாக ஆக்கிவிட்டது அவனது நிலைமை.

"போலீஷ் போட்டியா... போடுவே..."

"அதெல்லாம் வேண்டாம்பா... தெச்சதுக்கு எம்புட்டு... அத்த சொல்லு"

"கால... நேரம்... கொடுக்கிறத குடுங்க..."

"சரி இந்தா"

"என்ன சாமி வெறும் எட்டணா தர்ரீங்க மூணு பக்கம் தையலு..."

"இதுக்கு தான்யா... உங்ககிட்டவெல்லாம் முன்னயே வியாபாரம் பேசிரணும்... இந்தா ஒழி..."

"இன்னொரு நாலணா... குடு... சார்... லேய் இனிமேலு... காசு பேசிகிட்டு ஜோடு... நீ வேற. ஏண்டா"

முக்கால் ரூபாய்க்கு எவ்வளவு பெரிய வார்த்தை "இந்தா... ஒழி" முதல் கிராக்கியே இன்று இப்படி.

"அண்ணே... அந்த பூட்ஸ் பார்ட்டி காலயிலே வரும்... சோல் போட்டு ஆரிரிச்சு பட்ட ஒட்டோணும்... பெவிக்கால்... காலி"

"இருக்கிறத போட்டு பூசுலே... காசு கையில



கிடையாது"

"பார்ட்டி வந்தா தேறும் அண்ணே"

காலையிலிருந்து வெறும் முக்கால் ரூபாய் வரவு. பாட்டன் சைக்கிளில் வந்தால் நாளு நல்ல நாளாக இருப்பது வழக்கம். இன்றைக்கு மட்டுமல்ல விபரம் தெரிந்த நாளாய் ரங்கனுக்கு ராசியான ஒரு விசயம் பாட்டன் சைக்கிள்தான். எவ்வளவோ பிரச்சினைகளில் ரங்கன் மூழ்கி மூச்சுத் திணறிய போது கடைக்கு சைக்கிளில் வருவதும் வந்ததும் வந்து குமியும் ஆர்டர்களும் பணமும் பிரச்சனை தீர்வதும் என்று அவனுக்கும் சைக்கிளுக்கும் ஒருவித ஆத்மார்த்தஉறவு ஏற் பட்டுவிட்டது. "மாவுமாதிரி போகும்லே" என்று அடிக்கடி சைக்கிள் புராணம் தம்பியிடம் பேச வில்லையென்றால் ரங்கனுக்கு தூக்கம் வராது.

இன்றைக்கு சொல்லவே வேண்டியதில்லை. தேவானையை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண் டும் பொஞ்சாதிக்கு தலைபிர சவமென்றால் சும் மாவா. முந்தின இரவு அவள் எழுப்பிய கூக்குரல் இன்னமும் அவனது காதுகளை குடாய்ந்து ரத்தத்தை உறைய வைத்துக் கொண்டுள்ளது. நேற்று முழுக்க கடை திறக்கவில்லை. முந்தா நேற்றும். ஆனால் இன்று வேறு என்ன வழியி ருக்கிறது பணத்திற்கு? நேற்று முந்தின நாள் ஆகவேண்டிய பிரசவம். மருத்துவச்சியே கலவரப் பட்டுப் போகும்படி தள்ளிப் போகிறது. தெய் வானை துடியாய் துடிக்கிறாள். ஆஸ்பத்திரியில் சேர்த்தாகவேண்டி வந்துவிட்டால்! முன்னூறு ரூபாய் இருந்தால் ஏதோ சமாளிக்கலாம் என்றார் கள். மூணுநூறு, மூன்று ரூபாய்க்கே இன்னும் வழியில்லை. ஒருவனுக்கு இதைவிட பெரிய பிரச்சனை இருக்க முடியுமென்று ரங்கன் கருத வில்லை. ஒருத்தி கண்முன்னால் துடிக்கிறாள். "மாமா... மாமாவ்... நான் செத்துப் போயிருவேன்... உசிரு போயிருச்சு" ரங்கனுக்கு நடுக்கம் ஏற் பட்டது. அப்படியெல்லாம் நடந்துவிட்டால்? செரு ப்பு தைப்பவனுக்கு பயித்தியம் பிடித்தால் அவன் குடும்பமே மிதிபடும்.

முன்னூறு ரூபாய். எவ்வளவோ வழி இல் லையா. இருக்கலாம். ஆனால் தற்சமயம் எதற் கும் பிரயோசனமில்லை. நகை எதையும் அடகு வைக்கமுடியாதா? தெய்வானையின் தாலிகூட சேட்டு கடைக்கு போய்விட்டது. ஆத்தா சாவுக்கு. யாரிடமாவது கடன் வாங்கலாம் ஆனால் இந்த சந்தர்ப்பம் பார்த்து ரங்கனின் சுற்று வட்டாரம் கைவிரித்துவிட்டது. ஆண்டவனே... இது என்ன சோதனை? இல்லை இல்லை, செருப்பு தைப்ப வனுக்கு ஆண்டவன் இல்லை. அவன் அவனது தொழிலை நம்பியே உலகில் விடப்பட்டுள்ளான்.

ஒருவன் எப்பேர்ப்பட்ட ஏமாற்றங்களுக்கு பின் வாழ நேர்கிறது. பள்ளிக்கூடம் போகிற குழந்தை களின் செருப்புகளுக்கு அவர்களை யொத்த வயதில் ரங்கன் பாலிஸ் போட்டுள்ளான். அப் போது ஆறு ஏழு வயதிருக்கலாம். பாட்டன் உயிரோடு இருந்தவரையில் வீட்டில் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. எவ்வளவு தரித்திரம் என் றாலும் ஒரு டீ பன்னுக்கு பஞ்சம் இல்லாத ஒரு காலம் அது. அப்போது போலீஸ் வட்டாரத் தில் பாலிஸ் என்றால் ரங்காதான். அவர்களது முரட்டு ஸ்சூகளுக்கு பூச்சிடும் போது ரங்கன் கர்வப்படுவான். அது மெல்ல மெல்ல பளபளப்பு யேறி ஜொலிக் கும்போது மூச்சு வாங்கும். செருப்புக்கு மெருகு ஏற்றுவதில் பெரியஆளாக இருக்கும் ஒருவன் தனது வாழ்க்கையில் மெருகு எதையும் ஏற்றிக்கொள்ள முடிவதில்லை.

பூச்சையும் புருசையும் பையில் போட்டுக் கொண்டு பஸ்டாண்டில் ஓட்டல் வாசலில் கடை வீதியில் என்று அலைந்து திரிந்து ஊரின் பெரும் பாலான பூட்சுகளுக்கு மெருகு ஏற்றி வந்தான் ரங்கன். தொழிலில் வரும்படி மிகக் குறையும் போதுகூட பாட்டன் மற்றவர்களிடம் விழுவது போல எரிந்துவிழாது அப்பனில்லாத பிள்ளை என்று பரிவு காட்டும். பல நுணுக்கங்களை கற்றுக் கொடுத்து பாட்டன் தன் கடையிலேயே வைத்துக்கொண்டது. பிறகு தொடங்கியது பிஞ்ச செருப்பிற்காக காத்திருக்கும் அவலம். விதவித மான செருப்புகள்.

பாட்டன் புது சைக்கிள் அப்போது வாங்கி யது. பளபளத்த அதன் வழவழப்பு புரங்களுக்கு தடவி எண்ணெய் போட்டு துடைத்து விடுவது ரங்கன் வேலை. அதன்மீது ஆரம் பத்திலேயே அலாதியானதொரு ஒட்டுதல், தவிர போவோர் வருவோரில் அத்தனை பேருக்கும் செருப்பு பிய்ந்து விடுவதில்லை அல்லவா. பாட்டன் செய் யும் புதிய செருப்புகளுக்கு ஒரு காலத்தில் நல்ல பெயர் இருந்தது. கால கருக்கலில் பக் கத்தூரு சந்தைக்கு பாட்டனுடன் பேரனும் அந்த சைக்கிளில் கிளம்புவார்கள். இருபுரமும் சைக்கி ளில் புதிய காலணிகள் உடன் வரும். நல்ல வரும்படி என்பார். மாலையில் விற்காது இளிக் கும் செருப்புகளோடும் வீட்டிற்கு என்று சில பொருட்களோடும் திரும்பும் சைக்கிளில் திரும்பு வார்கள். பாட்டன் இருமல் வியாதியில் செத்த பிறகு பாட்டனுக்கு பாட்டனாக உடன் இருந்து வருகிறது அது விட்டுப்போன சைக்கிள். பாட்டன் என்றே பெயராகிவிட்டது அதற்கு. ரொம்ப மோச மான நிலமை. செருப்பு தைப்பவனாக பிறந்த வனின் வாழ்க்கை இருக்கிறதே அது செருப் பிழையின் முடிச்சுகளில் சிக்கி ஆணிகளின் கூர்முனைகளில் கிழிகிற வாழ்க்கை ஆகும்.

அதுவும் செருப்பைப் போலத்தான். தேய்ந்து போன அதன் இடுக்குகளின் வழியே கனத்த நெஞ்சின் தோல்வியுடன் பதட்டமான குமுறல்கள் வழிகின்றன. பாட்டன் போன பிறகு குடும்ப பாரம் சுமையாய் அழுத்த சோதனையான ஒவ்வொரு பொழுதிலும் ரங்கன் குடித்த நெடியுடன் பாட்டன் சைக்கிளோடு பேசித்தீர்ப்பான். பாட்டன் மாதிரி... பாட்டன் சைக்கிள் ரங்கனுக்கு.

"அண்ணே... பார்ட்டி..."

"எங்கினறா?அந்த பூட்ஸ எடு"

ஒரு பூட்ஸை மேல்வார் கிழித்து சோலோடு வைத்தான். மற்றொன்றை தைப்பவனாக... இது நடிப்பு... அடிக்கடி இப்படி நிகழும்.

"என்னப்பா... ஆச்சு"

"இதோ... சார் நம்புள்துதான் வேலை நடக்குது."

"என்னாப்பா இன்னிக்கு தரேனுட்டு சொன்னியேப்பா..."

"அரை மணியில சாரு. உட்கார்ந்து வாங்கிட்டு போயிருங்க"

"அடப்போப்பா... இது இருக்கிற நிலமையப் பாத்தா நாளைக்கு ஆகும்போல"

"தோ ஆயிரும் சார்... பெவிக்கால் இல்ல திடுதிப்புனு தீர்ந்து போயிருச்சு அத்தான்."

"நல்லா செஞ்சு வெய்யப்பா... நாளைக்கு வர்றேன்"

ரங்கன் பாட்டன் சைக்கிளை பார்த்துக் கொண்டான். மனசு வைக்குமா பாட்டன்?

"சார் ஒரு நூறு இருந்தா தந்திட்டுப்போங்களேன்?" என்றான். ஆள் தருவார் போலத்தான் இருந்தது. அதற்காக எவ்வளவு கெஞ்சவும் அவன் தயார்தான். கட்டியவளை காப்பாற்றிவிட துடிப்பவனின் குரல் யாரையாவது ஒருவரை மனமிரங்க அடித்து விடாதா என்ன?

"ஏம்பா முடிச்சிட்டு வாங்கிக்கப்பா"

"இருந்தா கொடுங்க பெவிக்கால் வாங்கணும்"

"நாளைக்கு அவசியம் முடிச்சி வப்பியா?"

"நல்லாவே பார்த்து வைப்பேன் சார்"

பாட்டன் சைக்கிள் என்றால் இதற்குதான். ரங்கன் நூறு ரூபாய் தேத்தி விட்டான். இன்னொரு சமயமாயிருந்தால் இந்த பார்ட்டி தர மாட்டான். ரங்கனுக்கு கண்கள் கலங்கிப் போயின. ஒருநூறு ரூபாய் ஒரு முக்கால் ரூபாய் போதுமா!

"தம்பி ஷெட்டை மூடிட்டு ஒழுங்கா பூட்டணும் தெரியுதா தேத்திகிட்டு வாடா... காசு வேணும்" ரங்கன் கிளம்பி விட்டான். தெய்வானய காப்பாத்திடுங்க சாமி...

சைக்கிளிடம் இனி மன்றாடுவான்.

"பாட்டனை விட்டுட்டு போறியா அண்ணே?"

"இல்லடா கூட்டிகிட்டுதான் போறேன். நீ நடந்து வந்துரு."

வழியில் யாரிடமாவது கடன் வாங்க வழியிருக்கவேண்டும்... தெய்வானை தாயி த்தோ வந்திட்டேம்மா.

"அண்ணே... அக்கா வருது"

"எங்கின... எங்கினற?..."

". . . . . . . . ."

"ஏண்டி அழுவுற... சொல்லு, சொல்லித் தொலைச்சு போட்டு அழுவரது"

"அண்ணி பேச்சு மூச்சில்ல எனக்கு பயமாயிருக்குது"

"பேச்சு மூச்சில்லையா என்னடி ஆச்சு?"

"ரத்தம் நிறையா போயிருச்சு பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துவிட்டு போனோம்."

"அங்கினயே இருக்க வேண்டியத்தானே"

"காசில்ல... டாக்டருங்க மருந்து சீட்டு கொடுத்தாங்க ஒடனே வாங்கியான்றாங்க"

"...வா ...வா"

சைக்கிள் ஓட்டுகையில் மனசு பதறியது. தெய்வானையை பார்க்கத் துடித்தது. அய்யா பாட்டனே மனசு வைய்யய்யா அவளும் போய்ட்டா... அவ்வளவுதான் பிறகு ரங்கன் ஒரு முடவனைப்போல காலத்தைக் கழிப்பான். நீ வந்தாபோதும் தாயீ. மருந்து கடையில் டாக்டர் சீட்டுக்கு கிட்டத்தட்ட முன்னூறு ரூபாய் ஆகும் என்றார்கள். தலையில் கைவைத்துக் கொண்டு ரங்கன் உட்கார்ந்து விட்டான். இனி என்ன செய்வான்.

"மருந்து எடுத்து வைங்க...த்தோ வாரேன்"

"பாட்டனை எடுத்துக்கொண்டு வேகம் பிடித்தான். திக்குகளை நோக்கி பறந்தது அது. வேறு வழியில்லை இதற்கும் தோதுபடவில்லை என்றால். அய்யோ ஒருவன் கட்டினவளை சாக அனுமதிப்பது என்றால் எப்பேர்ப்பட்ட கொடுமை அது.

சந்தில் தெரிந்த முகம்.

"என்ன ரங்கா ஆஸ்பத்திரிப் போகல"

"இதோ போகணுங் சாமி"

"அங்க சம்சாரம் சாகக்கிடக்கறா"

"இதோங்க அண்ணாச்சி..."

ரங்கனின் துடிப்பு பன்மடங்கதிகரித்தது. கடைக்காரன் பேச்சு மங்கிப்போய் ஒலித்தது.


"சரிப்பா... உனக்கும் வேணாம் எனக்கும் வேணாம் ஏற்கனவே துருயேறிக்கிடக்குது. இந்தா இருநூத்தி ஐம்பது வெச்சிக்க..."

ரூபாய் கை மாறியது...

"பாட்டனும்"தான். ■



ஓவியம்: சௌந்தர்




காலை மாலை
இரவு
இயந்திரமாகி
உறவின் பிணைப்பில்
அமைதியாகி
தியாகமே
வாழ்க்கையாகி
தாய்மையே
அடையாளமாகி
அடக்கமே
உருவமாகி
இன்னும்...

ஓ! இல்லை!
உடலை உலுப்பு
உன்னுடன் பேசு
தயாராகு பகிஸ்கரிப்பிற்கு.




கானகத்தின் நடுவே
காரிருள் நடுநிசியில்
மேலே விட்டத்தில் லாம்பு
கீழே வட்டமாய் நாங்கள்
மையப் புள்ளியாய் நீ நின்று
"விடுதலை - சுதந்திரம்
சமத்துவம் - சமதர்மம்
புரட்சியாளர் நாமே"
என்றாய் - அன்று
விடுதலை என்றால் விடு(தல்)-தலை(யை)
சுதந்திரம் என்பது சுய-தந்திரம்
சமத்துவம் எல்லோருக்கும் மரணத்தில்
சமதர்மம் அனைவருக்கும் கல்லறையில்
புரட்சி மக்களுக்கு சுடுகாட்டில்
புல்லரிக்க புரியவைத்தாய் நன்று
புரட்டல் புரட்சியாளர்களானோம் நாமெல்லாம்-இன்று
வாழ்வதற்கான போராட்டம்
மாள்வதற்கான போராட்டம் ஆனது
ஆக்கத்திற்கான புரட்சி
அழிவுக்கான சூழ்ச்சி ஆயிற்று
தெரியாமலா சொல்லி வைத்தார் முன்னோர்
"சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது" என்று

எனினும்

மரணபயம் நீக்கி மானிடம் விழித்தெழும்பும்
கல்லறைகள் கிளர்ந்தெழுந்து கணக்குக் கேட்டுக் கலகம் செய்யும்
மனிதநேயம் திரண்டெழுந்து சூறாவளிப் புரட்சி பொங்கும்
மா-பெரிய-மன்னரெல்லாம் மண்ணைக் கவ்வும் காலம் வரும் -நாளை

# ஆதிரா கவிதைகள்



முன்னொரு போதும் இல்லாதபடிக்கு
எழுந்து நின்று ஆடியது
என்னுடைய தென்பு

பயந்து சுருண்டு படுத்திருந்த தென்பு
ஏன் இப்படி தலை தெறிக்க ஆடுகிறது

கொல் எனக் கொன்று
புதை எனப் புதைத்த தென்பு இது

கொலைக்கும் அடுத்த கொலைக்குமான
கண இடைவெளியில்
தொலைந்து போனது

துடித்து எழுந்த நம்பிக்கை ஆட்டம்

கடதாசி பேனை கவிதை என
குத்திக் குமுறி செருக்குப் பிடித்தாற் போல்
ஆடுகிறது

இனியொருமுறை காணாமற் போவதெனில்

கொல் புதை
இன்னொருவன் தென்பு.

2

"இருள்"
எனக்குப் பிடித்துப் போய் விட்டது
அதுவும் கும்மிருட்டு.

ஒரு சிறிய வெளிச்சம் கூடவேண்டாம்
யாரும் அடையாளம் கொள்ளத் தேவையில்லை.

நான்
மரம் மண் கல்லு என அசையாமல் இருக்கிறேன்
இருள்
பிடித்துத்தான் போய்விட்டது

நான் எழுதிய கவிதைகள் கூடத் தெரியவில்லை
எல்லாம் கறுப்பாய்

ஏன் கவிதை...?
எதற்கும் வித்தியாசம் வேண்டாம்

எல்லாம் ஒன்று
அல்லது
எல்லாமே எல்லாம்

நான் மனிதனாய் மிருகமாய் கடவுளாய் (?)
கரி இருட்டில்

"விடிதல்..."
தேவை இல்லாதது
துப்பாக்கி குண்டு கொலை குழி என
குறி வைத்த சொல் இது
எனக்கு வேண்டாம்

இருள் சுகமானது
அதுவும் கும்மிருட்டு.

ஆதிரா

# ஆதிரா கவிதைகள்

3

நாங்கள்
புழுவாய் புல்லாய் நாய் நரியென
எல்லா மாதிரியும் மாறி மாறி
வேஷம் தரித்து முடித்தாகியாச்சு

நிலைமை மாற்றமில்லை

ஒவ்வொரு சங்காரத்தின் முடிவிலும்
அவர்கள் வென்றார்கள்

எம்மீது ஏறிய ஒவ்வொரு வேல்களிலும்
அவர்களின் வெற்றி

நாங்கள் மட்டும் தோத்தபடிக்கு...

அடுத்துவரும் போர்நிறுத்த இடைவெளியில்...

அல்லது
ஒரு பேச்சு வார்த்தையில்...
வழமை போலவே
அவர்கள் வெல்வார்கள்
கூடவே எதிரியும் வெல்வான்

நாங்கள்...
வேடங்கள் தரித்து இன்னொரு சங்காரத்திற்கு
தயாராய் இருக்கிறோம்

இன்னும் இன்னுமாய் தோற்பதற்கு.

ஆதிரா

# காதலும் சாதலும்




அதற்கான காரணம் சிரஞ்சீவியானது.
அவளை ஒரு பெண்ணாய் கருதுக.
ஏன்? அது ஏன்?

காதல் அதன் தடங்களிலேயே
நடக்கின்றது

அவனுக்குச் சொல்!!
நான் எப்போது தேவை
படுப்பதற்கு முன்பா?

நாங்கள், கொஞ்சமாய்
காதலை கடிவாளமிடுவோம்


ஆயினும் எனது மனது
காதலை நோக்கியே...... எங்கே காதல்

◆◆◆◆

மானிடனாய் இருப்பாய்,
நான் உன்னை வெறுக்கிறேன்
பின் காதலிக்கிறேன்
நாங்கள் காதலைக் குறித்து
பேசுவோம்

ஏசலின்

# திருவிழா நினைவுகள்



ஆப்பம், பண்ணிக்கறி, சாராயம்
சகாயமாதாவின் அருள்
காவல்துறையின் கருணை
பந்தத்தின் வெளிச்சத்தில் போர்ச்சம்பழம் விற்கும் வண்டிகள்
சின்னமலை திருவிழாவில் பங்கேற்க வந்திருப்போர் ஏராளம்
5 லட்சம் இருக்கலாம்.
அவர்களை கண்காணிக்கவந்திருக்கும் காவல்துறையினர் 10ஆயிரம் பேர் இருக்கலாம்
சீருடை அணிந்திருப்பதால் அதிகமாக தென்படுகின்றனர்.
ஒரே தேர் தான்.
லாசர் கோயிலைப்போல ஒன்பது தேர்கள் இல்லை.
சாராயம் குடிக்க ஆத்தங்கரைக்குப் போகவேண்டும்
ஆப்பம், பண்ணிக்கறி தின்பதற்கும்தான்.
சின்னமலை மாதா கோவில் திருநாளன்று.

அர்ஜுன் அப்பாதுரை

---

நிலமாகிக் கிடந்தேன்
தெருவாக்கினாய்
மகிழ்ந்தேன்!

சுகமாக நடந்தாய்
சுமைதாங்கியானேன்
பூரித்தேன்!

உன் வளர்ச்சியால்
எனை விஸ்தாரமாக்கினாய்
வியந்து போனேன்!

அலங்கரித்தாய்
நாணப்பட்டேன்!


மேதினங்களில்
சுவாசித்துக்கொண்டேன்!

ஒவ்வொரு சுதந்திரநாளிலும்
கர்வப்பட்டேன்!

இன்னும் செய்தாய்
எச்சில் உமிழ்ந்தாய்!
வேண்டாததை வீசியெறிந்தாய்!
உயிர் உள்ளதும் அற்றதுமாய்!
இரத்தம் தெளித்தாய்!
பிணங்கள் குவித்தாய்!
சலம் வடித்தாய்!
மலம் கழித்தாய்!

ஐயோ!
கூனிக்குறுகிவிட்டேன்
சிறுமைப்படுத்திவிட்டாய்
மீண்டும் என்னை
நிலமாக்கிவிடு!
விளைநிலமாக்கிவிடு!

## தெருவின் ஓலம்




# மொழி பொய்யென்கிறது



மொழி அறிஞர் மொழியைப்
பொய்யென்கிறது பொய்யென்கிறது
அறிஞர் மொழி கருத்துக்களை விற்கின்றது

கருத்துக்களை வாங்கி விற்பவர்கள்
கருத்துக்களைத் திருடி விற்பவர்களே
கலை எப்போது இறுக்கமானதாக வருகின்றதோ
அப்போது அது மறுக்கப்படுகின்றது

ஜாக் பிறவேர்
தமிழில்: ஜனா சுகிர்தன்



# கரும்புலி

ஆமியில் எத்தனை பேர்
ஆவலுடன் கேட்டனர்
அதையே கேட்டு
பழகிப் போன மக்கள்.


மாவீரர் வரிசையில்
மற்றுமொன்றை கூட்டியே
மதிலினில் சிரித்தபடி
மாண்டவன் பொய்யாக.

தேடினர் எலும்புகளை
தேரில் வைத்திழுப்பதற்காய்
கூடி அன்று பயின்றபல
குழந்தைப் பொடியர்களே.

கோடி கொடுத்தாலும்
கொள்ளுமோ தானெனக்கு
பாடையிலே போனவெந்தன்
பன்னிரு வயதினுக்காய்.

பதறியதோ தாயுள்ளம்
மௌனமாக.

கௌரிமனோகரன்



# கடற்தண்ணீரின் உலா

**மூலம்: பெடறிக்கோ கார்ஸியா லோர்கா**
**மொழிபெயர்ப்பு ஜனா சுகிர்தன்**

தூரத்திலிருந்து
கடல் புன்னகைக்கின்றது,
வான உதடுகள்,
நுரை கக்கும் பற்கள்.

"மார்புகளை வெளிக்காட்டியபடி,
சஞ்சலப் பெண்ணே!
நீ எதை விற்கின்றாய்?"

"நான் விற்பது
கடலின் தண்ணீரை"

"கறுப்புப்பையனே,
நீ அணிந்திருப்பது எது,
உனது இரத்தம் எதனோடு கலக்கின்றது?"

"நான் அணிந்திருப்பது
கடலின் தண்ணீர்"

"அன்னையே, சொல்!
இந்த உப்புக் கண்ணீர்கள்
எங்கிருந்து வருகின்றன?"

"நான் அழுவது
கடலின் தண்ணீரே"

"எனது இதயமே,
இந்த ஆழமான வெறுப்பு
எங்கிருந்து தோன்றுகின்றது?"

"அந்த வெறுப்பு
கடலின் தண்ணீரையே
எங்களுக்குத் தருகின்றது"

தூரத்திலிருந்து
கடல் புன்னகைக்கின்றது.
வான உதடுகள்,
நுரை கக்கும் பற்கள்.

# சாதீ

நந்தனை எரித்து
மதுரை நகரத்தை எரித்து
வெண்மணி வழியாய்
எல்லா வீட்டையும் எரித்தது சாதீ

சாதி வெறிப்பசிக்கு
ஏகலைவனின் கட்டைவிரல்...
இமானுவேலின் தலை...
இன்றும்
குருங்குளம் குருமூர்த்தியின் கட்டைவிரல்...

யூதர்களுக்கு ஹிட்லரின்
சித்திரவதை முகாம்கள்...
தலித் பெண்களென்பதால்
சிதம்பரம் பத்மினிக்கும்
அத்தியூர் விசயாவுக்கும்
காவல் நிலையங்கள்...

கூலிக்காக வெண்மணி
உரிமைக்காக ஊஞ்சனை
போடி... கொடியன்குளம்...

நீ... இப்படியே இருந்தால்
பட்டியல் இன்னும் இழிவாய் நீளும்...

பாட்டாளியை உழைப்பிலிருந்து
அன்னியப்படுத்தியது முதலாளியம்...
தலித்தை உரிமையிலிருந்து
அன்னியப்படுத்தியது பார்ப்பனீயம்...

பள்ளிக்கு
தனத்தால் தீட்டு...
பாராளுமன்றத்திற்கு
அம்பேத்கரால்...

எட்டறிந்த காலம் முதல்
மறுக்கப்பட்ட நமது மானுடம்,
திருப்பி அடிக்காமல்
திரும்பக் கிடைக்காது.



# நெருப்பின் சத்தம்

நான் சத்தமிடுகிறேன்..
யுகங்களின்
இடுக்குகளில்
திணிக்கப்பட்ட வலி பொறுக்காமல்,
அலருகிறேன்.

சடசடத்து எரியும்
நெருப்பை போலவும்
சாவீட்டில் அதிரும்
தோல் வாத்தியம் போலவும்
பேயோட்டும் உடுக்கைபோலவும்
மாறி மாறி அலருகிறேன்.

உன் தாளத்தை
குளருபடியாக்கும் படி...
நீ அருவருப்பாய்
முகஞ்சுளிக்கும் படி...
நீ தூக்கத்தில்
பயந்தலரும்படி...
நான் சத்தமிடுகிறேன்.

சத்தமிடுவதே
சுத்தமாய் மறுக்கப்பட்டதால்,
கொலையுண்டாலும்
நீருள் சாகும்
நெருப்பாய் சாகிறேன்
சத்தமிட்டபடியே...

கந்தன்

(தய். கந்தசாமி, திருத்துறைப்பூண்டி)



ஓவியம்: கிருஷ்ணராஜா

# எதுதான் எமக்குச் சொந்தமாகும்?

பத்துவருஷமுதல்
நானும் உப்பிடித்தான்
உன்னைப் போலவே
முதன்முறை விமான நிலையத்திலிருந்து
திருப்பி அனுப்பப்பட்டேன்


அதிகாரி சொன்னான்
சிறீலங்கன் பெண்களுக்கு பிரச்சினையில்லையென்று
அவர்கள் மனைவியர்களாகத்தான்
இங்கு வருகின்றார்களென்று

மீண்டும் திரும்பி வந்தேன்
அப்போது நாங்கள் 20பேர் வந்தோம்
8பேர் இறந்தோம்
12பேர் மனைவியரானோம்

யாருக்கென்று கேள்!
ஒருத்தி அந்நியனுக்கு
ஒருத்தி எருமைமாட்டிற்கு
ஒருத்தி கல்லுக்கு
ஒருத்தி ஆஸ்பத்திரிக்கு
ஒருத்தி எதிரிக்கு; இப்படியாக...

இன்றும் ஒருத்தி வருகிறாள்
அதிகாரி சொல்வான் மனைவியராக...

எப்போதேனும் ஓர் குளிர் காலத்தில்
ஒருத்தன் வருவான்.
உன்னைக் கடத்திப்போக
எல்லாவழிகளும் அடைக்கப்பட்டபின்
வேறுவழியில்லாமல் போவாய் - மனைவியாக.



கேதீஸ்

## நோர்வேஜியமொழிக் கவிதை ஒன்றின் தழுவல்

இளையதலைமுறையே இதோ வாங்கிக்கொள்
உன்வாழ்வுக்கான வாளும் கவசமும்.
வாழ்வின்மீதான நம்பிக்கைதானே
மானுடம் கொள்ளும் உயிர்மூச்சாகும்.
நாளையகாலம் நமக்கெனவாக
உன்னுள் எழுமதை உயிரினிலேற்று!
மனிதத்தை அழிப்பார் மடியினில் தீயிடு.

போரே இல்லாப் பொழுது வரும்வரை
இறப்பு என்பது இல்லாதொழிந்திட
அமைதியே மனித நியதியாகிட
நல்லபோர் தொடு நீயே பொருதிடு.
பொல்லாப் போரிடும் மனித எதிரிகள் ஒழியவே
இப்போரினில் மடியினும் பொசுக்கிடு தீமையை.

குறைவிலா வளங்கள் குவிந்ததிப் பூமி.
சூரியன் தரும் ஒளி, சுழன்றாடும் காற்று
உலகத்தின் பசிமடிய பூமித்தாய் தரும் உணவு
இவை எல்லாம் தனித்தெவரதும் சொத்தாமெனில்
தகர்த்திடு அந்நீசரை.
அனைத்தும் நம் பொதுவுடைமை.

போரில் செந்நீரும் பசியின் கண்ணீரும்
பூமியை நனைத்திடின் அது மக்களுக்கெதிரான
மாக்களின் சூழச்சி.
பொதுச்சொத்தினைக் கொள்ளைகொள் பொல்லாதார் வல்லமை.
மனிதம் வாழ மாய்த்திடு இக்கொடுமையை.

தனித்துரிமை கொள்வோர் சாம்ராஜ்யம் சாய்ந்தழியும்வரை
நீதிக்கான போரே நியதியன்றோ.
உன்னுயிரிலும் உடலிலும் வலிமையை உருவாயேற்றி
சாவினைச் சாகவைக்கும் இச்சமரினில் வெற்றி கொள்வோம்.
வென்றதன் பொழுதில் ஆயுதம் என்பதோர் அகராதிச்சொல்.
அமைதி எங்கள் ஆயுள் உரிமையாகும்.
மானுடம் என்பதன் மகத்துவம் மலர்ந்து மணம் கமழும்.

ஒவ்வொரு சகோதரனுக்கும் இது பிரமாணமாகட்டும்.
அழகினைக் காவல் காப்போம். மனிதநேசத்தில் சுவாசம் கொள்வோம்.

சுகந்தன்

# என்னுடைய அறை

ஆங்கிலமூலம்: H.K. ரஜனி
தமிழில்: சந்துஷ்டி

அவன் போய்விட்டான்.
தன் பெற்றோர் வீட்டுக்கு.
கூடவே பிள்ளைகளும்.
அமைதி நிலவும் அவனது வீடு.

நானவன் கதிரை மேசைகளை
தூசிதட்டி
புத்தகங்களை அடுக்கிவிடுகிறேன்.
என்னுள் வளருதொரு கோபம்.

அவனது அறையை நான் கூட்டி
கட்டில் சரிப்படுத்துகையில்,
என்னுள் வளருதந்தக் கோபம்.

அவனது பல்கனியைச் சுத்தமாக்கி
பூஞ்செடிகளிற்கு தண்ணீரூற்றுகையில்
வளருது என்னுளொரு கோபம்.

சிரித்தபடி அவன் வீடு திரும்புகிறான்,
கூடவே அவன் நண்பர்களும்.

"மீரா நாலு தேத்தண்ணி"
என்னை நோக்கிய அவனது கத்தல்.
என்னுள் வளரும் அந்தக் கோபம்.

குசினுக்குள் வந்தவன்
"உதவி ஏதுஞ் செய்யவே?" என்கிறான்.
"இல்லை வேண்டாம்"
பாய்ந்து கத்துகிறேன்,
என் கைகளின் நகங்கள் வெளிப்பட
எனது இராச்சியத்தைக் காத்தபடி.
அந்தக் கோபம் பெருகி வழிகிறது.


"இது என் குசினி நானதைச் செய்வன்"

வேகமாக அவன் பின்வாங்குகிறான்.

அவன் காயப்பட்டுவிட்டான்.
அவனறியான் ஏனென்று.
அவனைக் காயப்படுத்திவிட்டேன்
நானறியேன் ஏனென்று.

அவன் நண்பர்களிடம் திரும்புகிறான்,
தன் காயத்தை மறைத்தபடி.

என் காயத்தைத் தடவியபடி
எனது அறைக்குள் முடங்குகிறேன்
...தேத்தண்ணி போடுவதற்கு.



நன்றி: மனுஷி

# மரநாய்

வேலிகளாய் நிமிர்ந்தெழுந்தது
ஆமணக்கு.
வெட்ட, பால் வடியும்.
மீளத்துளிர்த்து பெருத்த காடாகும்
வெட்டிய அடிக்கட்டை

ஊரின் தரை முட்ட
ஆமணக்கங் குஞ்சுகள்.
ஊருக்குத் தாய்த்திமிர்.

எல்லாம் பொய்யாக்கி,
புழுக்களை விதைத்தது,
இரவொன்றில் நுழைந்த
மரநாய்.

ராட்சதக் கவலை.

அரிப்பெடுத்த புழுக்கள்,
பிய்த்துக் கொடுத்த கம்புகளால்
எங்கள் தசைகளைய் சிதைத்து
எச்சரித்தது மரநாய்.

கற்சுவர் எழுப்பிய புழுக்கள்
ஆமணக்கு
அழிந்து கருகிய
இருப்பை மறைக்க,
மகிழ்ச்சி - மரநாய்க்கு.

மரநாயின் ஆர்ப்பரிப்பில்
ஆமணக்கின் நினைவைக்கூட
வைத்திருக்க முடியவில்லை
எம்மால்.

காய்ந்து;
போன சாக்கில் அள்ளிக் கொட்டும்
மண் தூவிய காற்று.
நாட்சரிவில் ஒருமுறை
வழி தவறியதாய்த் திரும்பும் பஸ்.

நாட்டிலா? எங்கே?
எனக் கேட்கும் பெயருடன்
இன்னும் என்
பன்னாடை ஊர்.



# 6 x 5



எனது சோதரன்
ஒரு விமானியாகவிருந்தான்
ஒரு நாளினிற் கிடைத்தது
அவனுக்கொரு உலகப் படம்.

தன் பெட்டி படுக்கைகளைக்
கட்டிக்கொண்ட பின்னர்,
தென்திசை வழியாகத்
தொடர்ந்ததவன் பயணம்.

வெற்றியாளன் என் சோதரன்
எங்கள் மக்கள்
வாழ்வாங்கு வாழ்வதற்கு
போதிய நிலமிங்கு இல்லவே இல்லை.
தமக்கென்று வொரு தரை
தாம் வாழப் பரப்பு நிலம்
எங்கள் பரம்பரையின்
நெடுநாட் கனவிது.

நிலப்பரப்பிற்காகப்
போரிடச் சென்றவன்
நீள்தொலைவிலெங்கோ
"குவாடா மமசிவி"*ல்
நிலத்துண்டொன்றை
வெற்றியுங் கொண்டான்

ஆறடி நீளமும்
ஐந்தடி ஆழமும்
கொண்டவத் தரையினைப்
போரிடச் சென்றவென்
சோதரன் வென்றான்.

BERTOLT BRECHT
தமிழில்: சந்துஷ்

* ஸ்பெயினில் உள்ள ஒரு மலைப்பிரதேசம்.

'ஜேர்மனியின் அயல்நாடுகளில் அதிகளவு நிலம் இருக்கின்றது. ஆனால் குறைந்தளவு மக்களே உள்ளனர். - Volk ohne Land, Land ohne Volk - ஜேர்மானியர் நிலம் போதாத மக்கள்' என்ற கோஷத்தை முன்வைத்தே அடோல்ப் கிட்லர் தனது ஆக்கிரமிப்புகளை மேற் கொண்டான்.- மொ.பெ.

# இன்று

**புதன், 13ம் திகதி.**
**நேரம் ஒன்று முப்பது,**
**இன்றுடன் முடிவு!**

**சமையலை நீயே செய்துகொள்,**
*உனது கோவணங்களை*
நீயே தோய்த்துக்கொள்
வீட்டைத்துப்பரவாக்கு,
கட்டிலை ஒழுங்கு செய், வீட்டைக் கழுவு,
ஜன்னலையும் மறந்துவிடாதே, கிழமைக்கொருமுறை படிகளையும்.

சிலவேளை நடுநிசியிலும்
சிலவேளை வராமலும்
காலையில் வெளியேறி
மாலையில் நீ விரும்பியபடி
திரும்பும் உலகம்.

இன்னும் மூன்றுமுறை
கூரைமேல் சுற்றுகிறேன்.
**புகைபோக்கி குளிராகஉள்ளது.**
நான் சுதந்திரமடைந்துவிட்டேன்.

| |
|---|
| **'Margret Gottlieb'** எனும் ஜேர்மனியப் பெண்ணின் கவிதை.<br>தமிழில்: **Frankfurt** றஞ்சினி |

# *Heute*

**Mittwoch, den 13.**
**dreizehn Uhr dreißig,**
**heute ist Schluß!**

**Koch dir jetzt selber,**
**Wasch deine Unterhosen,**
**räum auf, mach die Betten,**
**putze die Wohnung,**
**vergiß auch die Fenster nicht**
**und die Treppe am Wochenende.**

**Welt, die du morgens verläßt**
**und abends aufsuchst**
**nach deinem Belieben.**
**Manchmal erst spät –**
**manchmal nicht.**

**Ich kreise noch dreimal**
**über dem Dach.**
**Der Kamin ist kalt.**
**Ich bin frei.**

Margret Gottlieb



புகலிட வாழ்வு ,
பெண்ணியம்,
விளிம்புநிலை மாந்தர்,
தமிழ் அரசியல் குறித்த
பின்நவீனத்துவ
படைப்புக்களைத் தாங்கிய
ஒரு புகலிடத் தொகுப்பு.

—சுகன்

